மேற்படி பாரதம்-சல்லியபர்வம்-பதினெட்டாம் போர்ச்சருக்கம்-௱அ௮-வது-கவி.

நிறத்தநிலகிரியாக்கைவயிரு ... ... *
நிலத்திறிவிழ்ந்தருநலத்தினே ... . *
அறத்தடப்பிளவுரூயிர்த்துமாயனே ... *
பெருக்கநாசகரூதற்சொலவான் ... ... *
குறிப்பினால்விசயனைக்கொடாருயிர்... ... *
போக்கயாரதுமக நருத்திறு ... ... *
யறத்தினாடன் மறத்தனிரலையயினை ... *
யப்பய யாறிகுடபரோ ... ... *

இதின்தாத்பரியம்.

பூமியில் விழுந்த துரியோதனனானவன் கிருஷ்ணனைக் கோபித்துச் சொல்லுவதாவது குறிப்பினால்-அர்ச்சுனனைக்கொண்டு யெனதுயிர் போகக்கற்பித்தாய் தருமமாக யுத்தஞ்செய்யப்பட்ட நீதியை அப்பயிடைய ரறிவாரோவென்று சொன்னதாம்.



மேற்படிசருக்கம்-௱அ௯-வது கவி.

மலைத்தபோர்தொறுமெனக்கு செய்பி ... *
மற்றுளோர்செயநினைப்பரோ ... ... *
குலத்திலேயிழிகுலத்தரானவர் ... *
குறிப்பிலாதிவைபிறக்குமோ ... ... *
சலத்தினால்வினையியற்றுவார்முடி ... *
தரித்தகாவலரொடொப்பரோ ... *
நிலத்தில்வாழ்பவர்பெறக்கொடாயினி ... *
நினைத்தகாரியமுடிக்கவே ... ... *

இதின்தாத்பரியம்.

யுத்தஞ்செய்யுந்தோறும் எனக்கு நீ செய்தபிழை மற்றவர்கள் செய்யநினைப்பார்களா சாதிகளில்தாழ்ந்தவர்கள்குறிப்பினாலேகாட்டிவெல்லாமல் வேறேவருமோ பொய்யாகியசூதினாலே ராஜ்யத்தை முடிக்கப்பட்டவர்கிரீடந்தரித்த அரசர்களுடன்வொப்பா[illegible]

ரோ பூமியையாளப்பட்ட அரசானது பாண்டவர்கள்பெற நீதினேத்த காரியத்தை முடித்தாயென்று துரியோதனன்சொன்னனென்பதாம்

இந்தக்கவியில்கிருஷ்ணன்பிறந்தது ராஜகுலமாயிருந்தபோதிலும் இடையரிடம்வளர்ந்ததால் அதைப்பற்றியிழிகுலத்தோனென்று துரியோதனன்சொன்னதேதவிரவேறல்ல.

இதிற்குறித்துக்காட்டிய நூல்களில் இடையரை முல்லைநிலத்துக்கு உரியவரென்றும் புன்பிறப்புடையவரென்றும் காட்டிவாழ்ந்துமாடுகளைக்காக்கப்பட்டவரென்றும் பொதுவரென்றும் இழிநிலத்தவரென்றும் அற்பயிடையரென்றும் அறிவில்லாதவரென்றும் சொன்ன நூல்கள்போல் இன்னுமனந்த நூலிலுஞ் சொல்லியிருக்கின்றதேதவிர கோவைசியரென்றுஎந்த நூலிலுஞ்சொல்லாதிருக்க இவர்களைக்கோவைசியரென்றுகற்பித்த அண்டப்புரட்டருக்கண்ணனுகிய சாஸ்திரப்புரட்டர் பலநூல்களையும்பார்க்கவில்லையோ அல்லதுபார்த்தும் புரட்டவகையில்லாமல் விட்டுவிட்டாரோ தெரியவில்லை.

இரண்டாவததிகாரம்.

௨-வது-பிரிவில்-பாலைநிலமாக்கள் வேடரென்றுதிருஷ்டாந்தம் வரப்பட்டது,

இதுவுமல்லாமல் பஞ்சநிலத்தில் வசிக்குங்குடிகளிலொன்றாகிய முல்லைநிலத்துக்குரிய இடையரைக்குறித்து இவர்கள்பூவைசியரல்லவென்றும் மேற்படிபஞ்சநிலத்தில் வசிக்கும் பஞ்சசூத்திரர்களில் ஒன்றென்றும் சிலநூல்களால் திருஷ்டாந்தங்காட்டியிருப்பதால் இந்தமுல்லைநிலம்நீங்கலாகமற்றநான்குநிலத்தில்வசிக்குங் குடிகளுக்கும்முல்லைநிலத்திடையருக்குமுண்டானதிருஷ்டாந்தம்போல் நூல்களிலுண்டோவென்று சிலர்யோசிக்கயிடந்தருவதாலும் மற்றநான்குகுலத்துக்குரியவரின்னாரென்றும் அவர்கள்செய்யுந்தொழில்களின்னதென்றும் யாவரும் எளிதிலுணர்ந்துக்கொள்ள வேண்டியது அவஸ்யமாதலால் பலநூல்களால் அதற்குரியசில உதாரணம்வ

பாலைநிலத்தில்வசிக்குங்குடிகளாகியவேடர்களைக் குறித்துவருமாறு.

பெரியபுராணம்-கண்ணப்பநாயனூர் சரித்திரம்-௬வது-கவி,

குன்றவரதனில்வாழ்வார் கொடுஞ்செவிஞமலியார்த்த *
வன்றிறல்விளவின்கோட்டு வார்வலைமருங்குதூங்கப் ...*
பன்றியும்புலியுமெண்குங்கடமையுமானின்பார்வை... *
அன்றியும்பாறைமுன்றி லவணமுணங்குமெங்கும்... *

இதின்தாத்பரியம்,

குன்றவரானவேடர்கள் தங்கள்வீட்டுநாயானது குலைக்கும் வோசையுடன் விளாமரத்தின் கொம்பில் வலையானதுதொங்க பன்றி புலி-கரடி-கடைமான்இதுகள் பார்க்கப் பெறுகிறதுமல்லாமல்கற்பா, றையாகியமுற்றத்தில் மலைநெல்லானதுவுலரு மென்பதாம்.



மேற்படிகண்ணப்பநாயனூர்சரித்திரம் ௯வது கவி.

ஆறலைத்துண்ணும்வேட ரயற்புலங்கவர்ந்துகொண்ட *
வேறுபல்லுருவின்மிக்க விரவுமாநிரைகளன்றி ..... *
ஏறுடைவானந்தன்னி லிடிக்குரலெழிலியோடு ...... *
மாறுகொண்முழக்கங்காட்டு மதக்கைமாநிரைகளெங்கும்

இதின்தாத்பரியம்,

வழிப்போக்கரையடித்துப்போசனஞ்செய்யும் வேடருடைய இனைப்புனங்களைக்கவர்ந்துகொண்டபல ருபங்களையுடையமான்கூட்டங்களல்லாமல்இடிகள்போற்கற்சிக்கும் ஆனைக்கூட்டங்களும்மே ற்படிபுலத்தில்நிறைந்ததென்பதாம்.



மேற்படிபுராணம்-௭வது-கவி,

மைச்செறிந்தனையமேனி வன்றொழின்மறவர்தம்பால்
அச்சமுமருளுமென்று மடைவிலாருடைவன்றோலார்
பொச்சையினறவுமூனின் புழுக்கலுமுணவுங்கொள்ளு
நச்சழற்பகழிவேடர்க் கதிபதிநாகனென்பான்

ஜாதிசங்கிரகசாரம்.

இதின்தாத்பரியம்,

கறுத்தமேனியையும், வலியதொழிலையுமுடைய மறவராகிய ரிதண்களிடத்தில் பயமும்கிருபையும் என்றும்பொருந்தாதவ வலியதோளுடையுடையவரும்கள்ளையும்மாமிசமும் உலவாக ...புவரும் விஷமூட்டிய அம்பையுடையவராகியவேடருக்கு அ ...நாகனென்பவனென்பதாம்.



இதுவுமல்லாமல் நாலாயிரபிரபந்தம் முதலாயிரத்தில் பெரி யாழ்வார்சொன்ன கண்ணனையன்னைகன்றின்பின் போக்கியதெண் ணிமனக்கணிரங்கியிசைத்தல்-உ-வது கவி-

பற்றுமஞ்சட்பூசிப் பாவைமாரோடுபாடியில்... ... *
சிற்றில்சிதைத்தெங்குந் தீமைசெய்துதிரியாமே *
கற்றுத்தூளியுடைவேடர் கானிடைக்கன்றின்பின் *
எற்றுக்கென்பிள்ளையைப்போக்கினேனெல்லேபாவமே *

இதின்தாத்பரியம்.

மஞ்சளைப்பூசிய பெண்களோடுஆயர்பாடியில்சிற்றில்விளை யாட்டைக்கெடுத்து தீங்குசெய்து திரியாமல் பொய்யும்புழுதியும் ...ருந்தினவேடர்கள் சஞ்சரியாநின்ற பாலைவனங்களில்கன்றுக்கு ...பின் பென்பிள்ளையையனுப்பினே னிதென்னபாவ மென்



இவையன்றியும்-அரிச்சந்திரபுராணம்நாட்டுச்சிறப்பு-ம்எ வது-கவி.

தேருமாறுணராச்சின வேடர்பேய்த் ... ...*
தேருமாறுமூட்டேடறும் பாலையில் ... ... *
ஊருமாதரியானையு முந்திமான் ... ...*
வாருமாதரிதாடொழுதுற்றதே ... ... *

இதின்தாத்பரியம்,

நின்ற அந்தநிலத்துக்குரிய துர்க்கையினது பாதத்தை வணங்கிச்சாயு நதியானதுபோயிற்றென்பதாம்,



இதுவும்-மேற்படி அரிச்சந்திரபுராணம் - வேட்டஞ்செய்காண்டம்.

சு வது-கவி.

அந்தவேலை யருஞ்சுரம்யாவினும் ... *
சந்தன்மேவுகுறிஞ்சிக் கடத்தினும் ... ... *
குந்தம்வேல்சிலை கூன்குணில்கொண்டவன் *
வந்தவேடர்வரவு விளம்புவாம் ... ... *

இதின்தாத்பரியம்.

அந்தசமயத்தில் அரிதானபாலைவனம் யாவினுஞ் சுப்பிரமண்யர் விற்றிராநின்ற குறிஞ்சியாகியமலையிடத்திலும் ஈட்டி - வேல் வில்லு வளைதடி கைக்கொண்டுவந்த வேடர்வரவைச்சொல்வோமென்பதாம்.

இந்தக்கவியில் பாலைநிலமாக்களுங்குறிஞ்சிநிலமாக்களும் ஒன்றென்று சொல்கிறபடிஅவர்கள் ஒருஜாதியானபோதிலும் வித்தியாசமுண்டாதலால்தான் குறிஞ்சிநிலமாக்களென்றும் பாலைநிலமாக்களென்றும்பிறித்துச்சொல்லியிருக்கின்றது.

பெரியபுராணம் பிரபந்தம் அரிச்சந்திரபுராணமாகியமூன்று நூல்களாலும்பஞ்சநிலத்தில்வொன்றாகியபாலைநிலத்துக்குரியவர் வேடர்களென்றும் -வழிபறிப்பவரென்றும்பயமும்கிருபையுமில்லாதவரென்றும் மறவரென்றும் சொல்லியிருப்பதுபோல்இன்னுமனந்த நூல்களிலும்சொல்லியிருக்கின்றது.

உ-வது - அதிகாரம் ந-வது-பிரிவு

பஞ்சநிலத்தில் ஒன்றாகிய குறிஞ்சிநிலத்தில் வசிக்குங்குடிகளாகியவர்கள் குறவர்களென்று உதாரணப் வருமாறு.

சங்கத்தலைவர்களில் ஒருவராகிய கல்லாடர்செய்த கல்லாடம்-ருரு-வது-கவி.

குல்முறைக்கூறிமறுத்தல்,
பெருமறைநூல்பெறக் கோன்முறைபுரக்கும்... .....
பெருந்தகைவேந்தனருங்குணம்போல

ஞானசங்கிரகசாரம்.

மணந்தோர்க்கமுதுந் தணந்தோர்க்கெரியும் *
புக்குழிப்புக்குழிப் புலன்பெறக்கொடுக்கு ... *
மலையத்தமிழ்க்கால் வாவியிற்புகுந்து ... *
புள்விசைத்தாமரைப் புதுமுகையவிழ்ப்ப ... *
வண்டினம்படிந்து மதுக்கவர்ந்துண்டு ... *
சேயிதழ்க்குவளையிமிராநிரையுறங்கு ... .. *
நிலநீர்நாட னீடயிலவளே ... ... *
மலையுறைபகைத்து வானுறைக்கணக்கும் .. ... *
புட்குலஞ்சூழ்ந்த பொருட்புடைக்குறவர்தம் *
பெருந்தேன்கவருஞ் சிறுகுடிமகளே .. *
நீயே யாயமோடார்ப்ப வரிகிளைமூழ்கி ... *
மாயாநல்லறம் வளர்நாட்டினையே ... *
இவளே-தொண்டகந்துவைப்பத்தொழிற்புனையலைந்து
பகட்டினங்கொல்லும் பழிநாட்டவளே ... ... *
நீயே எழுநிலைமாடத்திளமுலைமகளிர் ... ... *
நடமுஞ்செயத்தரளவடந்தெறநகரோ ... *
இவளே கடப்பெருங்கரிக்குலமடங்கல்புக்கசழத் *
தெறித்திடுப்பூத்தரந் திரட்டுவைப்பினளே ... *
நீயே-மணிசெழுநவமணி யலமொனத்தொடுத்த *
பொற்கொடித்தேர்மிலசப் பொலிகுலவயன்றே ... *
இவளே-மணிவாய்க்கிளை துணியாதகற்ற ... *
நெட்டிதணேறு மிப்புனத்தினளே ... *
யாதலிற்பெருப்புக ழூணைகுறியாயி ... ... *
ஞாயன்பாறத் தேவர்கெட்டோட ... *
வளிசுழல்விசைப்பின் கிளர்முகடணவிக் ... *
கருமுகில்வளைந்த பெருகியபோல ... ... *
நிலைகெடப்பரந்த கடலெழுவிடத்தை ... *
மறித்தவருயிர்பெறக் குறித்துண்டருளித் ... *
திருக்களங்கறுத்த வருட்பெருநாயகன் ... *
கூடல்கூடினர்போல ... ... *
நாடனீயிவள் கழைத்தோளையசயே ... .. *

இந்த [illegible] குல [illegible] மாதங்களை [illegible] [illegible] ஆகா [illegible] [illegible] ஆகவே [illegible] [illegible] [illegible] கள் [illegible] யுடைய [illegible] கலாட்டியால் இவர் [illegible] [illegible] [illegible] பண்ணப்பட்ட [illegible] [illegible] [illegible]யம் பட்டதாம்.

[illegible] ஆகவே [illegible] ஸ்திதியில் வாசப்பண்ணப்பட்டவர்கள் [illegible] விளங்கிற்று.

அரிச்சந்திரபுராணம் [illegible] கவி

[illegible] ... ... *

[illegible] .. *

[illegible] . *

[illegible] ... ... *

இ[illegible]ம்,

உ[illegible] கள்ச[illegible] பாதியில் [illegible] ஆயர்கள் பக்கங்களிற்ப[illegible] [illegible]வெற்றி [illegible] டையையுடைய [illegible] திரிசிதிலக்கட வுளாகிய சுப்பிரமண்ய[illegible] [illegible] கொழுக[illegible] [illegible] பங்களுந் [illegible]கெடக்குறிஞ்சி நிலத்தைச்சராயந்தியானதுவானையுற்றதென்பதாம்.

இதுவுமல்லாமல் திருவேங்கடவெண்பா உ௰-வது கவி.

மன்னுகுடிக்குறவர் வாமேனர் துலாத்திடையே .. *
மின்னுமணிநிறக்கும்வேங்கடமே-என்னு... ... *
னரவிந்தப்போதகசத்தா னன்பாலழைத்த ... ...*
கரவிந்தப்போதகத்தான் காப்பு. ....*

இதின்தாத்பரியம்.

திருவேங்கடமென்னு மாலையில் நிலைபெற்றகுடிகளாகிய குற
ஆகாயத்திற் சஞ்சரியாநின்ற துலாராசியினிடத்தில் பிரகாசியா

நின்று இரத்தினக்கல்லுகளை நிறுப்பார்கள் அந்தப்படியேக் குரியகுடைவாளவர் என்னிதையதாமரையினிடத்திராநின்றவனும் அநிரூலபோபன்றழைக்கப்பட்ட ஆனையையுடையவனுமென்பதாம்,

இதுவுமல்லாமல்-நாலாயிரப்பிரபந்தம் முதலாயிரம் பெரியாழ்வார் சொன்ன திருமாலிருஞ்சோலைமலையின் மாட்சி ௪ வது-கவி.

மாவலிதன்னுடைய மகன்வாணன்மகளிருந்த *
காவலைக்கட்டழித்த தனிக்காளைகருதுமலை *
கோவலர்கோவிந்தனைக்குறமாதர்கள்பண்குறிஞ்சிப் *
பாவொலிபாடிநடப்பயின் மாலிருஞ்சோலையதே ... *

இதின்தாத்பரியம்,

வாணாசுரன் மகளிருந்த கன்னிகாமாடத்தின் காவலையழித்த கடவுளாயுளவர் யிச்சித்தமலையானது கோவிந்தனைக்குறப் பெண்கள் தாங்கள் வாசம்பண்ணப்பட்ட குறிஞ்சிநிலத்துக்குரிய ராகத்தைப் பாடி நடனஞ்செய்யப்பட்ட திருமாலிருஞ்சோலையென்பதாம்,

கல்லாடம் அரிச்சந்திரபுராணம் வெங்கடவெண்பா நாலாயிரப்பிரபந்தம் இந்த நாலிலும் குறிஞ்சிநிலத்துக் குரியவர் குறவரென்றும், தாழ்ந்தவர்களென்றும் சொன்னதுபோல் இன்னுமனந்தபுராணங்களிலுஞ் சொல்லியிருக்கின்றது இது யாவருக்குந்தெரியவரலாம்.

௨-வது-அதிகாரம்-௪-வது பிரிவு.


பஞ்சநிலத்திலொன்றான நெய்தநிலமாகிய கடற்கரையில் வாசம்பண்ணுங் குடிகளின் விபரம் வருமாறு.

பெரியபுராணம்-அதிபத்தநாயனார் சரித்திரம்- ௫ வது-கவி.

அந்நெடுந்திருநகர்மருங் கலைகடல்விளிப்பிற் *
பன்னெடுந்திரைதுறைதவழ்பாங்கரின் ஞாங்கர் ... *
மன்னுதொன்மையின் வலைவளத் துணிவினின்மலிந்த *
தன்மைவாழ்குடிமிடைந்தது நுளைப்பாடி ... *

இதின்தாத்பரியம்-

அழகுபொருந்திய நாகபட்டணத்திற்பக்கத்தில் அலைபொருந்திய கடலோரத்தில் நிலைபெற்றுவாசம்பண்ணப்பட்ட பழமையாகியவலைவாணங்களையுடைய வுணவினால்நிறைந்த அழகுதங்கியமையால் வாழுஞ்சிறுகுடிகளை நெருங்கிய நுளையரூரென்பதாம்.



இதுவும்-மேற்படிபுராண சரித்திரம் ௮-வது கவி.

உலைநெடுந்திமிற்கொடர்வடம் புடைவலிப்பவரொலியும் ... *
விலைநுளைச்சியர்பகர்ந்துமீன் குவைகொடுப்பவர்விளியொலியுந் *
மலைசிறந்தவெள்வளைசொரிபவர்சகங்கொலியும் ... ... *
அலைநெடுங்கடலதிரொலிக்கெதிரொலியனைய ... ... *

இதின்தாத்பரியம்.

வலைகளையிழுப்பவருடையசத்தமும், மீன்குப்பலைவிற்கப்படும் நுளைச்சியருடையசத்தமும் முதன்மையானவெள்ளைச்சங்குகளைப் பிடித்துக்குவிக்குஞ் சத்தமும் இந்தசத்தங்களெல்லாம் கடலொலிக்கெதிரொலிபோன்றனவென்பதாம்-

இதுவும்-மேற்படிபுராணசரித்திரம் - ௯-வது-கவி,

அனையதாகியவந்நுளைப்பாடியிலமர்ந்து ... ... *
மனைவளம்பொலிநுளையர்தங் குலத்தினில்வந்தார் ... *
புனையிளம்பிறைமுடியவரடித்தொண்டுபுரியும் ... *
வினைவிளங்கிய வதிபத்தரெனநிகழ்மேலோர் ... ...*

இதின்தாத்பரியம்,

அத்தன்மையாகிய நுளையரூரிற்பொருந்திமனைவளப்பமுடைய பரதவர்குலத்தினில்வந்தவர்-இளம்பிறையையுடையபரமசிவத்துக்குத்தொண்டுபுரியும்அதிபத்தரென்னும்பேரையுடையபெரியோரென்பதாம்,

இதுவும்-மேற்படிபுராணசரித்திரம்-௰ வது-கவி.

ஆங்கவன்பார்த்தா நுளையர்தந் தலைவராயவர்கள் ...... *
வங்குதெண்டிரைக்கடலிடைப்பலபடவிடுக்கிப் ..... *
பாங்குசூழ்வலைவளைத்துமீன் படுத்துமுன்குவிக்கும் *
ஓங்குபல்குவைபுலப்பிலவுடையராயுயர்வார் .... *

இதின்தாற்பரியம்,

அதிபத்தநாயனாராகிய பெரியவர் நுளையருக்குத்தலைவராகி கடலிலேபலபடகுகளோட்டி வலைகளைவீசி மீன்களைப் பிடித்து குப்புகுப்பலாய்ப்போட்டு அதிகமுடையராயுயர்வாரென்பதாம்,

கல்லாடம்-௨௭-வது அகவல்- காமமிக்ககழிபடர்கிளவி.


வானவர்க்கிறைவனிலங்கிடைச்சொலு . ... *
திருவுடனிறைவிழியாயிரந்தோன்ற ... ... *
இமையாதுவிழிக்குந்தோற்றம்போலக் ... *
கஞ்சமுஞ்சாவியுமாயிடையறாமலர்ந்து ... ... *
மணஞ்சூழ்கிடந்தநீள்கருங்கழியே ... *
கருங்கழிகொடுக்கும்வெள்ளிறவருந்தக் ... *
கைபார்த்திருக்குமடப்பெடைக்குருகே ... *
பெடைக்குருகணங்கின்விரித்தவெண்சிறையொடு ... *
காவலடைகிடக்குங்கைதையம்பொழிலே ... *
வெண்மையொடுகூடியுந்தண்மைபொருந்தியு... ... *
மூலகவிருபக்குஞ்செஞ்சுடர்வெண்சுடர் ... *
காலங்கொடாப்புறமுறைதோற்ற .. *
மணிநிரைகுயிற்றியமண்டபமாகிப் ... *
பொறைமாண்டுயிர்க்குந்தாயாமண்மகள் ... ... *
களையாதுடுக்கும்பைந்துகிலாகி ... ... *
வேனிற்கிழவன்பேரணிமகிழ ... ... *
முழக்காதுழங்கும்வார்முரசாகி ... *
நெடியோன்றுயிலாவறிவொடுதுயிலப் ... *
பாயற்கமைந்தபள்ளியறையாகிச் ... .. *

ஜாதிசங்கிரகசாரம்.

சலப[illegible]யாய்ந்து சேமநிலைத்த ... *
மூத்துமணிகிடக்குஞ் சேற்றிருள[illegible]காய்ப் ... *
புலவுடற்பரதவர் தங்குடியோம்ப ... *
நாளும்விளைக்கும் பெருவயலாகிக் ... ... *
கலமெனுநெடுநீர்த் தொலையாதோட ... *
வள்ப்பறப்பரந்தவீதியாகிச் ... ... *
சுறவுவேத்து நெடும்படைசெய்ய ... ... *
மூழக்கமாவெனாத்த வமர்க்களமாகி ... *
மகரத்தெய்வ நாணிறைந்துறைய ... *
மணிவிளக்குநிறைந்த வாலயமாகி ... *
நீர்நெய்வார்த்துச் சகரரமைத்த ... .. *
திவளர்வட்டக் குண்டமாகி ... ... *
யெண்டிசைப்பருவா யினமணிப்பாத்தட் ... *
டண்டினிற்றெரியுந் தகளியாகிப் ... *
பஞ்சவனிறைந்த வன்புடன்வேண்ட ... *
மாநிக்குனித்த நிறமணிபெருமாற் ... *
கமுநபோனகக் கலமெனவுதவு ... ... *
மறிந்நீமாறு மடைப்பள்ளியாகி ... ... *
யின்னும்பலவாய் மன்னுங்கடலே ... . *
றுங்களின்பம்பெருந்துணையென்றாற் ... *
றண்ணந்துறைவற்கின்றிவளொருத்தி ... *
நெருப்புறுமெழுகினுள்ளம்வாடியு ... *
மருவிதூங்கக்கண்ணீர்கொண்டு ... ... *
மாவின்வாயரியிற் பலவுதிர்ந்து ... ... *
நிலையாச்சூளி னிலையாநெஞ்சங் ... ... *
கொண்டனனென்னை வென்றுகநாடி ... *
யுற்றவாய்மை சற்றுந்தருகிலே ... ... *
னன்றெனினும்பி லொன்றுபட்டொருநா ... *
ளிவனோதுயரம்பெறுவனென்னென்று ... *
னிவைவாதிருக்குங்கேண்மை ... ... *
மனமுநாடிற்கொலையினுங் கொடிதே *

இதின்தாத்பரியம்.

இந்த அகவலுக் குறையெழுதினால் அதிகமாகவிரியுமாதலால் இதிலெனக்கு உதாரணமாகவேயவ் வடியைத் திரட்டியெடுத்துக் காட்டலானேன். அதாவது, நெய்தல்நிலமாக்களாகியகரையார்பட்டினவர்களுக்கு இந்தக்கடலானது எந்தநாளிலும் தங்களுடையகுடி விக்குப்படி, மாறாதவிளைவாகுடைப் பெரியவிளைநிலம்போல் தமக்குதவுமென்றுந் தான்றும்படியாக இந்தஅகவலில் புலவுடற்பரதவர்க்குடைய பயனாகும்விளைக்கும்பெருவயலெல்லாருக்கு ... புலாலுடற்சரீரத்தையுடையபரதவராகியகரையார்பட்டினத்தார்களானவர்களுக்கு விக்கஎந்தநாளும் குறையாமல விளையுமப்பெரியசமுத்திரமென்பதாம்.



நீதிநூலாகிய நாலடியார் பொருட்பாலிற் கல்வியெனு மதிகாரத்தில் ௬-வது-கவி,

தோணியியக்குவான் றொல்லைவருணத்துக் *
காணிற்கடைப்பட்டானென்றிகழார்காணு *
யவன்றுணையாவாறுபோயற்றேநூல்கற்ற ... *
மகன்றுணையா நல்லகொளல் *

இதின்தாத்பரியம்,

தோணியாகிய படவுகளைத்தள்ளப்பட்ட மேற்படிநெய்தல் நிலமாக்களாகிய பரதவர்பழையசாதிகளிலொன்றாயிற்-கடைப்பட்டவரா யிருந்தபோதிலும் இகழாமல் அவன்றுணையைக்கொண்டு ஆறுகடலைத்தாண்டுவதுபோல் சாஸ்திரங்கற்றவன் கடைநிலைஜாதியாயிருந்தபோதிலும் அவனைச்சிநேகிக்கக்கடவதென்பதாம்.



திருவிளையாடற்புராணம்-நாட்டுப்படலம்.

௪௨-வது-கவி.

செ[redacted]ருதாமரைத்திரள்மீதன் கொழுஞ்சுவைக்கன்ன *
[illegible] [redacted]ளாயாறவுமளப்பன விடைக்கிடைமுத்தம்,... .. *

இதன்தாத்பரியம்.

[illegible] நுளைச்சியர்களுடைய [illegible] [illegible] முத்துமயமாகுதநிலத்தில் [illegible] டாகப் [illegible] [illegible] நிலத்தில் வுண் டாகப்பட்ட [illegible] கருங்குமுதன்-கரும்பு- [illegible] [illegible] கண்களையுடையவைடமொழித்து மாம் [illegible] [illegible].

[illegible] நாட்டுச்சிறப்பு-
[illegible] கவி.

[illegible] ... ... *
[illegible] ... *
[illegible] நுளைச்சியர் ... ... *
[illegible] ... *

இதின்தாத்பரியம்.

நீ[illegible]ப்பொருந்திய[illegible] நிலத்தில்முத்துவண்டலில் பி றந்த [illegible] புஷ்பங்கள் கரியகண்களையுடைய நுளைச்சியரு டைய [illegible] சங்காளம் முத்துக்களைமீறுமென்பதாம்.



இதுவும்-மேற்படிபுராணம்-நாட்டுச்சிறப்பு-இஅ வது-கவி.

கலைபுனைக்குங்கருங்க ணுளைச்சியர் ... *
புலைபனைக்குநறைக்கும்பொருந்திய ... ... *
விலையளப்பன வெண்முத்தமேயற ... ... *
னிலையளக்கும்பரதவர் நெய்தலே ... ...*

இதின்தாத்பரியம்.

ன்னுக்குக்கிடைக்கிடைகொடுத்துமாற்றிக்கொ[redacted]ரும் நிலை டையராகவருடையநெய்தநிலமென்றுசொல்லப்ப[redacted]ட தன்னி டைப்பதாம்

இதுவுமல்லாமல்பாரதம்-ஆதிபர்வம்-குருகுலச்சருக்கம் கூ-வது கவி

பாசறைமுழுதுமொருபெருங்கடவுட் ... ... *
பரிமளமொல்லெனப்பரப்பி ... .. *
யோசனையளவுங்கமழுயிருமருங்கு ... ... *
முயிர்க்குமெல்லுயிர்ப்பெதிரோடித் ... *
தாசர்தங்குலத்துக்கதிபதியளிக்க ... ... *
தையலைத்தரணிபர்க்கெல்லா ... ... *
மீசனுமுருகிக்கண்டுளங்களியா ... ... *
விலங்கிழையார்கொலியென்றான் *

இதின்தாத்பரியம்.

ஆசனது பாடிகூடாரமுழுதும் தெய்வீகப்பரிமளமானது வீச அந்தவாசனைவந்த விடத்தைத்தேடிப்போய் அடிமைக்குலமென்று சொல்லப்பட்ட நுளையருக்கெசமானனவன் பெற்றபெண்ணாகிய பரிமளகெந்தியை உலகுக்கெல்லாம் நாயகனாகிய சந்தனுகண்டு பெண்ணே நீயாரென்றானென்பதாம்.


இந்தக்கவியில் தாசர்தங்குலத்துக்கதிபதியென்பது நுளையருக்குள்தலைவனென்பதாம்-

இதுவும்-மேற்படிசருக்கம்-ா-வது கவி.

புருவின்மாயிற்பிறந்தகோமகனென் *
புன்குலமகள்குயம்பொருந்தன் *
மேருவுமணுவுநிகர்க்குமாறுக்கு *
மேதினியிவைபுகன்றென்கொல் *
பொருவகையினுலாவுதற்கிருந்தான் *

இதின்றாத்பரியம்.

பூரு சக்ரவர்த்திமரபிற்பிறந்த அரசமகன் என்கிற அற்புதமாகிய ரகோ குலட்பெண்ணின் தனதூம்புத்திரூவுதல் மகாமேருவையும் அணுவையும் சமமென்றறிறப்பவனைப்போன்றிருப்ப தலலாம ல் இந்தப்பூமியைப்பரிபாலனஞ்செய்கைக்கைபுத்திரருகிய மிதயவ விரதனிருக்க என்பெண்ணுக்குணடாகும் பிள்ளைசெய்யஞ்செட்டை யெதுவென்றபாரவத்தலைவல்சொல்றுனென்பதாம்.



இதுவும்- மேற்படிசருக்கம் ௱கூ வது கவி.

அ டபியாசமாமனுமாச *
    னைடம யிர்தவயவத்தழகா *
ஓ டபருபயக்ருங்களியைபுப் யிறுத்தி *
    டோடுந்நிலைய வாய்புரைத்துணாத்தா *
வைா பெருமாலிகட்டருரூாக்கீக ... *
    யிசைந்தமெய்த்தவம்புரியிலளை *
வபவிழ்மலர்மாதென்டத்தயர்ந்தி *
    வலருர்மாமகளெனக்கருதேல் *

இதின்றாத்பரியம்.

தாசர்குலமென்னும் நளையருக்கதிபதியானவன் அரசன்பாதத் திலேவணங்கிதேவர்களும் ஆச்சரியப்படப்பட்டபரிமளகெந்தியை யொருபக்கத்தில் நிறுத்தி அடங்கிவாய் புதைத்து யென்கடவுளே என் சொல்கேட்கக்கடவீர் தங்களுக்கிசையதவம்புரியாநின்றஇந்தப்பரிம ளகெந்தியானவள் இலட்சுமியைப்போன்ற க்ஷத்திரியப் பெண்ணை யன்றி பாதவாகிய நளையருடைய பெண்ணென்றறிநீயாதே— ன்றுபாரவத்தலைவன்சொன்னுனென்பதாம்.



இதுவும்- ஷை சருக்கம்-௱ய-வது-கவி.

வாசனளித்தவிமானமீதொருவன் வசுவெனுஞ்சோதிமாமர ன், கேசவனெனப்போம்விசும்பிடைமனையான்கிரிகையைதினை

...ச்செருமி, தேசமொடிசைபுருஷலக்கணத்திலே [redacted] விருத்தவி
யமெய்ய்த், தெசவனைவிந்தரு யிடைத்தராளத்தரவளை [redacted] சநதமபெரா
ருயரால். ... ... *

இதின் தாத்பரியம்.

வதுவென்றுசொல்லப்பட்ட அக்கினியபாத்திரசாதனைகள் தேவேந்திரன்கொடுத்த விமானமீதில் ஆகாயமார்க்கமாய்ப் போகும்போது அவ் வியஞ்சாரியாகிய கிருபையுடனெட்டு விசாரித்தவை விட்பட்ட தனை தவிரிய மானதி சூரியனுதயங்கொண்டாகப்பட்ட பருவதியில் விழுந்திருப்பதாம்.

தெவப்பேற்ப ... சருக்கம் ... வது கவி.

ஒருமுனிபுனிவாளாட்கொருத்தி ... ... வியா
னிமைபானைகளைவிரும் ... ...
ப் பாதவெரிவ... ... ...
வருவித்தமீம்வயித்திருந்தாய ... ... *

இதின் தாத்பரியம்.

ஒருரிஷியினுடையசாபத்தினால் ... செய்வதாகியானவன் மீனமாகி யமுனாநதியிலிருந்தவள் மேற்படி விரியத்தையிவாயாகவிழுங்கஅதனால் கெர்ப்பங்கொண்டு ... வெளிப்படுஞ்சமயத்தில் அந்தமீனுனது பாதவராகிய நுளையர் வலையிற்கட்டுப்பட அதைத்தின்றுக்க அதன்வயிற்றில் ... பெண் ... பிருக்கக்கண்டாரென்பதாம்.

இதுவும் மேற்படிசருக்கம் ௱௰உ-வது கவி.

மானவர்பதியாம்வசுவிணுக்கிளா
மங்கையறக்காட்டவுமகளை *
மீனவிமினைப்பேர்கொடுத்தனன்கொண்டு *
மெல்லியலிவளைமீண்டளித்தான் *
[illegible]தனவுமென்மகளெனஞ *
[illegible]யர்க்கையாலிவிமையின்வளர்த்தேன் *

காண[redacted] ருயிர்ப் போல் செந்து தினவுத்த
கா[redacted]ர் துரை பட்டணத்தின்

நிஷ்காரியம்.

மானிடர்களுக் கதிபதியாகிய ... வம்சவானுக்கு இந்தப்பெ ண்ணையும் பிள்ளையுங் கட்ட அந்தப்பிள்ளையை தான் பிள்ளையென்று பேர்கொடுத்து தன்னிடத்தில் வைத்துக்கொண்டு இந்தப் பெண் ணையுமுறைப்படியும் விவாகஞ்செய்து புத்திரனை நாளும் பிரபலவானாயின் மகனென்று முறைப்படியே காட்டிக்கொடுத்து மகாசேனாபதி யென்று பேர் பிரசித்தப்படுத்தினான் அவர் பட்டாபிஷேகம் பெற்றுக் கலியர்குலத்தில் வளர்ந்து பெரும் செங்கோல் நடத்தி வருகையில் பிரதாபமுண்டாயிருந்தபடியினால் தன்னிலை நிலைத்தச்சேர்மானும் இந்தப்பெண் பெருவமிசத்தார் என்று அவர் க்ஷத்திரியராகிய ராஜகுலத்திலே பிறந்தவர்களாகையால் க்ஷத்திரியகுலத்துக் கதிபதியாகிய செங்குந்தர் வம்சமாயிருக்கிறார்களாம்.

இப்படிப்பட்டவராகிய ராஜாவால் வளர்க்கப்பட்ட பூபாலனுடைய தந்திரமும் சாமர்த்தியமும் அதிகமான ராஜகுலத்தாரான க்ஷத்திரியர் குலத்தாராகிய சந்திரவம்சமாயிருந்து விளங்கினார்கள் என்று பேசிக் கொள்ளுகிறார்கள்,

இப்படிப்பட்டவராகிய ராஜாவைக்குறித்து இதிலெழுதியிருக்கிற திருஷ்டாந்தமல்லாமல் இன்னும் பலகாலங்களையும் பாரதத்தில் சந்திர மஹாராஜன் காலத்தையும் செவ்வையாய் வுணிப்பார்ப்போமாகில் இவ ர்கள் துவுண்மைசெவ்வையாகவே விளங்கும்,

மேற்சொல்லப்பட்ட பெரியபுராணம்-கல்லாடம்-நாலடியார்- அரிச்சந்திரபுராணம் பாரதம் இதுமுதலிய நெய்தநிலமாக்களாகிய பரதவரை நூலையன்றும் இவர்கள் தொழிலையும் பிடித்தவென் றும் அற்பகுலத்தவரென்றும் வலையரென்றும் இன்னும் பலவாறாக இந் த நூற்களிற் சொல்லியிருக்கிறதுந்தவிர இன்னும் அநேகப் நூல்களி ல் நெய்தநிலத்தில்வசிக்குங்குடிகளானவர் பட்டினவர்களையாரென் றுசொல்லியிருக்கிறது அவருக்குந்தெரிந்தேயிருக்கும் ஆனால், கனு யானொன்பதும் பட்டினவரென்பதும் ஒருவருக்கேதவிரவேறல்ல அ தற்குத்திருஷ்டாந்தங்கட்டுரையில் அநேகவாசகப்படையிலே

டகுடிகளானபடியால்கரையார் அல்லது பட்டினவரொ[redacted]றவருங்கிவருகின்றது ஆனால்கரையாரென்பது வெளியாயிருப்பதா[redacted]யவருக்கும் இந்த வாக்கியத்துக்கு அர்த்தம் வெளிறத்தெரிந்திருக்க[redacted]ப் பட்டினவரென்பதற்குக்கரையதுத்தரூர ரென்றுமெப்படிச் சொல்லலாமென்றுசிலர்யோசிப்பார்கள் ஆகலால் அதற்குரிய திருஷ்டாந்தங்கூறுமாறு.


சூடாமணிநிகண்டு ௧௦ வது இடப்பெயர்த்தொகுதி

௬௪ வது-கலி.

குறிச்சிசிற்றூர் சேரி குறிஞ்சிநன்னிலத்தூர்ப்பேராம்
பறிக்கும்முல்லையூர் பாடி பட்டினம் நெய்தல் *
குறித்தமருதவூர் பேரூர் குறும்புபாலைக்கடற்றம் *
பறித்தபாசறையேத்தவர் பாளையப்பதியாகுமே *

இதின்தாத்பரியம்,

குறிஞ்சிநிலத்தூரின்பேர்-குறிச்சி சிற்றூர்-சேரியென்றும், முல்லைநிலத்தூரின்பேர் பாடியென்றும், நெய்தல்நிலத்தூரின்பேர் பட்டினமென்றும், பாலைநிலத்தூரின்பேர் குறும்பென்றும் சொல்லியிருப்பதால்நெய்தல்நிலமாகிய கடற்கரையூரின்பேர் பட்டினமென்று யாவருக்கும் விதிதமாகும், ஆதலால் அந்தயிடத்தில் வாசம்பண்ணப்பட்டவருக்குத்தமிழ்ப்பேராகியகரையாரென்பதும், சம்ஸ்கிருதப்பேராகியபட்டினவரென்பதும் நியாயம், ஆனால்மற்றநாலுநிலத்திலவஸிக்குங்குடிகள் அந்தயிடத்தில்அவஸ்யத்தால்போய்க்குடியிருந்தபோதிலும் அவர்களுக்குஅந்தப்பேர் பொருந்தமாட்டாது என்பொருத்தாகெட்டால் நெய்தநிலத்தூர்த்தொழிலாகிய மீன்பிடித்தல் படவுதள்ளுதலாகிய தொழில்கள் அவர்களுக்கேபொருந்துமென்பதாம்.



உ-வது அதிகாரம்-ரு-வது-பிரிவு.

பஞ்சநிலத்திலொன்றாகிய நெல்விளையாநின்ற மருதநிலத்துக்குரிய குடிகளின் விபரம்வருமாறு.



மருதநிலத்தூரின்பேர்.

சூடாமணிநிகண்டு ரு-வது- இடப்பெயர்த்தொகுதி

சஎ-வது-கவி,

புரிகுடநகரம்பூக்கம் புரங்குடிநிகாயம்பள்ளி *
சரணமாவாசம்பாக்கந் தாவளநிகமந்தாமம் *
பாவியநிலயங்கோட்டம் பதிவாழ்க்கைசேர்வுபாழி *
மருதநன்னிலத்தூரீரைந் திரட்டியாம்வசதியும்பேர் *

இதின்தாத்பரியம்.

புரி குடம் நகரம்- பூக்கம்-புரம்- குடி - நிகாயம-பள்ளி-சரணம் ஆவாசம்-பாக்கம்-தாவளம்-நிகமம்-தாமம்-நிலயம்-கோட்டம்-பதி வாழ்க்கை-சேர்வு பாழி-வசதி-இந்த -உக-ம்.மருதநிலத்தூரின் பேரென்பதாம்

இந்தமருதநிலத்தைச் சேர்ந்தவூர்களில்சர்வஜாதிகளின் வாசமும் சர்வவியாபாரமும் இராஜதானிகளும்யிருந்தபோதிலும் மருதநிலமாக்க ளென்கிறபேர் எல்லாருக்கும்பொருந்தமாட்டாது, ஏனென்றால் மருதநிலமென்றுசொல்லப்பட்ட நெல்லு -கருப்பு -வாழைமுதலானதுகளையும் பயிரிட்டு வேலைசெய்யும் குடிகளுக்கேமருதநிலமாக்களென்று பொருந்தும், ஆனால் இந்தமருதநிலத்தில் சர்வஜாதிகளும் பயிர்முதலானவேலைசெய்தபோதிலும் அவர்களுக்கு அந்தப்பெயர்பொருந்தாது, அதேனென்றால்-முதலதிகாரத்துள்-ச-வது-பிரிவிற்சொல்லி யிருக்கப்பட்ட சூத்திராகியவெள்ளாழரே மருதநிலமாக்களல்லாமல்வேறல்ல-இந்தவெள்ளாழரைமருதநிலமாக்களென்றுமெப்படிச்சொல்வது மருதநிலமாக்களைச்சொல்லுமிடத்தில்வெள்ளாழரென்கிறபேர்வராதிருப்பதாலும்வெள்ளாழருக்குப்பேர் பிரத்யேகமாய் முன்முதலதிகாரத்தில்-ச-வது-பிரிவிற்சொல்லி யி

ருப்பதாலும்மருதநிலமாக்கள்வேறேயொருஜாதியிருக்க[illegible]வண்டுமென்று சிலர்விபரீதமெண்ணங்கொண்டு யென்னைத்தூறுவார்க[illegible]ர்த்தசம்பியத்தைவெளியிட்டுயாவருக்கும்விளங்கும்படிச்செ[illegible]வதுயெனக்கு அவஸ்யமாதலால்அதைவெளியிட்டுச்சொல்லுகிறேன்

இந்தயிரண்டாவததிகாரம்முதற்பிரிவிற்சொன்னதுபோல் சூத்திரர்கள் செய்யுந்தொழில்களுக்கெல்லாம் உயர்ந்ததொழிலாகியபயிரிடுந்தொழில்கள் செய்யப்பட்டவரானபடியால் முன் முதலதிகாரத்தில் நாலாவதுபிரிவிற்சூத்திரரென்றுவெள்ளாழரைக்குறிப்பிட்டு சூத்திரருக்குத்தொழிலே புதற்காரணமானபடியால் தொழிற்கவிமுதல் தொழிலாகிய பயிர்த்தொழிலுக்குரியவர்வெள்ளாழரென்று நிகண்டுகளிற் குறிப்பித்ததிவாகரப் நிகண்டுகளில் சூத்திரருக்குள் மூதலிகர்களென்றுசொன்னார் - மேற்படி பயிர்த்தொழிலைச் செய்யுமிடமானது மருதநிலமானபடியால் இந்தப்பஞ்சரத்திரத்தில்மருதநிலத்தலைச் சொல்லுமிடத்தில் ஜாதியைக்குறிப்பிக்காமல் செய்யப்பட்டதொழிலைப்பற்றியேமருதநிலமாக்களென்று சில நூல்களிற்றொழிலைக்குறிப்பித்துஞ்சொன்னார்,

ஆனாற்சிலபுத்திமான்கள்மருதநிலமாக்கள் வேறேஜாதியிருப்பதாகவும் வெள்ளாழருக்குமிவருக்குமயாதொருசம்பந்தமில்லையென்பதாகவும் அந்தமருதநிலமாக்கள்வெள்ளாழருக்கு வேலைசெய்யப்பட்டவர்களாகவும் தோன்றும்படியாகச்சிலநூல்களுக்கெழுதியவுரைகளில் மருதநிலமாக்களுக்குமள்ளரென்றுவந்திருக்கிற பேருக்குவுரையாய் பள்ளரென்றெழுதியிருக்கிறார்கள் அதைவுண்மையென்றுசிலர்நம்பிவருகிறார்கள் அப்படி மள்ளரென்பதற்குமாத்திரம் பள்ளரென்று யெழுதுவாரேயானால் அந்தமருதநிலமாக்கள்பேரிலேயே உழவர் வினைஞர்-கம்பளர்- இதுமுதலானவெள்ளாழருக்குரியபேர் வந்திருக்கின்றதற்கு யென்னசொல்லுவார்களோ தெரியவில்லை இதல்லாமல்மருதநிலத்தலைவன்பேர் -ஊரன்-கிழவன்-என்றுவந்திருக்க அந்தப்பேர்வெள்ளாழருக்குரியதென்று பலநூல்களாலும்யாவருக்குந்தெரிந்திருக்க மருதநிலமாக்கள் முன்சொன்னபள்ளரென்றும் அதற்குத்

அப்படியுமில்லை-நெய்தநிலமாக்களாகியவலையர் அல்லது நுளையருக்குள் அந்தஜாதியிலேயேதலைவராகவும்-பாலைநிலமாக்களாகியவேடருக்குள் அந்தஜாதியிலேயேதலைவராகவும் இதுபோல்மற்றமுல்லை-குறிஞ்சிக்குட்பட்டிடையர்-குறவர்-இவர்களில்-அந்தஜாதிக்குள்தலைவரென்டபாகுபாடு பலநூல்களிலேயுஞ்சொல்லியிருக்கிறதுயாவருக்குந்தெரிந்திருக்கலாம்,இப்படியிருக்கமருதநிலமாக்களுக்குமாத்திரம்சூத்திரரொருஜாதியுந்தலைவரொரு சாதியுமாயிருக்கிறார்க ளென்றெப்படிச்சொல்லலாம்,அப்படிவரையெழுதலாம், இதையோசித்தால்யாராயினுங்கண்டார்கள் ஆகலால்மருதநிலமாக்களே வெள்ளாழரென்பதும்வேளாளரே மருதநிலமாக்களென்பதும்சிலருக்குத்தெரியாமல் மயங்கிச்சஞ்சரித்திருக்கிற படியால் இவைகளொன்றேன்றாயிருக்கிறதென்பதை நம்படி வெளிப்படுத்த அவசியமாதலால் அதைச்சொல்லுகிறேன்.

முதலதிகாரத்தில்.ச வது பிரிவிற்சொல்லப்பட்ட

சூத்திரர்-அல்லது வெள்ளாழர்பெயர்.

மண்மகள்புதல்வர் - வளமையர்-களமர்-சதுர்த்தர் உழவர்-மேழியர் வேளாளர் எரின்வாழ்நர் - காராளர்-வினைஞர்-பின்னவர்-ஆக (௰௭) இந்தப்பதினெழுபெயருக்குள்ளேமருதநிலமாக்கள் பெயர்வருமாறுகளமர்-தொழுவர்-மள்ளர்-கம்பளர்-உழவர் - வினைஞர் கடைஞர் ஆக (௭)

முன்சொன்னவெள்ளாழர்பெயரும் பின்சொன்னமருதநிலமாக்கள்பெயரும் ஒத்தேயிருக்கிறதன்றி யென்னவித்தியாசம் ஆனால் சூத்திரராகியவெள்ளாழர்பெயரில் சொல்லாதிருக்கிறதொழுவர்-மள்ளர்-இவ்விரண்டுபெயர்கள் மாத்திரம்புதிதென்று சிலர்யோசிப்பார்கள் அதுபுதிதல்லதொழுவரென்பதுயிவர்களுக்குமேல்பட்ட பிரம - க்ஷத்திரிய வைசியரென்கிறமூன்றுஜாதியையுமவணக்கப்பட்டவரென்றும்,மள்ளரென்பதுசெய்ப்பட்டதொழிலில் [illegible]

யைப்புடையவனென்பதுமேதவிரவேறல்ல இதுவன்றிசெய்கைகுணங்களைப்பற்றி அனந்தநூல்களிலும் மருதநிலமாக்களேவெள்ளாழரென்று தோன்றும்படியாகவும்வெள்ளாழரேமருதநிலமாக்களென்றும் சிலநூல்களிற் சொல்லியிருக்கிறதிருஷ்டாந்தங்கள்வருமாறு.



திருவிளையாடற்புராணம்-நாட்டுப்படலம்

௫அ-வது-கவி,

களமர்கள்பொன்னேர்பூட்டித்தாயர் வாய்க்கனிந்தபாடற் *
குளமகிழ்சிறாரினேறு மொருத்தலுழவைதூங்க ... *
வளமலிமருதம்பாடிமளவலிகடந்தோர்வென்ற... ... *
அளமருபொறிபோலேவலாற்றவாள்வினையின்மூண்டார் *

இதின்றாத்பரியம்,

களமரென்று சொல்லப்பட்ட வெள்ளாழர்பொன்னேர்பூட்டி மருதப்பண்ணாகிய ராகத்தைப்பாட யெருறுகள்யெருமைக்கடாக்கள் சந்தோஷமடைந்து தங்கள்சொற்படிகேழ்க்கப் பயிரிடுமுயற்சியிற்றொடங்கினரென்பதாம் -இந்தக்கவிக்குமேற்கோள்,




வெள்ளாழர்பேரில் கம்பர்செய்த- ஏரெழுபது,

ஏர்நடத்தற்சிறப்பு ௰அ வது-கவி.

கார்நடக்கும்படிநடக்குங் காராளர்தம்முடைய *
ஏர்நடக்குமெனிற்புகழ்சா லியலிசைநாடகநடக்கும் *
சீர்நடக்குந்திறனடக்குந்திருவறத்தின் மெய்யநடக்கும் *
பார்நடக்கும்படைநடக்கும் பசிநடக்கமாட்டாதே *

இதின்றாத்பரியம்,

காரானதுமுன்னடக்க தாங்கள்பின்னடக்காநின்ற காராளரென்று சொல்லப்பட்ட வெள்ளாழர்யேரானது நடக்குமானால் புகழ்- இயல்-இசை-நாடகம்-என்கிறமூன்று- தமிழும்,சிறப்புவல்லமை-தருமச்செயல் - உலகத்திருக்கும்வுயிர்கள்அரசர்களாநுநால்வகைப்படைகளெல்லாம் நடக்கும் ஆனால்பசியென்பதுமாத்திரம் நடக்காதென்பதாம்.



இதுவும்-திருவிளையாடற்புராணம்-நாட்டுப்படலம்

௧௯-வது-கவி.

பலநிறமணிகோத்தென்னப் பன்னிறவேறுபூட்டி.... *
யலமுகவிருப்புதேயவாள்வினைக் கருங்காண்மள்ளர் ... *
நிலமகளுடலங்கீண்ட சால்வழிநிமிர்ந்தசோரிச்... ... *
சலமெனநிவந்தசெங்கேழ்த்தழன்மணியிமைக்குமன்றே *

இதின்தாத்பரியம்,

பலநிறமாகியவெருதுகளைக் கலப்பையிற்பூட்டி யுழவுசெய்யும் வலியகாலையுடையமள்ளரென்று சொல்லப்பட்ட வெள்ளாழர்கள் பூமிதேவியினுடைய வுடலங்கிழிகக அதிற்புறப்பட்டயிரத்தினக்கற்கள் வுதிரவெள்ளம்போல் பிரகாசிக்குமென்பதாம்.

இதற்குமேற்கோள்

எழுபது உக வது கவி - படைச்சாலின்சிறப்பு.

பழுதுசால்வகையறியாப்பழமறையோர்பெறுவேள்விக்
குழுதுசால்வதுகலப்பை யுயர்வானதென்றக்கால்..... *
எழுதுசால்பெருங்கீர்த்தி யோராலும்பெருக்காளர் .. *
உழுதசால்வழியன்றி வுலகுவழியறியாதே ... ... *

இதின்தாத்பரியம்.

கலப்பையினால் வுழப்பட்டதால் பிராமணருடைய வேள்வி முயற்சியையடைந்ததென்றால் ஏராகிய அந்தக்கலப்பை தங்களுக்குச்சொந்தமாக வுடையபெருமைதங்கிய வெள்ளாழர்கள் உழப்பட்ட படைச்சால்வழியன்றி வுலகுக்குவழிதெரியாதென்பதாம்.

இதுவும் மேற்படிதிருவிளையாடற்புராணம்

பன்றிக்குட்டிக்குமுலைகொடுத்தபடலம்-௪-வது-கவி.

சுகலனென்றொருவேளாளனவன்மனைசுகலையென்பா *
ளிகலருங்கற்பினாள்பன் னிருமகட்பெற்றாள்செல்வப் *
புகலருஞ்செருக்கானன்ன புதல்வரைக்கடியராகி ... *
யகலருங்களிப்புமீதூரூன்பினால்வளர்க்குநாளில்... ... *

இதின்தாத்பரியம்,

சகலனென்றொருவேளாளனுயவன் மனைவியான சகலையென்கிற பேனாயும் மேலானகற்புடையவுமுடையவள் பன்னிரண்டு பிள்ளைகளைப் பெற்றனன் அந்தப்பிள்ளைகள்செல்வச்செருக்கினால் துஷ்டராகிச் சந்தோஷமானது அதிகரிக்கவளருகிறநாளிலென்பதாம்.

(*)

இதுவும்-மேற்படி- புராணபடலம் ரு-வது கவி.

தந்தையுந் தாயுமாயத் தறுகண்மிக்குடையராகி ... *
மைந்தருப்வேடரோடு கூடிவெங்கானில்வந்து ... *
வெந்தொழில்வேட்டஞ்செய்வார் வெயில்புகாப்புதற்கிடையத்தி
யைந்தவித்திருந்துநோக்குங் குரவனையங்குகண்டார் ... ... *

இதின்தாத்பரியம்,

தந்தையும் தாயும் யிறந்தபிற்பாடு மேற்படிபன்னிரண்டு பிள்ளைகளும் அஞ்சாதவர்களாகிய ருத்திரமாக்களாகியஇந்தப் பிள்ளைகள் பாலைநிலமாக்களாகிய வேடரோடுகூடிகாட்டில்புகுந்துவெய்விதானதொழிலாகிய வேட்டஞ்செய்பவர் சூரியனாலும் புகுதற்கரியசெடிகளடர்ந்த ஒருபுதற்குள்போய் அந்தயிடத்தில் ஐம்புலனைவெறுத்துத்தவஞ்செய்யும் ஒருபெரியவனைக்கண்டாரென்பதாம்;



இதுவும்மேற்படி-புராணபடலம்-சு வது-கவி.

கைத்தலம்புடைத்துநக்குங் கல்லும்வெம்பரலும்வாரி *
மெய்த்தவன்மெய்யிற்றாக்க விசினார்வினையைவென்று *
முத்தமவீக்கஞ்செய்தார்தவத்தினுக்குவரொன்றான்னிச்
சித்தநொந்தினையவஞ்சத் தீயலாச்செயிர்த்துநோக்கா *

இதின்தாத்பரியம்-

அப்படிக்கண்டயிந்த பன்னிருவர்களும்கையைக்கொட்டிநகைத்து கல்லையும் பருக்காங்கல்லுகளையும்வாரி மெய்த்தவராகிய அந்தரிஷியின்பேரில் தாக்கும்படி யெறிந்தார்கள் இருவினையையும்வெல்லப்பட்டமேற்படிதவசிகோபித்து தவத்துக்குக்கெடுதியென்றறிந்து மனநொந்து இந்தக்கொடியதுஷ்டரைப்பார்த்தென்பதாம்.

இதுவும்மேற்படி புராணபடலம்-எ-வது கவி.

தொழுந்தொழில்மறந்தும்வேட்டத் தொழிலுழந்துழல்வீர்நீர்மன் *
னுழுந்தொழிலுடையநீராற் பன்றியினுதரத்தெய்திக் ... ... *
கொழுந்தழலனையவேனக் குருளையாய்த்தந்தைதாலய ... *
யிழந்தலமறுமியென்று விட்டனன்கடியசாபம் ... .. *

இதின்தாத்பரியம்.

அப்படிக்கோபித்துப்பார்த்து மேற்படிரிஷியானவர்உங்கள்வம்சபரம்பரையாழுக்கப்போல் மேலோர்களைத்தொழப்பட்ட தொழிலைமறந்துவேடசாதியில் தொழிலைக்கைக்கொண்டு நீங்கள் பலவினையழப்பட்ட தொழிலையுடையவர்களானபடியால் மண்ணை யுழுகத்தானுழப்பட்டபன்றியின்வயிற்றில்பன்றிக்குட்டிகளாய்ப்பிறந்துதந்தைதாயையிழந்து அலையப்படக்கடவீர்களென்று சபித்தாரென்பதாம்.

இந்தச்சரித்திரத்தினாலும் மருதநிலமாகியசேற்றில் உழுதுபயிரிடப்பட்டவர் வெள்ளாளரென்றே விளங்குகிறது.

இதுவுமல்லாமல்- அரிச்சந்திரபுராணம்-நாட்டுச்சிறப்பு,

௨௧ வது கவி,

கள்ளலம்பியவாயுஞ் சளிமகிழ் ... ... *
வுள்ளலம்பியவுள்ளமுந் தோன்றவே ... *
புள்ளலம்பியபொய்கைக் கரையெலாம் ... *
மள்ளர்வந்து நெருங்கிமலிந்தவர் ... ...*

இதின்தாத்பரியம்,

பக்ஷிகள்வாசம்பண்ணப்பட்டவுடைந்ததடாகக்கரைக ளெல்லாம் கள்ளருகளைக்கொப்பளிக்காநின்ற வாயையுடைய மருதநிலமாக்களாகிய வெள்ளாளர்வந்துநெருங்கினரென்பதாம்,

---

இதுவும்-அரிச்சந்திரபுராணம் நாட்டுச்சிறப்பு-௩௰-வது-கவி,

கொட்டுவாங்கிக் குதித்துநிவப்புமண் ... ... *
வெட்டுவோர்வெட்டபாரி மிதித்துக்களை ... ... *

கட்டுவார்வன்கடிப் பெடுத்துக்கினை ... ... *
தட்டுவார்தூரகங்கொடு தாங்குவார் ... ... *

இதின்தாத்பரியம்.

மருதநிலமாக்களாகிய வெள்ளாழர்கள் மங்கலைவெட்டிச்சமமாக்கி மருதத்துக்குரியபறையைக்கொட்டிக்கொண்டுவுடைந்துபோனகரைகளை மிகுத்துக்கட்டுவாரென்பதாம்.

இதுவும்-ஷை அரிச்சந்திரபுராணம்-நாட்டுச்சிறப்பு

௬௧-வது-கவி.

முழவெழும்படிமொய்கிறையிற்கறங் ... ...*
கெழவெருண்டய லன்னமிரிந்திடப் ... ... *
பழவரம்புபுதுக்கிப் பகடுசேர்த் ... ... *
துழவொங்குமுழுமொலி யோங்குமே ... *

இதின்தாத்பரியம்,

மருதநிலமாக்களாகிய வெள்ளாழர்கள் வெள்ளத்தினு லுடைபட்டுப்போனபழையவரம்புகளைப் புதிதாகச்செய்துகிடாக்களைக்கட்டி வுழாநின்றசத்தம் அதிகரிக்குமென்பதாம்

இந்தமூன்றுகவியாலும் வெள்ளத்தினுலுடைபட்டவரம்புகளைக்கட்டி சேறுசெய்கிற சிறப்புச்சொல்லியிருக்கிறபடியாடில் இந்தமூன்று கவிகளுக்குமேற்கோள்வருமாறு.

ஏரெழுபது கரம்புதிருத்தற்சிறப்பு-௬௧-வது-கவி.

மேடுவெட்டிவளப்படுத்தி மிகவரம்புநிலைநிறுத்திக் ... *
காடுவெட்டியுலகநெறிக் காராளர்காத்திலரேல் ... *
மேடுவெட்டிக்குறும்பறுக்கும்வேல்வேந்தரொற்றுலும் *
காடுவெட்டியுழுதவருங் கவிகளையமாட்டாரே,........*

இதின்தாத்பரியம்.

கார்க்காமற்போனால்அரசர்கள்மற்றரசர்களைச்சம்மரித்துத்தங்களு க்குக்குறையாகியதரித்திரத்தைக்களையமாட்டார்களென்பதாம்.

இதுவும்மேற்படி-ஏரெழுபது-வரம்புகோலுதற்சிறப்பு

உரு-வது-கவி.

மெய்வரம்பாநிற்கின்றவேதநூ னெறிவரம்பாம்... ...*
யிவ்வரம்புமவ்வரம்பு மிப்புவிக்குவரம்பாமோ ... ...*
பொய்வரம்புதவிர்த்தருளும்புவிமடந்தைதிருமைந்தர்*
செய்வரம்புதிருத்தாரேற் றிசைவரம்புதிருந்தாதே ... *

இதின்தாத்பரியம்.

பூமாதேவிப்புத்திரராகிய வெள்ளாழர்கள்தங்கள்கையினால்செ ய்யப்பட்டவரம்புகள் செவ்வையாகச்செய்யார்களானால்திசைகளில் அந்தாகியவரம்புகள் செம்மைப்படாதென்பதாம்.

இதுவும்மேற்படி-ஏரெழுபது -சேறுசெய்தற்சிறப்பு.

உரு வது-கவி.

வெறுப்பதெல்லாம்பொய்யினையே வேளாளர்மெய்யாக ...*
ஒறுப்பதெல்லாங்கலியினையேவுள்ளத்தால்வெள்ளத்தால் ...*
செறுப்பதெல்லாம்புல்லினையேசெய்யின்வளமறிந்தறிந்து *
மறிப்பதெல்லாஞ்சேற்றினையேவளம்படுதறபொருட்டாயே *

இதின்தாத்பரியம்.

வெள்ளாழர்கள் வெறுத்துத்தள்ளுவது அசத்தியத்தையே-கோ விப்பது தரித்திரத்தையே-மனப்பூர்வமாய்யுத்தஞ்செய்துசம்மரிப் பதுபுற்களையே-உலகத்தார்வளம்பெறும்பொருட்டாய்க் கழனிகளு டையவளப்பத்தையறிந்து கட்டுவதுசேற்றையென்றாம்.

அரிச்சந்திரபுராணம்-மயானகாண்டம் - உரு-வது-கவி.

நீராளவாவிசெறிநாடனைத்துநிறைமாதவற்குதவியும்......... *
பாராளுநீர்மைதொடர்பற்றதன்றுபடியாளுமெந்தைமுடியில்*

காராளோர்கள்கடவோசையோய்வில்கன்றேசிநாடதனைமேல் *
ஆராளவல்லரவமேவனத்தி லரவாலிறந்தமகனே ... *

இதின்தாத்பரியம்,

நீர்கள்பொருந்தியதடாகங்கள் நிறைந்தகோசலநாடு முழுவதையும் விஸ்வாமித்திரனுக்குக்கொடுத்தும் பூமியையாளும்வழக்கமானது தடையில்லாமற்போய்விட்டதல்ல பூமியையாளப்பட்ட பொ[illegible]கப்பனாகிய மதிதடனிறந்தால் காராளராகியவெள்ளாழர்கள் மருதநிலமாகியகழனிகளில்ஏர்களையோட்டாநின்ற ஓசைநீங்காதக[illegible]சிநாட்டை- ஆர் ஆளவல்லமையையுடையவர்கள் வினைக்காட்டில்சர்ப்பத்தாலிறந்தாயேமகனேயென்றுசந்திரமதிசொல்லுகிறாளென்பதாம்.

இந்தக்கவியினாலும் மருதநிலத்தில் ஏராயுழப்படுபவர்கள் வெள்ளாழரென்றுவிளங்குகிறதென்பதாம்.



இ-அ-ல் இராமாயணம்-பாலகாண்டம்-நாட்டுப்படலம் ௫ வது கவி.

பண்கள்வாய்மிழற்றுமின்சொற்கடைசியர்பரந்துநீண்ட... *
கண்கைகான்முகம்வாயொக்குங்களையலாற்களையிலாமை ...*
உண்கள்வார்கடைவாய்மள்ளர் களைகலாதுலாவிநிற்பார்... *
பெண்கள்பால்வைத்தநேயம்பிழைப்பரோசிறியோர்பெற்றால் *

இதின்தாத்பரியம்.

மருதநிலத்திசையைப்பாடாநின்ற வெள்ளாழஸ்திரீகளதுவிசாலமானகண்-கால்-முகம்-வாய்களையொத்திராநின்ற அல்லி-தாமரைப் புட்பங்கள் களையாயிருக்கிறபடியால் கள்ளுகளையுண்ணுநின்ற வெள்ளாழர்கள் களைகளையாமல்உலாவிநிற்பார் பெண்களிடத்தில் சிறியோர்கள்நேயம்வைத்ததால்பிழைப்பரோவென்பதாம்.



இ-அ-ல்-அரிச்சந்திரபுராணம்-நாட்டுச்சிறப்பு-௬௯-கவி.

வயலின்மென்களை மாய்க்குங்கடைசியர் ... *
சயநெடுங்கண் சலிலத்திற்றோன்றலால் ... ... *
மயல்வினைந்து மயங்கிடுமள்ளர்தாம் ... ... *
கயல்களென்றய லிற்பறிகட்டினார் ... ... *

இதின்தாத்பரியம்.

கழனியினிடத்தில் களைகளைப்பிடுங்கும் வெள்ளாழஸ்திரீகள் கண்ணோலை ஜலத்திற்றோன்றுதலால் மயலினால்மயங்கிடும் வெள்ளாழர்கள் சேற்சண்டையென்று அதைப்பிடிக்கமடைகளில் *பரிகட்டினாரென்பதாம், * பரி-என்பது-மீன்பிடிக்குமோர்கருவி.

(*)

இ அரி-பகாபாரதம்-நாட்டுச்சிறப்பு-௰௨-வது-கவி.

கொழுநீர்மருவுங்கடைசியர்தங் ... *
குழைமேல்தோய்விழியினைநேர்நிழலைக் ... *
கழுநீர்மலரொன்றெனுருபகலுங் ... ... *
காலான்மயக்கிக்களைதுவைப்பார் ... ... *
முழுநீரெழுதமதுநிழன் ... ... *
முழுதுங்கண்டுதொழுதிறைஞ்சிச் ... *
செழுநீரரமங்கையரென்று ... ... *
திகைப்பார்நகைப்பார்செறுவெல்லாம் ... *

இதின்தாத்பரியம்.

கள்ளுகளையுண்ணப்பட்ட வெள்ளாழஸ்திரீகள்விழியினிழலைக்களையாகியசெங்கழுநீர்மலரொன்றுமயங்கிப் பகல்முழுதுங் காலால்துவைப்பார்கள் தங்கள்நிழலைத்தண்ணீரிற்கண்டுநீரமகளிரென்றுதொழுது திகைத்துச்சிரிப்பார்களென்பதாம்.

இதிற்குறித்த இராமாயணம் பாரதம்-அரிச்சந்திரபுராணம் இதுகளிற்சொல்லப்பட்ட மூன்றுகவிகளாலும் மேற்படிமருத நிலமாக்களாகிய வெள்ளாழர்களும் மேற்படிஸ்திரீகளும் களைகளையுஞ் சிறப்புச்சொல்லியிருக்கிறபடியால் இதற்குமேற்கோள் மேற்படி வெள்ளாழருக்குரிய நூலாகிய ஏரெழுபதிலேயேவருமாறு.



ஏரெழுபது-௫௫-வது-கவி களைகளைதற்சிறப்பு.

வளைகளையுமணிகளையுமலர்களையும் வரும்பலவின் ... ... *
சுளைகளையுங்கொடுகளைக்கே சொரிபொன்னித்திருநாடர் ... ... *

விளைகளையுஞ்செஞ்சாலிவேரூன்றக்கோடுகொள்ளக் ... ... *
களைகளையாவிடில்வேந்தர் கலிகளையமாட்டாரோ ... ... *

இதின்தாத்பரியம்.

மருதநிலமாக்களென்னும் உழவராகியவெள்ளாழர்கள் நெற்பயிர்கள் செவ்வையாய் வேரூன்றும்படி களைகளைக்களையாமற்போவார்களானால் அரசர்கள்தரித்திரம் நீங்கமாட்டாதென்பதாம்.

இப்போதெடுத்துக்காட்டியதுபோலயின்னும் அனந்தபுராணநூல்களிலும்மேற்படி வெள்ளாழரோமருதநிலமாக்களாகிய வுழவர்களென்று புத்திமான்கள்யாவருக்கும் தெரியவருகிறதுந்தவிரவெள்ளாழருக்குரிய ஏரெழுபதென்னும் நூலைமுழுதிலும்பார்வையிட்டால்மேற்படிமருதநிலத்துக்குரியவர் வெள்ளாழரென்றேதோன்றுமல்லவா ஆனால்வெள்ளாழஸ்திரீகள் மருதநிலமான கழனிகளிலுண்டான வேலைசெய்பவர்களென்றுபுராணநூல்களிற்சொன்னதுபோல்கடைச்சியராகிய வெள்ளாழஸ்திரீகள் மேற்படிமருதநிலத்தில் வேலைசெய்பவர்களென்று நானெழுதியிருப்பதைக்குறித்து அந்தஸ்திரீகளுக்குக் கடைச்சியரென்கிறபேர் சொல்லலாமாவென்றும இவர்கள்மேற்படிநிலத்தில் வேலைசெய்யப்பட்டவர்களல்லவென்றும் தத்காலத்தில் ஆதிதொடங்கிமேலான அந்தஸ்திலிருப்பவர்களைப்போல்நடித்துக்காட்டப்பட்ட சிலரைப்பார்த்துநான்புராணத்தைப்போலயெழுதினதைத்தப்பென்றுசொல்லுவார்கள் ஆகையாலதன் விபரத்தைச்சுருக்கிவெளியிடுகிறேன் கடைச்சியரென்கிறபேர் இவர்களுக்குயெப்படி வந்ததென்றால்-பிர்ம்ம- க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்கிற நான்குஜாதிவரிசைக்குள்இவர்கள்கடைச்சாதியென்றுநூல்களிற்சொல்வது சகசமல்லவா-அதைப்பற்றி-ஆண்பாலுக்குக்கடையரென்றுவந்ததுபோல் அவர்கள்பெண்பாலுகளுக்குக்கடைச்சியரென்றுசொல்லுவது ஞாயமல்லவா-அதைப்பற்றி இவர்களுக்குக்கடைச்சியரென்றுவந்திருக்கின்றதேதவிர வேறல்ல இவர்கள்ஸ்திரீகள்முன்சொன்னதுபோல்தத்காலத்தில்சிலரிருக்கிற அந்தஸ்தைப்பார்த்து இவர்கள் அப்பேர்க்கொத்ததொழிலுக்குரியவர்களல்லவென்று யெண்ணுவது யெவ்வளவுஞ் சரியல்ல அதேதென்றால்தத்காலத்திலும்கொங்குதேசத்தைச்சேர்ந்த-கோயம்புத்தூர்-சேலம்-தருமாபுரி கரூர்- இதுமு

தலான அனந்ததேசங்களிலும் ஏராளமாயிருக்கப்பட்ட கொங்குவேளாளர்-முரசுவெள்ளாளர் - மகவழிவெள்ளாளர் முதலானவர்களுடைய ஸ்திரீகளும் மருதநிலமாகியகழனிகளுக்குரியசர்வவேலையும் அவர்களேசெய்து வருகிறார்கள்-அவர்கள் செய்யப்பட்டவேலை புராணங்களிற் சொன்னதற்குப் பதின்மடங்கதிகமாயிருக்குமேதவிர வேறல்ல - ஆனால் அவர்களேயுயர்ந்தசூத்திரர்களென்பதற்கு யெவ்வளவுஞ்சந்தேகமில்லை-அதெப்படியென்றால் பிராமணனானவன் சூத்திரர்களுக்குவேதம்வோதிவைக்கக்கூடாதென்றும்மற்றயெந்தக்கருமமும்செய்துவைக்கக்கூடாதென்றும்யேற்படிசூத்திரர்பெற்றுக்கொள்ளக்கூடாதென்றும்வேதபுராணங்களிற்சொன்னதுபோல் அவர்களிற்சிலர்பிராமணனைநீக்கி நாவிதனைக்கொண்டு தங்களுக்குரிய கலியாணமுதலியகருமங்களையும் நிறைவேற்றிக்கொள்ளுகிறார்கள்,

அந்தக்கருமங்களுக்குவேடி நாவிதர்கள்சொல்லி நடத்துகிறமந்திரங்கள் யெனக்குத்தெரிந்திருந்தும் அதைசுத்தயிடத்திற்சொலலவேண்டிய அவஸ்யமில்லாததால் நான் யெழுதவில்லை இந்தசமாச்சாரம் நான்சொல்வதுபிசகென்று நினைக்கப்பட்டவர்கள் அவஸ்யம் போய்விசாரித்துக்கொண்டால் சம்பூர்ணமாயதெரியவரும், இது தவிர-கழனிகளில் ஸ்திரீகள்களைகளைதல் அறுப்பு முதலானவேலைகள் யிந்ததேசத்திலுஞ்செய்துவருகிறார்கள-அதெவ்விடமென்றால் இந்த சென்னைபுரிக்குச்சொற்பதூரமாகிய ஆரணி பெரியபாளையத்துக்கடுத்தஅனந்தகிராமங்களிலவசிக்கும் வெள்ளாழஸ்திரீகள் செய்யும்வேலைகளைப்போய்ப்பிரத்தியக்ஷசாக்ஷியாய்க்கண்டுகொள்ளலாம் வேலூர் பிராந்தியங்களிலும்இதைப்போலவேநடக்கின்றது அதையும்போய்த்தெரிந்துக்கொள்ளலாம்-மேலும்தற்காலத்தில் மேன்மையாயிருக்கப்பட்ட சிலவேளாளர்கள் எங்கள்பெண்டுகள் அப்படிவேலைசெய்யப்பட்டவர்களல்ல அவர்கள்வேறேயொருஜாதிவேளாளர்களென்று சொல்லுவார்களேயானால்புராணங்களில்நாலுஜாதிக்குள்சூத்திரராகப்புகழ்ந்து சொல்லப்பட்ட வேளாளர்களேவெளியிற் பெண்டுகள் போய்வேலைசெய்யப்பட்டவர்களாகவே யிருப்பார்கள்-கம்பனால்புகழ்ந்து சொல்லப்பட்ட ஏரெழுபதென்னும்கிரந்தமும் அவர்களுக்கேவுரியதாயிருக்கும்.


ஆதலால் இந்தமருதநிலத்திற்செய்யுந்தொழிலாகிய வுழுது பயிரிடுந்தொழிலானது அற்பமானதல்ல இத்தொழிலுக்குமிஞ்சின மேன்மையானதொழில்வுலகத்திற்கிடையாது-இத்தொழில்அற்பமென்றும் இத்தொழிலுக்குரிய வெள்ளாழரை அற்பமானவரென்றும்யார்தான்வாய்திறந்துசொல்லுவார்கள்,

ஆனாலிந்துதேசத்துக்குள்ள புராணகட்டுப்பாட்டின்படி பிராமணாள் மோட்சத்திற்குரிய பகவத்தியானமாகிய வேதமோதவேண்டுமென்றும், இவர்களுக்குக்கீழ்ப்பட்ட க்ஷத்திரியர் வைசியர்-சூத்திரராகிய மூன்றுஜாதிகளும் மேற்படிபிராமணர்களை வணங்கிப்போஷிக்கவேண்டியதென்றும், க்ஷத்திரியனானவன் சிஷ்டர்-துஷ்டர் இவர்களைத்தக்கபடிதண்டித்து துஷ்டமிருகங்களைச்சங்கரித்தும்பொய்யர் சோரர்கள்கற்பழிப்போர் பாவிகள் இவர்களைநன்மார்க்கத்தையடையும்படிதண்டித்து அடக்கிராஜரீகம் நடத்தவேண்டியதனுஞ்சட்டங்களைசாஸ்திரப்ரமாணமில்லாமல் நான்குவருணத்துக்குரியவர்களும் ஸ்ரமப்படி முறைதப்பாமல் நடக்க ஆக்கினையைச்செலுத்திசர்வஜாதிகளையும் பரசாதிக்குடிகளிடத்திற்றனக்குரிய இறைவரியாகிய ஆறிலொருகடமையைக்கொண்டு தானும் தன்னுடையசதுரங்கசேனையும் உச்சீவிக்கவேண்டுமென்றும்,

வைசியனானவன் தனக்குமேலோராகிய பிரம க்ஷத்திரியரை வணங்கி வொருநிலத்திலவிளையப்பட்ட வஸ்துக்களையுமற்றொரிடத்தில் விளையப்பட்டவஸ்துக்களுக்குப்பதிலாகமாற்றியும் இதைப்போலொத்த அனந்தவர்த்தகங்களைச்செய்தும்உழுதுபயிரிட்டும்மாடுகள் மேய்த்தும் விர்த்திசெய்து சீவிக்கலாமென்றும், சூத்திரனானவன்தனக்கு மேலோராகிய மூன்றுபேருடையயேவல்களைச்செய்தும் பயிர்த்தொழில் முதலான அனந்ததொழில்களைச்செய்தும் சீவிக்கவேண்டுமென்றும்சொல்லியிருக்கிறபடியால் பேதமாகப்பிரித்து யெழுதவேண்டியஅவஸ்யமாயிருக்கின்றது, வேதோத்தமமாய்ப்பார்க்குமிடத்தில்நான்குஜாதிகளும்சமமேயொழிய வேறல்ல, ஆனாலிந்த மேன்மையான பயிரிடுந்தொழிலை அனந்தகாலம் தொடங்கிபிரம க்ஷத்திரிய-வைசிய சூத்திரரென்கின்றநான்குஜாதிகளுஞ் செய்துவருகிறார்கள் அதற்குத்திருஷ்டாந்தம் பிராமணாளிருந்தவூர்களுக்கு அ

க்ராமமென்றும், அந்தவூரைச்சேர்ந்த விளைவுநிலங்கள் மேற்படிபிராமணருக்குச்சொந்தமென்றும், க்ஷத்திரியரிருந்தவூருக்குமன்னர்வீடென்றும் அப்படி ஊரைச்சேர்ந்த நிலங்கள் க்ஷத்திரியருக்குச்சொந்தமென்றும், வைசியர்களிருந்தவூருக்கு நகரமென்றும், சூத்திரரிருந்தவூருக்கு நத்தமென்றும், வழங்கிவருகிறது. இதுவுந்தவிர இராஜாங்கத்து-ரிகார்ட்டு முதலான அநேகபோகங்களிலிருந்துவருகின்றது- ஆனால் வைசியர்கள் பெரும்பாலும் அரசர்கள்வாசம்பண்ணப்பட்ட பாரியநகரங்களிலிருந்து முக்கியமாய்வர்த்தகத்தொழிலைக் கைக்கொண்டிருக்கிறபடியால் பெரும்பாலும் பயிர்த்தொழிலைக்கைவிட்டிருக்கிறார்கள். நகரஸ்தானங்களைவிட்டு முன்குறித்த -அக்ராரம் -மன்னவேடு நத்தம்- இந்தமூன்றுஸ்தானங்களில் வாசம்பண்ணுகிற வைசியர்கள் - வர்த்தகஞ்செய்தலோடு பயிர்த்தொழில்மாடுமேய்த்தல் முதலானதுகளைக் கைக்கொண்டு ஜீவித்துவருகிறார்கள்,

ஆனவிந்தநான்கு ஜாதிகளும் ஜாதியில்லாதமற்றவர்களும்மேன்மையானபயிர்த்தொழிலை ஆதிதொட்டு செய்துவந்தபோதிலும் சூத்திராளாகியவெள்ளாளரே இதிற்குறிக்கப்பட்ட யாதநிலத்தில் முக்கியவேலைசெய்தவரென்றுயாவருக்கும் விதிதமாகும்,



இதற்குதாரணம் பெரியபுராணம் திருத்தொண்டசரித்திரவரலாறு

௬வது-கவி.

காராளரணிவயலிலுழுதுதங்கள் ... ... *
கையாரநட்டமுடிதிருந்திவிந்தப் ... ... *
பாராளுந்திறலரசர்கவித்தவெற்றிப் ... *
பசும்பொன்மணிமுடிதிருந்துங்கலப்பைபூண்ட .. *
வேராலெண்டிசைவளர்க்கும்புகழ்வேளாள ... *
ரேரடிக்குஞ்சிறுகோலாற்றரணியாளச் ... ...*

* அக்ராரமென்பது, முதற்சாதியாரிருக்குமிடம், மன்னவேடு அல்லது-மன்னர்வீடு என்பது, இராஜபுத்துக்களாகியக்ஷத்திரியர்களிருக்குமிடம், நத்தமென்பது சூத்திராளாகியகுடிகளிருக்குமிடம்.

சீராருமுடியரசரிருந்துசெங்கோல் ... ... *
செலுத்துவர்வேளாளர்புகழ் செப்பலாமோ ... *

இதின்தாத்பரியம்,

காராளரென்றுசொல்லப்பட்ட மருதநிலமாக்கள் அழகுபொருந்தியமருதநிலமாகிய கழனிகளிலுழுது தங்கள் கையினாற்பொருந்தும்படியாய் நட்ட நெற்பயிர்முடியானது செவ்வையாகுமானால் இந்தப்பூமியையாளாநின்ற வல்லமையையுடைய அரசர் வெற்றிபொருந்திய இரத்நம்பிழைத்த தங்கள்சிரசிற்கவிழ்த்த முடிதிருந்தும் கலப்பைபூண்டமேழிகளினால் எட்டுதிக்கும புகழ்பெற்றவேளாளர் மேழிகளையடிக்குஞ் சிறியவழக்கோலால் தரணியையாளும் அரசர் பூமியிலிருந்து செங்கோலைசெலுத்துவர் ஆதலால் வேளாளர்புகழ் செப்பலாமோவென்பதாம்.

இந்தவெள்ளாழர் மருதநிலத்தில் வேலைசெய்கிறவர்களானபடியாற்றான் இந்தக்கவியில (தங்கள்கையாறநட்டமுடி) என்றுசொன்னதுபோல் மகாகவியாகிய - கம்பர் - வேளாளரைப் புகழும்படி (ஏரெழுபது) என்னும் ஒருபிரபந்தம்பாடி மேற்படி மருதநிலத்திலுபயோகப்பட்ட கலப்பையைப்பிரதானமாகவைத்து மேற்படிகலப்பைக்குரிய மற்ற ஆயுதங்களின்சிறப்பும், மருதநிலத்தில் மேற்படியார் வேலைசெய்யுஞ்சிறப்புஞ்சொல்லியிருக்கின்றது, ஏரெழுபதிற்சொன்ன கவிகளிற்சிலதை மருதநிலமாக்களுடைய வேலைகளைப் பற்றி மேற்கோளாகப் போட்டிருக்கின்றேனல்லவா - அதுதவிர இந்தயிடத்தில்மற்ற நான்குநிலத்துக்குடிகளைவிட இந்த மருதநிலமாக்களேசிரேஷ்டமுடையவரென்று தோன்றும்படி மேற்படி ஏரெழுப முக்கியமான சிலதிருஷ்டாந்தம்வருமாறு.

ஏரெழுபது-நாற்றங்காற்சிறப்பு-உகூ வது கவி.

ஏறுவளர்த்திடுமுகிலு மிசைவளர்க்குமெனவுரைப்பின் *
ஆறுவளர்த்திடுவதுசென் றலைகடலைத்தானன்றோ... ...*
வேறுவளர்ப்பனகிடப்ப வேளாளர்விளைவயலின்......*
நாறுவளர்த்திடலன்றி ஞாலமுயிர்வளராதே... ... ... *

இதின்றாத்பரியம்.

வேளாளர் மருதநிலமாகிய கழனிகளிடத்தில் நெற்பயிரைவளர்க்காவிட்டால் பூமியிலுள்ளவுயிர்கள் வளராதென்பதாம்.

இதுவும் மேற்படி ஏரொழுபது-௬௨-வது-கவி.

நெற்குவித்தற் சிறப்பு.

நாணயமான்றெவ்வாத நலம்வளர்க்கும்பெருக்காளர் ....*
மன்னுபெருங்களத்தினிடை மாருதத்திற்றூற்றியபின் ....*
செந்நெல்லைப்பொலிவாலே செம்பொன்மலையெனக்குவித்தே . *
அந்நெல்லின்பொலியாலே யவனியுயிர்வளர்ப்பாரோ...... ......*

இதின்றாத்பரியம்,

மேற்படி மருதநிலமாக்களாகிய வேளாளர்கள் களத்தில்நெல்லுகளைத்தூற்றி மகமேரு மலையைப்போல்குவிக்கும் பிரகாசத்தால் உலகத்துயிர்களை வளர்ப்பாரென்பதாம்.

இதற்குத்திருஷ்டாந்தம் நான் விரிவாக யெழுதவேண்டியதில்லை-சென்ற அக்ஷயவருஷத்தின் கருப்பே தெரிந்தவர்களுக்கும் தெரியாதவர்களுக்கும் திருஷ்டாந்தமாகயிருக்கின்றது - ஆதலால் முன் சொல்லப்பட்ட-குறிஞ்சி-பாலை-முல்லை-நெய்தல் - இதில் வாசம்பண்ணப்பட்ட குடிகளாகிய-குறவர் மறவர்-இடையர்-பரதவர் - இந்நான்குஜாதிகளைவிட மருதநிலமாக்களாகியவேளாளர்களேசிரேஷ்டமாகிய முதன்மையையுடையவர்களென்பதற்குச் சந்தேகமில்லை.

இந்தவேளாளர்கள் நான்குஜாதிகளிலொன்றாகவிருக்கிறதுந்தவிர பஞ்சநிலங்களில் சிரேஷ்டமான மருதநிலத்துக் குரியவர்களென்றும் பலநூல்களிலுஞ் சொல்லியிருக்க (நெல்சன்) இங்கிலீஷில் செய்த (மதுரை) சரித்திரத்தில் உக்ரபாண்டியனென்பவன் பிரதேசங்களிலிருந்து நாற்பத்தெண்ணாயிரம் வேளாளரைக்கொண்டுவந்து தன்தேசத்திற்பயிரிடும்படி குடியேற்றினனென்றும், அதற்குமுன் பாண்டியதேசத்தில்-கள்ளர்-மறவர்- அகமடையர்- விளம்பர்எனகிற ஜாதிகளிருந்தார்களென்றும், அவர்களாலேழைவேளாளரைப்பீடிக்கப்பட்டாரென்றும்- ஆதொண்டச்சக்கிரவர்த்திவெள்ளாளரைக்கொண்டா

தேசத்திலிருந்து தொண்டமண்டலத்தில் குடியேறின சரித்திரத்
தைப்பற்றியும், தானெழுதின சங்கதியைப்பற்றியும்- தனைசரசெய்
கையாய்த்தெரிந்ததாவது-பாண்டியதேசத்திலே வேளாளர்குடியேறி
னகாலம் கிறிஸ்துபிறந்த ௬௭ வருஷமென்றும், மேற்படி வெள்ளாழ
ர்கள் மற்றஜாதியாருடன்கூட சமமாயேறக்குறைய கட்டப்பட்ட
காலம்-௲௬௰-ம் வருஷமென்றும்-அதன்பிறகு பாண்டிய அரசா
னது-க்ஷீணித்தகாலத்தில் முன்குறித்த-விளப்பர் - கள்ளர்களாலே
துரத்தப்பட்டார்களென்றும், அக்காலங்களிலே வடக்கேயிருந்து
வந்த தெலுங்கர்களால் மேற்படி வெள்ளாழர்கள் அடங்கப்பட்டார்க
ளென்றும் - மறுபடியும் இங்கிலீஷ்காரர் துரைத்தனத்தில் மேற்
படி வெள்ளாழர்கள் தங்கள்பெருமையிலேயும் நடக்கையி
லேயும் - இப்போதுமேன்மையடைந்து வருகிறார்களென்றும்
சொன்னதுமல்லாமல்அந்தவேளாளர்கள் காரைக்காட்டார் -துளுவ
ர்-சோழியர் - முதலான ஏழுபிரிவாய்ப் பிரிந்திருக்கிறார்களென்று
ம், அவர்களுடைய-நடை-உடை-பாவனை - முதலானதுகளையும்
சொல்லியிருக்கின்றார்.

இதல்லாமல் ஆதொண்டைச்சக்கிரவர்த்தி இந்தத் தொண்டமண்
டலமாகிய காஞ்சிநாடு தன்னரசாட்சிக் குட்பட்டகாலங்களில் பிர
தேசங்களிலிருந்து கொண்டைகட்டி வேளாளரைக்கொண்டுவந்து ப
யிரிடும்படி பூமிகளைவிட்டானென்றும், அதைச் சாகுபடிசெய்துவ
ந்தார்களென்றும் சொல்லியிருக்கின்றது- அதுபோலவே மேற்படி
வெள்ளாழருஞ் சொல்லிக்கொள்ளுகிறார்கள்-(எல்லீசு)செய்த பிரா
ஸிஷ்டத்திலும் மேற்படிவேளாளர்கள் பிரதேசத்திலிருந்துவந்து கு
டியேறினார்களென்று சொல்லியிருக்கிறார்கள் இதைப்புத்திமான்கள்
ஆலோசிப்பார்களாகில் நகைப்புக்கிடந்தருமல்லவா- ஏனென்றால்ஒ
ருதேசத்திலிருந்துமற்றொருதேசத்துக்குக் குடியேறவருகிறவர்கள்
தாங்கள்பெவ்வளவுஆதாரவற்றவதுதாங்களிருந்ததேசத்தில்மற்றஜன
ங்களால் பலவிதயிம்சைப்பட்டாவது தாழ்ந்தஸ்திதியிலிருந்தாவது
நினைப்பதற்குங்கூடாத துற்பாக்கியத்திலிருந்தால்மாத்திரம் வேறே
யொருதேசத்துக்குக் கூப்பிடுதற்குமுன்சென்று குடியேறவேண்டு
ம், இதுவன்றி அரசர்களொருவருக்கொருவர் போர்புரிந்து ஜெயித்

த்காலங்களில் அந்த்ராசகுடும்பத்தாரும் அத்தேசத்து மற்றக்குடிகளும் செம்பீரமாகவே குடியேறுகிறவழக்கமுண்டு இதுபோலவே மகம்மதுமதசமயர்களாகிய அரேபியர் இத்தேசத்தின்மேற்படையெடுத்து வெகுபேர்களாக குடியேறினார்கள் - அப்படியே ஐரோபகண்டத்தாராகிய இங்கிலீஷ்- பிராஞ்சு- டேன்மார்க்கு- புடுத்துகிசு-முதலானவர்களும் தேசங்களைக்கொண்டு குடியேறினார்கள்.

ஆனபடியினாலே வெள்ளாழர்களை ஒருவரால்கொண்டுவந்துகுடியேற்றப்பட்டதென்று யெழுதியிருப்பதால் இவர்கள் தற்பாக்கிய திசையிலிராமல் ஒருதேசத்துக்குங் குடியேறமாட்டார்களென்று நன்றாய்த்தெரியவருகிறது

இவர்கள்பிறதேசத்திலிருந்துவந்துகுடியேறியிருப்பார்களானால் புராணநூல்களிற்சொல்லப்பட்ட சூத்திரராகியவேலையாளரென்றோரெண்ணப்படுகிற வெள்ளாழர்கள்யாராயிருப்பார்களோதெரியவில்லையே அப்படியேபூர்விகவெள்ளாழர்கள் நாங்கள்தானென்றுவேறேபெயராலேற்படுவ ராஜியபாண்டியனாலும்-ஆதொண்டச்சக்ரவர்த்தியினாலும் நாங்கள் கொண்டுவரப்பட்டவர்களென்றுஞ்சொல்லுகிறவெள்ளாழர்கள் எந்தஜாதியாவார்களோதெரியவில்லை - ஆனாலவர்கள் முதலாவது தேசத்தை செவ்வையாய்வெளியிட்டால் அத்தேசத்திலே இக்காலத்திலும் அவர்கள் சந்ததியார்களிருப்பார்களாகில் அவர்களை இன்னஜாதியாரென்று அறிந்துக்கொண்டால் இவர்களையும் அந்தஜாதியாரென்றுகொள்ளலாம்.

இவர்கள்வந்தேறுங்குடிகளென்றும், அல்லது இத்தேசத்துப்பூர்வ குடிகளென்றும், அல்லது பூர்விகவெள்ளாழர்கள் வேறேயிருக்கிறார்களென்றும், உண்மைசரியாகத்தெரியவில்லை -ஆதலால் நான் புராணநூல்களில் மருதநிலமாக்களாகிய வெள்ளாழரே சூத்திரரென்று சொல்லியிருப்பதைப்போல் நான்சொல்லியிருக்கின்றேன் ஆதலால் பூர்விகவெள்ளாழர்கள்- நாங்களென்று ருசுப்படுத்துமவர்கள் புராணநூல்களிற்சொல்லுகிறபெருமைகளுக்கும்மற்றபாத்தியத்துக்குஞ்சொந்தமாவார்கள்.

௨-வது அதிகாரம்-௯-வது-பிரிவு

இந்தப்பிரிவில் நாலையச்சிடப்பட்டவருடைய விபரமும்- தெலுங்குதேசத்திலிருந்து இந்தத்தமிழ்நாட்டுக்கு வந்ததெலுங்கருடைய விபரமும் - இத்தேசத்திலிருக்குஞ் சிலர் தாங்களுயரம்வருமென்றுஅக்ரமிக்கும் விபரமும் சொல்லியிருக்கிறது

இந்தப்புத்தகத்தில் திருஷ்டாந்தவுதாரணமாகச் சொல்லிக்காட்டினபுராண நூல்கள்தவிர இன்னம் அனந்த நூல்களிலும்வெள்ளாளர்களையும் [இடையர்களையும்] சூத்திரராகவும் சூத்திரரில் மேலாகவும் சொல்லியிருக்க அகஸ்மாத்தாய்ச்சூடாமணிநிகண்டில்மாத்திரம்வைசியரென்று நடுவில்கற்பித்திருக்கின்றது இப்படிக்கற்பித்த துஷ்டர்களைப்போல் அனந்ததுஷ்டர்கள்சிலநூல்களிலிருக்கிறபூர்வீகத்தைக்கெடுத்து நூதனமாய்ச்சிலதைக்கற்பித்து அச்சிடுவார்களென்பதற்குச் சந்தேகமில்லை- ஆனால்பெரியோர்கள் செய்தநூல்களைப்பரிசோதித்து அச்சிடப்பட்டவர்கள் மெய்ப்பேர்ப்பட்டவர்களாயிருக்கவேண்டுமென்றால், இலக்கண நூலாகிய(நன்னூல்.) பொதுப்பாயிரம் ௨௰௯-வது-சூத்திரம் வருமாறு.

ஐயந்திரப்பொருளையுணர்த்தலு ... ... *
மெய்நடுநிலையுமிகுநிறைக்கோற்கே ... ... *

இதின் தாத்பரியம்.

நூலாசிரியன்-உரையாசிரியன்-முதலான ஆசிரியர்கள்- நிறைக்கோலைப்போல் பொதுவாயிருக்கவேண்டுமென்று குறிப்பித்தார்-நிறைக்கோலின்குணமாவது, சந்தேகந்திரநிறுக்கப்பட்ட பண்டத்தினளவைக்காட்டலும், உண்மைபெறத்தானிரண்டுதட்டுகளுக்கு நடுவேநிற்கையும்,தராசுகோலின்குணங்களானபடியால்-அதுபோல முன்குறித்தஆசிரியர்களும் நூலிற்சொன்னஞாயமானகருத்தைவெளியரங்கமாயெடுத்துக்காட்டவும்,வித்துவான்கள் நூல்களிற்பேரில்மாறுபட்டகாலங்களில் தாங்கள் நடுவாகநின்று வுண்மையைச்சொல்லப்பட்டவர்கள்ஆசிரியர்களென்பதாம்.

இந்தயிலக்கணத்திற்சொன்னதுபோல் தராசுமுனையொத்துநடுவாகயிருந்துபெரியோர்கள்செய்தகருத்தைக்கெடுக்காமலும்வேறே மத்தியில்சேர்க்காமலும் பரிசோதித்து அச்சிடுவாராகில் எந்த

நாலும்செட்டாரும் சரியாகவேயிருக்கும், அப்படியல்லாமல் தெரியாதவர்களும் கெட்டஎண்ணத்தையுடையவர்களும் நூல்களைச்சோதித்து அச்சிடுவார்களால் முன்னோர்கள்செய்த நூல்களெல்லாங்கெட்டுப்போகுமென்பதற்குச் சந்தேகமில்லை.

ஆனால்- மகாராசராசஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்கள் அச்சிட்டவொரு சிறநூல்கள்மாத்திரம் வேறுமாறுபாடில்லாமலும் பெரியோர்கள் செய்தகருத்தைக்கெடுக்காமலும் அதிகபிரயாசப்பட்டு - ஆராய்ச்சி செய்து அச்சிடுவதனால் அந்தநூல்களைப்பார்ப்பதற்குப் பூரணார்த்தமாயிருக்கின்றது, இந்தமகானுபாவரோ சிலர்தாறுமாறாக அச்சிட்டிருக்கும் நூல்களைத்திருத்தி அச்சிடுவாராகில் சகலருஞ்சந்தோஷமடைவார்கள் இதுபோலமற்ற அச்சுக்கூடத்தார்களும் வித்துவான்களும்பொறாமையைவிட்டு சரீரப்பிரயாசை யெடுத்துக்கொள்ளுவார்களானால்கெடுதியடைந்த நூல்களெல்லாம்பழையபடி சீக்கிரத்தில் திருந்துமென்பதற்குச்சந்தேகமிராது - இதுதவிர சமஸ்கிருதநிகண்டாகிய அமரமென்னும் நூலில் பிரம்மவருக்கம்-க்ஷத்திரியவருக்கம் வைசியவருக்கம் சூத்திரவருக்கமென்று நாலாகப்பிரித்து அவர்கள் தொழிலை அந்தந்தவிடத்திற் சொல்லியிருக்கின்றது - தமிழ்நிகண்டுசெய்தவர் அப்படிச்சொல்லாமல் முதல் பிராமணருக்குரிய பெயர்சொல்லாருஞ்சொல்லி இரண்டாவது- க்ஷத்திரியரைச்சொல்லுமிடத்தில் க்ஷத்திரியகுலத்துக்குத் தலைமையாய் அரசாண்டுவந்த சேரசோழ-பாண்டியர்களைச்சொல்லி மூன்றாவது வைசியராகிய- செட்டிகளைச்சொல்லி நான்காவது சூத்திரராகிய வேளாளர்களைச்சொல்லி - அதன்பின்னால்குயவனையும்-அதற்குப்பின் கன்னானையும், அதற்குப்பின்-கொல்லனையும்-அதற்குப்பின்தச்சனையும்-அதற்குப்பின் தட்டானையும்- அதற்குப்பின்சிப்பாசாரியையும்- அதற்குப்பின் கன்னனையும்- அதற்குப்பின்வண்ணானையும்- அதற்குப்பின் நாவிதனையும்- அதற்குப்பின் கூடைமுறங்கட்டும்வேதக்காரனையும்- அதற்குப்பின் துணிநெய்வானையும்-அதற்குப்பின் பறையர்- அல்லது - சண்டாளரையும்- அதற்குப்பின் பாணனையும்- அதற்குப்பின் வாணியனையும்-அதற்குப்பின் சாணானையும்படிப்படியாய்த்தாழ்த்திப் பெயரைச்சொல்லியிருக்கின்றது.

வும் சரியானவராயிருந்து மேற்படியிந்துக்களுடைய புராணசரித்
திரங்களைமனப்பூர்வமாயறிந்திருந்தும்அதற்குமா

ல்லியெழுதிவைத்திருப்பார்களானால் அந்தவிஷயத்திலொன்றும்யோசிக்கவேண்டியதவசியமல்லவா, அதெதன்னவென்றால் முற்காலத்தில அரசவம்சமாகிய ராஜகுடும்பத்தார்கள் மேன்மையுயர்ந்தஸ்திதியிலிருப்பதும் அதற்குத்தாங்கள் தாழ்ந்தஸ்திதியிலிருந்து அவர்களுக்கூழியஞ்செய்துவருவதுமின்றித் தம்மைப்பழங்கி அந்தக்காலத்திலெரிகள்மெல்லவயநறையும் எப்போதுதங்களுக்குநல்லகாலம்வருமென்று வெருங்கிப்பார்த்திருந்தவர்களானபடியால அவர்களெண்ணத்தின்படி மேபுதுப்பிரகாசம்பமாறி நடுவாந்தரத்திற்சிலவேற்றரசர்கள்வந்து ஒரு கைக்கூட்டப் பூர்வகுடிகளாகி மாறுப்படிஅரசுசெய்த காலங்களில் உடனே வாழ்ந்தவராசர்களும் தாழ்ந்தவருயர்ந்தவராசர்களும் மாறுபட்டுவயினகாலத்தில் இந்ததேசவழக்கவொழுக்கங்கள் தெரியாத இங்கிலீஷ்காரர்கள்மேற்படி அரசைக்கைப்பற்றிய படியால்முன்னேதாழ்ந்துபோயிருந்தோர் தங்களுக்குமேற்பட்டவர்களைத்தாழ்த்தி தாங்கள்உயரவேண்டியசமயமென்று உண்மையைமறைத்துசரித்திரங்களை யெழுதியிருப்பார்களேதவிர வேறல்ல ஆனாலிந்துதேசசரித்திரமென்பதைப்பலபேர்பல்வாகச்செய்திருக்கிறபடியால்இதிற்சிலபேர்கள் புராணசாஸ்திரங்களுக்கு மாறுபடாமல உண்மையாகவுமெழுதியிருக்கிறார்கள்- ஆனாற்சிலபேர்சரியாகவும்சில நியாயத்துக்குவிரோதமாகவும் யெழுதியிருக்கிறார்கள் அதுகளெல்லாமெழுதினால் விரிவாகுமாதலால்அதிலொன்றைமாத்திரம்குறித்துச்சொல்லுகிறேன் அதாவது -௲௮௱௯- வருஷம் இந்துதேசசரித்திரமென்றொன்றெழுதி யச்சிட்டிருக்கின்றது - அதிற்குடிகளெல்லாம் ஐந்து ஜாதியாய்அப்போதேயேற்பட்டுப்- பிராமணர் - க்ஷத்திரியர் - வைசியர்-சூத்திரர் பஞ்சமரொன்கிறகிரமத்தில் வெகுகாலமிருந்து தற்காலத்திற்பிராமணர்-சூத்திரர் பஞ்சமரொன்கிறமூன்றுவருணமுமாத்திரமிருக்கிறதாகயெழுதியிருக்கின்றது அப்படியெழுதியிருப்பதையாலோசித்தால ஆச்சரியத்துக்கும்நகைப்புக்குமிடந்தருகின்றதேதவிரவேறல்ல.

அதேதெனென்றால் க்ஷத்திரியராகிய அரசர்களும் அவர்கள் குடும்பத்தார்களும் பிராமண சூத்திரர்கள்போல் செல்வச்செருக்கில்லாமலும் தேகத்திற்பலம்-வீரமில்லாமலும் பலபெண்களை மணந்தால்அவர்களைச்சேர்ந்து அனுபவிக்கவும் சம்ரக்ஷிக்கவும்திராவகமில்

ளாமலிருந்தவர்களல்லசெல்வச்செருக்குவீரச்செருக்கினால்மதத்து
ப்பலபெண்சாதிகளைச்சேர்ந்து பலபிள்ளைகளைப்பெற்றுமற்றஜாதி
களொருபங்குங்க்ஷத்திரிய ஜாதிகளொருபங்குமாகவுலகத்தை நிறை
ப்பிவைத்ததுவுந்தவிரசில அரசர்கள் அநீதியாயிதரஜாதிப்பெண்க
ளைச்சிறைபிடித்தும் அப்படிஅநீதியாய்நடத்தப்பட்டவர்களுக்கு
மற்றவர்கள்தாங்களேதயவுக்காக அனந்தஞ்சிறைகளைக்கொண்டு வந்
துவொப்புவித்தும்அதினாலேயும் அனந்தம் பிள்ளைகளைப்பெற்றும்
அவர்கள்நூலிற்சொல்லாதபலஜாதியாய்பரவியிருப்பதும் யாவருக்
கும் பிரசித்தியாய்த்தெரிந்திருக்கஇதுகளையெல்லாம் யோசியாமல்
க்ஷத்திரியசந்ததியார் தத்காலத்திற்பூமியிலில்லையென்று யெப்படி
யெழுதலாம்.

ஆனால் க்ஷத்திரியர்யுத்தஞ்செய்கிற வழக்கமானபடியால் அதி
லிறந்திருப்பார்களென்றுஒருவேளையெண்ணங்கொண்டு யெழுதியி
ருப்பார்கள், ஆனால்யுத்தத்துக்குப்போகிறவர்கள்பலமுடையவீரர்
கள் தவிரவிருத்தரும் பலமில்லாதவர்களும் பாலர்களும் ஸ்திரீஜாதி
களின்கெர்ப்பத்திலிருக்கிறசிசுக்களுங்கூடப்போயிறந்திருப்பார்க
ளா அப்பேர்ப்பட்டயுத்தம்நடந்து அடியோடேயிறந்திருப்பா
ர்களானால் அந்தசரித்திரம் யெதிலிருக்கிறதோ அதைமேற்படி
புத்தகத்திலெழுதியிருக்கவேண்டியது - அப்படியில்லாதபக்ஷத்தில்
அவர்கள்அடியோடேபோய்விட்டதற்குவேறேகாரணமெழுதியிரு
க்கவேண்டியது இவ்விரண்டுவிபரமும்மேற்படிபுத்தகத்திலெழுதா
மலிருப்பதால்இதுயெழுதினவர்முன்சொன்னதுபோல்பொருமை
க்காரரென்பதற்குச்சந்தேகமில்லை ஆனாலிவர்களோடுகூடவைசியர்க
ளும்மில்லையென்றுயெழுதியிருக்கின்றது ஆனால்வைசியர்களுக்கு(இ
ளங்கோக்கள்-மன்னர் பிள்ளை) என்கிறபேரிருப்பதால் அதைக்கொ
ண்டு அவர்களு மிவர்களைப் போல் யுத்தத்துக்குப்போய் சிசுமு
தல் விருத்தர்வரையுமிறந்தார்களா அல்லது அவர்கள் செய்யும்வி
யாபாரத்தில் நஷ்டம்வந்து சீவிக்கவழியில்லாமலிந்தவுலகத்திலிரு
ந்தவைசியரெல்லாம் ஒரேகாலத்திலிறந்து விட்டார்களா-அவர்களி
ல்லாமற்போனதற்குக்காரணம்மேற்படிபுத்தகத்திலெழுதாதிருப்ப
தால் மேற்படிபுத்தகத்தைச்சொல்லி யெழுதிவைத்தவர் தெரியாதவ
ராயிருக்கவேண்டும் அல்லது தெரிந்தும்வஞ்சகராகயிருக்கவேண்டும்

அதேனப்படி யென்னவேண்டியதென்றால் பிராம்மணரும் சூத்திரரும் பஞ்சமருமாத்திர மிருப்பதா யெழுதியிருக்கிற படியால் பிராமணர் யாசகஞ்செய்து ஜீவித்து வேதமோதிப்பெரும்பாலும் நாட்டுகளில்வசிக்காமல்காடுகளில்பர்ணசாலையாகிய தழைகளாற்கட்டியகுடிசைகளில்வசித்துப்பெரும்பாலும் ஸ்திரீமுகம்பாராமல்காமக்குரோதங்களையடக்கி முக்காலமுந்தபசுசெய்துக்கொண்டுசிறுமையிலிருக்கிறவர்கள் சரணிக்காமல் தத்காலத்திலிருக்கிறார்களென்றும்-சூத்திர-பஞ்சமானவர்கள் மற்றவர்களுக்கு ஊழியமுங் கடினமான அனந்தம்வேலைகளுஞ்செய்துதங்கள்ஆணவகாமியஞ் சிதைந்து சிறுமைப்பட்டவர்கள் சிரவிக்காமல் மேற்படிபிராமணருடனே அவர்களுமிருக்கிறார்களென்றும் வீரச்செலவம் தனச்செல்வத்தினாற் காமமதமிகுந்து உலகத்தைநிரப்பப்பட்ட க்ஷத்திரியர்களும் தனச்சம்பந்தின்மிகுந்த வைசியர்களுமில்லை யென்று சொல்லியிருப்பதுமல்லாமல அக்கினிகுலமான ௬ அறுநூறாம்நூற்றுண்டில்பவுத்தருடன் பொர்புரியு நிமித்தமாய்ப்பிராமணரால் கற்பிக்கப்பட்டதென்று யெழுதியிருக்கின்றது.

ஆனாலிந்தச்சரித்திரங்களைச் செய்தவர்கள் இந்துக்களுக் குரியபுராணசரித்திரங்களைப் பார்த்துச்செய்ய சாவகாச மில்லாமற்போனாலும் இதற்குமுன்னே புத்திமான்களாற்செய்த இந்துதேசசரித்திரங்களையாவதுபார்த்தவரல்ல அதேனென்றால்-சோம- சூரிய-அக்கினிஎன்கிற இந்தமூன்றுகுலத்துளுயர்ந்த அக்கினிகுலவம்சத்தாராகிய வன்னியர்களைக்குறித்து மேற்படிஇந்துதேசசரித்திரம் செய்ததற்முன் -௩௲௪௨-வது- வருஷத்திற்செய்தபுவனசாஸ்திரமென்றுசொல்லப்பட்ட இந்தியாலங்கைசரித்திரத்தில் திருக்கணமலையைக்குறித்துச் சொல்லுமிடத்தில்மநுநீதிகண்டசோழனுடைய புத்திரனாகியகொளக்கோட்டுமகாராசாமேற்படிதிருக்கணமலையின் தலவிசேஷத்தைக்கேள்விப்பட்டு கிருஸ்து பிறக்க -௫௱௪௯-ம்-வருஷத்துக்குமுன் அந்தவிடத்துக்குப்போய் கோணேசருக்கு ஒரு கோயிலைக்கட்டி மலையின்கீழ் ஒருநகரியையுண்டுபண்ணித்தன் சோழவின்ராச்சியத்திலிருந்துஜெனங்களைவரவழைத்துக்குடியேற்றினதுமன்றி பத்துவிலொருவனாகிய தனையுண்ணுபூபாலனென்னுமொரு அரசனை

யெற்படுத்தினுனென்றும் அந்தவராசனந்த நாட்டையும் அதற்க டுத்தபகுதியையுமாண்டுவந்தானென்றும் மறுபடியும் அவர்சந்ததி யாராகியவன்னியர்களே வெகுகாலம் தன்னிஷ்டமாய் ஆண்டுவந் தார்களென்றும் சரித்திரமெழுதியிருப்பதுந்தவிர தற்காலத்திலந்த ச்சந்ததியாரிருப்பதுவும் மேற்படி தனையுன் ஐ பூபாலன்கால வறை க்ணைக்குச்சிலாசாதனத்தி லிருப்பதையுந்தெரிந்துக் கொள்ளவேண் டியவர்கள் தற்காலத்தில்விசாரித்தும் அறிந்துக்கொள்ளலாம்.

இப்பேர்ப்பட்ட பிரசித்தமானசரித்திரமும் இதற்கு முன் பாண்டியனுடைய பந்துக்களாகிய ராஜகுடும்பங்களென்னும் அறு பத்துநாலு கூட்டமாகியவன்னியர்கள்சேனையுடனிலங்கைத்தீவுக்கு ப்போய் அங்கேயிருந்தவனந்தசத்துருக்களாகிய பலயீனசாதிகளை ச்செயித்துக்குடியேறினர்களென்றும் அப்படிக்குடியேறியநாட்டு க்கு வன்னிநாடென்றுஞ்சொல்லுகிறசரித்திரத்தையும்(ஜான் கிளா ர்க்கு மார்ஷ்மென்)என்பவராற்செய்த இந்துதேசசரித்திரத்தில் இ ந்தப்பூமிமுழுதும்பாவியிருந்தபவுத்தர்களாகிய ராக்ஷசாளைச்செ யிக்கும்படியாய் க்ஷத்திரியர்வேண்டி ரிஷீஸ்வராள் முனீஸ்வராள்தே வர்கள்முதலானவர்களும் பாலசமுத்திரமத்தியில் பள்ளிகொண்டி ருக்கும் ஸ்ரீமகாவிஷ்ணுவிடத்திற்குப்போய்முறையிட அவருத்திர வின்பேரில் மேற்படிதேவரிஷிகள்யாகஞ்செய்ய அந்தயாகத்தில் ச ர்வாயுதஆபரணங்களுடனே கடவுளுக்குச்சம்மதியாகநாலுக்ஷத்திரி யர்பிறந்தார்களென்றும்அவர்களும்அவர்கள்சேனைகளுடனேபோ ய்மேற்படிஇராட்சசர்களாகியபவுத்தர்களுடனேபோர்புரிந்து அவ ர்களைச்செயித்துப்பிராமணுளையும் அவர்களுக்குரியபிராமணதர்ம த்தையும் இந்துமதஸ்தாபனத்தையும்நிலைநிறுத்தியதுந்தவிர பௌ த்த மதக்கோயில்களையிடித்து நாசஞ்செய்து சிவாலயங்கள் விஷ் ணுவாலயங்கள் கட்டிவைத்துமேற்படிசமயங்களை நிலைநிறுத்தினர் களென்றும் அந்தச்சந்ததியார் மேன்மையான ரசபுத்திரரென் றும் அவர்களாலேயே ரசபுதனதேசத்தை ஸ்தாபித்தார்களென்றும் அவர்கள் அரசுவடக்கேஇமயமலைபரியந்தம் மேற்கே சிந்துநதி பரியந்தம் நடத்தினுரென்றும் அந்தச்சந்ததியார்தான் க்ஷத்திரிய ரென்றுசொல்லப்பட்டவர்களென்றும் அந்தச்சரித்திரபுராணம் கா வியக்கங்களி லிருக்கின்றதென்றும் அவர்கள்மறுபடியுந்தென்னிந்தி

யாபேரிப்படையெடுத்துத்தென்னிந்தியாவிற்குடிகொண்டிருந்தபௌ
த்தர்களாகிய ராட்சஸர்களைச்செயித்துச் சிவாலயங்கள் விஷ்
ணுவாலயங்களை ஸ்தாபித்துமேற்படிபிராமணாள்முதலானவர்களைநிலை
நிறுத்தரூரிகளென்றும அந்தச்சந்ததியாகிய அக்நிகுலத்தரசனை உ
சக்கினிபட்டணத் லககீர்த்திபெறும்படியாய் ஆண்டவிக்ரமாதித்
தனென்றும் அவன்காலத்திற்சமஸ்கிருதசங்கஞ்சேர்த்துச்சமஸ்கிரு
தத்தைவிர்த்திசெய்தும் பிராமணாளுக்கு வித்தைபூமிமுதலானு
பகாரங்களைச்செய்து பிராமணாளைநிலைநிறுத்தினனென்றும்மற்றத்
தென்னிந்தியாமுதலானபேர்பெற்ற விடங்களிலரசாண்ட அனந்த
வரசர்களுக்கும் அந்த அக்நிகுலமென்றும் அவர்களேமறுபடியு
ம் இலங்கைத்தில வர்செயித்து அதிற்குடிகொண்டிருந்தபவுத்தர்களா
கிய ராட்சசர்களைச்சம்ஹரித்து தங்கள் மதத்தைய்வ்விடத்தும்ஸ்தா
பித்தார்களென்றும்சொல்லியிருக்கிறார் இந்தச்சரித்திரம்தென்னிந்
தியாவிலவழங்கப்பட்ட அக்நிகுலத்துக்குரிய முன்பிரிவிற்குறித்தப
டிமெகஸ்தனிஸ்புராணங்களிலெழுதியிருக்கிற ஆக்நேயத்துக்கு யோக்குறையக
ரியாயிருக்கிறதேதவிர வேறல்ல ஆனாலிந்தச்சந்ததியாரோவடக்கே
யிருந்து சித்தூரராஜ்யரசாண்டார்களென்றும்அவர்களிலிருந்துசூரிய
குலமாகப்பிரிந்து ஸ்தபதியாற்றங்கரையிலிராதினகரூர மென்கிறப
ட்டணத்தைத்தங்கள்குலப்பேராகஸ்தாபித்தார்களென்றும் அவர்கள்
சந்ததியிலேயே நூறுதலைமுறைக்குப்பிற்பாடு சாமனுற்பத்தியானு
னென்றுஞ்சொல்லுகிறசரித்திரத்தையுமிதைப்போலநந்தம்நூல்
களில் அக்நிகுலம்அனாதியென்றுஞ்சொல்லியிருப்பதையும்செவ்வை
யாய்ப்பார்த்திருப்பாரானால் அக்னிகுலமானது அறுநூறுமாண்டில்
பிராமணாளால்கற்பிக்கப்பட்டதென்று எழுதவேமாட்டார்கள் இ
ல்லாமல்சிலஇந்துதேசசரித்திரங்களில்ரசபுதனதேசத்திலிருக்கின்ற
யெல்லாஜாதியும் க்ஷத்திரியரென்றுயெழுதியிருக்கின்றது அதைநம்பி
அதையெழுதினவர் புத்தியைப்போல் விபரீதபுத்தியையுடையசில
ருப்வழக்கத்திலும் சொல்லிக்கொள்ளுகிறார்கள்.

இவர்களெப்படிவிபரீதபுத்திமான்களென்றால் ரசபுதனம்
அல்லதுராஜபுட்டென்றுவழங்கிவரும்அந்ததேசத்தின்பேரைமாற
றி விபரீத அர்த்தமாக அதிலிருந்துவரப்பட்டசர்வசாதிகளையும்ரா
ஜபுத்திராளென்றுசொல்லுகிறபடியால் அதிலிருந்துவரப்பட்ட உப

ரிந்தவுண்மையான ராசபுத்திரர்கள்தவிர அந்ததேசத்திலிருந்துவரப்பட்டதாழ்ந்த ஈனசாதிகளும் இத்தேசத்துக்குவந்தவுடன் முன்குறிக்கப்பட்டவிபரீதபுத்திமான்களால் அரசபுத்திரர்களென்று மதிக்கப்பட்டபடியால்தங்களுக்குஇந்தத்தமிழ்தேசத்திலிவ்வளவுமேன்மைகிடைத்ததென்றுதங்களுடையதேசத்தில் தங்கள்சாதித்தாழ்வையும் ஸ்திதியையுமறந்துகெர்வித்துத்தாங்களேயிந்தநாட்டையாண்டு கழித்த அரசர்போல் திரிகிறார்கள் - ஆனாலிவர்களிருந்து வரப்பட்டதேசம்(ஜாவீ கிளார்க்கு - மார்ஷிமென) என்பவராற்சொல்லப்பட்டதுபோல் ராசபுத்திரர்களாலேயே அத்தேசமேற்பட்டு அந்த பேர்வந்தபோதிலும் அதில்ராசவம்சந்தவிரவேறேசாதிகள் வசிக்கிறவழக்கமில்லையா அப்படியானால் மேற்படிதேசத்திலிருந்து வரப்பட்டவர்கள் ரசபுதனபிராமணர் ரசபுதனக்ஷத்திரியர் ரசபுதன-வைசியர் ரசபுதன சூத்திரர் ரசபுதன-வண்ணார் ரசபுதன-அம்பட்டர் இப்படிப்பலசாதியாய்ச்சொல்லிக்கொள்ளுகிறார்களே தவிர அதிலிருந்துவரப்பட்டவர்களெல்லாம் க்ஷத்திரியரென்றுசொல்லவில்லை ஆதலாலதிலிருந்து வரப்பட்ட க்ஷத்திரியர்கள்தவிரமற்றவர்களை யெப்படிராசபுத்திரரென்றுசொல்லுகிறது.

ஆனாலதிலிருந்து வரப்பட்டசாதியார்களெல்லாம் க்ஷத்திரியர்களே-ஆனால் தொழிலினால் வண்ணான்-அம்பட்டன் முதலானபலசாதிகளாய்ப்பிரிந்ததென்றுசொல்லுவார்களானால் அந்தச்சொல்லின்பேரில்கேழ்விக்கிடந்தருகின்றது அதாவது அந்தக்கொஞ்சதேசத்தில் மாத்திரம் க்ஷத்திரியசாதிகள் முழுமையு மோரிடத்திற்கும்பலாயிருக்கவேண்டிய காரணமென்ன அப்படி க்ஷத்திரியர்கும்பலாயிருப்பார்களானால் அதுபோற்பிராமணரு மொருகும்பலாயிருந்து அந்ததேசத்துக்குப்பிராமணபுதனமென்று பேர்வந்திருக்கவேண்டியது அதுபோல்வைசியர்களுமொருகும்பலாயிருந்து அந்ததேசத்துக்குவைசியபுதனமென்றுபேர்வந்திருக்கவேண்டியது அதுபோலவே சூத்திரருக்கும் சூத்திரபுதனமென்றும்பேர்வந்திருக்கவேண்டியது இப்படியிருந்தபோதிலும் இந்தநாலுதேசங்கள்போகமற்றதேசங்களில் வசிக்கப்பட்டவர்களின்னவகுப்பைச்சேர்ந்தயினசாதியாரென்று தெரிந்துக்கொள்ளவேண்டியது - அப்படியானு

போதிலும் இந்தயிந்துதேசமுழுமையும் அனந்ததேசவுட்பிரிவுகளிலும் நகரங்களிலுங் -கிராமங்களிலும்- பிரம்மக்ஷத்திரிய-வைசியசூத்திரமென்கிறநான்குசாதிகளும் சங்கரசாதிகளும் கலந்துவசிக்கிறார்களென்றும் ஆனாலந்தந்தவிடங்களி லரசுசெய்தவர்கள் க்ஷத்திரியர்களென்றும் அனந்தபுராணசரித்திரங்களிற் சொன்னதுபொய்யாகவல்லவோமுடியும், இதையோசியாமலெப்படியந்ததேசத்திலிருப்பவர்களெல்லாம் க்ஷத்திரியரென்றுசொல்லுகிறது ஆனால்ராசபுதனமென்றுசொல்லப்பட்டது தேசத்துப்பேரோதவிர சாதியைப்பற்றிவந்ததல்ல-அப்படியிருக்க அதிலிருந்து வரப்பட்டவர்கள்தேசத்தின்பேரைச் சொல்லுகிறார்களேதவிர அவர்கள்ஜாதியின்பேரைச்சொல்லுகிறதில்லை அதெப்படியென்றால்-குச்சிலாத்தியர்-தெலுங்கர் தமிழரென்றுபொதுவாகச்சொன்னபோதிலும் அவர்களைவிபரமாக்கேழ்க்குங் காலத்தில் குச்சிலியாத்துப்பார்ப்பான் -குச்சிலியாத்து க்ஷத்திரியன்- குச்சிலியாத்துச்செட்டி-குச்சிலியாத்துவண்ணான் குச்சிலியாத்து அம்பட்டனென்று சொல்லுகிறவழக்கம்- தெலுங்குபார்ப்பான்- தெலுங்கு அம்பட்டன் - தெலுங்கு வண்ணானென்றுசொல்லுவதுபோல்தமிழ்ப்பார்ப்பான்-தமிழம்பட்டன் தமிழிடையனென்று தேசப்பேர்முன்னும் அதில்வசிக்குஞ் சாதிப்பேர்பின்னுஞ் சொல்லுகிற வழக்கத்தைப்போல ராஜபுதனமென்கிற தேசப்பேர்முன்னும் அதில்வசிக்கும் ஜாதிப்பேர்பின்னும் வழங்கிவருகிறார்களேதவிர வேறல்ல - அப்படி நாலாசாதிகளும் அந்த தேசத்தில் வசித்திருக்க அந்த தேசத்திருந்து வரப்பட்ட சர்வஜாதிகளையும் இந்த தேசத்திலிருக்கப்பட்டவர்கள் ராஜபுத்திரனென்று சொல்லிக்கொள்வது மிகுந்த ஆச்சரியம்- ஆனால் இந்தத்தமிழ்நாட்டில் வசிக்கிறசிலஜாதிகளின்வழக்கமானது பூர்வீகமாய்த்தங்களுக்குயர்ந்தவர்களை பொறாமையினால் மதியாமல் தங்கள்தேசத்துக்குப்புறம்பான அன்னியதேசத்திருந்து வரப்பட்ட உயர்ந்தவர்கள்போகதாழ்ந்தயீனசாதிகள்கூட இந்தநாட்டுக்குவந்து நான்பிராமணன்-நான் க்ஷத்திரியன்- நான்வைசியனென்று பலவாறாகச்சொல்பவனா அவர்சொல்லுவது வுண்மை உண்மையல்லவென்று அறிந்துக்கொள்ளாமல் அவர்கள்சொல்வது ஒருபங்காயிருந்தாலும் இவர்கள்பதுதுப்பு

ஜாதிசங்கிரகசாரம்.

[illegible] மேன்மைப்படுத்தி, அங்கீகரிக்கிறபடியால் பிரதேசத்திருந்து [illegible] சரியானரசபுத்திரர் சரியானராஜாக்கள் இவர்களோடுகூட ஒட்டர்கள் - மல்லுச்செட்டிகள் - வந்தியராகிய பட்டுராசாக்கள்- இன்னம் பலதாழ்ந்தஜாதிகளும் கிருஷ்ணாநதிதாண்டி இந்நாட்டுக்குட் பிரவேசிப்பதற்குமுன் ஒருபூணூலைத்தரித்துக்கொண்டு நாங்கள் பிராமணர்கள் - நாங்கள் க்ஷத்திரியர் - நாங்கள் வைசியர் - நாங்கள் ராசவாரு - நாங்கள் ரசபுத்திரரென்று சொல்லுஞ் சொல்லானது அவர்கள்வாயினின்று வெளியாகுதற்குமுன் அவர்களுக்கு தீர்க்கநமஸ்காரமுதலான மரியாதைசெய்து மேன்மைப்படுத்தி அவர்களை பிராமண- க்ஷத்திரிய- வைசியரென்றும் இந்தத்தமிழ்நாட்டுக்குரிய க்ஷத்திரியர்களையும் - வைசியர்களையும் - க்ஷத்திரிய வைசியர்களல்லவென்றும் சொல்வதைஆலோசித்தால் தன்தாயாருக்கும்- தகப்பனுக்கும் சம்ரட்சணைசெய்யாமல் தெருவிலேயவிட்டுப்போதுமகளாகிய விலைமாதர் தாய்வுறவின்முறையாருக்கு - தேகவுதவி- திரவியவுதவிசெய்து சம்ரட்சணைசெய்துவருகிறவர்கள் வழக்கத்தைப் போலிதையும் லகக்கொண்டதேதவிர வேறல்ல.

ஆனால் நான்பொறாமையினாலெழுதினேனென்றும் - ஈனசாதிகள் உயர்ந்தசாதியாராக வருகிறதில்லையென்றும் சிலர்சொல்லுவார்கள்-அதற்குத்திருஷ்டாந்தம் சொல்லுகிறேன்-அதாவது சிலநாளைக்குமுன் சூளையிலிருந்து வுடைபட்டுப்போன பட்டாளத்தில் - ஒருபேராயிநான் ரசபுத்திரனாகிய க்ஷத்திரியனென்று சொல்ல - வெகுகாலம்வரையிலும் மற்றவர்களால் உயர்ந்தமரியாதையும் சமபோசனமும்பெற்றுக்கொண்டுவந்தான்- வெகுகாலத்துக்குப்பிற்பாடு- அவன் வடதேசத்து அம்பட்டனென்றுதெரிந்துமற்றவர்களால்விசாரணைக்குக்கொண்டுவருந்தருணத்தில் தன்வுத்தியோகத்தைக்கைவிட்டு ராஜிநாமாகொடுத்து வோடிப்போய்விட்டான் இதைப்போல அனேகம் நடந்திருக்கின்றது-அதுகளையெடுத்துச்சொல்லவென்றாலிந்தப்புத்தகம்போதாது - இப்பேர்க்கொற்ற சங்கதிபலவிடத்தில் நடந்திருக்கின்றது-அதைப்பலபேரறிந்திருக்கலாம்.

ஆனாலிவ்வளவு திருஷ்டாந்தங்காட்டி யெழுதவேண்டிய அவசியமென்ன - இதினால்வரப்பட்ட சிலாக்கியமென்னவென்று சிலர்

யோசிப்பார்கள் - அப்படிச்சிலர் யோசிப்பதற்குமுன் எனக்கேதுகா ணத்தைத்தருகின்றது - ஏனென்றால் முற்காலத்திற் புராணங்களிலும் வழக்கத்திலும் உயர்ந்தவர்களென்று ருசுப்படுத்தினால் மற்றவர்களால்பூசித்து மரியாதைசெய்வார்களென்றல்ல - அந்தக்காலத்தில் அரசாண்டக்ஷத்திரியர்கள் இன்னாரென்று ருசுப்படுத்தினால் முன்கைவிட்டுப்போன ராச்சியமகுடாபிஷேகம் தத்காலத்திலிராநின்ற பூர்வீகஅரசர் சந்ததியாருக்கு வரவேண்டுமென்கிறயெண்ணமுமல்ல- அதினால் பெருமைகிடைக்குமென்கிற கருத்துமல்ல- இந்நாட்டு வைசியர் இன்னார்களென்று வெளியிட்டால் மற்றவர்கள் பணவுதவிசெய்து வர்த்தகத்தை நடத்துவார்களென்கிற யெண்ணமுமல்ல- அப்படிப்பிரயோசனமற்றிருந்தும் ஏதுகளைக்குறித்தெழுதவேண்டிய அவஸ்யமென்றால் தத்காலத்தில் குடிமதிப்புச்சபையார் கிரமமாய்ச்செய்யாததினால் அதைப்பார்த்த சூத்திரரும்- சூத்திரருக்குப் பின்னாற்சொல்லப்பட்ட சிலர் க்ஷத்திரியவம்சம் பூமியிலில்லையென்றுநினைத்து நான் க்ஷத்திரியனென்றுசிலரும் அதைப்பார்த்த சிலர் நமக்கோரிடங்கிடையாதாவென்று நினைத்து நான் வைசியன்- நான்வைசியனென்று சிலரும் எல்லாருக்கும் நாங்களே வுயர்ந்தவர்களென்று சிலரும் புளியங்காய்க்கு எலிமிச்சங்காய்புளிப்பிற் றோற்காதென்கிற பழமொழியைப்போல் சொல்லுகிறபடியால் இதைப்பார்த்த முன்சொல்லப்பட்ட பிரதேசங்களிலிருந்துவந்து இந்நாட்டிற்குடியேறியவர்களில் இன்னாரென்றறிந்துக் கொள்ளக்கூடாதசிலர் நாங்களே க்ஷத்திரியர் இந்தப்பூமியையாண்டனுபவித்த அரசரென்றும் சிலர் நாங்கள்வைசியரென்றும் சொல்லுகிறபடியால் இதுகளையெல்லாம் கேழ்விப்பட்டபலரும்பலவாறாக வுண்மைதெரியாமல் யோசிக்க யிடந்தருகிறபடியால் இத்தத்தருணத்தில் யாவரும் உண்மையையுணர்ந்துக்கொள்ளும்படி முன் முதலதிகாரத்தில் இரண்டாவது பிரிவிற்சொன்ன க்ஷத்திரியர்- அல்லது அரசரென்றுசொல்லாநின்ற- சேர- சோழ- பாண்டியர்- அக்கினி- சூரிய- சந்திரரென்றுசொல்லப்பட்ட மூன்றுவம்சமுமொரே சாதியாரென்கிற திருஷ்டாந்தமும் அவர்கள்பரம்பரை தத்காலத்திலின்னாரென்றும் வைசியர்களின்னாரென்றும் வெளியிடும்படியான அவசியம்நேரிட்டது.

௩-ம்-அதிகாரம்-௪-ம்-பிரிவு



இந்தப்பிரிவில் மூன்றுகுலமுமொன்றென்று திருஷ்டாந்தம்-வருமாறு.

அக்கினி-சூரிய சந்திரவம்சமாகிய சேரசோழ பாண்டியர்களை ஓர்சாதியென்று யெப்படிச்சொல்லுகிறதென்று சிலர்யோசிப்பார்கள் - அதாவது அரசர்பொதுப்பேரில் பார்த்திபனென்று சொல்லியிருக்கிறபடியால் அதின்தாத்பரியமாவது "இந்தப்பூமிக்குள் வசிக்கிறமனிதருக்குள் அரசனானவன் விளக்கைப்போல் பிரகாசிக்கப்பட்டவனென்பதாம், இந்தப்பிரகாசமானது மூன்றுவிதமாகநின்று இந்தப்பூமியை விளக்கிறபடியால் இந்தப்பூமியையாண்ட அரசர்பிரிவும் சோதியைப்பற்றியே மூன்றென்றுசொல்லப்பட்டதேதவிர வேறல்ல- அந்தச்சோதியின் தாரதன்யமானது- முதலக்கினி இரண்டாவது- அக்கினியேபேதமற்று இயற்கையான சுடுகையும்-காந்தியுமுடையதாய் மறுபேர்பெற்றுக்கொண்டசூரியனும் - மூன்றாவது- சூரியனால் சலத்தையும் பிரகாசத்தையும் பெற்றுக்கொண்ட சந்திரனும் இந்தமூன்றும் ஒன்றென்பதற்கும் இந்தமூன்றுக்குள் மூலம் அக்கினியென்பதற்கும் உதாரணமயெழுதினால் அனேகமாகவிரியுமாதலால் அதையெழுதாமல்நிறுத்தப்பட்டது-அதைமுக்கியமாய்த்தெரிந்துக்கொள்ள வேண்டுமானவர்கள் வானசாஸ்திரத்தாலும் பூகோளசாஸ்திரத்தாலும் தருமராஜனுக்கு வியாசர்சொன்ன அண்டகோசபடலத்தாலும் நால்வகையோனி- எழுவகைத்தோற்றம்- எண்பத்துநாலுலட்சம் சீவபேதம்- பிரிதிவுமுதலான பஞ்சபூதம்-அநேகருள்ளடங்கும் மற்றசீவருமம் சூரியாக்கினியினாலே பத்தியெரியுந்தருணத்தில் அண்டமத்தியாக்கினியெழும்பி மேற்படி சூரியாக்கினியுடன்கலந்து சர்வத்தையும் நாசஞ்செய்து தானும் லயப்படுங்காலத்திலும் அவைகளுக்கொருசலனமில்லாமல்நிலைபெற்ற தேகசித்தி

இந்துக்களுடைய புராணநூலின்பிரகாரமே மூன்றுசுடராகிய சோதியைப்பற்றியே க்ஷத்திரியராகிய வரசருக்குப் பார்த்திபரென்கிறபேரும் மூன்றுசுடருமொன்றானபடியினுலொரேசாதியென்றும் யாவருக்குமெளிதில் விளங்கும்- புறச்சாதியும் பிரமதஸ்தருமாகிய மகம்மதியர்-ஐரோப்பியர்-முதலானவன்னியசாதியர்களும்இந்துக்களுடையசாஸ்திரபுராணங்கள்கட்டுக்கதைகளென்று புராணங்களிற்சொன்ன ஒவ்வொருசரித்திரத்துக்கும் வொவ்வொருகாரணங்களைச்சொல்லி- சூரிய- சந்திர-அக்கினிகுலமென்றுசொல்லப்பட்டது சூரியனென்கிற பேரையுடையவனொருவ னிருந்ததாகவும்- சந்திரனென்கிற பேரையுடையவனொருவனிருந்ததாகவும்- அந்தவிரண்டுபேருடைய சந்ததியாரே சூரிய -சந்திரவம்ஸத்தாராகவும் பவுத்தராகிய ராக்ஷசாளுடன் போர்புரிந்து வெற்றிபெறுநிமித்தம் அக்நிகுலமென்றும் ரிஷிகளும் பிராமணர்களுங்கற்பித்து இந்தியாவிற் குடிகொண்டிருந்த பவுத்தமதத்தையும் பவுத்தரையும் நாசஞ்செய்து தத்காலத்திலிராநின்ற இந்துமதமாகிய சைவ-வைஷ்ணவமுதலானதுகளை நிலைநிறுத்தினரென்றும், அவர்களே யக்நிகுலத்தாரென்றும், அனந்தஞ்சரித்திரங்களிலெழுதியிருக்க-அதைவாசித்துஅதற்கு வொன்றும்பதில் சொல்லாமல் வொத்துக்கொண்டிருக்கப்பட்டவர்கள் நான் புராணத்துக்குச்சரியான ஞாயமாகப்பாருக்குத்தியமாகிய மூன்றுசுடர்களையும் தங்களுக்குப் பார்த்திபனென்கிறபேரைப்பற்றி மூன்றுகுலமாகப்பிரித்து வழங்கிவருகிறார்களென்றும், இவர்கள்வொரேவம்ஸத்தாரென்றுநானெழுதியதை நூலுக்குவிரோதமென்றும் யார்சொல்லுவார்கள்.

ஆனால் நானெழுதினத்தின்பேரில் சந்தேகித்து ஆக்ஷேபிக்கவெண்ணங்கொண்டவர்கள் பலநூலென்கிறகடலுக்குள் அறிவென்னுங்கப்பலைச்செலுத்தி நூல்முடிவென்னும் பலதுறையுஞ்சோதித்தாற் சந்தேகமென்னுந் தரித்திரத்துக்கு நிவர்த்தியென்னும்பொருள்கிடைக்கும்- அதினுல் மூன்றுசுடருமொன்றென்றும் அதின்வழியாய்வந்த மூன்றுகுலமும் ஒன்றென்று தெரிந்துக்கொள்ளுகிறதற்குச் சந்தேகமிராது.

௩-வது-அதிகாரம்-ஐந்தாவது-பிரிவு

இந்தப்பிரிவில் க்ஷத்திரியரின்னொன்றும் - அவர்களுக்குரிய பேரின்னதென்கிறவிபரமும்வருமாறு.

மூன்றுகுலமென்றுசொல்லப்பட்ட க்ஷத்திரியராகிய அரசருடைய சந்ததியார் தத்காலத்திலனேகமாக விருக்கிறார்கள் - அவர்களின்னொன்று வெளியிடுகிறதாகமுன்னிந்த அதிகாரத்தில்- ௫-வது பிரிவிற் சொன்னபிரகாரம் அவர்களின்னவர்களென்று குறிப்பித்துக்காட்ட அவசியமாதலாலிந்தத் தமிழ்நாட்டெல்லைக்குள் வசிக்கிற மேற்படி அரசசந்ததியாலா யாவரும்யெளிதிற்றெரிந்துக்கொள்ளும்படிசாஸ்திரதிருஷ்டாந்த அனுபவத்துடன் சொல்லுகிறேன்- அதாவது- அவர்களுக்கனந்தம் ராஜசெய்கையைப் பற்றியும், அனந்த காரணத்தைப்பற்றியும், அவர்களுக்குச் சிலபட்டப்பேர் வழங்கிவருவதுமுண்டு- அதிற்சிலதுவருமாறு-

கிடாரங்காத்தவர் - விளைந்தசோழன் - நீலங்கிரியார் - சின்னத்துவாண்டையார் - நெல்லூருசோழன் - காவுண்டர் - காளிங்கராயர்- சம்புராயர் - பாண்டியன் -இராயராவுத்தமிண்டர் - பள்ளி-சமூக்ஷியார் - சாமந்தர் - வீரமிண்டர் - வல்லமையுடையார் - படையாட்சிகள்-நாயனார்-தந்திரியார்- துரைகள்- இராஜனென்றர்த்தங்கொள்ளுகிற இராயர்-துரைகள் - பல்லவர்- பண்டாரத்தார்- இராஜாளி- அரசுபள்ளி-அஞ்சாதசிங்கம்- கங்கணவுடையார்- மழுவர் - கண்டியதேவர்- இரெட்டிகள் - நாயகர்- பூபதி- உடையார்- பரமேஸ்வரனார்-இரங்கர்- வெள்ளிப்பிரியர்- புலிக்குத்திச்சோழன் - இதுகள்போலின்னும் அனந்தம்பட்டப்பேர்களுண்டு-அந்தப்பேர்களெல்லாம் தத்காலத்திலும் வழங்கிவந்தபோதிலும் அதிற்பிரதானமானது ஐந்து- அதாவது - வன்னியர் - பள்ளி - சாமந்தர் - பல்லவர் - படையாட்சிகள் - இந்தவைந்துபேரும் க்ஷத்திரியராகிய அரசருக்கு மிகவுமுரியதாய் வழங்கிவந்திருந்தபோதிலும் இதிற்பிரதானமானதுவன்னியவொன்பதேதவிர வேறல்ல.

ஆனால்வன்னியனென்கிறபேர் அரசருக்கெப்படி வந்ததென்றும், எப்படிப்பொருந்துமென்றும் சிலர் ஆட்சேபிப்பார்கள்- இந்த மூன்றாவததிகாரம் நாலாவதுபிரிவிற்சொல்லியபிரகாரம்மூச்சுடரை யரசர்களுக்கு வம்சமாகக்கொண்டு வருகிறபடியால் அம்மூன்றுசுடர்களுக்குள் மூலம்-அக்கினியானபடியால்அதைப்பற்றிஇந்தமூக்குலத்தரசர்களுக்கும் வன்னியனென்று வழங்கிவருகிறதேதவிர வேறல்ல இதல்லாமல் இந்தமூன்றாவததிகாரம் ௯வது- பிரிவில் (ஜான்-கிளாரிக்கு- மார்ஷ்மான்) என்பவராற்சொல்லப்பட்ட சரித்திரமெழுதியிருக்கிறேனல்லவா அந்தசரித்திரத்திற்சொன்னபடி தத்காலத்திலிருக்கிற- க்ஷத்திரியர்களெல்லாம் அக்கினியிலிருந்து வந்தபடியால் அதைப்பற்றி அரசருக்குவன்னியனென்கிறபேர் வந்திருக்கலாமென்று சிலர்சொல்லவிடங்கொடுக்கின்றது- அப்படியானாலுஞ்சரிதான் அல்லது இந்துக்களுக்குடைய புராணநூற்களைப் பிரமதஸ்தமொப்புக்கொள்ளாத விஷயத்திலும் அரசனுக்குவன்னியனென்றுபேர் வரவேண்டியது நியாயந்தான்.

அதாவது மநுதர்மசாஸ்திரம் - ஏழாவதத்தியாயம் அரசன்சிறப்பு நாலாவதுசுலோகத்தில்இந்திரன்-வாய்வு எமன் சூரியன்- அக்கினி-வருணன் சந்திரன்- குபேரனிவர்களம்சங்களினாலேயே அரசனுண்டாக்கப்பட்டானென்றுசொல்லியிருக்கின்றது.

இதுவும் மேற்படிசாஸ்திரம்- ஒன்பதாவதத்தியாயம் மூன்னூற்றுமூன்றாவதுசுலோகத்தில்-இந்திரன்-சூரியன்- வாய்வு-எமன்-வருணன்-சந்திரன்-அக்கினி-பிரிதிவி இவர்கள்நடையையனுசரித்து அரசன் நடக்கவேண்டியதென்று சொல்லி யிருக்கின்றது - மேற்படி மூன்னூற்று நான்காவது சுலோகத்தில் - ஆவணிமுதல் நாலு மாதம்வரையி லிந்திரன் மழையை யுண்டுபண்ணிச் சனங்களைச் சந்தோஷிப்படுத்துகிறாப்போல்அரசன் தன்ராச்சியத்திலிருக்கிறபிரஜைகளுக்கு அபீஷ்டத்தையுண்டுபண்ணுகிறது இந்திரவிரதம்-மேற்படி(௩௱௫)வது-சுலோகத்தில்-சூரியன் மார்கழிமுதல் எட்டுமாதம்வரையில்தன்னுடையகிரணங்களாலே யதிகமாகத்தபிக்காமல் பூமியிலிருக்கிற ஜலத்தைக்கொஞ்சங்கொஞ்சமாக இழுக்கிறாப்போல் அ

ரசன் சனங்களை யுபத்திரவப்படுத்தாமல் மாதந்தோறும் சிறிதுசிறி தாகத் திர்வைவாங்குவது சூரியன்விரதம்.

மேற்படி(௱௪௬)வது-சுலோகத்தில் வாயு சகலசெந்துக்களிட த்திலும் பிராணரூபமாயுள்ளேநுழைந்து சஞ்சரிக்கிறதுபோலரச ன் வேவுகாரர்களா லெதிரியின்பட்டணத்திற் பிரவேசித்திருப்பது வாயுவின்விரதம்.

மேற்படி(௱௪௭)வது- சுலோகத்தில் எயமன் தண்டனைகாலத் த்தில் மித்திரனென்றுஞ் சத்துருவென்றும் பேதமின்றி யாவரையு ஞ்சரியாகச் சிட்சிக்கிறதுபோல் அரசன்குற்றஞ்செய்த பிரஜைகளை ப்பட்சபாதமில்லாமற் சரியாகத்தண்டிப்பது எமன்விரதம்.

மேற்படி(௱௪௮)வது சுலோகத்தில்- வருணன்றன்னுடைய பாசத்தாற் பாவிகளைக் கட்டுகிறதுபோல் அரசன் பாவிகளைத் தண்டிப்பது வருணன்விரதம்.

மேற்படி(௱௪௯)வது சுலோகத்தில்- பூரணச்சந்திரனைப்பார்த் து மனிதர்கள் சந்தோஷிப்படுகிறதுபோல் அரசன் தன்னைப்பார்த் து மந்திரிமுதலிய பரிசனங்கள் சந்தோஷிக்கும்படிச் செய்வது சந் திரன்விரதம்.

மேற்படி (௱௫௰)வது - சுலோகத்தில் - அரசன் அக்கினிபோற் கோபமில்லாமற் பிரதாபமுள்ளவனாய்த் துஷ்டர்களையுந் துரோ பகாரஞ்செய்கிற மந்திரிகளையுஞ் சிட்சித்துக்கொண்டிருப்பது அக் னிவிரதம்.

மேற்படி(௱௫௰௧)வது-சுலோகத்தில்-பூமியானது-சங்கமஸ்தா வரரூபமான சகலபிராணிகளையும்-உயர்வு-தாழ்வில்லாமற்சரியாகத் தரிக்கிறதுபோலரசன் பண்டிதபாமர சாதாரணமாய்ப் பேதமின் றி யனைவரையுங் காப்பாற்றுவது பிருதிவிவிரதம்.

இந்தவொன்பதாவது அத்தியாயத்திற்குறித்திருக்கும் இந்திரன் முதல் பிருதிவிவரையில் ஆறுபேரைப்போலரசன் நடக்கவேண்டிய தென்றவிதியும் முன்னேழாவதத்தியாயத்தில் இந்திரன்முதல்-குபே ரன்வரையில் ஆறுபேருடைய அம்சமே அரசனென்று சொன்னபி

ப்பிரஸ்தாபத்தைக்குறித்தும் நூல்களில் சுதந்திரிபருலம் மூப்பேறென்று
பிராமணர் சாயுச் குறித்து அபிப்பிராயந்தெரிவிக்கிறேன்.

அதிகாலையென்றும் யாவர்க்கும் மனிதர்களுக்குமேற்பட்ட தேவர்களுக்குமேலானதைப்பற்றிநிந்திரனைப்பென்றும், பலத்தைப்படைப்பியாய்வு அப்பென்றும், எங்கும்பிரகாசியாய் விளங்குவதாலருள்ய அப்பென்றும், சத்துருக்களைச் சம்மரிப்பதைக்குறித்து அக்கிப்பாபமென்றும், இயாவருக்கும் பிரதிபகாரம் பெறாமல அரசனாகப்பிறக்கவேண்டியதைப்பற்றியருளும்பென்றும், யாவரிடத்திலுங் குளிர்ச்சியாய முகமலர்ந்திருப்பதைப்பற்றி சந்திரனும்பென்றும், பெருந்ததலத்தையுடையவருகலாற் குபேர அப்பனென்றுஞ்சொல்லியிருப்பதாலிதைச்சுருக்கிச்சொல்லும்போது வாயுவைச் சூரியனுடன்சேர்த்துச்சூரியனென்றும், வருணனைச்சந்திரனுடன்சேர்த்துச் சந்திரனென்றும், இந்திரன்- குபேரன்-எமன் இவர்களை யக்கினியுடன்சேர்த்து அக்கினியென்றுஞ்சொல்லப்படுமேதவிர வேறல்ல.

இருவிதமுறையுஞ் சுருக்கிச்சொல்லுமிடத்திற் சந்திரனைச்சூரியனுடன்சேர்த்து சூரியனை அக்கினியுடன்சேர்க்கும்போது அக்கினிரூபமென்றொருசொற்குகவே மூடியும்-அதைப்பற்றியே முன்சொல்லப்பட்டிருக்கிற ஒன்பதாவதத்தியாயத்தில் (௩௱௰)வது சுலோகத்தில் அரசனைக்கினியைப்போற் சோர்பவில்லாமற் பிரதாபமுள்ளவனாய்த் துஷ்டர்முதலானவர்களைத் தண்டித்து ஆளப்பட்டவனென்று சொன்னதுமல்லாமல் முன்சொல்லப்பட்ட யேழாவதத்தியாயத்தில் ஒன்பதாவது சுலோகத்தில் அக்கினியானது அசாக்கிருதையாய்த் தன்கிட்டவந்தவனைமாத்திரம் தகிக்கும்- அரசனென்கிற அக்கினிகோபித்துக்கொண்டால்- தனம்-தான்யம்- புத்திரமித்திரகளத்திராதிகளோடும் அழித்துப்போடுமென்று சொல்லியிருக்கின்றது-இந்த மனுசாஸ்திர ஞாயங்களினாலேயும் அரசர்களுக்கு வன்னியமென்கிறபேரே பிரதானமானது, அதெப்படியென்றால் - மனுக்கள் நடக்கவேண்டிய நீதிசாஸ்திரப்பிரகாரம் அரசனானவன்- கோபம்-சாந்தமென்கிற விரண்டிற்கும் மத்தியா யிருப்பவனானபோதிலும்ச

த்துருக்களுடன் யுத்தநேரிட்டகாலங்களில் குளிர்ச்சியாகிய சாந்தத்தைக்கைவிட்டு தங்களுக்கியற்கையான கோபமென்னு மக்கினியைக்கைக்கொண்டு தாட்சண்யம் பூதத்தயையில்லாமல் மாற்றானைச் சங்கரித்து எதிரியினுடைய அஸ்திர சஸ்திரங்களினாலபாயமின்றி மீண்டு க்ஷத்திரியனென்கிறபேரை வகித்தபடியாலும் மனுநீதிப்பிரகாரம் கொலைபாதகர்- திருடர்- பொய்யர்- ஸ்திரீகளைக்கற்பழிக்குந் துஷ்டர்- இவர்களைத்தண்டிக்கும் அவஸ்யத்தினு லாக்கினையென்னு மக்கினியைக்கைக்கொண்டபடியினாலும் உலகத்திலேயுள்ளவர்களை வரம்புதப்பாமல் நடப்பிக்கும்படி ஆணையல்லது- ஆக்கினையென்கிற வன்னியை யெக்காலமூர் தானீங்காமல் தானந்தவக்கினிரூபமாயிருக்கிறபடியினாலும், அரசர்களுக்கு வன்னியனென்கிற பேரோமுக்கியகாரணமென்பதற் கெவ்வளவுஞ்சந்தேகமில்லை.

நான் புராணத்துக்கும் மற்றநூலுக்குஞ் சரியாகவும் மேற்படி பிரமதஸ்தர் நூல்களை யொட்டுக்கொள்ளாதவிஷயத்தில் அனுபவதிருஷ்டாந்தமாகவும் அரசருக்கே வன்னியனென்கிறபேருரியதென்று நானெழுதினதைச் சிலர் மேலுக்குப்பொறாமைகொண்டு நான் யுக்தியாகவெழுதினேனென்றும் நூல்களிலப்படியிராதென்றுஞ் சொல்லுவார்கள் - ஆதலால் வன்னியர்களே யரசரென்றும்- அரசருக்குரியபேரே வன்னியனென்றுந் தோன்றும்படியாய்ச் சிலநூலிலிருந்து திருஷ்டாந்தமான வுதாரணம்வருமாறு.

மதுராச்சங்கத்துத் தெய்வத்தமிழ்ப்புலவராகிய
கல்லாடரருளிச்செய்த (கல்லாடம்.) ௪௰-வது-அகவல்.

வடமீன்கற்பினெம் பீடுகெழுமடந்தை...... .... *
பெருங்கடன்முகந்து வயிறுநிறைநெடுங்கார்... ......*
விண்டிருந்துமுழங்கி வீழாதாகக்........ ....*
கருவொடுவாடும் பைங்கூழ்போலக்........... ... .*
கற்புநாணூழிப் பழங்கண்கொள்ள......,.. ... .*
உயர்மாமுளைத்த ஆரிபோல ,.......,..... ..,....... ...*

வோருடல்செய்து மறுமனங்காட்டு.................. *
மாணிழைமகளிர் வயின்வைகுதலாற் .... *
கருமுகிற்கனிறிறத்தழற்கட்பிறையெயிற்........... *
றரிதருகுட்டி யாயபன்னிரண்டினைச் .... *
செங்கோன்மூளையிட் டருணீர்தேக்கிக் .... *
கொலைகளென்னும் படர்களைகட்டுத் .... *
தீப்படராவை வேலிகோலித் .... *
தருமப்பெரும்பயி ருலகுபெறவிளைக்கு........... *
நாற்படைவன்னிய ராக்கியபெருமான்............... *
முன்னூடைப்பேழ்வாய்ச் செங்கண்வராலினம் ... ...*
வளைவாய்த்தூண்டிற் கருங்கயிறுபரிந்து............ *
குவளைபாசடை மூண்டு கமுழக்கி .... *
நெடுங்கால்பாய்ந்து பழித்தவொண்டொழிற் .. *
சுருங்கைவழியடைக்கும் பெருங்கழிப்பழனக் ... *
கூடற்கிறைவ னிருதாள்விடுத்த ... ...*
பொய்யினர்செய்யும் புல்லப்போலப் ... ... *
போராவாய்மையூரன் ... .*
றொரோடுமயங்கிப் பெருமையுமிலனே ... ...*

இந்தவகவலுக் குரையெழுதினு லதிகமாக விரியுமாதலால் வேண்டியமுக்கிய தாத்பரியமாத்திரம் யிந்தவிடத்திலெழுதுகிறேன்-கறுத்தமேகம்போன்றநிறமும், அக்கினிபோன்றகண்ணும், மூன்றாம்பிறையைப்போன்ற கொம்புமுடைய பன்றியானதுபெற்றகுட்டிகள் - பன்னிரண்டினையுஞ் செங்கோலென்கிற மூளையிவித்து அந்தமூளைக்குக்கிருபையென்கிற ஜலத்தைக்கட்டி கொலைகளென்று சொல்லப்பட்டுப்படராநின்ற களைகளைவெட்டி அக்நிமயமான வாக்கினையென்னும் வேலியையடைத்துத் தருமமென்று சொல்லப்பட்ட பெரிதாகியபயிரை யுலகத்தாரடையவிளையும்படிச்செய்யும் இரத-கஜ-துரக- பதாதியென்றுசொல்லப்பட்ட நால்வகைச் சேனையையுடைய வன்னியராச்சியப் பெருமானுகிய சொக்கநாதனென்பதாம்.

இந்தக்கவியிலக்நிமயமான ஆக்நேயச்சக்கிரமென்கிறவேலியையடைத்துத் தருமப்பயிரை வளர்க்கப்பட்ட வன்னியரென்றுசொ

ன்னதற்குரிய திருஷ்டாந்தம், மநுதர்மசாஸ்திரம் (...த்தி யாயம் தண்டப்பிரசம்சை (ம்சு சுலோகம்) ... பிராணிகளையுங் காப்பாற்றுவதற்குபயோக ... யும் பிரமதேஜசுள்ளதாயு மிருக்கின்றதென் ... ன்றும், ஹ௨ (மஅ) வது சுலோகத்தில் தண்ட ... களையும் ஆக்கினை செய்கிறது- எல்லாரையுங் காப்பாற்றுகிறது- தூங்குகிறவாளிடத்தில் விழித்துக்கொண்டிருக்கிறது- ... தருமத்தையே தண்டரூபமாகப் பெரியோர்கள் சொல்லுகிறார் களென்றுஞ் சொல்லியிருக்கிறபடியால் ... வினை விக்குமென்று சொல்லுவதல்லது ஆக்கினைசெய்பவன் ரூபமா யிருக்குமென்று சொல்லவில்லை. இந்தத் தருமரூபமான ஆக்கினையானது அரசனையிற் பிரமனுண்டாக்கினனென்று சொ ல்லியிருக்கிறதுபோல் மூன்குறித்தகவியில் அக்கி ... யஞ் சிறவேலி ... ல்தருமமென்னும் பயிர் வளர்க்கப்பட்டவென் ... றுசொன் னபடியால் அரசருக்குரிய காரணப்பேர் வன்னியரென்பதே யல்லவே றல்ல இதுவுமன்றி இந்தக்கவியிற் றிருவிளையாடற் புராணத்திற் சொ ல்லப்பட்டதாயிருந்த பனிரண்டு பன்றிக்குட்டிகளுக்குஞ் சொக்க நாதராலவர் தாயைப்போற் போய்ப்பாலூட்டி- ஞானமும்- அறிவுங் கொடுத்து மனிததேகமும்பன்றிமுகமுமாகச்செய்து பாண்டியனு க்குமந்திரியாக்கி அரசுரிமைக்குடையவராகினரென்றுசொல்லியிரு ப்பதை இந்தவிடத்தில் அதின்கருத்துத்தோன்றும்படிச் சுருக்கிச்சொ ன்னாரென்பதாம்.

இதின்விபரஞ்செவ்வையாய்த் தெரிந்துக்கொள்ளவேண்டியவ ர்கள் மேற்படி திருவிளையாடற்புராணத்தில் பன்றிக்குட்டிக்குப்பா ல்கொடுத்து மந்திரியாக்கிய படலத்தில் கண்டுகொள்ளலாம்-ஆனால் அந்தப்படலத்திற் பன்றிக்குட்டிகளை மந்திரியாக்கியிருக்க இந்தக்க ல்லாடமென்கிற நூலில் அரசனாக்கினரென்றுமெப்படிச்சொல்லலா மென்றுசிலர் யோசிப்பார்கள்- மந்திரியானவர்கள் அரசனுக்குப் பதிலாய் இராயரதிகாரமுழுமையுங் கைக்கொண்டு இராயருத்திரவு போல்நடத்தப்பட்ட வரானபடியால் (நாற்படைவன்னியராக்கிய பெருமா) னென்றார். இந்தவிடத்தில் அரசனாக்கினரென்றுசொல்

வதற்குப்பதிலாய் க்ஷத்திரியராகிய அரசனை வலியானபடியா லிவன்பிராக்கிருதனென்று பிராமணர்நூலவராகிய பாண் டியனும் வர்ணியனென்று யாவருந்தோன்றும்படியாகச்சொ ன்னதேயவிரம்வேறல்ல.

——(*)——

முதல்லாமல்வாசிட்டம், ஆயிரத்தெண்பத்தெட்டாவது கவி.

(உயர்வாராய்தல்.)

செம்மைதரு ... மறைநூலிறைக்குவளர்ந்ததற்பின் *
நந்தாத தாயபிறந்தேகத்தனையானைகொட்டு நலமெய்ச்சி ... *
சிந்தைசெய்வார் தல்குரவுந்தொழியர்வர் மேலிராமரேவா ... *
மந்தரநிலைசற்றுதலில்லுவறிகநிலைமன்னவராவோம் ... ... *

இதின்தாத்பரியம்.

(முன்தவஞ்செய்தபிராமணருக்குப்) பத்துப்பிள்ளைபிறந்துவே தசாஸ்திரங்களிற் றேர்ந்து வளர்ந்தபிற்பாடு தகப்பனுந் தாயுமிறந் தவர்கள்கைலாசமென்று மிடத்திற்குப்போய் ஆலோசிப்பார்கள் உலகத்திலியாவருக்கும் மேலானவுயர்வும், சிறப்புமுடையவரி யர்களாவோம் அந்தபதவியு மற்பமானபடியால் அதற்குமேலா ய்பதவியையுடைய மன்னவராவோமென்பதாம்.

இதுவும் மேற்படி-வாசிட்டம் ஷை கதை(அ)வது கவி.

அதுவுஞ்சிறிதாம்புவியனைத்துக்கரசராவோமதுசற்று ... *
நிதிநுன்னியவிந்திரராவோநிகழ்த்துமதுவுநெடிதல்ல ... *
பதுமஞ்செறியுமயனுதல்பழுதில்பதவியெனத்துணிந்தா *
ருதிதமனத்துட்பதின்மருமொத்துயரும்பதுமாதனத்திருந்தா

இதின்தாத்பரியம்.

அதுவுமற்பமாம், இந்தப்பூமிமுழுமையுமாளப்பட்டசக்கிரவர் த்தியாவோம்- அதுவுமற்பமாம், சங்கநிதிபதுமநிதியுடையதேவேந் திரனாவோம்-அதுவுமற்பமாம், தாமரையிலெழுந்தருளியபிரமாவா

தல் குற்றமற்றமேலானபதவியென்று நிச்சயித்துத்தோன்றினமனைத்தாற்பத்துப்பேர்களுமொருமித்து மேலானபதமாதனைத்துவிருத்தாரென்பதாம்.

இந்தவிரண்டுகவியின் கருத்தாவதென்னவென்றால் - உலகத்திலுயர்ந்தபதவிமூன்று அதாவது-முதலாவது, கொஞ்சம் பூமியையாளப்பட்டவிராஜா- இரண்டாவது, அந்தராஜாக்கள் சிலர்தனக்குப் பகுதிகட்டும்படி அதிகபூமியையாளப்பட்டமகாராஜா மூன்றாவது அந்தமகாராஜாக்கள்தனக்குப் பகுதிகட்டும்படி விஸ்தாரமானபூமி அல்லது உலகமுழுமையுமாளப்பட்ட சக்கிரவர்த்தியானபடியால் இந்தப்பத்துப் பிராமணப்பிள்ளைகளும் உயர்வாராய வந்தபடியால் முதல் பூமியையாளப்பட்ட அரசனாகவேண்டுமென்றும். இரண்டாவது- அந்தஅரசனுக்கு மேற்பட்டமகாராஜாவாகவேண்டுமென்றும், மூன்றாவது- அந்தமகாராஜனுக்குமேற்பட்ட சக்கிரவர்த்தியாகவேண்டுமென்றும், நாலாவது- பூமியிற்சக்கிரவர்த்திக்கு மேலுயர்பதவியில்லாததால் தேவர்களுக்குமரசனான தேவேந்திரனாகவேண்டுமென்றும், ஐந்தாவது- தேவேந்திரனால் வணங்கப்பட்ட பிரமனாகவேண்டுமென்றும், இப்படிப்படிப்படியா யுயர்வையாராய்ந்தார்கள்- இதில் அரசனாகவேண்டுமென்று முதற் சொல்லுமிடத்தில் (உயர்வன்னியராவோமென்றார்.) இந்தத்திருஷ்டாந்தத்தினால் - க்ஷத்திரியர் - அல்லது அரசருக்குரியபேர் வன்னியரென்பதே தவிர வேறல்ல



இதுவும் வாசிஷ்டம்-சதருத்திரன்கதை-௫வது-கவி.

பாதபம்விதையாளுப்போற்பள்ளிகொண்மறையோன்றன்பாற்
போதுறுகனவிற்றன்னைப்பொருவில்வன்னியனுக்கண்டான் *
மேதகுமுனைவாற்றுஞ்சிமேவியகனவிற்றன்பாற் ... ... *
பூதலத்தரசனாகவன்றனைப்பொலியக்கண்டான் ... ... *

இதின்தாத்பரியம்.

விருக்ஷமானது வித்துக்குளடங்கினதுபோல்நித்திரைசெய்யா நின்ற பிராமணனானவன் றன்னிடத்திலுண்டான சொற்பனத்தில்

அந்தப்பிராமணனே தன்னையொப்பற்ற வலியனாகப்பார்த்தான் அந்த வன்னியனானவன் மேன்மையான போஜனத்தால் நித்திரைசெய்து அப்போதுண்டான சொப்பனத்தில் தன்னிடத்தில் பூமிக்குராஜாங்க மேற்படியவன் வன்னியனென்னுமிடத்தில் விளங்கப்பார்த்தானென்பதாம்.

இந்த ஸ்லோகப்பிரகாரம் பிராமணனானவன் தன்சொப்பனத்தில்யாவராலும் தனக்கொப்பிடக்கூடாத பெருமையையுடைய வன்னியனானவனாய், அந்தவன்னியனே பூமிக்குராஜாவாகு மென்றும் சொன்னபடியால் முதல் - ராஜனானவனும், அந்தராஜன் படையும் மகாராஜனாகியவனென்று நிச்சயித்தார் - அல்லது அரசனுடைய சந்ததியார்களுக்கு வன்னியரென்கிற பேருரியதாயிருக்கிறபடியால் அந்த ராஜசந்ததியாகிய வன்னியனானவனென்றும், அவனே தன்மையுரிய பூமியையாளுகிற பாத்தியத்தைகளைக்கொண்டதாகக் கண்டபடியென்று சொல்லலாகுமிது.



இதுவுமப்படியே இராமாயணம் - உத்திரகாண்டம்
இலங்கையழித்தபடலம் ௰௧ வது கவி.

கொடிமன்றுமாடக்குலமென்னுமயோத்தியெயிற் .. *
கடிமன்றுவாயிற்கடைநின்றருள்காலநோக்கிப் ... *
படிமன்னியாரும்பலவன்னியர்மண்டலீகர்... ... *
முடிமன்னரெல்லாருமறமேயபுகுந்தேவல்கேட்க ... *

இதின்தாத்பரியம்.

கொடிகளானது நிலைபெற்றிராநின்ற மாடகூடங்களையுடைய அயோத்தியில் (இராமனென்றுமரசனானவன் இராவணனைச்செயித்து சீதையைச் சிறைமீட்டுப்போய்ச்) சேர்ந்து காவலானது நிலைபெற்றகடைவாயில்நின்று சமயம்பார்த்து இந்தப்பூமியில்நிலைபெற்றுவாழும் வன்னியரல்லது அரசரும், மண்டலீகர்- அல்லது மகாராஜாக்களும் சக்கிரவர்த்திகளும் கிரமப்படியுள்ளே போய் யேவல்கேட்பாரென்பதாம்

இந்தக்கவியிருல்-இராசன்- மகாராசன்- சக்கிரவர்த்தியென்று மூவராகச்சொல்லப்பட்டவர் - முதல் அரசனைச்சொல்லவந்தவிடத்தில்(படிமன்னிவாழும் மன்னவன்னியென்றார்) ஆகலால் இந்தக்கவியினும் அவ் அரசருக்குரிய பெயர்-வன்னியனென்பதேதவிர வேறல்ல.

சுதமில்லாமல்-அகஸ்தியர்சொன்ன வைத்தியவிதிதாரமுந்நூறு.

௨௱௪-வது-கவி.

தாரத்துமடா அக்கினிகுமாரன்பாய்ந்து .. *
சொல்லியெய் முந்துமுன்பேசுபூர்த்திவெட்டும் . *
மரத்துமேலிருப்புபடவைத்தாற்போலே ... .. *
மருத்துவ மகாராசபுத்திரன்றான் ... ... *
சிரத்தலேபொய்வேதுசெய்தாலேது ... .*
தேகத்தில் உற்சசகமெலிதாலேது ... . *
வரத்தில்வேல்வீரருபலமனேங்கவோது ... . *
அடிசபுபடி விழிநோய்களைத்தொலைத்தோர்த்தே *

இதின்தாற்பரியம்.

சுயமகக்கினிகுமாரனென்றுசொல்லப்பட்ட அவிழ்தமானது வாயாலாது மூர்த்துபுஷ்டபாய்ந்து நோய்பேரும் சத்துருக்களை வெட்டும், அதுவுமல்லாமல் வன்னியகுமாரனென்றுசொல்லப்பட்ட மகாராசபுத்திரனானவன் மரங்களில் இருப்பிருந்துசெய்யப்பட்ட ரப்பப்பலகையை வைத்ததுபோல நோயென்னும் சத்துருக்களை மறுத்துவிடுவானென்பதாம்.

இந்த நூலைச்செய்தவர் சமயசாதியென்று சொல்லப்பட்ட பொய்மைகளைவிட்ட மகாரிஷியாகிய அகஸ்தியரானவர் பொதுவானஆயுர்வேதமாகிய நூலில் ஒருஅவிழ்தத்துக்கு அக்கினிகுமாரனென்றும்பேர்கொடுத்து அதற்கே மகாராசபுத்திரனென்றுஞ்சொன்னார்- ஆனால் அவர்புராணங்களுக்குச்சரியாகவும் உலகவழக்கத்தைப்போலவுஞ்சொல்லவந்ததேயொழிய வேறல்ல-இதினாலக்கினிமூலமா

ய் வந்தவரென்று சொல்லப்பட்ட வன்னியரென [illegible] கொள்ளப்பட்டது [illegible] நூல்களிலும் வன்னியரெ [illegible] சொல்லியிருக்கி [illegible] கள் பலநூலிலுங் காணலாம்- [illegible] யாய்ச் சொல்லாமலே [illegible] பலம்பெறாயுங்கொண்டு [illegible] மருவமென்றும், வடவென்றும், அரியென்றும் இதைப்போலனந்தமாக அக்கினி [illegible] பெயர்சொல்லி வழங்கி வருகின்றது [illegible] ஆனந்தப்பாவிலும் [illegible] பாண்டியராகிய மூன்றுபேர்களும் அரியக்கமெனறு [illegible] வழங்குவதோடு [illegible] ன்று [illegible] வென்றும்-அநேகர்கள் பேசுகிறதாகவும் [illegible] யிருக்கின்றது.

௩-வது-அதிகாரம்-௧-வது-பிரிவு

இந்தப்பிரிவில் சாமந்தனென்கிற [illegible] குலத்தோர்க்கு [illegible] றுதலிய [illegible] நாந்தம் வருமாறு.

ஆனால் சிலர் சாமந்தனென்கிறபேர்-திவாகரம்-நிகண்டு முதலான நூல்களில க்ஷத்திரியனென்றுசொல்லப்பட்ட அரசற்குரியபேரிலில்லையென்றுசொல்லுவார்கள்-அதைவெளியிடும்அவசியமெனக்குச்சொந்தமானபடியாலதை வெளியிடுகிறேன்- அதாவது அமரமென்றுசொல்லப்பட்ட சமஸ்கிருதநிகண்டில் இரண்டாங்காண்டம் க்ஷத்திரியவருக்கையில் க்ஷத்திரியர்பேர்.

[illegible]-வது-சுலோகம்.

శ్లో. మూర్ధాభిషిక్తోరాజన్యోబాహుజఃక్షత్రియోవిరాట్।
రాజ్ఞరాట్పార్థివక్ష్మాభృన్నృపభూపమహీక్షితః।
రాజాతుప్రణతాశేషసామంతస్స్యాదధీశ్వరః॥

௱௫௮ ஸ்ரீதாத்பரியம்.

கிரீடந்தரித்தவன் இராஜவம்சத்திற்பிறந்தவன் பட்டாபிஷேகம்பெற்றவன் சேனையிற்சிறந்தவன் யுத்தத்திலாயுதங்களுக்குத்தப்பினவன் - விசேஷமாய்ப்பிரகாசிக்கிறவன் - பிரஜைகளைரட்சிக்கிறவன் - பூமிக்குயிரானவன் - பூமியைப்பரிக்கிறவன் - நரரைரட்சிக்கிறவன் - பூமியைப்பரிபாலிக்கிறவன் - பூமிக்குநாயகன் - சாமந்தர்களால்வணங்கப்பட்ட அதிபவரன் - சாமந்தமென்பது அதிபவராலுகிய சமஸ்தவார்த்திக்குச்சமானமான ராசபந்துவாகிய அரசர்களென்பதாம்.

இந்தசுலோகத்துக்கு உரையாகிய மொழிபெயர்த்தமாவது - அரசருக்கு சமானமானராஜபந்துக்களுக்குச் சாமந்தரென்று பெயரெழுதியிருப்பதால் இந்தப்பதத்துக்குரைமுழுதும் இதுவரையாசிரியரெழுதிப்படியெழுதினதுகளைதைப்பற்றியோர் குறைவென்சொற் வரிவுக்கெட்டவில்லை - எனக்குச்சந்தேகத்தைத் தீர்க்கிறபடி - அவர் நியாயமாயெழுதியிருப்பார் தவிர நியாயமில்லாமலெழுதமாட்டார் - ஆயினும் மற்படிபத்துக்கு வேறிருக்கிறதான அர்த்தந்தோன்றுகிறது - அதாவது - சாமந்தமென்பது சாபத்தமென்பதே சரியான பதமாகும் - அதிலேவிதியெப்படியென்றால் இலக்கணமாகியதன்னூற்கிரமப்படி உயிர்த்தப்புணரியல் நூறு வது - சூத்திரம் - வலித்தல் மெலித்தல் நீட்டல்குறுக்கல் விரித்தல் தொகுத்தலும் வருஞ்செய்யுள் வேண்டுழி

இதின்தாத்பரியம்.

வல்லொற்றை மெல்லொற்றாக்கலாமென்றும், மெல்லொற்றை வல்லொற்றாக்கலாமென்றும், நெடிலைக்குறிலாக்கலாமென்றும் குறிலை நெடிலாக்கலாமென்றும், விரித்தலைத் தொகுக்கலாமென்றும், தொகுத்தலை விரிக்கலாமென்றுஞ் சொல்லியிருக்கிறபடியே செய்யுளில் வழங்கிவருகிறதல்லாமற் சொல்லிலும் வழங்கிவருகிறது யாவருக்குந்தெரிந்திருக்கலாம் - இந்தவிதி சமஸ்கிருதநூல்களிலுமிருக்கிறதேயன்றித்தவிர யில்லாமற்போகவில்லை - இந்தவிதிப்பிரகாரம் சாபமென்பது - சாமமென்று பகரமாகியவல்லினம் - மகரமாகிய மெல்லினமாயிற்று - அத்தமென்பது அந்தமென்று தகரமாகியவல்லினம் நகரமாகிய மெல்லினமாயிற்று - இந்தவிதியினாற் சா

மந்தமென்பது சாமந்தமென்று சிலகவிகளிலுபயோகித்திருக்கிறது ந்தவிர வழக்கத்திலேனும் நாளதுவரையில் வழங்கிவருகிறது யாவருக்குந்தெரிந்திருக்கலாம்.

ஆனாலிந்தச்சாமந்தமென்கிறவாக்கியத்தின்பதப்பொருளானதென்னவென்றால்-சாபமென்னப்பட்டவில்லை அந்தமென்னப்பட்ட கையிலேயுடையவரானபடியாலரசருக்குச் சாமந்தரென்கிறபேர் வந்திருக்குமேயல்லாமல்வேறல்ல, ஆனாற்சிலர் காட்டிற்சஞ்சரிக்கிறவேடருங்கையிலேவில்லையுடையவராயிருக்கிறபடியால் அவர்களுஞ்சாமந்தரென்கிறபேர்பொருந்தலாமேயென்று சந்தேகப்பேசுவார்கள் ஆனாலந்தவேடர்களும் பறையர்களும் எந்நேரமுங் கையிலே வில்லையுடையவர்களாயிருந்தபோதிலும் அந்தவில்லினால்உலகத்தைச்செயித்துத்தாங்கள் மேன்மையானஜெயத்தையடையாதவர்களானபடியால் அவர்களெந்நேரமுங் கையில்வில்லையுடையவராயிருந்தாலும்வில்லியென்கிறபேரைவகித்திருந்தாலுஞ்சிறப்புப்பேராய் வரமாட்டாது-அரசர்களெல்லோருங்கையிலேவில்லைவிடாமற்சத்துருக்களைச்சம்மரித்துச்செயங்கொள்ளு மவர்களாயிருந்ததால் அந்நிலையிலேசெயம்பெற்றபடியாற்சாமந்தரென்கிறபேர் அரசருக்குரியதென்றுசொல்லவேண்டியது ஆனாலிந்தத்தமிழ்த்திவாகரநிகண்டிற்சாமந்தரென்கிறபேரில்லையென்றுசிலர்சொல்லுவார்கள் ஆகையால்நூலாசிரியர்கள்-திவாகரநிகண்டிற்சொல்லாமல்மறந்துவிட்டுவிடவில்லை சொல்லியேயிருக்கிறார்கள்-அதெப்படியென்றால்தமிழ்நாட்டிற்பிரதானஅரசராகிய சேரசோழபாண்டியனென்றுசொல்லப்பட்ட மூவரில் முதற்சொல்லப்பட்டசேரன்பேர்-வில்-முதல்வில்லவனென்றுசொன்னார் சாமந்தனென்றாலும் வில்லவனென்றாலும் ஒன்றேதவிரவேறல்ல-ஆனாற்சாமந்தனென்கிறவாக்கியஞ் சம்ஸ்கிருதமானபடியால் அந்தச்சமஸ்கிருதநிகண்டிற்சாமந்தனென்றுசொன்னார் -திவாகரநிகண்டுதமிழானபடியால் சாமந்தனென்கிறபதம்வெளியாகத்தமிழில்வில்லையுடையவனென்றுதோன்றும்படி வில்லவனென்றார், ஆனாலிந்தவில்லவனென்கிறபேர் சேரனுக்குமாத்திர மிருக்கிறபடியால் சோழபாண்டியர்க்கில்லையென்று சிலர்யோசிப்பார்கள்-சேரசோழபாண்டியர்களென்னும் மூன்றுகுலமுமொன்றானதால் இம்மூன்றரசருக்குந் தனித்துவரப்பட்ட இடப்பேர் குணப்பேர்-தேசப்பேர்-முதலானது

ர்தவிர வில்லவன்-புரவலர்-மால் பார்த்திபன்முதலான அரசருக்கு ப்பொருளாம்பெயர்கள் ஒருவருக்குச் சொல்லாமற்ற வேளைக்கும் பொருந்துமென்பதே நூலாசிரியர்கருத்தேதவிர வேறல்ல.

இந்தச்சாமந்தனென்கிறவார்த்தை [illegible] சத்திரியனென்று [illegible] படிக்கில்லாத பிரமாணம் [illegible].

—(*)—

பாரதம் [illegible] பரிவம்-முதற்போர்ச்சருக்கம் [illegible] கவி.

மண்டலீகர்சபிராட்டுறைபாரவே .. *
மண்டலீகர்தம்படைபடையோடு [illegible]ரர் *
சண்டவார்சிலைசாமந்தர்வாங்கவே ... *
சண்டவார்சிலைசாமந்தர்வாங்கிரர் ...*

இதின்தாத்பரியம்.

மண்டலீகரென்றுசொல்லப்பட்ட அரசருடைய மா[illegible]மண்டலங்களையாள்வோரென்றுசொல்லப்பட்ட [illegible] வாகிய அரசர்தங்கள்சேனைகளையாண்டதவிசினர்-சாமந்தரென்றுசொல்லப்பட்டவில்லைக் கையிலுடைய அரசர்கள்பலப்பொருந்தியநீண்டவில்லையுடையவீரர்களாகிய வில்லையுடையவராகிய அரசர்தங்கள்வில்லைவளைத்தாரென்பதாம்.

இந்தக்கவியினாற் சாமந்தனென்கிறவாக்கியம் வில்லையுடையவனென்பதேதவிரவேறல்ல.

வாசிட்டம்-சுக்கிரன்கதை-உ௭-வது-கவி.

சாலுவநாட்டிற்பானுமந்திரத்தலைவனானான் ... *
மேலுயர்கற்பகாலம் வித்தைசயர்வேந்தனானான் .. *
வாலுணர்வுளதாயங்கோர்மாதவன்மதலையானான் *
சேலுகள்சவ்விரத்திற்சேர்ந்தசாமந்தனானான் *

இதின்தாத்பரியம்.

சாலுவதேசத்தில் இந்தச்சுக்கிரனானவன் சூரியகுலத்துக்காசாரியனானான்-பின்புகற்பகாலம்வரைக்கும்வித்தியாதரர்க்கரசனானான்

பிறந்த வறிவுள்ளவனு மொருதபோமுனியின்புதல்வனுமாம்- சேற்கணடைந்தவருங்கொடுநின்றசவ்வீரநாட்டிற்பொருந்திய சாமந்தனாகப் பிறந்தானென்பதாம்.

இந்தக்கவியில் அரசனுக்குச்சொல்லவேண்டியவிடத்திற்சாமந்தனென்றுசொன்னார்- இருவுமல்லாமற் சாமந்தனென்கிற பேர் சேனைத்தலைவனுக்குமேகதிகவுமுரியதென்று சிலநூலிற்சொல்லி யிருக்கின்றது. அதன்விபரமாவது,

திருவிளையாடற்புராணம் (மெய்க்காட்டியபடலம்) ௩ வது-கவி.

சவுந்தரசாமந்தனெனத்தானைகாவலனொருவன் ... ... *
சிவந்தசடைமுடியண்ணலடியவரேசிவமாகக் ......*
கவர்ந்தொழுகிபெருஞ்சிக்குங்கடப்பாட்டினெறிநின்று *
னுவந்தரசற்கிருமைக்குந் துணையாகியொழுகுநாள் ... *

இதன்றாத்பரியம்.

சவுந்தரசாமந்தனென்னும்பேருடைய சேனாபதியொருவன் சிவனடியார்களைப் பரமசிவமாகப்பூசித்துச் சந்தோஷிக்க அரசன் இருமைக்குந்துணைநின்றவனாக நடக்குநாளையிலென்பதாம்.

இதுவும்- ஷை படலம்- ௫ வது-கவி.

தன்னருந்தாணிழனின்றசாமந்தன்றனைப்பார்த்தெம் ...*
பொன்னறைதாழ்திறந்துநிதிமுகந்தளித்துப்புதிதாக *
மின்னமுநீசிலசேனையெடுத்தெழுதிக்கொள்கென்று ..*
னன்னதுங்கேட்டடிசனடிக்கன்பாளனென்செய்வான் ...*

இதன்றாத்பரியம்.

தன்பக்கத்திற் றன்னிழற்போலிராநின்ற சாமந்தனைப்பார்த்து என்பொக்கிஷவறையைத்திறந்து திரவியங்களையெடுத்துக்கொடுத்துப்புதிதாக இன்னும் சிலசேனையை வைத்துக்கொள்ளென்று பாண்டியன்சொன்னான் அதுங்கேட்டு ஈசனடிக்கன்புள்ள சவுந்தரசாமந்தனென்செய்வானென்பதாம்.

இதுவும்ஷை-படலம்-உகூ வது-கவி.

தெவ்வமெகிழ்ச்சிபொங்கச்சேனையின்செல்வநோக்கி . *
யெவ்வெவ்தேயத்தினுள்ளாரிவரெனவெதிரோதிவாறு... *
கௌவையின்மனச்சாமந்தன்கையிற்பொற்பிரம்புநீட்டி
யவ்வவர்தொகுதியெல்லாமணியணிநிறுவிச்சொற்றான் ... *

இதின்தாத்பரியம்.

சத்துருக்களைச்செவிக்கமகிழ்ச்சியானதுவெங்க அரசருக்குரிய சேனையின்செல்வத்தைப்பார்த்து இவர்களெந்தெந்ததேசத்திலுள்ளவரென்று பாண்டியவரசன்கேழ்க்க உண்மையானமனச்சபுடைய சாமந்தன்கையிற் பொற்பிரப்பினால் நீட்டிக் காட்டி அந்தந்தச் சேனைத்தொகுப்பையெல்லாம் வரிசைவரிசையாகநிறுத்திச் சொல்லுவானென்பதாம்.

இந்தக்கவிகளினாற் சாமந்தனென்கிற சொல்லுக்கருத்தம் சேனைத்தலைவனென்று வந்திருக்கிறபடியால் சிலரிந்தச் சாமந்தனென்கிறபதம் அரசருக்குரியதல்லவென்றும் அரசர்வேறேயென்றுஞ்சாமந்தனென்கிறஜாதியே வேறென்றுஞ் சொல்லுவார்கள்- ஆனாலதின்விபரத்தை வெளியிடுகிறேன் - சாமந்தனென்கிற பதத்துக்குச் சமஸ்கிரதத்தில் அமரமென்னும் நூலுக்குரைசெய்தஆசிரியர்சொன்னதுபோல் அரசருக்குச்சமமான பந்துக்களென்று சொன்னாலுஞ்சரிதான் - அல்லது நான் சொன்னதுபோல் வில்லவனென்று சொன்னாலுஞ்சரிதான் - இவ்விரண்டும் அரசருக்கேயுரிய பட்டப்பேரேதவிர வேறல்ல.

இதுவுமல்லாமற் சேனாதிபதியாய் வரப்பட்டவர்களியாரென்றால், அரசன்றேசவிசாரணையும் பொக்கிஷங்களையுங் கைக்கொள்ளவேண்டியதென்றும், அரசன் சகோதரனாவது அல்லது அரசன்புத்திரனாவது அல்லதுசொந்தபந்துவாவதுசேனைத்தலைவனாயிருக்கவேண்டுமென்றும்நீதிநூற்சொன்னபிரகாரமே சர்வராஜாங்கத்திலும்நாளதுவரைக்கும்நடந்தேறிவருகின்றது - அதேதெனன்றால் மந்திரிமுதலான ஆழியக்காரர்கள் ராஜபந்துக்களாயில்லாமல் புறச்சாதியார்

யிருந்தபோதிலும் அதினாற்பெருங்கெடுதிவந்துநேரிடாது-சேனைக் [illegible] டாசாதிய யிருப்பார்களேயானால் அந்தஜாதிபக்ஷத்தில் அரசு [illegible] யின் [illegible] பற்றுசந்தேகமில்லைபல்லவா அதைப்பற்றியே [illegible] கள் தங்கள் ராஜபந்துக்களுக்குள்ளவே சேனாதிபதிகளை [illegible] வந்தார்கள்.

அதற்கு [illegible] திருஷ்டாந்தஞ் சொல்லவேண்டுமானால் முதல்தேவ [illegible] நம [illegible] வராருடைய புத்திரர்களாகிய கணபதியுஞ் [illegible] தேவர்களுக்குச்சேனாபதியானார்கள் இதும்போ [illegible] இராவணன்முதலான இராக்ஷசராசர்களுக்கு அவர்கள் [illegible] சேனாபதியாயிருந்தார்கள்- ஆகையால்ராசனு [illegible] அரசனுடைய பந்துக்களேசேனாதிபதியாகவேண்டிய [illegible] அரசனுக்குஞ்சேனாபதிக்கும் யெவ்வளவும் [illegible] சேனாபதியாவதுஞ் சேனாதிபதியே அரசனு [illegible] திருஷ்டாந்தம்.

பாரதம் [illegible] சம்பவச்சருக்கம்- உ௨ வது கவி.

[illegible] வந்தடிதொழ வம்பிகைமகன்தன்னை ...*
[illegible] மகனெனு நிறைத்திணின்மங்கலமுடிசூட்டிப் ...*
பாணிறப்பெருப்பாண்டுவேசேனையின்பதிமுழுமதியிக்க *
காணிறடைடைவிதுரனேயமைச்சனிக்காவலற்கெனவைத்தான்

இதின்தாத்பரியம்.

நாலுதிசையிலு மிருக்கப்பட்டவர்கள்வந்துவணங்கும்படியாக [illegible] அம்பிகையென்பவளுடைய பிள்ளையாகிய திருதராட்டிரனென் [illegible] கங்காதேவிபுத்திரனாகிய வீஷ்மாச்சாரியானவர் நல்லதினத் [illegible] ராசனாகும்படிமுடிதரித்து வெளுத்தநிறத்தோடுங்கூடியவெ [illegible] யாகிய பாண்டுவைச்சேனைகளுக்கெல்லாம் அரசனுக்கி [illegible] யிளையவனான புத்தியில்மிகுந்த விதுரனை மந்திரிகளுக்கெல்லாம் பெரியமந்திரியாக்கினாரென்பதாம்.

இத்தக்கவியினால் மூத்தவனுக்கரசும் அதற்கிளையவனுக்குச்சேனாதிபதியும் அதற்கிளையவனுக்கு மந்திரிகளுக்குத்தலைவனும்பேர்ப்பதினனுமல்லாமல இதுபோற் சிலநாடுகளிலும் வடுககத்திலும் மற்றிருக்கனுள்ளவர்களெல்லாஞ்செவ்வையாயாலோசியாதசிலஅவிவேகிகள் இராஜனுக்குப்பின் மந்திரியென்று சொல்லிக்கொள்ளுகிறது பெரியதப்பிதமே- இதல்லாமற்பாரதயுத்தத்தாற் சேனாதிபதியாயமர்த்தப்பட்டவர்கள் துரியோதனனுக்குப் பாட்டனாகிய வீஷ்மரும் ஷ துரியோதனனுக்குப் பந்துவாகிய அங்கதேசத்துக் கரசனாகிய கர்ணனுந் தன்மாமனாகிய சல்லியனும் தருமராஜா தன்சேனைக்குத் தலைசப்பதிருபுத்திரனாகிய சிவதமனனும் தன்மைத்துனனாகிய துஷ்டத்துய்மனுந்தவிர வேறல்ல.

ஆனாற்பாப்பாரஜாதியாகிய துரோணாச்சாரி சேனாபதியாகவில்லையாவென்பார்கள்- அந்தத்துரோணாச்சாரியை வீஷ்மரானவர் அழைப்பித்துத் தன்னிடத்திலுத்தியோகமாக வைத்துக்கொண்டு காலத்திற் றுரோணருடைய கல்வி வீரத்தையும் நம்புநிலைமையுஞ் சத்தியத்தையும்பார்த்துச் சந்தோஷித்து அரசனைப்போற்குடை கொடி - சாமர முதலான விருதுகளைக் கொடுத்து நீயும் யெங்களைப்போல யுத்தங்களுஞ் செய்யவென்று வாக்குக் கொடுத்தபடியால அந்தப்படியே துரோணாச்சாரிகளுக்குச் சேனாபதியங்கொடுத்தார்களே வேறல்ல- அவ்விவரத்தைப் பாரதத்திற் பார்வையிட்டன்றாய்த் தெரிந்துக்கொள்ளலாம் - இதல்லாமல் அரசர்களுக்கு யுத்தந்நேரிட்டகாலங்களில் அரசர்களுக்குரிய செங்கோலும் ஆக்கினைச்சக்கரமும் சேனாபதிகையிலேயிருக்குமென்று சொல்லவேண்டியது அதெப்படியென்றால் சேனாபதிசத்துருக்களைச் செயித்துமறுபடியும் அரசனிடத்திலொப்பிவைத்தால அரசனானவன் சேனாபதிதர்கார்வையடைந்துபோனால் அதனுடன் அரசில்லாமற்போய் விடுகின்றது இதுகளெல்லாஞ் செவ்வையாயோசித்தால் அரசனுக்குஞ் சேனாபதிக்கும் யெவ்வளவும் பேதமிராது- ஆதலால சாமந்தமென்கிறபேர் செய்கையைப்பற்றி காரணப்பேராயிருந்தபோதிலும் அரசர்களுக்கும் அவர்பந்துக்களுக்குமுரியதேதவிர வேறல்ல.

இதல்லாமலிந்தநூலை நான்செய்து சிலசிறந்த விவேகிகளுக்கு

[illegible] விட்டு [illegible] தன்னைகிறபதம் அரச [illegible] சொன்ன [illegible] பேசாமற [illegible] மதித்து நக்க [illegible] அந்தக்கடி [illegible] பேதகவிர அ [illegible] நாலும் செவ்வையா [illegible] ககப்படியாகச் சொன்ன [illegible] அனாதஸம்ஸகிரு [illegible] ஸ்லோ [illegible] சொன்னான். [illegible] னகிறபே [illegible] மதி [illegible] களுக [illegible] போலும் அம் [illegible] போலும் [illegible].

௩-வது - அதிகாரம் ௭ வது - பிரிவு.

இந்தப்பிரிவில அரசு [illegible] பள்ளியெனகிற போ வந்ததற்குந் திருவுட [illegible] வருமாறு.

శ్లో. నాన్యృషిఃకురుతేకావ్యం । నారుద్రఃక్రమపాఠకః
నా దేవాంశో౽పదాత్యం న్నం । నావిష్ణుఃపృథివీపతిః॥౧॥

இந்தசுலோகத்தின தாத்பரியம்.

பெரியோர்களாகிய ரிஷிகளி னம்ஸமில்லாதவன் - வேதகாவியங்களை யுப்பியாசிக்கமாட்டான ருத்திர அம்ஸமில்லாதவன வேதாத்தியானஞ்

செய்யமாட்டான் தேவ அம்ஸமில்லாதவன் பிறருக்கன்னதானஞ் செய்ய மாட்டான் விஷ்ணுஅம்ஸமில்லாதவன் பூமிக்கரசனாக மாட்டானென்பதாம்.

இந்தசுலோகத்தின்படி பூமியையாளுகிற அரசனை விஷ்ணுஅம்ஸமானபடியினாலும் விஷ்ணுவானவர் சமுத்திரத்தில சேஷசாயலெங்காலமும் பள்ளிகொண்டிருக்கிறபடியினாலும், அவருக்குப்பள்ளியென்கிறபேருரியதானதினாலும் அவரால பிறந்த பிரம்மாவானவர் விஷ்ணுவுக்குரிய ராஜ்ஜியங்களையுடைய அரசர்களென்று பூமிக்குள்வசிக்கிறதீவார்களில துஷ்டாகளைச்சங்கரிக்கும்படி சூத்திரியரென்று சொல்லப்பட்ட ஆக ஞாசக்கரத்தால சங்கரிக்கும் துஷ்டாகளைக் கிருமையாய் விரட்டுகிறபடியால மற்றவாகள அரசனை விஷ்ணுவாய் பாவித்து பள்ளியென்று சிலா கித்துப் புகழுகிறதேதவிர மேற்படியை அநுலோமஜாச சாவாசதரியாமியான விஷ்ணுவுக்குச் சமான பள்ளியென்று யெப்படிச் சொல்லலாம், விஷ்ணுவுக்குப் பள்ளியென்கிறபேர் யெப்படிபொருந்தும், அதப்படியல்ல அரசசாலை-இராஜகோயில் அந்தச் சொற்கள அரசாவீடென்றுசொல்லப்பட்டகோயில கடவுள்வாசஸ்தலம் அதுகளுக்குப் பள்ளியென்கிறபேரிருக்கிறபடியால அதுகளுக்குடைய அரசனே உரியவனானபடியால் அதைப்பற்றிப் பள்ளியென்கிற பேர் அரசருக்குரியதாயிருக்கலாமென்று சிலா சொல்லுவாாகள் அந்தச் சரியாமெய்யாக கொள்வதற்கு நியாயமில்லை, அப்படியன்றால விஷ்ணுவுக்கு ஸ்ரீபேரில் பூமிக்குக்கொழுநனென்று வந்திருக்கிறதுபோல அரசனும் பூமியைப் பரிபாலனம் பண்ணப்பட்டதால பூபதியென்றும் வந்திருக்கின்றது விஷ்ணுவானவர் துஷ்டாகளைச் சங்கரிக்கும்படி சக்கரமென்கிற சக்கரத்தைவைத்திருக்கிறது போல அரசனும் துஷ்டர்களைச்சம்பரிக்கத் தன்கையில ஆக்கினையென்று சொல்லப்பட்ட ஆக்ஞாசக்கரத்தை வைத்திருக்கிறபடியாலும விஷ்ணுச் வாகளை யிரட்சிக்கிறதுபோல அரசனும் இரட்சிக்கிறபடியாலும இதைப் பற்றியே முன்குறித்த சுலோகத்தில விஷ்ணுஅம்ஸமில்லாதவன அரசனுக்கப்பிறக்க மாட்டானென்று சொல்லியிருக்கிறது - இந்தக்காரணத்தைப்பற்றியே சோழன போபதிக்குறிலில விஷ்ணுவென்று தோன்றும்படி மாலென்றும் ஒருபோ சொன்னாா இதைப்பற்றியே விஷ்ணுவுக்குரியபேராகிய பள்ளியென்பது அரசனுக்கு வந்திருக்கலாமேதவிர வேறல்ல*

---

* பள்ளியெனனும பேரினபெருமையானதைப்பின்-நான்காவததிகாரம்-ஶ-வது பிரிவிலும-ரு-வது பிரிவிலுங கண்டுகொள்ளலாம்.

ஆளுஞ்ஸ்ரீவிஷ்ணுவுக்குயோகநித்திரைச் செய்வதைப்பற்றியவ
ருக்குப் பலபலவாறுடைந்தநூலிற் சொல்லியிருக்குதென்றுசிலர்
மதவாதிகளாக அதற்குரியதிருஷ்டாந்தம்வருமாறு,

நாலாயிரப்பிரபந்தம் நம்மாழ்வார்-சொன்ன-௪௨-வது
திருமொழி ௪ - வது-பாசுரம்,

இடங்கொள்சமயத்தையெல்லாமெடுத்துக்களைவனபோலே *
தடங்கடற்பள்ளிப்பெருமான்றன்னுடைப்பூதங்களேயாய்க் *
கிடந்துமிருந்துமெழுந்துங்கீதம்பலபலபாடி ... ... *
நடந்தும்பரந்துங்குனித்துநாடகஞ்செய்கின்றனவே... .. *

இதின்தாத்பரியம்,

பூமியின்கணிராநின்றபலசமயங்களையுமெடுத்துக்கொல்லுவதாய்போற்சமுத்திரமத்தியிற்பள்ளிகொள்ளும் பெருமானுடையஸ்சரீரமானது பொருந்தக்கிடந்தும்உட்கார்ந்தும் எழுந்தும் பலபலராகங்களைப்பாடிநடந்தும் ஓடியும் ஆடியும் நடனஞ்செய்கின்றனவென்பதாம்.

——(*)——


இதுவும் ஷை பிரபந்தம்-நம்மாழ்வார்செய்த
௪௯-வது-திருமொழி ௭-வது-பாசுரம்.

வலையுட்கட்படுத்தியென்னைநன்னெஞ்சங்கூவிக்கொண்டு
அலைகடற்பள்ளியம்மானையாழிப்பிரான்றன்னைக் ... *
கலைகொளகல்குற்றோழிநங்கண்களாற்கண்டு ... *
தலையில்வணங்கவுமாங்கொலோதையலார்முன்பே ... *

இதின்தாத்பரியம்.

என்னைநல்மனமானது அழைத்துக்கொண்டுபோய்ப்பாசமாகியவலையிலகப்படுத்தியது தோழி அலைகடற்பள்ளியாகியும்சக்கரத்தையுடைய பிரானுமாகியகடவுளையென்கண்களாரக்கண்டு தலையினால் வணங்கவுங்கூடுமோபெண்கள்முன்பாகவென்று நாயகிசொன்னளென்பதாம்.

இந்தக்கவிகளினால் விஷ்ணுவானவனைக்கடற்பள்ளி யென்றுசொன்னதுபோல் அனந்தநாமங்களிற்சொல்லியிருக்கின்றது முன்சொன்னதுபோற கடலிற்பள்ளிகொண்டதைப்பற்றியே விஷ்ணுவுக்குப்பள்ளியென்கிறபேர்வந்திருக்குமென்று நிச்சயமாய்ச்சொல்லவிடமில்லை இந்தப்பேர் ஈஸ்வரனுக்கு முரியதாயிருக்கிறபடியால் மேலான பிரம்மா விஷ்ணு ருத்திரன - முதலான கடவுளுக்கேமேற்படிப்பேருரியதென்றுசொல்லவேண்டியது ஆனாற்சிலபேர்முன்சொன்ன காரணத்தைப்பற்றி விஷ்ணுவுக்கேயுரியதல்லாமல் ஈஸ்வரனுக்கு அந்தப்பேர்வரமாட்டாதென்றுசொல்லுவார்கள் ஆதலாலதற்குரியதிருஷ்டாந்தம்வருமாறு.



அப்பர்சுவாமிசெய்ததேவாரம்-அடைவுதிருத்தாண்டகம்

முதலாவது கவி.

பொருப்பள்ளிவரைவில்லாப்புரமன்றெய்து ...
புலந்தழியசலந்தரனைப்பிளந்தான்பொற்சக் ... *
கரப்பள்ளிதிருக்காட்டுப்பள்ளிகள்ளார் ... ... *
சமழ்கொல்லியறைப்பள்ளிகல்லஞ்சாரற் ... *
சிரப்பள்ளிசிவப்பள்ளிசெம்பொன்பள்ளி ... ... *
செழுநனிப்பள்ளிதவப்பள்ளிசீரார் ... *
பரப்பள்ளியென்றென்று பகர்வோரெல்லாம் *
பரலோகத்தினிதாகப்பாரிப்பாரே ... *

இதின்தாத்பரியம்.

கைலாசமென்னும் மலையையுடையபள்ளி - மாறுபாடில்லாததிரிபுரத்தையழித்தும்சலந்தரனைப்பிளந்த அழகியசக்கரத்தையுடையபள்ளி-திருமறைக்காட்டுப்பள்ளி- வாசனைபொருந்தியகொல்லியமலையையுடையதருமப்பள்ளி-திரிசிரபுரமென்னுந்தலத்துக்குரியபள்ளி-சிவமென்றுசொல்லப்பட்டபள்ளி - சிவந்தநிறத்தையுடையபள்ளி-செழுமைதங்கியநனியென்னுந்தலத்திலெழுந்தருளியபள்ளி- யாவரும் தாகத்தவஞ்செய்யப்பட்டபள்ளி - சிறப்பையுடையபரமபதத்துக்குரியபள்ளி - என்றுசொல்லும்வாரெல்லாம் பரலோகத்திலமகிழ்ச்சியுடனே வீற்றிருப்பாரென்பதாம்.

இந்தக்கவியிலீஸ்வரனைப் பள்ளியென்று சிலாகித்துப்புகழ்ந்ததுமன்றிச் சம்பந்தர் தேவாரமுதலிய அனந்தநூல்களிலுமப்படியே சிறப்பித்துப்புகழ்ந்திருக்கின்றது - ஆதலாலிந்தப்பேர் ஈஸ்வரனுக்குமுரியதாயிருக்கிறபடியால் பள்ளிகொண்டிருப்பதினாலேயே விஷ்ணுவுக்கு அந்தப்பேர் வந்ததல்ல கடவுளுக்கேபொதுவாகச் சிலாகித்துச்சொல்லப்பட்ட சிறப்புப்பெயராகவிருக்கின்றது.

ஆனைக்கடவுளுக்குச்சமானமாக அரசனையப்படிச்சொல்லலாமென்று சிலரெண்ணுவார்களானால் முன்சொன்னேனல்லவா அப்படியரசனைக்கடவுளாக மதித்துவணங்குகிறவழக்கம் இந்தத்தேசமல்லாமல் மற்றதேசங்களிலும் ஆதிமுதற்கொண்டு இதுவரையிலும் வணங்கிவருகிறார்கள் - இந்தவிடத்திலிந்தக்காலத்திலும் மகாயசம்பொருந்திய கவர்னர் - ஜனரல் மலசனைஹைகோர்ட்டு ஜட்ஜி இவர்களுக்குரியஸ்தானங்களுக்குமற்றவர்கள் போய்த்தங்களுக்குரிய ஞாயங்களைச்சொல்லும்பிரதிவசனங்கள்தோறும் எங்கடவுளே - எங்கடவுளேயென்றுமுறையிடுவார்களேதவிரவேறல்ல

அதைப்போலவே தமிழரசரிடத்தில் மற்றக்குடிசனங்கள் போய்த்தங்கள் ஞாயங்களைச்சொல்லிக்கொள்ளுகிறகாலத்தில் அரசனைச்சர்வகாரணனாகியவிஷ்ணுவென்று துதிக்கும்படியாய்என்பள்ளியென்றுதுதிக்கிறதேதவிரவேறல்ல ஆனாலிந்தப்பள்ளியென்கிறபேர் பூமியையாளப்பட்ட அரசர்கள்மாத்திரம் வைத்து வழங்கிவரவும் அவர்களைமற்றவர்கள்சொல்லித்துதிக்கவுங் கூடுமேதவிர மற்றராசபந்துக்களும் அந்தவம்ஸஸ்தர்களும் அந்தப்பேரைவைத்துவழங்கிக்கொள்ளுவதும் மற்றவர்கள்சொல்லித் துதிப்பதுஞ்சரியல்ல - தற்காலத்திலும் ஆதிவழக்கங்கெடாமல் அரசனைப்பள்ளியென்று துதித்துக்கொண்டுவருகிற திருஷ்டாந்தமும் அதின்பெருமையும்பின்வரப்பட்ட - ௪-வது - அதிகாரத்தில் ௧-வது-பிரிவிற்காணலாம்.

௫-வது-அதிகாரம். ௮-வது பிரிவு.

இந்தப்பிரிவில் அரசனுக்குப்படையாட்சி என்கிறபேருரியதென்றுதிருஷ்டாந்தம்வருமாறு.

இனியரசருக்குப்படையாட்சிப்பேருரியதென்றுச்சொல்லி

யிருக்கிறேனல்லவா - அதற்குத்திருஷ்டாந்தம் நான்விஸ்தரித்தெழுதவேண்டுவதில்லை - ஏனென்றால் படையென்றுசொல்லப்பட்ட தேர்-குதிரை-யானை-காலாள் - இந்தநாலுக்கும் ஆட்சியென்றுசொல்லப்பட்டசொந்தபாத்தியத்துக்குரியவர் அரசனேதவிரவேறல்ல.

ஆனால் ஆட்சியென்கிறதுசொந்தக்காரனென்றுயெப்படியருத்தமாகுமென்றெண்ணுவார்களுமுண்டு - ஆட்சியென்கிறபதம் சம்ஸ்கிருதமொழியேதவிரதமிழ்மொழியல்ல - அந்தச்சம்ஸ்கிருதமொழிதமிழோடுகூடகலந்துவழங்கிவருவது வழக்கமானபடியால் பூமியாகியகாணிக்குச்சொந்தக்காரனுக்குக்காணியாட்சிக்காரனென்றும் நவக்கிரகங்களிற்சொந்தவீட்டிலிருக்குங்கிரகங்களுக்கு ஆட்சிக்கிரகமென்றும்இதுபோலனந்தமொழிகள்வருகிறபடியினாலும் சேனைகளுக்குச் சொந்தக்காரனாகிய வரசனுக்குப்படையாட்சியென்றுவழங்கிவருவதேதவிரவேறல்ல.

இதற்குதாரணம்.

திருவாசகம்-திருப்படையாட்சி- சீவவுபாதியொழித்தல்- க-வது-கவி.

தில்லையிலருளிச்செய்தது.

ண்களிரண்டுமவன்கழல்கண்டுகளிப்பனவாகாதே ... ... *
காரிகையார்கடம்வாழ்விலென்வாழ்வுகடைப்படுமாகாதே...*
மண்களில்வந்துபிறந்திடுமாறுமறந்திடுமாகாதே ... ... *
மாலறியாமலர்ப்பாதமிரண்டும்வணங்குதுமாகாதே ... *
பண்களிகூர்தருபாடலொடாடல்பயின்றிடுமாகாதே ... ... *
பாண்டிநன்னாடுடையான்படையாட்சிகள்பாடுதுமாகாதே *
விண்களிகூர்வதோர்வேதகம்வந்துவெளிப்படுமாகாதே... ... *
மீன்வலைவீசியகானவன்வந்துவெளிப்படுமாயிடிலே........*

இதின்தாத்பரியம்,

மீனுக்குவலைவீசப்பட்ட கிராதகனாகவந்தவதரித்த சாமியானவர் வெளிப்பட்டகாலங்களில்இரண்டுகண்களும்அவன்பாதத்தைக்கண்டுகளிப்புறுவதாகும், ஸ்திரீகளுடன்கூடிவாழும்வாழ்வுநீங்கப்படும், இ

தப் பூமியின்கண்வந்துபிறக்கும் வழியானதுமறைந்துவிடும், விஷ்ணுவிருலறியப்படாதபாதமிரண்டையும் வணங்கப்படும், சந்தோஷிப்படப்பட்டஇசைகளோடுங்கூடியசாம வேதகானத்தைக்கற்கப்படும்நல்நாடாகியபாண்டியநாட்டுக்குரிய ஆண்டன்மையுடையநால்வகைச்சேனைக்குச்சொந்தமாகிய அரசர்களின் பெருமையுமாகும், சந்தோஷிப்படப்பட்டஇளமையினதுநலத்தைவேறுபடுத்துந்தன்மைவெளிப்படுமென்பதாம். ஆகாவென்பது ஆகும், தே-ஈற்றசை- இதைஇலக்கண நூலிற்கண்டுகொள்ளலாம், சுவாமிமீன்வலைவீசியதுதிருவிளையாடற்புராணத்திற்கண்டுகொள்க. இந்தக்கவியினாற்படைக்குச்சொந்தக்காரர் அரசரொன்றுவிளங்கியதுபோல் அனந்தநூலிலுங்காணலாம்

இந்தஞாயம் பண்டிதர் - பாமரர்-யாவருக்குத்தெரியலாம் நாணிதைமுன்னிந்தஅதிகாரத்தில் ௬ வது- பிரிவில்-படையாட்சியென்றுசொல்லப்பட்ட சேனாதிபதியேஅரசனென்று அதற்குரியஞாயஞ் சொல்லியிருப்பதால்விவரித்தெழுதவேண்டியஅவஸ்யமில்லை

௩-வது அதிகாரம் ௯-வது-பிரிவு.



இந்தப்பிரிவில்அரசருக்குப்பல்லவனென்கிறபேருரியதென்று திருஷ்டாந்தம்வருமாறு.

அரசருக்குப்பல்லவனென்கிற பேரெப்படிவந்ததென்றுசிலர் யோசிப்பார்கள் -நிகண்டுதிவாகரங்களில் அரசர்பொதுப்பேரில்புரவலனென்றுசொல்லியிருக்கின்றதல்லவா- அதின்பதப்பொருள்-புரமென்றுசொல்லப்பட்டதேகத்தில்பலமென்றுசொல்லப்பட்ட வல்லவனானபடியால் அரசனுக்குப்புரவலனென்றுசொன்னார்களேதவிரவேறல்ல, அந்தப்புரவலனென்கிறபேர் வல்லவனென்றெப்படிவந்ததென்றால் தலைக்குறைப்பதமாகபுரமென்பதுபோய் வலனென்றுயிற்று-வலம்-வழக்கதைப்போல் வல்லவனென்றுயிற்று,

ஆனால்வல்லவனென்கிறபேர் பல்லவனென் றெப்படியாகுமென்று சிலரெண்ணுவார்கள் -அதின்விபரமானது சம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் - வகரம் - பகரமாகவும் - பகரம்-வகரமாகவுந் திரிதலியற்கையானபடியால் வல்லவனென்கிறபேர் பல்லவனென

றிரிந்தது; அதற்குக்காரணம்-வாகு பாகென்றும், வன்னி பன்னியென்றும், வல்லபம் பல்லபமென்றும், வலம் பலமென்றும், வடிவம் படிவமென்றும், இதுபோலனந்தம்பேதமில்லாமற்றிரிவதைக் கண்டுகொள்ளலாம். இந்தக்காரணத்தைப்பற்றியே அரசர்களுக்குப்பல்லவனென்கிறபேருரியதாயிருக்கிறது ஆகையால்பல்லவனென்பது அரசனென்றேமேற்கொள்வருமாறு.

பெரியபுராணம்-திருத்தொண்டபுராணத்தில்

[illegible]-கவி,

ஆத்தகையபுகழ்வேளாண்மரபிற்சேக்கி ... ... *
ழார்குடியில்வந்தவருண்மொழித்தேவர்க்கு ... ... *
மாத்தகுபரிவட்டமுந்தச்செம்பியர்தலைச்சுந் ... ... *
தலைமையளித்தவர்தமக்குத்தவத்தொண்டர்பெரும் ... *
உத்தமச்சோழப்பல்லவரென்னு ... ... *
முயர்பட்டங்கொடுத்திடவாங்கவர்தீர்நாட்டு ... ... *
நீத்தனுறைதிருநாகேச்சுரத்தன்பு ... . *
நிலைநிறுத்தென்றுமறவாதநிலையடிக்கார் ... .. *

இதின்தாத்பரியம்,

புகழுடையவேளாளர்மரபிற் சேக்கிழார்குடியிற்பிறந்த அருண்மொழித்தேவரென்கிறபேருடையவருக்குச்சோழராஜனானவன்தன்னரசுக்குரியதலைமையான அதிகாரத்தைக்கொடுத்து மேலானபேராகிய சோழபல்லவனென்று வுயர்ந்தபட்டத்தைக்கொடுத்திட அந்தச்சோழனுடையவளப்பம்பொருந்தியநாட்டில்அழியாதவராகிய பரமேஸ்வரன் வாசம்பண்ணப்பட்ட திருநாகேச்சுரத்திலன்பானதுநிறைந்து என்றுமறவாதநிலைமையில்மிகுந்தவரென்பதாம்,

இந்தக்கவியினால் வெள்ளாழருக்குள்சேக்கிழார்குடியில்வந்த அருண்மொழித்தேவருக்குச்சோழனானவன் மந்திரிப்பட்டங்கொடுத்ததுமன்றித்தன்மரபுப்பேராகிய பல்லவனென்கிறபேரையுங்கொடுத்திருக்கிறபடியால் இவர்சூத்திரனாயிருந்தும் அரசுக்குரிய அதிகாரத்துக்குவந்தபடியால் பல்லவனென்கிறபேர்செயற்கையாற்பொருந்

றமேதவிர இயற்கையாற்பொருந்தமாட்டாது, சோழன்சந்ததியாருக்குஇயற்கையிற்பொருந்தியிருக்கின்றது,

சேக்கிழாரென்பது - வெள்ளாழர் குடிப்பேரிலொன்று, அருண்மொழித்தேவரென்பது - அவர்சொந்தப்பெயர், உத்தமப்பல்லவச்சோழனென்பது - இவருக்குச்சிறப்புப்பெயராய்அரசன்றன்பெயரைக்கொடுத்தது, கிழாரென்கிறபட்டமானது அக்காலத்திற் சூத்திரருக்குரியதேதவிர வேறல்ல, அதெப்படியென்றால் - ஸ்மிருதியாகியமநுநூலில் - உ - வது - அத்தியாயம் ஜாதகர்ம்மாதி சம்ஸ்காரம் ௩௧ - வது சுலோகப்பிரகாரம்பிராமணனுக்குமங்களத்தையும், க்ஷத்திரியனுக்குப்பலத்தையும், வைசியனுக்குப்பொருளையும்சூத்திரனுக்குத்தாழ்வையுந்தரப்பட்டபேரை இடவேண்டுமென்றுசொல்லி யிருப்பதுபோல்அக்காலத்திற்பிராமணனுக்கு ஐயர் - ஆசாரியர் - குருக்கள் இதுமுதலாகியமங்களமான உயர்வைத்தரப்பட்டதும், க்ஷத்திரியருக்கு - வருமன் - வீரன் - சிங்கன் - சூரன் - மிண்டன் - கண்டன் இதுமுதலான வலுவைத்தரப்பட்டதும், வைசியருக்குத் - தனபாலு நவகோடி - இலட்சாதி - இதுமுதலானசெல்வத்தைத்தரப்பட்டதும், சூத்திரருக்குப்பொற்கிண்ணக்கிழார் - மாமரத்தின்கிழார் - இலுப்பைமரத்துக்கிழார் - முதலானஇழிவைத்தருகிறபேரும் யிட்டுவழங்கிவந்தார்கள் - கிழார் - என்பது, கிழாரென்று நெடில் குறிலாகமருவிற்று, கிழாரென்பது இவர்களுக்குமேற்பட்டமூன்றுஜாதிக்கும் தாழ்ந்தவரென்பதே, இந்தக்கிழாரென்கிறபேரும்முன் - உ - வது - அதிகாரம் - ௫ - வது பிரிவில் - மருதநிலத்தலைவனுக்குரிய கிழவனென்கிற பேரும் முற்காலத்திற்சூத்திரருக்கேவுரித்தாய்வழங்கிவந்திருக்கின்றது இக்காலத்தி லதுமாறிப்பலவாறுகவழங்கிவருகிறார்கள் - ஆனாற்றாழ்ந்தவர்கள் உயர்ந்தவர்கள்பேரைக்கொண்டுவழங்கிவருவதெப்படியிருக்குதென்றால் கறுப்பாட்டை வெள்ளாடென்றும், கெட்டபாம்பை - நல்லபாம்பென்றும் இந்துக்கள் சொல்லுகிறவழக்கம்போல்மங்கலச்சொல்லாகவுங்கொள்ளலாம்,

——(*)——

இதுவும்மேற்படி - பெரியபுராணம் திருநாவுக்கரசுசுவாமிகள் சரித்திரம்-அ௬ வ௩-கவி.

சொன்னவண்ணமேசெய்வது துணிந்ததுன்மதியோர் *
முன்னநாஞ்சென்றுமுறைப்படுவோமெனமுயன்றே *
யின்னதன்மையிலிருட்குழாஞ்செல்வதுபோல ... . *
மன்னனாகியபல்லவனகரில்வந்தணைந்தார் ... ... *

இதின்தாத்பரியம்.

ஆலோசித்தபிரகாரமேசெய்யத்துணிவுகொண்டகெட்டபுத்தியையுடைய சமணர்கள் முன்னதாகநாம்சென்று (சோழனாகிய பல்லவனிடத்தில்) முறையிடுவோமென்று முயன்றுஇருட் கூட்டங்களானதுபோவதுபோல் அரசனென்றுசொல்லப்பட்ட பல்லவன்பட்டணம்வந்துசேர்ந்தாரென்பதாம்,

—(*)—

இதுவும்மேற்படி புராணம்-திருநாவுக்கரசுசுவாமிகள் சரித்திரம் அ௮-வ௩-கவி

விளையலங்கற்பல்லவனுமதுகேட்டுவெகுண்டெழுந்து *
புனையுடையமனத்தினராய்ப் போவதற்குப்பொய்ப்பிணிகொண் *
டனைசிறந்தசமயத்தையழித்தொழியப்பெறுவதே ... *
வினையிறவத்திரதனுக்கென்செய்வதெனக்கனன்றான் ... .. *

இதின்தாத்பரியம்.

வாசனையுடையமாலையைத்தரித்த(சோழனென்றுசொல்லப்பட்ட) பல்லவனானவன் கேட்டுகோபித்துத்திருட்டு மனதையுடையனாய்ச் சைவசமயத்துக்குப்போகும்பொருட்டுப் பொய்வியாதிகொண்டுசிறந்தசமணசமயத்தைக்கெடுத்துப் போனவனையென்னசெய்வதென்றுகோபித்தானென்பதாம்,

இதுவும்ஷெ- திருநாவுக்கரசுசுவாமிகள்
சரித்திரம்-கூ௰-வது-கவி.

பல்லவனுமறுகேட்டுப் பாங்கிருந்தபாயுடுக்கை ... *
வல்லமணர்தமைநோக்கி மற்றவனைச்செய்வதினிச் ... *
சொல்லுமெனவறத்துறந்து தமக்குறுதியறியாத ... *
புல்லறிவோருஞ்சாது நீற்றறையிலிடப்புகன்றார் ... *

இதின்தாத்பரியம்,

அரசனானவன்கேட்டு பாயுடையாகவுடைய சமணர்களைப்பார்த்து மறுபடியும்இவனை யென்னசெய்வது சொல்லுங்களென்று கேழ்க்க தருமத்தைக்கைவிட்ட அற்பவறிவையுடையவர்களுஞ் சாமற் சுண்ணாம்பறையில்வைக்கும்படிச்சொன்னாரென்பதாம்.

இதுவும்-மேற்படி- திருநாவுக்கரசுசுவாமிகள்
சரித்திரம் ௱சடு-வது கவி,

புல்லறிவிற்சமணர்க்காய்ப்பொல்லாங்குபுரிந்தொழுகும் ... *
பல்லவனுந்தன்னுடையபழவினைப்பாசம்பறிய ... *
அல்லொழிந்தங்கெய்தியாண்டவரசினைப்பணிந்து ... *
வல்லமணர்தமைநீத்து மழுவிடையோன்றாளடைந்தான் ... *

இதின்தாத்பரியம்.

அற்பவறிவையுடையசமணருக்காகத் (திருநாவுக்கரசுசுவாமிகளைப்)பொல்லாங்குசெய்யப்பட்டபல்லவனுந்தன்னுடையபூர்வீகதீவினையானது தன்னைவிட்டு நீங்கத்துன்பத்தையொழித்து திருவதிகையில்வந்துதன்னையாண்டுகொண்டகடவுளைப்பணிந்து வலுமையான சமணர்களைநீக்கிஈஸ்வரனுடையபாதத்தைச்சேர்ந்தானென்பதாம்,

சோழராஜனானவன் சமணர் சமயத்தைச் சேர்ந்திருந்துதிருநாவுக் கரசுசுவாமிகள் மகத்துவத்தைக்கண்டு மறுபடியுஞ் சைவசமயத்திற்சேர்ந்து சமணர்களைநாசஞ்செய்து பாடலிபுரத்திலிருந்த சமணர் கோயில்களையிடித்துக்கொண்டுவந்து திருவதிகையில் வீரட்

டேஸ்வாருக்கு ஆலயமும் அதல்லாமல் அநேக சிவஸ்தலங்களுங் கட்டிவைத்தாரென்கிற சரித்திரத்தில் ஓரிடத்திலரசனென்றும் ஓரிடத்திற் பல்லவனென்றும் ஒருவிடத்தில் மன்னவனென்றும் வேற்றுமையில்லாமற் சொல்லுகிறபடியால் அரசருக்குப்பல்லவனென்கிறபேரேதவிர வேறல்ல.



இதுவும்·பெரியபுர்ராணம்- ஐயடிகள்நாயனார்சரித்திரம்-க-கவி.

வையநிகழ்பல்லவர்தங்குலமரபின்வழித்தோன்றி ... *
வெய்யகலியும்பகையுமிகையொழுகும்வகையடக்கிச் *
செய்யசடையவர்சைவத்திருநெறியாலரசளிப்பார்.. *
ஐயடிகணீதியாலடிப்படுத்துஞ்செங்கோலார் .... *

இதின்தாத்பரியம்

இந்தப்பூமியிற் பிரகாசிக்கப்பட்ட பல்லவருடைய வம்மிசத்திற்றோன்றி வெய்யவிதான சரித்திரத்தையும் சத்துருக்களையுமடக்கிச் சிவந்த ஜடையையுடைய சைவநெறியா லரசாளப்பட்டவர் ஐயடியென்று சொல்லப்பட்ட அரசனானவர் மநுநீதியினால் மற்றவர்களைத்தன்னடியில் வணங்கும்படிச் செங்கோல் நடத்தப்பட்டவனென்பதாம்.



இதுவும்-மேற்படிபுராணம்-கழற்சிங்கநாயனார்சரித்திரம்-க-கவி.

படிமிசைநிகழ்ந்ததொல்லைப்பல்லவர்குலத்துவந்தார் *
கடிமதின்மூன்றுஞ்செற்றகங்கைவார்சடையார்செய்ய *
அடிமலரன்றிவேறொன்றறிவிலுட்குறியாநீர்மைக் .. *
கொடிநெடுந்தானைமன்னர்கோக்கழற்சிங்கரென்பார் *

இதின்தாத்பரியம்,

இந்தப்பூமியின்கண்ணிற் பிரகாசிக்கப்பட்ட பழைமையான பல்லவர்குலத்தில்வந் தவதரித்தவர் திரிபுரங்களையெரித்தவரும் கங்கையைச் சடாபாரத்துடையவருமான பரமேசுவரரது சிவந்தபா

தமல்லாது வேறொன்றையும் நினையாத நெறியையுடைய வெற்றிக் கொடிகளும் நீண்டசேனையுமுடைய அரசனான கழற்சிங்கராயனு சொன்பதாம்,

இவ்விரண்டுகவியினாலும் அரசருக்குரியபல்லவனென்கிறபேர் க்ஷத்திரிய குலத்துக்கே யுரியதென்று தோன்றுப்படி. இந்தவுலகத்தை விளங்கச்செய்யும் பல்லவர்குலமென்றார் - அதினாற்றான் அரசருடைய சந்ததியாரும் நாளதுவரையிலும் பல்லவனென்று பேர் வைத்து வழங்கிவருகிறார்கள்.

நதல்லாமற் திராவிடவேதமாகிய நாலாயிரப்பிரபந்தத்துள்
திருமங்கையாழ்வார்சொன்ன பெரியதிருமொழி.
பாமேசுவரவிண்ணகரப்பத்து-பரமபததாதல்விஷயம்,

உ - வது - கவி.

காமன்னுநீள்விசும்புங்கடலுஞ்சுடரு ... ... *
நிலனும்மலையுந்தன் னுந்திக் ... ... *
தார்மன்னு தாமரைக்கண்ணனிடந் ... . *
தடமாமதில்சூழ்ந்தழகாயகச்சி ... ... *
ஏர்மன்னுதென்னவனைமுனையிற்செருவிற்றிறல் ... *
வாட்டியதிண்சிலைகோன் ... ... *
பார்மன்னுபல்லவர்கோன்பணிந்த ... ... *
பரமேச்சுரவிண்ணகரமதுவே ... ... *

இதின் தாத்பரியம்.

ஆகாயமும்-சமுத்திரமும்-மூன்றுசுடரும்-பூமியும்-மலையும்-தன் னுந்தியிலுண்டாக்கின சிவந்ததாமரைக்கண்ணனுக்கு இடமாகிய விசாலம்பொருந்தியமதில்சூழ்ந்த காஞ்சீபுரியில்பாண்டியனையுத்த முகத்திற் செயித்தபலம்பொருந்திய வில்லையுடைய அரசனான இந்தப்பூமியில் நிலைபெற்ற பல்லவராயன்பணிந்த பாமேஸ்வரவிண்ணகரமென்பதாம்.

இந்தக்கவியினால் சோழன்-பாண்டியனைச் செயித்ததைக்குறி ப்பித்தார்.

—*—

இதுவும்-ஷை-பரமேஸ்வரவிண்ணகரப்பத்து ௬-வது-கவி.

திண்படைக்கோளரியினுருவாய்த் ... *
திறலோனகலஞ்செருவிடமூன்றாட் ... *
புண்படப்போழ்ந்தபிரானதிடம் ... ... *
பொருமாடங்கள்சூழ்ந்தழகாயகச்சி ... *
வெண்குடைநீழற்செங்கோனடப்ப ... *
விடைவேல்கொடிவேற்படைமுன்னுயர்த்த ... *
பண்புடைப்பல்லவர்கோன்பணிந்த .. ... *
பரமேச்சுரவிண்ணகரமதுவே ... ... *

இதின்தாத்பரியம்.

இரணியனை நரசிம்மரூபமாய்வந்து பிளந்த கடவுளானவரு க்கிடமாகிய மாடகூடங்கள்சூழ்ந்த காஞ்சிபுரியானது வெள்ளைக் குடைநீழலிலிருந்து செங்கோ நடத்தி விடைகொடியும்-விற்கொ டியும்- வேலாயுதமென்கிற ஆயுதத்தையும் தன்முன்னே விருதாகப் பிடிக்கப்பட்ட பல்லவமகாராஜன்பணிந்த பரமேஸ்வர விண்ணகர மென்பதாம். வேல் ல் பதஆயுதப்பொதுவானபடியால் இந்தவிட த்தில் சோழபல்லவனுக்கு வில்லவனென்று வந்திருக்கிறபடியால வேற்கொடி-என்பது-விற்கொடியென்றுகாண்க.

இந்தக்கவியினால் - சேரனென்பதும் - சோழனென்பதும் தேசத்தைப்பற்றியேயொழிய ... வற்றுமையில்லாததால் சேர னுக்குடையவிற்கொடியைச்சோழனுக்குரியதென்றும்சோழனையே சேரனாகவுஞ்சொன்னார்.

—*—

இதுவும்-ஷை-பரமேஸ்வர விண்ணகரப்பத்து-அ-வது-கவி.

குடைத்திறன்மன்னவனொருகாற் ... *
குரங்கைப்படையாமலையாற்கடலை ... *
அடைத்தவனெந்தைபிரானதிடம் .. .. *
மணிமாடங்கள்சூழ்ந்தழகாயகச்சி ... ... *

விடைத்திறவில்லவனைமலியில் ... ... *
வெருவச்செருவேல்வலங்கைப்பிடித்த ... ...*
படைத்திறல்பல்லவர்கோன்பணிந்த... ... *
பரமேச்சுரவிண்ணகரமதுவே ... ...*

இதின்றாத்பரியம்.

ஒருதாம் அரசனாக வவதாரஞ்செய்து குரங்கைப்படையாகக் கொண்டு மலையினாலேகடலை யணைகட்டின என்கடவுளாகியவருக் கிடமாகி உப்பரிகையினாற்சூழ்ந்து அழகுபொருந்திய காஞ்சிபுரி யில் அரசுசெய்யப்பட்ட குற்றமில்லாதவில்லவனென யுத்தமுகத் தில்யாவரும் பயப்படும் படிவேலைவலதுகையிற்பிடித்த நானுவ கைச் சேனைகளையுடைய பல்லவமகாராஜன்பணிந்த பரமேஸ்வரவி ண்ணகரமென்பதாம்.

(*)

இந்தக்கவியினால் வில்லவனென்கிறபடியால் அரசர்வம்சமெ ன்று விளங்கும்படிச்சாமந்தனென்று படைத்திரள்பல்லவனென்று ஞ் சொன்னபடியால் அரசருக்குரியபேராகிய படையாட்சியென் றும் பல்லவர்கோனென்றுஞ் சொன்னபடியால் மற்றவரசருக்கு மேற்பட்டமகாராஜனென்று தோன்றும்படியாகவுங்குறிப் பித்தார் பரமேஸ்வரவிண்ணகரமாகிய பத்துபாசுரத்தினாலு வினும் சோ ழனாகிய பல்லவமகாராஜனைச் சிறப்பித்துச்சொன்னார் பரமேஸ்வர விண்ணகரமென்பதுந்திருமல்லியென்பதுங் காஞ்சிபுரத்தைச்சே ர்ந்ததேதவிர வேறல்ல - மேற்படிசோழனும் காஞ்சிபுரத்தையா ண்டவனேயாகும்.

இதுவும்-ஷை திருமங்கையாழ்வார்-திருச்சித்திரகூடம் கோவிந்தராஜன்விஷயமாய்ச்சொன்ன-பத்து-௯-வது கவி.

வெம்புசினத்துப்புனற்கேழலொன்றாய் ... ...*
விரிநீர்முதுவெள்ளமுள்புக்கழுந்த ... ...*
வம்புண்பொழில்சூழுலகன்றெடுத்தா ... *
னடிப்போதணைவான்விருப்போடியப்பி ... *
பைம்பொன்னுமுத்துமணியுங்கொணர்ந்து... ... *
படைமன்னவன்பல்லவர்கோன்பணிந்த ... *

செம்பொன்மணிமாடங்கள்சூழ்ந்ததில்லைச் ... .. *
திருச்சித்திரகூடஞ்சென்றுசேர்மின்களே ... *

இதின்தாத்பரியம்.

பிரளயகாலத்திற் பலதிருப்பமாக இந்தப்பூமியையெடுத்தக டவுளினது தாமரைப்போன்றபாதத்தை ஆசையுடன்றுதிக்கப்பட் டவர்களேபசியபொன்னும் - முத்தும் - இரத்தினங்களையுங் கொண்டு வந்துபடைகளுக்குடைய வரசனாகிய பல்லவமகாராஜன் பணிந்ததி ருச்சித்திரகூடஞ்சென்றுசேவியுங்கோளென்பதாம்.

இந்தக்கவியிற் சிதம்பரத்தையாளட் — சோழனைக் குறித்து ப்படைமன்னவன் பல்லவன் பணிந்ததென்றுசொன்னார்.



இதுவுமல்லாமல்-சுந்தரமூர்த்திநாயனார் செய்த-தேவாரப்பதிகம் திருவேகம்பம்-திருமேற்றளி-ம் வது தேவாரம்.

பாரூர்பல்லவனூர்மதிற்காஞ்சிமாநகர்வாய்ச் ... ...*
சீரூரும்புறவிற்றிருமேற்றளிச்சிவனை ... ...*
யாரூரனடியானடித்தொண்டனாரூரன்சொன்ன ...*
சீரூர்பாடவல்லார்சிவலோகஞ்சேர்வாரே ... *

இதின்தாத்பரியம்.

பல்லவமகாராஜனூராகிய காஞ்சியாநகரத்தி லிராநின்றப ரமசிவன்பேரிற் சுந்தரமூர்த்திநாயனார்சொல்லிய இந்தப்பத்துப்ப திகத்தையும் பாடவல்லவர்கள் சிவலோகஞ்சேர்வாரென்பதாம்-

இந்தக்கவியினால் சுந்தரமூர்த்திநாயனார் காஞ்சீபுரம்வந்துப திகம்பாடினகாலத்தில் அரசுசெய்தசோழனைக்குறித்துச் சொல்லா தொன்றுகாண்க,



இதுவும்-ஷை-தேவாரப்பதிகம்-கோயிற்பத்து-ச-வது-கவி, சிதம்பரத்திலருளிச்செய்தது,

கருமையாற்றருமனார்தமர்நம்மைக் ... *
கட்டியகட்டறுப்பிப்பானை ... ... *

பெருமையாற்றன் னுலகந்தருவானை ... *
மன்னுலகங்காவல்பூண்ட ... *
உரிமையாற்பல்லவர்க்குந்திறைகொடா *
மன்னவரைமறுக்கஞ்செய்யும் ... *
பெருமையாற்புலியூர்ச்சிற்றம்பலத்தேம் ... *
பெருமானைப்பெற்றாமன்றே ... ...*

இதின்தாத்பரியம்.

எமனுடையசாலநர்களாற்கட்டப்பட்டகயிற்றையறுத்து அரிதாகியதன்சுவர்க்கலோகத்தைத்தரப்பட்டவனும்-இந்தப்பூலோகவரசுக்குரியவனானபல்லவமகாராசனுக்குத்திறைகொடாதமற்றவரசரைத்துன்பஞ்செய்யப்பட்டவனுமானபெருமையையுடைய புலியூர்-அல்லதுசிதம்பரத்தில்வாசம்பண்ணப்பட்டகடவுளைப்போற்றுவோமென்பதாம்.

இந்தக்கவியினாற் சிதம்பரம்-அல்லது - பித்தர்புரமாளப்பட்ட சோழனுக்குக்கோயிற்புராணத்திற் பரமசிவனானவர் சோழன்சந்ததியாருக்கு என்னகுற்றஞ்செய்தபோதிலும் பொறுத்து உன்சத்துருக்களைநாசஞ்செய்து இரட்சிக்கிறேனென்றுசொல்லியிருக்கிறபடியால் அதுதோன்றும்படிப்பல்லவருக்குத்திறைகொடாமன்னவரைமறுக்கஞ்செய்யுமென்றுசொன்னார்,

பரமசிவமானவர் ஆதியிரணியவர்ம்மச்சோழனுக்கு இந்தப் பிரகாரம் அனுக்கிரகஞ்செய்ததநாலாவது-அதிகாரத்தில் இரண்டாவது பிரிவிற்கண்டுகொள்க,

இதுவுமல்லாமல்-காஞ்சீபுரம்-ஏகாம்பரநாதர் -தெய்வீகவுலா

௬௧-வது-கலிவெண்பா

சம்புகுலத்தொருவன் சாத்துகைக்காமென்றளித்த ... *
செம்பொன்மணிமகுடஞ்சேர்வித்துத்-தம்போ ... ...*

இதின்தாத்பரியம்.

சம்புகுலமென்னப்பட்டசோழகுலத்தில் ஒருவனாகிய ஏகாம்பரசம்புபல்லவமகாராசன் கடவுளுக்குச்சாற்றும்படியாகக்கொடு

தவிவந்தபொன்னிரத்தினங்களிஞலே செய்த கிரீடத்தைத்தரித்தா னென்பதாம்.



இதுவும்-ஷ-உலா ௱௩-வது-கலிவெண்பா

வடித்தசுடர்வேற்சம்பன்வாழ்மல்விநாதன் ....*
கொடுத்ததிருத்தேர்மேற்கொண்டு - முடித்தநதி ......*

இதின்தாத்பரியம்,

கூர்மையாகவடிக்கப்பட்ட பிரகாசம்பொருந்திய வேலைக்கையி லேந்திய சம்புகுலத்துதித்த திருமலவிநாதனுடைய அரசன்கொடுக்கப் பட்டதேரின்பேரிலேகாம்பரநாதர் மேற்கொண்டாரென்பதாம்.


——(*)——

இதுவும்மேற்படி-உலா-௱௪௬-வது - கலிவெண்பா,

செம்பதுமைகேள்வன்திருமல்விநாதனுயர் ... *
சம்புபதிநல்குந்தடந்தேர்போல்-கம்பமே ......*

இதின்தாத்பரியம்,

சிவந்தபதுமைபோன்றவளுக்குநாயகனுகவும், திருமல்வியெ ன்றுசொல்லப்பட்ட காஞ்சீபுரிக்கு நாயகனுமாகிய சம்புகுலத்தா னென்றுசொல்லப்பட்ட (ஏகாம்பரபல்லவச்சோழன்)கொடுத்தவி சாலம்பொருந்தியதேர்போலென்பதாம்



இதுவும்மேற்படி-உலா ௱௬௧ வது - கலிவெண்பா.

வெஞ்சமரில்-தத்துபரிபல்லவன் சம்புகுலப்பெருமான்
வைத்ததுலாபாரமண்டபத்துஞ்... ...*

இதின்தாத்பரியம்

வெவ்விதானயுத்தத்தில்தத்தித்தாவாநின்றகுதிரையைநடத் தியவரசனென்றுசொல்லப்பட்ட பல்லவனுனசம்புகுலப்பெருமா னுனவன் தானம்பண்ணைட்பட்ட துலாபாரமண்டபத்திலு மேறி னனென்பதாம்

இந்தக்கவியினாற் சோழவம்சமாகிய சம்புகுலமும்பல்ல வனென்பதும் அரசனென்றுதோற்றப்படிக்கூறினர் சிலர்பல்ல வனென்கிறபேர் அரசன்பேரேயொழிய ஜாதிப்பெயரல்லவென்று சொல்லுவார்கள் ஆறுல்-இரட்டையர் அரங்கேற்றிய காலத்தில்மேற் படி யுலாவிற்சொல்லப்பட்டபல்லவராஜன்கிறப்புப்பேர்வகாம்பரச ம்புபல்லவனேதவிர வேறல்ல இதற்குத்திருஷ்டாந்தம்,

தொண்டமண்டலசதகம்-அகூ-வது-கவி.

மேதைப்புலவரொண்ணேகாம்பரசம்புமெச்சநெடுங் *
காதைப்புலவிரட்டையர்பாடுங் கலம்பகமும் ....*
மோதற்கரியநல்லேகம்பவாணருலாவுமந்த..........*
மாதைப்பருவலும் பாராட்டிடுந்தொண்டமண்டலமே

இதின்தாத்பரியம்,

அறிவையுடையவித்துவான்களால் மதிக்கப்பட்ட ஏகாம்பரஜ ம்புவென்னும் (சோழனெனவன்)மெச்சும்படியாகஇரட்டைப்புலவர் கள் பாடப்பட்டகலம்பகமும், சொல்லுதற்கரிதான ஏகாம்பரநாத ர் வுலா-முதலான அனந்தநூல்களையும் பாராட்டப்பட்ட தொண் டமண்டலமென்பதாம்,

இதுவும்ஷெ-சோழனாகிய பல்லவராயன்-கோவை,

எறிக்கும்புகழ்கச்சி யேகாம்பரசம்பனெண்டிசையும்.... *
பொறிக்கும்புலிக்கொடியான்புயம்வேட்டபின்பூவையந்நாள்
வெறிக்குங்குமக்கொங்கைமீதேவிழிசொரிவெள்ளநதுள்ளித் *
தெறிக்குந்திவலையழிக்குஞ் சிந்தூரத்திலதத்தையே ......*

இதின்தாற்பரியம்.

எட்டுத்திசையுந் தனக்கெல்லைக்கல்லாகத்தன்புலிகொடியை யெழுதிப் பிரகாசிக்கா நின்றபுகழையுடையகச்சிக்காசனாகிய ஏகாம் பரசெம்பியனென்னுஞ்சோழனுடையபுயத்தை வீரலட்சுமியான வள் இச்சித்த சந்தோஷத்தால்பொழியப்பட்ட ஆனந்தக் கண்ண

ரானது பிருகமதங்களை பணியப்பட்ட கொங்கையின்மீதுவிழ அதுவெதிர்த்துத் தெறிக்கப்பட்டதுளியானது நெற்றியி லிராநின்றுசிந்தூரத்திலகத்தையழிக்குமென்பதாம்

இதிற்சொன்னபிரகாரம்அரசன்பேர் ஏகாம்பிரசெப்பியனே தவிரவேறல்லஆதலாற்பலநூல்களில்பல்லவனென்றுவருமிடந்தோறும் வெவ்வேறுபேரிருக்கின்றது இதுபோலனந்தநூலிலும் அரசனுக்குரியபேர்பல்லவனென்றே சொல்லியிருக்கின்றது வேண்டியவர்கள் அதுவருமிடந்தோறுங்கண்டுகொள்ளலாம்,

மூன்றுவததிகாரம்-முற்றிற்று.

௪-வது-அதிகாரம்

இந்த அதிகாரத்தில் சேர-சோழ பாண்டியர் சந்ததிகளே மூன்றதிகாரத்திற் சொல்லப்பட்ட வன்னியர்முதலான பிரதான ஐந்துபேரையுடையவர்களென்ற திருஷ்டாந்தமும்-வைசியர் தத்காலத்திலுண்டெல்கிற திருஷ்டாந்தமுங் குடிமதிப்புச் சபையாரின் வஞ்சகமாகிய யோசனைவிபரமும்சொல்லப்பட்டிருக்கின்றது.

௪-வது-அதிகாரம்-முதற்பிரிவு

இந்தப்பிரிவில்சேரன்சந்ததியைக்குறித்துவருமாறு.

மூன்-௩-வது- அதிகாரத்தில் ஐந்தாவதுபிரிவிற்குறிப் பித்த வன்னியர்-பள்ளிகள்- சாமந்தர்-படையாட்சிகள்-பல்லவர் - என்று சொல்லப்பட்ட ஐந்து காரணப்பேரைத் தங்களுக்குரியதென்று ஆதியரசசந்ததியார் நாளதுவரையில் வழங்கிவருகிற படியாலும் அவர்களே யாதிகாலந்தொட்டரசாண்ட க்ஷத்திரியர்சந்ததியாரென்று அனுபவதிருஷ்டாந்தங்கள்வருமாறு,

முதலாவது, மலைநாடென்றுசொல்லப்பட்ட மேல்நாட்டரசனை சேரராஜன் சந்ததியார்-மலையாளம்-அல்லது கள்ளிக்கோட்

டை-திருவாங்கூர் திருவனந்தபுரமென்று பலபேராய்ச் சொல்லப் பட்டதைச்சேர்ந்த தேசங்களில் நாளதுவரையிலரசராயிருந்துவருகிறார்கள் இப்போதரசாயிருக்கிறமலையாளத்துமகாராஜாவும் அந்தச் சந்ததியாயிராதவிதமேயல்லாமல், எப்படியென்றாலவர்வம்சமும் சாமந்த [illegible] வருகிறபடியால் [illegible] அதிகாரத்தில் ஐந் [illegible] வரசருக்குரியபிரதானப்பேர் ஐந்திலே இ [illegible] - சேரன்பேர் வில்லவனென்றாகிய [illegible] சமஸ்கிருதமொழி [illegible] சாமந்தரென்றுவழங்கிவருகிறார்கள் - இ [illegible] க்ஷத்திரியரென்று வழங்கிவருகிறார்கள் [illegible] பலநூலிலுஞ்சொ [illegible] அதிகாரம், நாலாம்பிரிவில்மூன்றுகுலமு [illegible] பேதமில்லாமற் சூரியகுலமென்றும், [illegible] சொல்லியும் வழங்கிவருகிறார்கள். ஆனால் முன்சொல்லப்பட்டபேர் ஐந்திலே பள்ளியென்கிறபேரை அந்தச்சந்ததியாரெல்லாரும் [illegible] சிம்மாசனமேறப்பட்ட மகுடவாதிராஜாக்கள் மாத்திரம் வழங்கிவருகிறதுமல்லாமல் மேற்படிமலையாளத்தைச்சேர்ந்த மேற்படி சேரன்சந்ததியாராகிய இருபத்து [illegible] அரசிருக்கிறார்கள் - அவர்களும் பள்ளியாமென்கிற பேரை வழங்கிவருகிறார்கள் - இ [illegible] வர்த்தனராயிருக்கப்பட்ட வரசரும் பள்ளியென்கிறபேரைவகித்திருக்கிறார் - அதெப்படியென்றால் - அரசன்கையாலே பட்டசரீரமும் அரசன்போகவருதலையுங்குறித்து அவனூழியக்காரர்களும் மற்றவர்களும் அரசனுடைய பட்டத்துயானையைப்பள்ளியினுடைய யானையென்றும், அரசனது பட்டத்துக்குதிரையைப் பள்ளியினுடைய குதிரையென்றும், அரசனேறும் பல்லக்கைப் பள்ளியினுடைய பல்லக்கென்றும், அரசன்கையாளப்பட்டபெட்டியைப் பள்ளியினுடையபெட்டியென்றும், அரசன்படுக்கும்வீட்டைப்பள்ளியினுடையஅறையென்றும், அரசன்வருவதைக்குறித்துப் பள்ளிவருகிறாரென்றும், அரசன்போவதைக்குறித்துப் பள்ளிபோகிறாரென்றும், இன்னும் அரசனைக்குறித்துப்பேசும்போதெல்லாம் நாளதுவரையில்பள்ளியென்றே சொல்

லுகிறார்கள்- இந்தப்பள்ளியென்பது மூன் - ௩ - வது- அதிகாரம்- எ-வது- பிரிவில் அரசன்விஷ்ணுஅம்சமென்றும், ஆதலால்விஷ்ணுவினுடையபேராகியபள்ளியென்பதுஅரசருக்கேவுரியதென்றுசொன்னதுபோல் மேற்படிசேரதேசத்தில் அரசவம்சத்தில் சிம்மாசனமேறி யரசாளப்பட்ட அரசனுக்குமாத்திரம் அந்தப்பேரைவைத்துவழங்கிவருகிறார்கள்- அனற்சோழநாட்டில் அரசசெய்த சோழராஜன்சந்ததியார அரசுக்குரியவர்தவிர அக்காலத்திற் றனாங்களுஞ் செய்யப்பட்ட இங்கிலீஷ்காரர்களில் அரசாளுகிறவர்களுக்கு மாத்திரம் துரைகளென்று வழங்கிவருகிறபடிக்கு சுதேசழிலுஞ் செய்யப்பட்ட அவர்சந்ததியார் முறைமைப்படி செய்கைத்தாரிற்சிலர் அவர்களுக்கீழ் அவர்கள் போலானபலபிரகாரிகளும் துரைகளென்று வழங்கிவருகிற வழியடுத்த பட்டன தொழிலைச் செய்பவரும் சொற்பமான வேலையிற் றவர்களும் மற்ற அந்தவம்சத்தார் முறைமையும் மேற்படி பள்ளியென்கிற பேரைத்தங்களுக்குரியதென்று வழங்கிவருகிறபடியால் சேரநாட்டில் அந்தப்பேரின் பெருமையும் - மகிமையுங் குறைந்து காணப்படுகின்றது- அதைப்பற்றிப் பறச்சாதியார் பொதுவாயவையாயிருந்தாலுந் தம்பேரொடுசேரென்னுகிறதுபோல் மேற்படி யந்தராஜசந்ததியாரிற் சிலதுராசனவிவேகிகள்கூட அந்தப்பேரிழிவென்று நினைத்து மறைக்கவெத்தனப்படுகிறதாகவுந் தெரியவருகின்றது,

அதைப்பற்றி நான்விவரித்தெழுதினல் அது பெரிதயாகமுடியும் - அதுநிற்க இப்போதுகுறிப்பித்துப்பேசிய மலையாளத்தரசனுக்குச்சாமந்தனென்கிறகாரணப்பேரும் வலியனென்கிறகாரணப்பேரும் - பள்ளியென்கிற சிறப்புப்பேராகிய பட்டப்பேரும்- நாளதுவரையிலவருக்கும் அவர்வம்சத்தாருக்குமுரியதென்றுவிசாரித்தா லியாவருக்கு நன்றாய்த்தெரியவரலாம் - இதுவுமல்லாமலவருக்குரிய பட்டப்பேரின்விபரம்- ஸ்ரீபத்மநாபதாச வஞ்சிபாலவர்ம்ம-குலசேகர-கிரீடபதிவன்னியசுலுத்தான் -மஹாராஜராஜராமராஜாபாதர்ஷிங்-சிப்யஜங்கல்மஹாராஜா--வென்கிற இந்தப்பேர் பூர்வீகமாய்வழங்கிவந்திருக்கசென்னப்பட்டணம் இராஜதானியில்க்ஷேபாசன்சரித்திரத்தில்அவர்பேரையெழுதியிருக்கின்றது -அதில்கிரீட

பதி வன்னியகுலத்தானென்று] சொல்லவேண்டியதை மன்னியகுலத்தானென்று யெழுதியிருக்கின்றது- இதைக்குறித்தாலோசித்தால் சிலர் நூற்களில் ஒருவழியாய்ச்சொல்லியிருக்க-அதை வேறொருவழியாகத் திருத்தி அச்சிடுகிறவழக்க மொன்றிருக்கின்றது.

அதுவெய்யவிதமென்றால் - இராமாயணம் - உத்தரகாண்டத்தை யச்சிட்டமகாப்பிரபு இலங்கையையழித்த படலத்தில்-யக-வது - கவியில (படிமன்னிவாழும் பலவன்னியரொன்று) அனந்த மேட்டிட்பிரதிகளிலிருக்க அதையிவர் படிமன்னிவாழும் பலமன்னியரொன்று அச்சிட்டிருக்கின்றது இதுபோலனந்த நூற்களிலேயும் ஏதோகெட்டமனதைக்கொண்டு திருத்தி அச்சிட்டிருக்கிறார்கள், அதைப்போல இங்கேயு வன்னியகுலத்தானென்பதை - மன்னியகுலத்தானென்று திருத்தியிருக்கவேண்டுமென்பதற்குச்சந்தேகமில்லை - ஆனாலந்தத்தப்பு இராஜாங்கத்தார் மனமறிந்து செய்யார்கள்- அவர்களெழுதியர்களிப்படிச்செய்திருக்கவேண்டுமெ, இப்படிச்செய்ததை முன்குறித்த மகா-ா-ஸ்ரீ கனம்பொருந்திய மலேயாளத்தரசர் அறிந்திருப்பதும் அறியாதிருப்பதுந் தெரியவில்லை- ஆனாலரசனறிந்திருந்தபோதிலும் பெரியசரித்திரத்தைக்குறித்த தொந்தரவையெடுத்துக் கொள்ளமாட்டாமலே [illegible] று- எப்படியென்றால்- வருஷாவருஷம் மலையாள [illegible] பிரசுரஞ்செய்யப்பட்ட புத்தகத்திலே க்ஷத்திரிய [illegible] - அடி [illegible] சரியர்-சாமந்தர் - அம்பல வ [illegible] செய்யப்பட்டிருந்ததென்று பிரிவார்களும் க்ஷத்திரிய பேர் [illegible] -எம்-வருஷத்திற்செய்தகுடிமதிப்புப்புஸ்தகத்தில் பிராமணவகுப்பும் க்ஷத்திரவகுப்புமென்றெழுதியிருக்கிறது- இதைப்பார்த்தால் இவ்வாறெழுதினவா க்ஷத்திரியர்களும் வைசியர்களும்- பூமியிலில்லையென்கிற கருத்தைக்கொண்டெழுதினவராகத்தெரியவருகின்றது- அதைக்குறித்து அப்படிச்செய்தவர்களை யேனென்றுகேட்காமலும் கவனிக்காமலுமிருப்பதே திருஷ்டாந்தமாக விருக்கின்றது - ஆனால் முன்குறித்தபேரில் அனந்தபதிமநாபசுவாமிக்குத் தாசனென்றும், வஞ்சிநாடாகிய சேரநாட்டைப் பரிபாலனஞ்செய்யும் குலசேகரவர்ம்ம கிரீடாதிபதியென்று சொன்னதிலேயே இவர் சேரன்சந்ததியென்றும், வன்னியரென்று

சொன்னதே அக்கினிகுலத்தாரென்றும், சுல்த்தானென்று சொன்னதே அக்காலத்திலிருந்த அரசரியாவருக்கும் மேலானசக்கிரவர்த்தியென்றும் யாவருக்குமெளிதில் விளங்கலாம்,

அதல்லாமல் தற்காலத்திலிராநின்ற இருபத்துநான்குசிற்றரசர்களும்-ஆதிசேரன் சந்ததியாரென்றும் இத்தக்காரணப்பேர்-சிறப்புப்பேர் அவர்களும்வைத்து வழங்கிவருகிறார்களென்றும், அவர்கள்பூர்விக சரித்திரபுத்தகங்களையு மனைமுட்பிரித்துப்பார்த்துத் தெரிந்துக்கொள்ளலாம் - இந்தச்சேரன் சந்ததியாருக்குச் சாமந்தரென்றும், க்ஷத்திரியரென்றும், வன்னியரென்றும், சூரியகுலத்தாரென்றும், பேதமில்லாமல் வழங்கிவருவதுபோல் ஆதியிலிந்தச்சந்ததியிலொருவராகிய குலசேகரவர்மப்பெருமாள்சொன்ன

திராவிடவேதமாகிய பெரியதிருமொழிமுதலாயிரத்தில்
அழகியமணவாளர் விஷயம்-௰௧ வது கவி,




இடர்விளங்குசலாட்போல் விரிதிரைவெட்பாட்டுத் ... ... *
திருவரங்கத்தரவணையிற்பள்ளிகொள்ளும் ... *
கடல்விளங்குகருமேனியம்மான்றன்னைக் ... ... *
கண்டாரக்கண்டுகக்குங்காதல்தன்னால் ... ... *
கொடைவிளங்குவிறற்றானைக்கொற்றவொள்வாட் .. *
கூடலர்கோன்குடைக்குலசேகரன்சொற்செய்த . *
நடைவிளங்குதமிழ்மாலைபத்தும்வல்லார் .. .. *
நலந்திகழ்நாரணனடிக்கீழ்நண்ணுவாரே... ... *

இதின்தாத்பரியம்,

காவேரியாற்றின் மத்தியிற்றிருவரங்கமென்னுந் தலத்தில்-சேஷசயனத்தின்மேலிற் பள்ளிகொள்ளும் கறுத்த மேனியையுடைய கடவுளைக் கண்டு சந்தோஷிப்பதுமாசையினாற் பிரகாசியாநின்ற குடையும், பலம்பொருந்தியசேனையும், வெற்றியைத் தராநின்றவாளையுமுடைய மதுரைக்கரசனுனகொடுக்குந்தன்மையையுடைய குலசேக

ரப்பெருமானாற் சொல்லப்பட்ட தமிழ்மாலைபத்தும் - வல்லவர்நா
ரணனுடையபொருத்துவாரென்பதாம்,

இதுவும் மேற்படி குலசேகரப்பெருமான்சொன்ன
பண்ணைபுனைதாசரிவிஷியம் ம வது கவி,



அல்லிமாமலர்மங்கைநாதனரங்கன் மெய்யடியார்கடம் ... *
எல்லையி லடிமைத்திறத்தினிலென்றும்மேவுமனத்தனாம் ... *
கொல்லிநாயகன்கூடல்காவலன்கோழிக்கோன் குலசேகரன் *
சொல்லினின்றமிழ்மாலைவல்லவர் தொண்டர்தொண்டர்களாவரே

அரங்கநாதனது உண்மையானவடியார்களுடைய அடிமைத்தொழிற்செய்யுமெல்லையில்லாமையிலெக்காலத்திலுந்தவாதிருக்கின்றமனத்தையுடையவராகிய கொல்லிமலைக்குநாயகனை சேரனும் - மதுரைக்கு நாயகனாகிய பாண்டியனும் உறையூருக்கு நாயகனாகிய சோழனுமான குலசேகரப்பெருமான் சொல்லாநின்ற தமிழ்மாலையைத்தரிக்கக்கூடியவர்கள் அடியார்களுமடியவராவாரென்பதாம்,

இதுவுங்குலசேகராழ்வார்சொன்ன
தில்லைநகர்த்திருச்சித்திரகூடமால் தொல்விராமனுயித்
தோத்திரகதைநூறை ம வது கவி.



தில்லைநகர்த்திருச்சித்திரகூடந்தன்னுட் ... ... *
டிறல்விளங்குமாருதியோடமர்ந்தான்றன்னை ... *
னெல்லையில்சீர்த்தயரதன்றன்மகனாய்த்தோன்றித்... *
றதுமுதலாத்தன்னுலகம்புக்கதீறாக் ... *
கொல்லியலும்படைத்தானைக்கொற்றவொள்வாட் ... *
கோழியர்கோன்குடைக்குலசேகரன்சொற்செய்த *
நல்லியலின்றமிழ்மாலைபத்தும்வல்லார் ... ... *
நலந்திகழ்நாரணனடிக்கீழ்நண்ணுவாரே ... ... *

இதின்தாத்பரியம்.

சிதம்பரத்தில் அநுமனுடனமர்ந்தகடவுளுமாய்த் தசரதச்சக்கிரவர்த்தி பிள்ளையாகப்பிறந்தருமுதல்தலைவனாகப்போகத்திராதகடவுளாகிய ராமன்பேரிற் கொல்லுஞ் செய்கையுடைய படைகளையும், வெற்றியைத்தராநின்ற வொளிபொருந்திய வாளையுமுடைய உறையூருக்குநாயகனான கோழிக்குந்தலைமையுடைய குலசேகரப்பெருமாளாற் சொல்லப்பட்ட தமிழ்மாலைபத்தும் வல்லவர்-நாரணர் பாததாமரையினிற்சேர்வாரென்பதாய்,

இந்நூலிற்சொல்லிய சேரவம்சத்தானாகிய குலசேகரப்பெருமானைவிருஷ்டித்திறம்பினை யக்கினிகுலச்சேரனென்றுதோன்றும்படிக்கொல்லிகாவலனென்றும், அவனேசூரியகுலமென்று தோன்றும்படிக்கோழிக்கோனென்றும், அவனே சந்திரகுலபாண்டியனென்றுதோன்றும்படிக்கூடல்நாயகனென்றும், அவராற்சொல்லப்பட்ட பாசுரங்களிற்கொள்ளலாம்-கொல்லியென்பது- சேரநாட்டுக்கு ராஜதானியாயிருக்குஞ்சேலம், அல்லது-சோழமண்டலக்குறையூர்கோழியென்பது சோழநாட்டுக்குத் தலைநகரமாகிய உறையூர்-கூடலென்பது பாண்டியநாட்டுக்குத் தலைநகரமாகிய மதுரை-இவர்பாசுரங்களில் மூன்றுகுலமும் ஒருவனென்றே குறிப்பிட்டிருக்கின்றதேயல்லாமல் வேறில்லை.

இருவரில் குலசேகரப்பெருமானுஞ் சைவசமயத்திலடியாராகிய சேரமான்பெருமானும் இவர்களிரண்டுபேரும் வைஷ்ணவசைவங்களிற் றெய்வபடர்களாயிருந்தும், இவர்கள் க்ஷத்திரியர்களில் பெரியராசர்களானபடியால் மற்றவர்களை ஆழ்வார்கள்-தாசர்கள்-அடியார்களென்று வழங்குவதுபோல் வழங்காமலும், இவர்கள் பெருமைக்குக் குறைவுவராமலும், குலசேகரப்பெருமாளென்றும், சேரமான் பெருமாளென்றும், நூற்களினாலேயும் வழக்கத்தினாலேயுஞ்சொல்லியும் வழங்கிவருகிறார்கள்.



இதுவல்லாமல் இந்தகுலசேகரப்பெருமாள் சொன்ன நாலாயிரப்பிரபந்தத்தில்

செய்வளர்காட்சியின்கோயசோதைபோல் தாய்தேவகிபெறுந் தாழ்வெண்ணிப்புலம்பல் ௩-வதுகவி.

நந்தைநன்முறையன்புடைமகளிர் ... ... *
முறைமுறைதந்தநற்குறங்கிடையிருத்தி ... *
நந்தையேயெந்தன்குலப்பெருஞ்சுடரே ... ... *
பெருமுகிற்கணத்தொழுகினரோமே ... ... *
உந்தையாவனென்றுரைப்பநின்செங்கேழ் ... *
விரலினுங்கடைக்கணலினுங்காட்ட ... ... *
நந்தன்பெற்றனனல்வினையிலா ... ... *
நங்கள்கோன்வசுதேவன்பெற்றிலனே ... ... *

இதன்றாத்பரியம்.

ஆசையுடையமகளிர் வரிசைக்கிரமமாக்குந் தங்கடையிலே மே ரிருத்திட நற்றொன்கடவுளே - என் நந்தன் சொற்றுஞ் சொரூபமாகிய நீயே பெரியசத்திரமோத்தின் பெரியவையாரோ ஆயர்மனை சிவந்தவொளியை விரலினுங் கடைக்கணினுங்காட்ட விளையாட் டாநின்ற விளையாட்டைக்கண்டு [illegible] ப்பனுயிராநின்ற நந்தகோபாலனானவன் பெற்ற நம்பியை எங் களரசனான வசுதேவன் பெறவில்லையேயப்பா.

இந்தக்கவியில் அக்கினிகுலக்குலசேகரப்பெருமாளானவர் யது குலமென்றுசொல்லப்பட்ட சந்திரகுலகிருஷ்ணனைக் குழந்தை ப்பருவத்தில் தானிகள்சொல்வதுபோல எந்தன் குலப்பெருஞ்சுட ரேயென்றதுமல்லாமல் நங்கள்கோன் வசுதேவன் பெற்றிலனேயெ ன்றார்-இதினாற்சந்திரகுலமும் அக்கினிகுலமும்பேதமில்லாமற்றோ ன்றும்படிச்சொன்னார்.

இந்தக்கிருஷ்ணனைச் சிலர் பொதுவராகிய இடையர்குலமெ ன்றும், சிலர் இடையருக்கே சந்திரகுலமாகிய வெதுக்குலமென்றுஞ் சொலவிக்கொள்ளுகிறார்கள்-ஆனாலப்படிச்சொல்கிறவர்கள் விவே கமில்லாதவர்களேதவிர விவேகிகள்சொல்லமாட்டார்கள்- இப்போ துசொன்ன இந்தக்கவியினால் நந்தனாகியவிடையன் வளர்க்குப்படி

ச்செய்ததவம் இவளைப்பெற்றவராகிய வசுதேவன் பெறவில்லை யென்றுசொன்ன நிலையே இடையர்குலம்வேறென்றும் கிருஷ்ணை ன்பிறந்தவசுதேவகுலம்வேறென்றும் விளங்குகின்றதல்லவா.

இதுவுமல்லாமல்-பாரதம்-ஆதிபர்வம்.

மாலையிடுசருக்கம்-௪௧-வது-கவி

*

இந்தக்குரிசில்யதுகுலத்துக்கெல்லாந்தலை [illegible]
வந்துப்பவித்துப்பொதுவருடன்வளரு [illegible]
முந்தக்கஞ்சமாமனுயிர்முடித்தானிவற்கு [illegible] ... *
யந்தப்புரத்திலாராமமந்தப்புரத்துக்காராமம ... ... *

இதின் தாத்பரியம்.

இந்தவாசுதேவன் யதுகுலமென்றுசொல்லப்பட்ட [illegible] குலத்துக்கெல்லாந்தலைவனென்றுசொல்லும்படி [illegible] பொதுவரென்றுசொல்லப்பட்ட விடையர்சேடி [illegible] மாயனென்றுசொல்லப்பட்டகிருஷ்ணன்முற்காலஞ்சகல [illegible] னாகிய கஞ்சனைக்கொன்றவன் - இதுவுமல்லாமற்றேவர்களுடைய அந்தப்புரத்துத் தோட்டத்திலிராநின்ற கற்பகவிருக்ஷத்தைத் தன்றோட்டத்திற்கொண்டுவந்து வைத்தவனென்று தோழியானவள் ரோபதைக்குச்சொன்னாளென்பதாம்.

இந்தக்கவியினால் யதுகுலம் வேறேயும், பொதுவனென்றுசொல்லப்பட்ட விடையர்குலம்வேறேயும் பிரிவுபடச்சொன்னதுபோலவின்னுமனந்தநூலிலுஞ் சொல்லியிருக்கின்றது - அதுவருமிடந்தோறுங்கவனித்தாற்கண்டுகொள்ளலாம்.

இதுவும்மேற்படி குலசேகரப்பெருமாள் சொல்லப்பட்ட

கண்ணபுரத்தொளிர்-காகுத்தன்றாலாட்டு ௯-வது-கவி

கொங்குமலிகருங்குழலாள்-கோசலைதன்குலமதலாய் *
தங்குபெரும்புகழ்ச்சனகன் திருமருகாதாசரதி......*

கங்கையினுந்திர்த்தமலி கணபுரத்தெங்கருமணியே... *
எங்கள்குலத்தின்னமுதே யிராகவனேதாலேலோ ... *

இதின்தாத்பரியம்.

கௌசலையின்குலமகனே, ஜனகராஜனுடையமருமகனே, தசரதச்சக்கிரவர்த்தியின் புத்திரனே, கங்கைக்கதிகமான தீர்த்தங்கள் நெருங்கிய கண்ணபுரத்திலிராநின்ற நீலரத்தினமே, எங்கள்குலத்திலவந்த இனிப்பாகிய தேவாமிருதமே, இராகவனே தாலேலோவென்பதாம்.

இந்தக்கவியினாற் சூரியகுலத்தில்வந்தராகவனையக்கினிகுலமென்றுசொல்லப்பட்ட குலசேகரப்பெருமாளானவர் சூரிய அக்கினி குலமொன்றானபடியால் எங்கள்குலத்தின்னமுதேயென்றார்.

இதுவுமல்லாமல்-மகாபாரதம்- பாயிரம்-௰௩ வதுகவி.

எங்குமிவனிசைபரப்பிவருநாளில்யாமுரைத்தவிந்தநாட்டிற் [ன்றி
கொங்கர்குலவரபதியாட்கொண்டானென்றொருவண்மைக்குரிசிறோ
வெங்கலியின்மூழ்காமற் கருநடப்பேர்வெள்ளத்துவிழாமலுண்களுஞ்
சங்கமெனமுச்சங்கத்தண்டமிழ்நூல்கலங்காமற்றலைகண்டானே *

இதின்தாத்பரியம்.

எந்ததேசங்களிலும் மேற்படிவில்லிபுத்தூராழ்வார் கீர்த்தியானது பரவவருநாளில் நான்முன் சொல்லப்பட்ட நாட்டிற் சேரகுலத்தில் வந்தாட்கொண்டானென்னும்பேரையுடைய வளப்பம்பொருந்திய ஓரரசன்றோன்றித்தன்றேசத்துச்சனங்களைத் தரித்திரமுதலான துன்பத்தில் மூழ்காமலரசுசெய்து முன்னிருந்த மூன்றுசங்கத்தோடு நான்காஞ்சங்கமென்று யாவருஞ்சொல்லும்படியாய்த் தமிழானதுசிதைந்துபோகாமற் சங்கத்தைவிர்த்திசெய்து தானதின்முடிவைக்கண்டானென்பதாம்.

இதுவும்மேற்படி-உ௰-வதுகவி.

பற்றலன்பபுவியாளும்வளவனுக்குமுடிகவித்துவழுதித்தெவ்வைச்
செற்றவனுக்கவனியெல்லாஞ்செங்கோன்மைநிலையிட்டுச்செல்வமெ

ல்லாங், கற்றவருக்கிருகையுடைக்கற்பகம்போலினிதளித்துக் கமலமாதுங்,கொற்றவையுமனங்களிப்பத்தன்றமையேருவினுங் கோட்டினனே, ... *

இதின்தாத்பரியம்.

முன்சொல்லப்பட்டசேரனனவன் இந்தப்பூமியையாளும்வளவனுகியசோழனுக்குக்கிரீடந்தரித்துப்பாண்டியனுகியசத்துருவைக்கொன்று அந்தப்பூமிமுழுமையு மேற்படிச்சோழனுடைய செங்கோலைநிலைநிறுத்தி மேற்படி பாண்டியனுடைய அயிஸ்வரியமெல்லாந்தேர்ந்தவித்வான்களுக்கு இரண்டுகையையுடைய கற்பகம்போற்கொடுத்து இலட்சுமியுந்துற்கையுஞ் சந்தோஷிப்படும்படிச் செயத்தைப்பெற்றுத் தன்றமத்தை மகாமேருபருவதத்திற் (றனக்குரியவெல்லைக்கல்லாக) வெழுதினனென்பதாம்.

இதுவும்மேற்படி-உக-வதுகவி,

தென்னட்டில்வடநாட்டிற்குடநாட்டிற்குணநாட்டிற்றெவ்வோடக்கன்னட்டியமர்பொருதுகங்கைநீராட்டுவித்துக்கண்டன்வேங்கை *
யென்னட்டுமெழுதியவன்றிருமரபோர்பெற்றபுகழ்யாவர்பெற்றூ *
ரன்னட்டுக்கொற்றமெல்லாமக்குரிசில்புகழொடவதரித்ததன்றே *

இதின்தாத்பரியம்,

தெற்கு-வடக்கு-கிழக்கு-மேற்கென்றுசொல்லப்பட்ட நான்குதிக்கிலிராநின்ற சத்துருக்கள்பயந்தோட-இறந்தவர்களுக்கு நாட்டப்பட்ட கல்லுகளை எங்கையுநாட்டப்படும்படி யுத்தஞ்செய்துகண்டனென்றுசொல்லப்பட்ட ஒருசோழனுடைய புலிக்கொடியைஎந்தநாட்டிலுமெழுதி யவன்வம்சத்தார்பெற்ற புகழைப்போல் யார்பெற்றூர்கள்-அந்தநாட்டின் அரசியல்வலிமையெல்லா மந்த வரசன்புகழோடுண்டாயிற்றென்பதாம்,

இந்தமூன்றுகவியினு லாட்கொண்டானென்னும் சேரனனவன் தன்சத்துருவாகிய பாண்டியனைச்செயித்துக் கண்டனென்கிற சோழனுக்கு அந்தப்பாண்டிய விராச்சியத்தை யொப்பித்தானெ

ன்று இந்தச்சேரன்மரபாரோ சோழன்மரபாரென்று தோன்றும்படியாய்ச் சோழனுடைய புலிக்கொடியை இந்தராச்சியமுழுமையும் நாட்டி மேற்படிச் சந்ததியார் புகழ்பெற்றாரென்று சொல்லியிருப்பதினாலேயே சேரவம்சமும்சோழன்வம்சமும் ஒரேசாதியாரென்றெளிதிற் றெரிந்துகொள்ளலாம்.

இதுகள்போலின்னுமனந்தநூல்களிலும் மூன்றுகுல மொன்றென்றும், முக்குறித்தவரசருக்குரியபிரதானப்பேரைந்தும் அரசருக்கேயுரியதென்றுஞ் சொல்லியிருக்கின்றதுந்தவிர சேரனுக்குச்சிகாரபுத்திரனாய்ச் சோழன்புத்திரன்போனதாகவும், ஒருகாலத்திற்சோழனுக்குப்பாண்டியன் புத்திரன் சிகாரமாய்வந்ததாகவும் இதுபோலொருவருக்கொருவர் மாறிமாறிப் புத்திரர்களைச்சிகாரமாய்ப் பெற்று தங்களரசுநிலைநிறுத்தினரென்று சொல்லுஞ்சரித்திரத்தினாலேயேமூன்றும்வொன்றென்றறியலாம்.

முற்றிற்று.

௪-வது-அ -வது-பிரிவு



முன்னிந்த அதிகாரத்தின் முதற்பிரிவில் சேரன்சந்ததியாரைக்குறித்து வந்த சிலதிருஷ்டாந்தம்போல் அரசருக்குரிய பிரதானப்பேரைந்தில சிலது சோழன்சந்ததியாருக்குரியதென்று திருஷ்டாந்தம்வருமாறு,

அதாவது சோழன்பேர்பதினாறில் அவன்கோத்திரம்-அல்லது வம்சப்பேராகிய செம்பியனென்றொரு பேர்வந்திருக்கின்றதல்லவா அந்தப்பேரை இந்தத்தேசத்தில் வாசம்பண்ணப்பட்ட மேற்படிச்சோழன் சந்ததியார் நாளதுவரையிலு மந்தச்சம்புகோத்திரமென்றேமுக்கியமாய் வழங்கிவருகிறார்கள் - ஆனாற் சோழன்பேர் செம்பியனென்றிருக்க அவன்சந்ததியார்கள் சம்புவென்றேப்படி வழங்கிவரலாமென்று சிலர்சொல்லுவார்கள் - செம்பென்பது-சம்பென்றுவருவதும் சம்பென்பது செம்பென்று வருவது மியல்பு

சம்பென்பது- செப்பியனென்றுவந்ததற்குக்காரணத்திலக்கணவிதி யாற்கண்டுகொள்ளலாம்-முன் மூன்றாவததிகாரம்-ஒன்பதாவதுபிரிவில் - காஞ்சீபுரமாண்ட சோழபல்லவனைக்குறித்து இரட்டைப்புலவர்கள்பாடினதை யெழுதியிருக்கிறேனல்லவா- அதில் மேற்படிச சோழனைச் சம்புகுலமென்று சொல்லியிருக்கின்றது - இந்த அதிகாரத்தில்- இந்தப்பிரிவில்- இதின்பின்னாலினித் திருஷ்டாந்தமாகச் சொல்லப்போகிறசிதம்பரம்-கோயிற்புராணத்திற் றிருவிழாச்சருக்கம்- ௰௧-வது- கவியில் - சிதம்பரமாண்ட ஆதிசோழனைச்செம்பியனென்றுஞ் சொல்லியிருக்கின்றார் செம்பியனென்றிருப்பது சம்புவென்றுக்குதோ- அல்லது-சம்புவென்றிருந்தது செம்பியனென்றுச்சுதோ அதைப்புத்திமான்களாலோசித்தால் விபரந்தெரியும்,

ஆனால் ஆதி காஞ்சீபுரமாண்ட சோழன் சந்ததியாருஞ்சிதம்பரமாண்ட சோழன் சந்ததியாரும் ஆதிதொட்டு தற்காலம்வரையிலும் பேதமின்றிச் சம்புவென்றும், செம்பியனென்றும், வழங்கிவருவதால் எப்படி யிருந்தபோதிலுஞ்சரிதான் - இதுதவிர காஞ்சீபுரத்தில் சோழபல்லவனாற் கட்டப்பட்ட கோபுரத்துக்குமுன்-மூன்றாவததிகாரத்தில் எழாவதுபிரிவில்-க்ஷத்திரியவம்சத்துக்குள் அரசபண்ணுகிறவர்களுக்கு மாத்திரம் பள்ளியென்றுபேருண்டாயதென்றெழுதியிருக்கிறேனல்லவா - அதுபோலவே நாளதுவரையிலும்பள்ளிகோபுரமென்றே வழங்கிவருகின்றது அந்தச்சோழன்சந்ததியார்பிரதானமான சிவாலயமில்லாமற்றவைகளாயிருந்தபோதிலுநாளதுவரையிலுந்தங்கள்வம்சஞ் சோழவம்சமென்றுதோன்றும்படித்தலைப்பிள்ளைக்குவீரசம்புவென்கிறபட்டப்பேரைச்சிறப்புப்பேருடன் சேர்த்துவழங்கிவருகிறதுந்தவிரசோழனுக்கு அபயனென்றுபேர்வந்திருப்பதால் இந்த அபயனென்பதற்குப்பொருள்-பயமில்லாதவனென்றும், மற்றவர்களைக் காத்து ரட்சிப்பதென்பதுமேயாம், அந்தஅபயனென்கிறபதம் சமஸ்கிருதமானபடியால்அதுதமிழில்வெளிப்படையாய்த் தோன்றும்படியாய்ச்சிறைமீட்டானென்கிற ஒருகாரணப்பெயரையும் வைத்துவழங்கிவருகிறார்கள்- அதையறிந்துக்கொள்ள வேண்டியவர்கள் காஞ்சீபுரத்துக்குப்போய் விசாரிப்பார்களானால்யாவருக்குந்தெரியவரலாம்.

இதிலேமலாநியிலிருந்தப்பூமி காடுகொண்டிருந்தகாலங்களிற் கவுடதேசத்துராஜகுமாரனாகிய சிங்கவர்ம்மனென்பவன் தபசுமார்க்கமாய்த் தெற்கேதேசத்தைநாடிவந்து முதல் ஸ்ரீசைலம்-காளஸ்திரியில் நின்றுபூசித்துப் பிற்பாடுகாஞ்சீபுரஞ்சேர்ந்து ஏகாம்பரநாதரைப்பூசித்துத் தில்லைவனமானசிதம்பரம்போய் வியாக்கிரபாதருடைய தெரிசனைப்பெற்றுப் பின்பு அவரால்பதஞ்சலிமாமுனிவரையுந்தெரிசித்து அவர்களால் நடேசர்கடாக்ஷம்பெற்று சிவகெங்கையில்முழுகித் தனதுவெளுப்பாகிய சிங்கவர்ன்னம்போய்ப் பொன்னிறமான தேகத்தையடைந்து இரணியவர்ம்மனென்று மறுபேர்பெற்று அவிடத்தில் வசிக்கும்போது தன்கவுடதேசத்தரசனான தன் தகப்பனிறந்தபிற்பாடு தன்குலகுருவான வசிஷ்டராற்றன்தேசம்போய்ச்சேர்ந்து தனக்குண்டான நூதனகாட்சிகளை யவர்களுக்குச்சொல்லித் தம்பிமாருடனும் அனந்தராஜகும்பங்களுடனும் அனந்தமுழியக்காரருடனும் இரத-கஜ-துரக- பதாதிகளான நால்வகைச்சேனைகளுடனும்பிரமலோகத்தில் யாகம்பண்ணிக்கொண்டிருந்த தில்லைமூவாயிரரிஷிகளுடனும்மேற்படிச்சிதம்பரம்வந்துசேர்ந்து அந்தக்காட்டைச்சீர்திருத்திநாடாக்கிச் சபாநாதருக்காலையமும், தில்லைமூவாயிரவர்களுக்கு மூவாயிரம் வீடுங்கட்டினதுமல்லாமல் திருவிழாவுமனந்தந் திருப்பணிகளுஞ்செய்து தனக்கிருப்பிடமாக மேற்படி தலத்துக்குச்சமீபத்தில் கீழ்ப்புறத்தில் படைவீடுகட்டி அதிற்றானிருந்து மேற்படிச்சபாநாயகருக்குவிக்கிரக முதலானதுஞ்செய்வித்துத்தன்றம்பிமாரைப் பூர்வீககவுடதேசத்துக்கரசனாக்கியனுப்பிவைத்துத் தனக்குமேற்படி வியாக்கிரமர்- பதஞ்சலி - தில்லைமூவாயிரவர்களால் மேற்படிச்சபாநாயகர்வீற்றிராநின்ற பஞ்சாக்ஷரப்படியின்மேல்வைத்து மேற்படிச் சபாநாதருக்குச்செய்வதுபோல் அபிஷேகமுதலானதுஞ்செய்து இத்தேசத்துக் கதிபதியென்று கிரீடமுந்தரித்து - வாள்-முதலான ராஜசின்னங்களும்பழையபடிபெற்று மேற்படிச் சபாநாதராகிய பரமசிவத்துக்குரிய - ஆத்திமாலை- சிரமாலை- சங்கு- திருச்சின்னங்காவிக்கொடிமுதலானதும்பெற்றுப் புலிப்பதியாகிய சிதம்பரத்துக் கரசனென்றுதோன்றும்படிப் புலிக்கொடியுரியதென்று ஷை·யாரால்கொடுக்கத் தான்பெற்றுப் பஞ்சாக்ஷரமாகிய திருநீற்றைத்தரிப்பித்துத்

திருநீற்றுச்சோழனென்கிற மூன்றாவதுபேரையுங்கொடுக்கப்பெற்று
டையவருக்குச்செய்யுஞ்சர்வமரியாதையுஞ் செய்யப்பெற்று ஆனையி
ன்பேரில்மேற்படிநகரப்பிரதக்ஷணம் வருங்காலையில் கர்ப்பூர ஆலா
த்தி-தூபகலசம்-ஆலவட்டமுதலானமரியாதைகளும் ஜீயரால்
செய்யப்பெற்றுதன்னரசுக்குரியஸ்தானத்திருந்துஅரசுசெய்ததுமல்லாமல் தன்வம்சத்தார்யெவனை குற்றஞ்செய்தபோதிலும்பொறு
த்துத் தங்கள்பரம்பரைவழியாய் அடிமைகொண்டு திருப்பணிவே
லையை நடத்திக்கொள்ளும்படி மேற்படிச் சபாநாயகரிடத்தில்
பெற்ற வரத்தைப்போல் நாளதுவரையிலும் மேற்படிச்சோழன்
சந்ததியாருக்கு மேற்படி பருசாஷாப் படியின்பேரில் வைத்து
மூடிதரித்து ஆதிகாலத்திற்செய்த சர்வமரியாதைகளும் பிசகாம
ல் நாளதுவரையிலுந்தீராய்நடத்திவருகின்றார்கள் - ஆதியில் சி
தம்பரத்துக்கு கிழ்ப்பாரிசத்தில் கட்டப்பட்ட அரண்மனையில்
நாளதுவரையில அந்தச்சந்ததியார் பேரரசுபோய் விட்டுச்சிற்ற
ரசாயிருந்துவருகிறார்கள் தங்கள்கோத்திரம் பாஸ்கரகோத்திரமெ
ன்றும் பள்ளியென்றும், சூரியவம்சமென்றும், வன்னியரென்றும்,
செப்பியபாலனென்றும், சோழனென்றும், வழங்கிவருகிறார்கள்-தில்லைமூ
வாயிரவர்களுடையசந்ததியாரும் இரணியவர்மச்சோழனால் தங்க
ளைப்புகுப்பித்ததாகச் சொல்லிக்கொள்ளுகிறார்கள் - இதுவுமல்லா
மல் ஷை ஸ்தலத்தில் நிரூபணமுதலான சிலவு இருப்புமுதலா
னதைப்பற்றிய கணக்குகளோத நிலை மூவாயிரவர்களைமேற்படிச்
சோழனசந்ததியாருங் கேட்டுவித்தும் வருகிறார்கள்,- அதைமேற்
படிச்சோழன்சந்ததியார் தங்கரிராஜதானிகணக்கில சபாநாயகர்க
ளைக்கொண்டுபதித்துவரவுசிலவுகளையொப்புக்கொண்டு ஷைஸ்தல
த்துக்குரியதிறவுகோல்மூன்றில் ஒன்றைத்தாங்கள்கைப்பற்றியும், தங்
களுத்திரவின்பேரில் ஆகவேண்டியகாரியங்களை நாளதுவரையில் ந
டத்திவருகிறார்கள் - இந்தத்திருஷ்டாந்தக்காக்ஷியை வேண்டியவர்க
ளியாவரும்இப்போதுப்போய்த்தெரிந்துகொள்ளலாம்-மற்றவனை
த்துவிடங்களிலரசாண்ட அனந்தஞ் சோழர்களும் இவர்கள்சந்ததி
யார்களேதவிர வேறல்ல.

இதிற்குறிப்பித்த இரணியவர்ம்மச் சோழசரித்திரத்துக்குப் புராணதிருஷ்டாந்தம்வருமாறு.

கோயில்புராணம்-இரணியவன்மச்சருக்கம்-௯-வது-கவி.

அன்னவர்கட்பின்னவனுமனுவாகிவனுக்கு...... ... *
மன்னுமனைவியரிருவருளராகிமற்றவரின் . ... *
முன்னவள்பாற்படுஞ்சிங்கவன்மன்முதிறமாமகவுதிப்பப் *
பின்னவள்பாலெழிலினராயிருதநயர்பிறந்தார்கள் ... *

இதின்தாத்பரியம்,

அப்படிப்பட்ட நாலுமனுக்களுக்குப்பின் சகடேசனென்னுமனுவுண்டாகிநீதி செலுத்துங்காலத்திலவனுக்குரிய இரண்டு மனைவியர்களில் பிரதானமான ஸ்திரீயினிடத்திற் சிர முதாஞ்சிங்கவர்ன்மனாக ஒரு குமாரனுண்டாக இரண்டாம் ஸ்திரீயினிடத்தில் ராஜலக்ஷணம் பொருந்திய விரண்டு குமாரர் பிறந்தார்களென்பதாம்,

இந்தக்கவியிற்சகடேசனென்னுமனுவுக்கு மூன்றுகுமாரர் உற்பத்தியானார்களென்றுகுறிப்பித்தார்-

---

இதுவும்-ஷை-ய-வது-கவி,

வீரவுசிங்கவருமன்பின்வேதவன்மன்சுமதியென .. ... *
வருதநயர்மூவர்களுமறைமுறையின்மலிசடங்கு ... *
பெருகியபின்படையயின்றுமிறங்குமதகரிபரிதேர் ... *
கருதியுகைத்திடுமாறுமொன்றாகக்கற்றார்கள் ... ... *

இதின்தாத்பரியம்.

சிங்கவர்ம்மன்- அவன்தம்பி வேதமர்ம்மன்- அவன்றம்பி சுமதியென்றுசொல்லப்பட்ட இந்தமூன்றுகுமாரர்களும் வேதமார்க்கத்தில் க்ஷத்திரிய அங்கமானகிரியைசெய்து முடிந்தபிற்பாடு ஆயுதம் அப்பியாசித்துத்தேறினபின்- ஆனை - குதிரை- தேர்- முதலான

றுமேறி ஒப்பிடூபாயங்களும் மூவரு மொருமிக்கக் கற்றாரென்பதாம்.

இந்தக்கவியினால் ௩ குமாரர் மூவர்களின்பேரும் அவர்கள்கற்றவித்தைதளையுஞ் சொன்னார்.



இதுவும் ௩-௰௧-வது-கவி·

கற்றதற்பின்முன்னவன்மெய்க்களங்கத்தாலரசாள்கை *
குற்றமுளதினியுலகிற்குலமைந்தரிருவரினும்...... ...*
பெற்றவர்கள்பெறுகின்றார்மனுவின்சைவாற்பெருந்தவங்க
ளுற்றோமென்றுமிருசாலவுறுதிநயக்கெனவுணர்ந்து ... *

இதின்றாத்பரியம்.

பலகலையுங்கற்றபின் முந்தினகுமாரனானவன் றன்னுடையகாரகுற்றத்தினாலே தனக்கு இராய்சிய மாளுகைக்குத் தோஷமேறு தம்பிமாரிருவரும் அரசுக்குரியவர்கள், மனுவுக்குப்பின் றம்முடையராச்சியம் ஆளப்பெறுவார்கள், நாம் மேலான தபசுகளைச் செய்து சித்தத்தை யொடுக்குவதே மிகவும் ஆத்மலாபமென்றுவிசாரித்தானென்பதாம்.

இந்தக்கவியிலிரணியவர்ம மனானவன் தன்தேகத்திலிருக்கிற குற்றத்தினால் அரசாளுவதைநீக்கி தான்றவசுக்குப்போவதாகவும், தன்றம்பிமார் அரசாளுவதாகவும் யோசித்ததாய்க் குறிப்பித்தார், அவன்றகப்பனிடத்தில் விடைபெற்றுத் தவசுபண்ணுவதற்கு விடமும், பெரியோர்களையுந்தேடித் தென்றிசைநோக்கி வருவதையேற்படிபுராணத்தில் வேண்டியவர்கள்விபரமாய்க் கண்டுகொள்ளலாம்.

மனு-வென்பது-அரசு மனுக்குலமென்பது இராஜகுலமென்பதாம்,



இதுவும் மேற்படிச்-சருக்கம்-௰௭ வது-கவி·

பருப்பதமிறைஞ்சிவிழிசோதியையில்வித்துத் ... ...*
திருத்தகுநதிப்பொருவிறீர்த்தமவையாடி ... *
யருத்தியிகுகாளனுடனத்தியணிநித்தன் ... ... *
பொருப்புறவுடன்றொழுதுபோதலுறநாளில் ... ...*

இதின்தாத்பரியம்,

சிங்கவர்ம்மனானவன் ஸ்ரீசைலத்தைக்கண்டுவணங்கிசோதிமயமானசிவலிங்கத்தைவிழியில் நீங்காதுபொருந்துவித்துப் புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து நாகமும்- ஆனையும்- வணங்கப்பட்டகாளத்தியில்பரமசிவத்தையும் மேற்படி மலையும் வணங்கித்தெற்குநோக்கி வருநாளிலென்பதாம்.

இந்தக்கவியினால் சிங்கவர்ம்மனானவன் ஸ்ரீசைலத்தையுங்காளத்தியையும்பூசித்துத். தெற்குநோக்கினானென்று குறிப்பித்தார்.

இதுவும்-மேற்படி சருக்கம்-உ௱ வது-கவி.

மற்றவனையெய்தவழிசெய்கவெனவேடன் ... ... *
றுற்றசரியூடுகொடுபோகியிவர்சொன்ன ... ... *
கொற்றவனெனக்குமாரனுங்குறிகினான்முற் ... ... *
கற்றமறைசொற்றமறைகம்பர்திருமுன்பு ... ... *

இதின்தாத்பரியம்,

நீசொன்ன மாவடித்தேவனைக்காணத்தக்கதாக வழிவிடென்று சிங்கவன்மன்சொல்லவேடனானவன் சுவடுமறைந்தசரிவழிக்குள்ளாகக்கொண்டுபோய் இவர்தாம் நான்சொன்ன தேவனென்றுகாட்டக் கவுடதேச ராஜகுமாரனும் முன்னேபிரமாதிகளாலே கற்கப்பட்ட வேதங்கள்ஈச்சுவரயிக்கியம்விஞ்ஞாபிக்கும்திருவேகம்பர்திரு முன்னே அணுகினானென்பதாம்,

இந்தக்கவியினாலிரணியவன்மன்காஞ்சிபுரங்கண்டு தெரிசித்ததாகக்குறிப்பித்தார்,

(*)

இதுவும் மேற்படி-சருக்கம்-௩௱-வது-கவி,

அத்தனுடனாருயிர்கள் கூடவணைவிக்கும் ...*
சத்திதகுவேடனரசன்றநயனைக்கொண் ... *
டெத்தகையகானமுமியாறுமகல்வித்துச் ... ...*
சித்தமலிதில்லைவனமெல்லைசெறிவித்தான் ... ...*

இதின்தாத்பரியம்,

பரமசிவத்திலேகூடு ஆன்மாக்களைச்சேரக்கூட்டுவிக்கும் அருட்சத்தியையொக்கும்வேடன் இராஜகுமாரனைக்கொண்டு எந்தப்பெரியகாடுகளும்ஆறுகளுநடந்து கடப்பித்துத் தரிசனையானமாதுரோத்திலேசித்தஞ்சிவமாக்குந்தில்லைவனத்திலெல்லையை அணுகுவித்தானென்பதாம், இந்தக்கவியிருவல்சிங்கவன்மனை வேடனுனவஞ்சிதப்பாதத்திற்கொண்டுபோய்விட்டதாகக்குறிப்பித்தார்,

---

இதுவும்மேற்படி சருக்கம்-௫௨-வது-கவி,

அங்கருளிட்பாடியரோடருமுனிவர்கடிதணைந்து ... *
சிங்கவன்மாவுனக்கில்பத்திருச்சூநடம்பரிந்தருள
வெங்கள்பிரானருள்செய்தானெட்டுமவெண் நடனேயெ
பங்கயப்பூந்தடமதனிற்படிகவெனவுலாசெய்தார் [ழுழிற்

இதில் தாத்பரியம்,

அவ்விடத்துப்பொருந்திய கணநாதர்களுடனே பெரியமுனிவர்களும்சடுதியிலேபொருந்திசிங்கவன்மனே உனக்கானந்தநிருத்தம்திருவுளம்பற்றஎங்கள்கடவுளானவர்அருளிச்செய்தார் வரவேண்டு அவனைப்பொற்றாமரைப்பொய்கையிலே ஸ்நானம்பண்ணச்செய்விக்கற்பித்தார்களென்பதாம்,



இதுவும்மேற்படி சருக்கம் ௫௩ வது கவி,

அருளதனாற்றடம்படிபுமவன்கடன்மேலருக்கனென *
விரவுபசுங்கானடைந்த மேருகிரியெனவிளங்கி ... ...*
யிரணியமாமுருவாகியெழுந்ததுகண்டதிசயித்துப் .. *
பரவியதுபெயராகயாவர்களும்பயில்வித்தார்... ..... *

இதின்தாத்பரியம்,

அருளாலேஸ்நானம்பண்ணி யெழுந்திருக்கு மவன் கடல்மேலுதிக்குமாதித்தனைப்போலவும், பசுமைபொருந்தின காடுசூழ்ந்தமகாமேருவைப்போலவும்பிரகாசித்துப்பொற்சொரூபமா யெழுந்திருந்தமைகண்டு ஆச்சரியப்பட்டுஎல்லாரும்புகழ்ந்து அந்தவிரணிய

வர்ணமேபோதகஇரணியவன்மனென்று பொருந்தப் பேர்கற்பித்தார்களென்பதாம்,

இந்தவிரண்டுசெவியிலும் சிங்கவன்மனுடைய வெண்குஷ்டம் நீங்கிப் பொன்றேகத்தையடைந்து இரணியவன்மனென்கிறவிரண்டாம்பேர்பெற்றதாகக்குறிப்பித்தார்,

---

இதுவும்-மேற்படி-சருக்கம்-௱௯உ-வது-கவி,

அருந்தவாடங்கத்தில்லையம்பலஞ்சூழவைகத் ... ❋
திருந்தியர்ப்ரான்மன்றநதிகழ்துணதிசையிற்சேரப்... ❋
பொருந்தியதானைமல்கப்புகழ்படைவீடுசெய்தங் ... ❋
கிருந்தனன்பின்புசெய்தவியல்புகளியம்பலுற்றும் ... ❋

இதின்தாத்பரியம்.

இரணியவர்ம்மனனவன்பிரமலோகத்திருந்துதானிட்டுவந்தமூவாயிரம்பிரமரிஷிகள்முதலான பெரியோரியாவரும்தில்லையம்பலத்தைச்சூழ்ந்திருப்பக் குற்றநீங்கினவிரணியவன்மனனவன் சிதம்பரத்திருக்குக்கிழக்காகப்பொருந்தித்தன்னைச் சேவித்துவந்தசதுரங்கபலத்துக்கு மிடமுண்டாகக்கொற்றவன் குடியிருப்பென்றுசொல்லப்பட்ட படைவீடுகற்பித்து அவ்விடத்துக் கட்டின மாளிகையிலிருந்தான் - பின்பு நடந்த காரியங்களைச் சொல்லப்புகுகின்றேனென்பதாம்,




இதுவும்மேற்படி-புராணம் திருவிழாச்சருக்கம்- உ-வது-கவி,

சங்கமிருந்தபினங்கமர்புண்டரிகத்தாளோ ... ❋
திங்காசன்றருமைந்தரின்முந்தையளிப்பார்மெய்ப் ❋
பொங்கருள்கொண்டுபுரப்பவனிப்புவிமுற்காவற் ... ❋
பங்கமிறம்பியர்தம்பதியென்றுரைபாரித்தான் ... ... ❋

இதின்தாத்பரியம்,

தில்லைமூவாயிரவர்கள்- வியாக்கிரமபாதர்- பதஞ்சலி-வ!
ர்முதலானபெரியோர்களும் அந்தவரசக்கூட்டங்களுங் கூடியிருந்த

பின் அவ்விடத்துப்பொருந்தினகவுடதேசன்றந்த குமாரரில்மூர்த்தி னகுமாரனாகிய இரணியவன்மன் இந்தத் தேசத்தைச் சத்தியமாய்ச் செங்கோல்நடத்தக்கடவன், தம்பிமார்கள்தங்கள்கவுடதேசத்துக்கு முதற்காவலாக யிருக்கக்கடவர்களென்று யாவருங்கேட்க வியாக்கிரமபாதர் சொன்னாரென்பதாம்-முதற்காவலென்பது-பேரரசு,




இதுவும்-மேற்படி-திருவிழாச்சருக்கம் ௯-வது-கவி,

உருகுபதஞ்சலிமன்னுபமன்னியனைம்மாமன் ... ...*
திருவுடையந்தணர்யாருமுவந்துரைசெய்யச்சே... ... *
ரிரணியவன்மனைமுன்மரபின்மணமேய்வித்தே... ...*
மருவியமன்றயன்மண்டபமொன்றுவகுப்பித்தார் ... *

இதின்தாத்பரியம்

பதஞ்சலிமுனியும்- உபமன்னியரும் - அவருக்குமாமனாகிய வசிஷ்டரும்-தில்லைமூவாயிரவர்கள் முதலானமற்றுமுள்ள தேவரிஷிகளியாவரும்வியாக்கிரமபாதர் சொன்னபிரகாரமே செய்யக்கடவதென்றுசொல்ல இரணியவன்மனுக்கு அவன்க்ஷத்திரியவம்சத்துக்குரிய விவாகஞ்செய்வித்துச் சிதம்பரச்சபைக்கருகி லபிஷேகமண்டபமொன்று கட்டிவித்தாரென்பதாம்,



இதுவும்-திருவிழாச்சருக்கம்-௪ வது-கவி.

மற்றதின்மங்கலமாலைகடோரணம்வாழ்தீபம் ... *
பொற்றவிசெண்பலகைக்குலநெய்பொறிபுற்பூநூல் *
சுற்றியகும்பமுடன்கலசம்பலசூழ்வித்தே ... ... *
யற்றிகழ்வொன்றுசடங்கதிவாசமமைத்தார்கள் ... .. *

இதின்தாத்பரியம்,

அந்தமண்டபத்தில் மங்கலார்த்தமான தருப்பைமாலைகள் மாவிலை தோரணங்கள் - தூண்டாவிளக்குகள் - கனகசிங்காதனம் - அட்டமங்கலப் பலகைத்திரள்- தருப்பை- இவைமுதலானதும்

நெய்- பொரி-புஷ்பம்-முதலானதும், நூல்சுற்றிய பிரதானகும்பகலசமுதலானதுமமைத்து ஒருராத்திரிமுழுதும் அதிவாசகிருத்தியம் விளங்கப்பண்ணினார்களென்பதாம்,

இதுவும்-மேற்படி-திருவிழாச்சருக்கம்-௫-வது-கவி,

காலைதொடங்கிநடந்துசடங்குகணித்தோதும் ... ...*
வேலையின்மங்கலநீடபிடேகம்வியந்தாடி ... ... *
மூலமுயங்கியமாமுடிதார்முதுவாள்பெற்றங் ... *
கேலவிருந்தபினிட்டனராண்டொன்றிரண்டென்று *

இதின்தாத்பரியம்,

உதயகாலத்துவக்கி நடத்தவேண்டிய சடங்குகளைமுடித்துக் குறிக்கப்பட்ட முகூர்த்தத்தில் அபிஷேகம்பண்ணிப் பாரம்பரியமான மகத்தான்மணிமடகும்-ஆத்திமாலை- பழையவீரகடகம்- வியாக்கிரமபாதர்கையினாற் கொடுக்கப்பெற்று அந்தமண்டபத்திற் சிங்காதனத்திலேயிருந்தபின் என்பதாம்,

இந்த ஐந்துகவியினாலும் வியாக்கிரமபாதர் முதலானரிஷிகளுங்கூடி கவுடதேசத்தரசனான இரணியவர்ம்மனை இத்தேசத்துக் கரசனாகவும், இவன்தம்பிமாரை மேற்படி கவுடதேசத்துக்கரசனாகவும்நியமித்து மேற்படி இரணியவர்மனைப் பஞ்சாக்ஷரப்படியி லெழுந்தருளப்பண்ணி முடிசூட்டி ராஜசின்னங்களைக் கொடுப்பித்ததைச்சொன்னார்.



இதுவும்-மேற்படி-திருவிழாச்சருக்கம் ௬-வது-கவி,

சிந்தைமகிழ்ந்தெதிர்வந்தனைதன்றநயன்செய்யத் ... *
தந்தைமகிழ்ந்துதழீஇவளாசிகடானல்கிப் .. ... *
புந்தியிலங்குபுலிப்பதிகாவல்புரப்பாயென் ... ... *
றந்தமின்முந்துபுலிக்கொடியங்கையகத்துய்த்து ...*

இதின்தாத்பரியம்,

சிந்தைகளிகூர்ந்து தன்னருட்புதல்வனான இரணியவன்மச் சக்கிரவர்த்தி எதிரேவந்து நமஸ்கரிக்க அருட்பிதாவாகிய வியாக்கிர

மபாதர் பிரியத்துடனே தழுவிக்கொண்டிருந்தஆசிர்வாதஞ்செய்து அறிவுக்கறிவானவியாக்கிரபுரத்தைக் காத்தளிப்பாயாகவென்று முடிவில்லாத பழைய வெற்றிப்புலிக்கொடியை அழகியகைத்தலத்திலே திருவுளம்பற்றிக்கொடுத்தாரென்பதாம்,

இந்தக்கவியினால்மேற்படி இரணியவன்மச்சோழனுக்குப்புலிப்பதிக்காசனென்றுதோன்றும்படிப் புலிக்கொடியை வியாக்கிரமபாதர் கொடுத்ததாகக்குறிப்பித்தார். பழையபுலிக்கொடி- என்பது ஆக்நேயத்தில் இவர்கள்வம்சத்துக்கு மூலபுருஷனாற்பத்தி யாகுங்காலத்தில் ஆண்புலிக்கொடியுடன் பிறந்தானென்று சொல்லியிருப்பதால் அதுஇவர்கள்வம்சத்துக்குரியதாகையால் இந்தவிடத்தில் முந்து புலிக்கொடி என்றுசொன்னார்,

---

இதுவும்-மேற்படி-திருவிழாச்சருக்கம்-எ வது-கவி,

போதுகவென்றுவலங்கொடுபுக்கருண்மிக்காடு ... *
நாதருளாடலர்சிந்திவணங்கநயந்தண்ணல் ... *
பாதமிரண்டுமெடுத்தவர்முச்சிபரிப்பித்தா ... *
னோதமெழுந்தெனயாவருமோகையுரைத்தார்கள் ... *

இதின்தாத்பரியம்

இரணியவன்மனைவருகவென்று பிரதக்ஷணமாகக்கொண்டுசென்றுஉள்ளேபுகுந்து அருள்மிகவானந்தநிருத்தஞ்செய்யும் சிதம்பரநாதர்சன்னிதியிலே நல்லபுட்பாஞ்சலிபண்ணி நமஸ்கரிக்க கற்பித்து கடவுளது திருப்பாதுகை யிரண்டினையுமெடுத்து இரணிய வன்மன் சிரசிலேவியாக்கிரமபாதமகாரிஷிதரிப்பித்தார்- அப்போது சமுத்திரகோஷ்டம்போல்தேவரிஷி-பூதகணம்-மனிதர்கள்- அரசகூட்டங்கள்முதலானயாவரும்பிரியவார்த்தைகள்சொன்னார்களென்பதாம்.

இதுவும்-திருவிழாச்சருக்கம்-அ வது-கவி·

ஈறில்பெருந்தனமென்னவைதின்னவையிப்பார்மே *
லாறின்லொன்றுகொனஞ்சினிலொன்றுகொளத்தாவிப் *

பேறுபிறந்தடியேன்மறையோர்கள்பிழைத்தாலுங்... *
கூறருமன்புகொடுத்தடிமைப்பணிகொள்கென்றான்

இதின் தாத்பரியம்,

என்னுடையபூர்வார்ச்சிதமானமுடிவில்லாதசகல ஐசுவரியமும்தேவரீருக்காகக்கடவன இந்தப்பூமியிலே நீதிபிரகாரம்ஆறிலொருகடமைகொள்ளுகிறதைவிட்டு ஐந்திலொருகடமைகொண்டு அடியேனுக்குப்பின்னாகவரப்பட்டயென்சந்ததியார்குற்றஞ்செய்தாலும் பொறுத்தருளிச்சொல்லுதற் கரிதாகியபத்தியையுண்டாக்கி அடிமைத்தொழிலிற்கொண்டருளவேண்டுமென்று இரணியவர்மமன் வேண்டிக்கொண்டானென்பதாம்.

இதுவுந் திருவிழாச்சருக்கம்-௯-வது-கவி.

அன்னணமவ்வகைசெய்குவமென்றருள்செய்போதிற் *
கண்ணமர்தாரைகள்காரைநிகர்ப்பக்கவுற்றங்...... *
எண்ணருமின்பருளெய்தியிறைஞ்சியெழுஞ்சேனைத்
திண்ணியநல்புலியொண்டுடையானடிசேர்வித்தான் *

இதின் தாத்பரியம்,

தேவநாதரும்அப்படிச்செய்வோமென்று திருவுளம்பற்றின காலத்துப்பொருந்தின கண்ணீர்த்தாரை மழையொப்ப நீராளமாயுருகி அவர்எண்ணரிதாகிய இனியவருள்பெற்று நமஸ்கரித்தெழுந்திருந்து அவ்விடத்தேநிற்கிறகுமாரனை ஞானவீரரான நல்ல வியாக்கிரமபாதமகாரிஷிகொண்டுசென்று மூலஸ்தானக்கடவுளினது பாதங்களை அணுகிவித்தானென்பதாம்.

இதுவும் திருவிழாச்சருக்கம்-௰-வது-கவி.

அங்கும்வணங்கிவணக்கருமானையமேல்கொண்டு ... *
மங்கலமாநகர்சூழ்வரமாமுனிதானேவச் ... ... *
சங்கவியங்கண்முழங்கவலங்கொடுதார்மார்பன் ... *
பொங்கியபங்கயமாதமர்கோயிலினுட்புக்கான் ... *

இதின்தாத்பரியம்,

மூலத்தானமுடையசிவபெருமான் சந்நிதியிலே நமஸ்கரித்து பாகரால் வணக்கரியமத்தகசத்தின் மேற்கொண்டு மங்கலமாய்மகத்தாயிருக்கிறசிதம்பரநகரைப் பிரதக்ஷணம்வரவியாக்கிரமடாதர்கற்பிக்கசங்கவாத்தியங்கள்முழங்கஆத்திமாலைமார்பனான இரணியவன்மன்பிரதக்ஷணம்வந்துகற்புமிகுந்த இராஜலட்சுமி யுறைகின்றதனக்குமுன்குறித்ததிருமாளிகைக்குள்ளே புகுந்தானென்பதாம்,

---

இதுவும்- திருவிழாச்சருக்கம் ௰௧-வது கவி,

தார்புனையாரணிசெம்பியனெம்பியர்தானல்கும் .. ...*
பாருமதூருமதாகவெனுவணிதார்பட்டம் ... ... *
போர்தருசாமரைதோரைசணீள்குடைபொற்பீடந் ...*
தேரணிமாவயமாநிதியாதிகள்சேர்வித்தான் ... *

இதின்தாத்பரியம்,

ஆத்திமாலையையணிந்த செம்புகுலத்தானாகிய விரணியவன்மனானவன்தம்பிமாரையழைத்து உங்களுக்கு நலம்பொருந்தின தேசமும் கௌடதேசமாகக்கடவதென்று படைவீடுங் கடகமேயாகக் கடவதென்றுகற்பித்து ஆபரணமும் மாலையுங்கொடுத்துப் பட்டங்கட்டிப்பொருந்திவீசும் உபயசாமரையும்பீலிக்குடை தவளச்சத்திரம்பொற்பீடம் தேர்திறை-யானைகள்குதிரைகள்-பதாதிகள் முதலானவையுங்கொடுத்தானென்பதாய்,

---

இதுவும்-திருவிழாச்சருக்கம்-௰௨-வது-கவி,

மென்றிநடந்தொழுதம்பியர்வந்தடிமேல்வீழ்வுந் *
றன்றவர்சென்றபின்மன்றம்வணங்கியவன்றந்தை ... *
முன்றொழுதந்தணர்வந்தனைமாளிகைமுற்செய்வா ...*
னின்றருளென்றவையெங்குமிலங்கவெடுப்பித்தான் ... *

இதின்தாத்பரியம்

அந்தத்தம்பிமார் சிதம்பரநாதருடைய வெற்றிபொருந் ஆனந்தக்கூத்தைவணங்கிவந்து தன்னையும்வந்து நமஸ்கரித்து

அனுப்பிக்கொண்டுபோகத்தக்கவர்களை யனுப்பப்போனபின்பு சிதம்பரமூர்த்தியினுடையசேவைபண்ணின இரணியவன்மனும் அவன்றன்னுடையபிதாவாகியவியாக்கிரமபாதனை முந்தொழுதில்லைவாழந்தணராயவரவர் திருமாளிகையிலேசென்று நமஸ்கரித்துத்திருமாளிகைகள்கட்டுகிறதற்குத்திருவுளம்பற்றுமென்று உத்திரவுபெற்றுக்கொண்டுவந்து வெவ்விடத்தும்விளங்க மூவாயிரந்திருமாளிகை கட்டிமுடிக்கத்தொடங்கினனென்பதாம்,

---

இதற்குமேற்படி-திருநெறிச்சருக்கம்-௯௬ கவி,

எழுநிலைமாளிகைகுளிகை சாளரமேரார்சீர்………. *
வாழ்மணிகோபுரவாயில் கடோரணிமாடவீதி……… …*
சூழ்வுறமேருவினேர்பல கோடியசோலைசான்… … . *
தாழ்வுடன்மாதவரியாரையுநீள்குடிசாரிவித்தான் .. …*


இதின்தாற்பரியம்,

எழுநிலைமாளிகையாகச்சமைத்துமகுடங்கள்வைத்துப் பல்மணிநிறைத்து-அழகுநிறைந்தமணிவாசல்கள் தோரணம்தேர்- வீதிகள்-இதுகள்நிறைந்தமகாமேருவையொத்த திருமாளிகைகட்டின இரணியவன்மச்சோழசக்கிரவர்த்தித்தாழ்ச்சியுடனேமகாதபசுகளையுடைய அந்தணரியாவரையுங் குடியேற்றினனென்பதாம்,

இந்தக்கவியால்இரணியவன்மனுக்குச்சோழனென்கிறபேர்வந்தவிபரமும் அவனூர்சிதம்பரத்தைக்கட்டுவித்து மூவாயிரவர்களைக்குடியேற்றியவிபரமும் சொல்லப்பட்டது.

இந்தவிரணியவன்மன் சரித்திரத்தில்முக்கியமவனாற்கண்டுபிடிக்கப்பட்டஸ்தலங்களும் அவன் இத்தேசத்திற்குடியேறினதும் சுருக்கமாயந்தந்தவிடங்களில் வேண்டியதைமாத்திரம் குறிப்பித்திருக்கிறேன்முழுமையும்செவ்வையாய்த்தெரிந்துக் கொள்ளவேண்டுபவர்கள் மேற்படிகோயிற்புராணத்தில்கண்டுகொள்ளலாம்-இந்தவிரணியவன்மன் சரித்திரத்தினால் இவன்சந்ததியார்களேபலபேர்பெற்றுஇந்தப்பூமியையாண்டசோழர்களென்றுஅவர்களிற் [illegible]

கன்யாகுமரி இலங்கைத் தீவுமுதலான விடங்களுக்குட்பட்ட சிவஸ்தலங்களையும் விஷ்ணுஸ்தலங்களையுங் கட்டிவைத்தவர்களென்று யாவருக்குந்தெரியவரலாம் ஆனுலிந்தவிரணியவன்மச்சோழன்சந்ததியாருக்கு ஆதிதொட்டு நாளதுவரையில் மாருமல் நடந்தும்தேவமரியாதையைப்பெற்றுவரும் பித்தர்புரத்துச்சே பூவலீயியர்களைக் குறித்துக் கிஞ்சித்துப்புத்திமான்களாகிய சிலர் சோழன்சந்ததியார்வன்னியர்களல்லவென்றும், சோழன்சந்ததியார்கள் அற்றுப்போயிவர்கள்நடுவாந்தரத்தில்வந்திருக்கலாமென்றுஞ்சொல்லுவார்கள் அப்படிச்சோழன்சந்ததியார் அற்றுப்போனதற்கு யாதொரு நியாயமுமில்லை- சோழன் சந்ததியென்பது அனந்தம்பேரோ கவிர ஒருவிட்டுக்காரரல்ல- ஆதியிற்கடவுளால்வரங்கொடுத்ததுபோல நாளதுவரையில்முழுதுங்கெடாமல் நாங்களும்மெங்கள்சந்ததியார்களாகிய வன்னியர்களும் பெருகிவருகிறோமென்று மேற்படியரசர்கள்சந்ததியார் சொல்லிக்கொள்வதுபோல் தீக்ஷிதர்களும்மற்றபுத்திமான்களும் நாளதுவரையில்மேற்படியரசனைச்சோழன் சந்ததியாரென்றே சொல்லிக் கொள்ளுகிருர்கள்- ஆனால் சோழன்சந்ததியாரல்லாபல மற்றஜாதி துஷ்டவசத்தால் அரசகிடைத்து உலகமெல்லாமாண்டாலும் ர்களைமேற்படித்தில்லைசபையில் பஞ்சாக்ஷரப்படியில்வைத்து சோழன்சந்தியாருக்கு முடிசூட்டுவதுபோல்மற்றவர்களுக்குத் தில்லைமூவாயிரவர்கள் முடிசூட்டவுமாட்டார்கள் - வலிவினுல் சூட்டயத்தனித்தாலும்எவ்வளவேனும்ஒத்துக்கொள்ளமாட்டார்கள்.



இதற்கொருதிருஷ்டாந்தம்- பெரியபுராணக் கூற்றுவநாயனர் சரித்திரம்-க வ ரு-கவி.

ஆன்ருர்முனைகடோள்வலியால்வென்றுகுலப்படையார்தம்*
நன்ருமந்தந்திருநாவி நாளுநவிலுநலமிக்கார்... ... ...*
பன்ருளிசடியார்தம்பாதம்பரவிபணிந்தேற்ற .. ... *
மூன்ருகியநற்றிருத்தொண்டின் முயன்ருர்களந்தை முதல்வ

இதின்தாத்பரியம்.

சத்துருக்களைத்தஞ்தோள்வலியால் வென்று சிவனடியார்களுடைய பாதத்தைப்பணிந்து துதிசெய்து அடியார்களுடைய திருத்

தொண்டியேர் முயற்சிசெய்தார் களத்தைபெறும்படிக்கு அரசருமி யகூற்றுவராயவரென்பதாம்.

இதுவுமல்லாமல்- ஷை சரித்திரம்-உ-வது-கவி,

நளிர்மெழிபாலரடொணங்க ... ... *
வவனியெல்லாமடிப்படுப்பார் ... ... *
பொருவிலருடவுங்காண்டரிய ... ... *
மையைட்டைபெயர்தகவிறக்க ... ... *
மருணங்கவழமையாய்புரவி ... ... *
மணித்தேர்படைஞர்முதலமைந்தார் ... ... *
வெருணுஞ்சருவிதராண்டுநிகர ... ... *
வீரச்செருக்கின்மேலானர் ... ... *

இதின்தாத்பரியம்,

மேற்படி கூறியவராயவர் பரமசிவனுடைய கிருபையினு லரசுசெலுத்திய பூமியின்கண்ணிலுள்ளவாகளெல்லாம் தன்னைவண ங்க அளவிடாதபிரசித்தரிவியமும் பிரகாசிக்காநின்ற யுத்தத்திலே சிறந்தவனாய் -யானை குதிரை காலாள்-தேர்முதலானதும் பெருத்து சத்துருக்களானவர்கள் பயப்படும்படியாக யுத்தவாயுதத்தில்நிறைந்த வீரச்செல்வத்தில்மேன்மையுடையவராவரென்பதாம்,

---

இதுவுமல்லாமல்- ஷை சரித்திரம்-௩ வது-கவி-

வெற்றிவினையின்மீக்கூர ... ... *
வேந்தர்முனைகள்பலமுருக்கிச் ... ... *
சென்றுதும்பைத்துறைமுடித்துஞ் ... ... *
செருவில்வாகைத்திறங்கமழ ... ... *
மன்றன்மாலைமிலைந்தவர்தம் ... ... *
வளநாடெல்லாங்கவர்ந்துமுடி ... ... *
ஒன்றுமொழியவரசர்திரு ... ... *
வெல்லாமுடையராயினர் ... ... *

இதின்தாத்பரியம்.

ஜயத்தைத்தாநின்ற யுத்தத்தில் மேலாகச்சொல்லப்பட்ட வ ரசர்களோடு பலயுத்தஞ்செய்து தும்பைமாலையைத்தரித்து யுத்தத்

தில் வெற்றியைத்தராநின்றவாகைமாலையைச் சூட்டிமற்றவாசர்களு டையபூமிமுழுமையுந்தான்கிரகித்து கிரீடமொன்றுமாத்திரம் நீங்க லாகமற்றவரசருடையசெல்வமெல்லாமுடையவராஞரொன்பதாம்,

---

இதுவுமல்லாமல்-ஷை-சரித்திரம்- ௬-வது-கவி.

மல்லன்ஞாலம்புரக்கின்றூர்மணிமாமவுலிபுனைவதற்குத் ... *
தில்லைவாழந்தணர்தம்மைவேண்டவவருஞ்செம்பியர்தந் ...*
தொல்லைநீடுங்குலமுதலோர்க்கன்றிச்சூட்டோம்டாமுடியெனறு *
நல்காராகிச்சோலன்றன்மலைநாடணையநவைறுவ .. ..*

இதின்தாத்பரியம்,

இந்தப்பூமியையாளப்பட்ட கூற்றுவநாயனுரானவர் க்ஷத்தி ரியரைப்போல்முடிதரித்துக்கொள்வதற்குத் தில்லைமூவாயிரவர்களை வேண்ட அவர்களும் சம்புகுலத்தாராகியநீடித்தபழய க்ஷத்திரியகு லத்தோர்கன்றிமுடிசூட்டத்தகாதெ ன்றுசொல்லி இனியிருந்தால்கூ ற்றுவநாயனுராற் றெந்திரவுகிடைக்குமென்றுயெணணி முடியைக் கொடாமல் (மேற்படிச்சம்புகுலத்தாராகிய சோழங்பர்துவான சோனுளப்பட்டசோதேசம்போகும்படியத்தனித்தாரொன்பதாம்

இதுவுமல்லாம் மேற்படிச்சரித்திரம் ௫-வது கவி.

ஒருமையுரிமைத்தில்லைவாழந்தணர்கடம்மிலொருருடியப் *
பெருமைமுடியையருமைபுரிகாவல்பேணும்படியிருத்தி...*
இருமைமரபுந்தூயவர்தாஞ்சேரர்நாட்டிலெய்தியபின் .. *
வருமையுறவான்மனந்தளர்ந்து மன்றுளாடுங்கழல்பணிவார் *

இதில் தாத்பரியம்

மேற்படித்தில்லைவாழந்தண்கள்தங்களிலொருவீட்டுக்காரரைப் பெருமைதங்கியகிரீடத்தை அருமையாகக்காக்கும்படியிருத்திமற்ற வர்களெல்லாருஞ்சேரதேசம்போன பிற்பாடுமேற்படிக்கூற்றுவநாய ஞர் மனவருத்தப்பட்டு சபாபதியினுடைய பாதத்தைப்பணிந்தா

இதுவுமல்லாமல்-மேற்படிச் சத்திரம்-கூ-வது-கவி.


அற்றைநாளிரவின்கணடியேற்றனக்குமுடியாகப்... ...*
பெற்றபேறுமலர்ப்பாதம்பெறவேவேண்டுமெனப்பரவும் *
பற்றுவிடாதுதுயில்வோற்குக்கனவிற்பாதமலரளிக்க... ...*
வுற்றவருளாலவைதாங்கி வுலகமெல்லாந்தனிபுரந்தார்... ...*

இதின்தாத்பரியம்.


அன்றிரவில் மேற்படிச் சபாநாயகர்பாதமே முடியாகவேண்டுமென்று துதித்துப்பத்தியைவிடாமற் றூங்கப்பட்டநாயனார்கனவில்தன்பாதத்தாமரையைக்கிரீடமாகத்தரிக்க அதைத்தாங்கி உலகமெல்லா மரசாண்டாரென்பதாம்,

இந்தக்கூற்றுவநாயனார்பேரில்கடவுள்பூரணகடாக்ஷம்வைத்தும்சோழனுக்குரியமுடியைகொடுக்கத் தன்னால் முடியாமல் தனது பாதத்தைமுடியாகக்கொடுத்ததினாலேயே சோழன்சந்ததிதவிரமற்றவர்களுக்கு மேற்படிச்சிதம்பரத்தில் முடிசூட்டப்படாதென்பதற்குத்திருஷ்டாந்தமான இந்தக்கூற்றுவநாயனார் சரித்திரத்தினாலே தத்காலத்திலிராநின்ற சிதம்பரத்துச் சிற்றரசர்களே முன்குறித்த இரணியவர்ம்மச்சோழன் சந்ததியாரென்று - பாமரர்கள் - பண்டிதர்களியாவருக்கும்பிரத்யக்ஷமாய்த்தெரியவரலாம்-இந்தவிரணியவர்ம்மச்சோழன் - அல்லது- திருநீற்றுச்சோழனை சைவபுராணநூற்சொல்லப்பட்டவர்களெல்லாம் இந்தச்சோழனே யிந்தச்சிதம்பரமுதலான மற்றசிவஸ்தலம்- விஷ்ணுஸ்தலங்களைக் கட்டிவைத்தபடியால் கடவுளையும் அடியார்களையும் துதிக்குந்தோறும் அவனையுந்துதித்து வருகிறார்கள்- வேண்டியவர்கள் அந்தந்தப்புராணங்களில் வணக்கங்கள்வருமிடத்து கண்டுகொள்ளலாம் இந்தத்திருநீற்றுச்சோழன்சந்ததியாரே அனந்தஞ்சோழர்களாக அனந்தவிடத்திலரசாண்டார்களென்றும், அந்தச்சந்ததியாருக்கே வன்னியரென்றும், 'பல்லவரென்றும, சாமந்தரென்றும், படையாட்சிகளென்றும், பள்ளிகளென்றும், பிரதான ஐந்துபேரையுந்தாங்கள் வழங்கிவருகிற திருஷ்டாந்தங்கள்போல்- முன்-மூன்றாவததிகாரம்- மூன்றாவதுபிரிவில்மனுநீதிகண்டசோழன்புத்திரனை குளக்கோட்டு மகாராஜா இலங்கைத்த

[illegible]சேர்ந்த திருக்கழுமலையி லரசுசெய்யும்படியாகத் தன்பந்துவாகிய தனையுன் னு பூபாலனென் னுமரசனைப் நியமித்ததாகச்சொன்னனல்லவா - அவர்கள்சந்ததியார் தற்காலத்திலரசில்லாமற் குடிகளாயிருந்தும் வன்னியரென்றே வழங்கிவருகிறார்கள் - இதுவல்லாமலிதிற் குறித்துப்பேசிய திருநீற்றுச்சோழன் சந்ததியாராகிய சிலசோழர்கள் பேரிற்செய்த பலபிரபந்தங்களாலேயும் விடலராயசோழன் பலசந்தமாலையாலும் குலோத்துங்கசோழன் கோவையாலும், வன்னியர்களென்றறிந்தும் [illegible] தற்காலத்திற் சிதம்பரத்தில் [illegible] பால [illegible] பட்ட இராமபத்ரசூரப்பசோழனை [illegible] சமூகம்போய் விசாரித்துக் கொள்வாரானால் வன்னியரென்றே வெளியாகும் ஆனாற் பித்தர்புரமென்பதும் சிதம்பரமென [illegible] யிருந்தும்பானிலும் சுவாமியிருப்பிடம் சிதம்பரமென [illegible] யிருப்பிடம் பித்தர்புரமென்றும் வழங்கிவருகின்றது - [illegible] மேலும் இவ்வம்சச்சோழன் சந்ததியாருக்குமுதலிருப்பிடம் [illegible] புர[illegible] வரு-அதற்குச்சமீபத்திற் கொள்ளடக்கரையி [illegible] சாட்டையும், பிற்பாடு - உலாயூர் - தஞ்சை - [illegible] - [illegible] லனென னுந்தவிடங்களிலவர்களுடைய [illegible] பட்டதென்றுதெரியவருகின்றது.



௬ வது - அதிகாரம் - ௩ - வது - பிரிவு



இனிச்சேர - சோழர்களைப்போலே பாண்டியனும் வன்னியனென்றே சில திருஷ்டாந்தங்கள் வருமாறு.



மேன்குறித்துச் சொல்லப்பட்ட சேர-சோழர்கள்-வன்னியர்களென்று திருஷ்டாந்தப்படுத்தி யிருக்கிறபடியால் இவர்கள்சம்பந்தியாகிய பாண்டியனை வன்னியனென்று ருசுப்படுத்த அவசியமில்

௰ ஆகியமித்ரப்பாண்டியனைக் குறித்து எழுதாமல் விட்டுவிட்டே னென்று சிலர் சந்தேகமும் பலர் மனஸ்தாபமும் படுவார்கள் ஆதலாலிந்தவிடத்திற் சுருக்கமாக மேற்படி க்ஷத்திரியராகிய வ[illegible]னியனொ[illegible] மேற்படிப்பாண்டியன் சந்ததி யார் [illegible] ஆனந்தம் பேரிருப்பதுபோல் [illegible] காலத்தில் [illegible] ர்கள் அவர்களிலொருவராகி [illegible] கரித்த குணபாண்டியன் [illegible]

வர[illegible]பாண்டியன்பேரில்

கடிகை[illegible]புலவர் செய்த திக்குவிஜயம்

[illegible]வணக்கம்.

[illegible]

ஆ[illegible]சிரியவிருத்தம்.

விஜய[illegible]புரிந்துமேவாரெல்லாம் *
பாவ[illegible]வியன்புகழைப்பரிந்துகூற *
[illegible]மையாண்மேவு *
சரசவிதயி[illegible]கரீபதந்தலைக்கொண்டேனே *

இ[illegible]தாத்பரியம்.

ச[illegible] பிரசித்த சத்துரு [illegible] சொல்லப்பட்ட விளையாட்டை[illegible] யித்து அதனாற் சத்துருக்களெல்லாந் துதிக்கப்பட்ட வரகுண[illegible] பாண்டிய வன்னியனுடைய [illegible] ஆசையுடன் சொல்லக் [illegible] ளை வணங்கினே னென்பதாம்.

இந்தக்கவியினால் வரகுணராமபாண்டியன் வன்னியனென் பர் வருமறிந்துக்கொள்ளலாம்,

*

இதுவும்-மேற்படி-திக்குவிஜயம்-பாயிரம்-க-வது-கவி.

ஈரடித்தாழிசை.

ஆதியுமையாண்மீனாட்சியம்மைசரணைத்தவப்பேறே *
நீதியரசுசிவகிரியினீங்காதிருக்கநிலைபெற்றே .. ..*

இதின்தாத்பரியம்,

ஆதியிலேபார்வதியானவள் மீனாட்சியாய் வந்தவதாரஞ்செய்து தவத்தின்கிருபையினாற் பெற்ற நீதியையுடையவரசனானது சிவகிரியிலென்றைக்கும் நீங்காமல் பெருமையுடன் நிலைபெற்றிருக்குமென்பதாம்.

இதுவுமல்லாமல்-சாற்றுப்பிரபந்தம்.

ஆதியுமைமீனாட்சியம்மைபங்கின்மேவுசொக்க ... *
நாதர்கொடுக்கநடாத்துகின்றசெங்கோலான் ... *

இதின்தாத்பரியம்,

ஆதியில் மீனாட்சியென்னுமாகியானவள் பக்ஷத்திற்பொருந்தி (மறுபடிசொக்கநாதர்பெற்று) அவரால் கொடுக்கப்பெற்று நடத்துகின்ற செங்கோலையுடையவன் வரகுணராமபாண்டிய வன்னியனென்பதாம்.

இதுவும்-மேற்படி திக்குவிஜயம்-உ-வது-தாழிசை.

சொக்கர்கொடுத்தசெங்கோன்மைத்துரைப்பாண்டியனை
வரகுணனைத், தக்கவிசயத்திறம்பாடித்தமிழாற்றநிக்கம
னர்த்துணிந்தேன் ... ... *

இதின்தாத்பரியம்,

சோமசுந்தரபாண்டியனென்னும் சொக்கநாதராற் கொடுக்கப்பட்ட செங்கோலையுடைய அரசனாகிய வரகுணபாண்டியனை

இந்த இரண்டுநூலிற்சொல்லிய கவிகளினால் பாண்டியராஜ்யத்திற் பார்வதியானவள் மீனாட்சியாக யாகாக்கினிமூலமாய் ஐ. யில் மலயத்துவச பாண்டியன் மகளாகவந்துமேற்படிப்பாண்டியனுக்கு ஆண்பிள்ளையில்லாததனால் தான் அந்தவரசைக் கைப்பற்றியாண்டு சொக்கநாதனென்று சொல்லப்பட்ட சோமசுந்தர பாண்டியனை விவாகஞ்செய்து தன்புருஷனாகிய சொக்கநாத பாண்டியன் வசத்தி லொப்புவித்தப்பிறகு உக்கிரபெருவழுதி பாண்டியனைப் பெற்று மேற்படி யரசு நிலைநிறுத்தி அந்தச் சந்ததியை விளக்கி வைத்தபடியால் அந்தச் சந்ததியில் வந்தவர்களே சிவகிரிய ரசாதலா லாதியில் மீனாட்சியி ... நிலைபெற்ற அரசென்றும், சொக்கர் கொடுத்த செங்கோன்மையென்றுஞ் சொன்னார் - ஆனாலந்தச் சந்ததியார் மதுரையைவிட்டு இவ்விடம் வருவானேனென்றுசிலர் யோசிப்பார்கள் பெரியராஜதானியைக்காலகதியால் வேற்றரசர்கைப்பற்றியகாலங்களில் அந்தவராசசந்ததியார் தங்கள்தேசத்துக்குள்ளே சிற்றரசாகுதலும் இராஜகுடித்தனக்காரராகுதலும் சகஜம்-மீனாட்சி யுற்பத்தியும் சோமசுந்தரபாண்டிய னரசுசெய்தது முதலானதுந்தெரிந்துக்கொள்ளவேண்டியவர்கள் திருவிளையாடற்புராணத்திற்கண்டுகொள்ளலாம்.



இதுவும்-திக்குவிஜயம் ௫ வது கவி.

சாற்றும்விஜயச்சிவகிரியைத்தமிழோர்மறையோர்வடவ
ரையோ, ரூற்றுமலையோர்முதற்புகழ்செய்யுயர்ந்ததமி
ழ்நாட்டரசனன்றே ... ...*

இதின்தாத்பரியம்.

சொல்லப்பட்டவிசயத்துக்குரிய சிவகிரியரசனே தமிழோர்களும்- பிராமணர்களும்- வடவரையோர் - ஊற்றுமலையோர்- முதலானவர்கள் துதிக்கப்பட்ட உயர்ந்த தமிழ்நாட்டினது அரசென்பதாம்.



இதுவும்-ஷை-காதல்.

தென்னன்வரகுணராமச்செற்றொட்டிக்காளே ... *
மன்னவனைத்தன்னருமைமைந்தனெனவேபுகல்வோம் *

இதின்தாத்பரியம்,

பாண்டியனாகிய வரகுணராமன் செற்றொட்டிக்காளோமயன் மரசனைத் தன்னருமைமகனென்று சொல்பவனென்பதாம்,



இதுவும்-மேற்படி காதல்,

பாரபுயன்தோண்மாலைப்பாண்டியனைமைத்துனனென்
றாரமுதவாயாலழைக்கும்பிரதாபன் .. .. *

இதின்தாத்பரியம்,

மேற்படி வரகுணராமபாண்டியனானவன் தோண்மாலைப்பாண்டியனை மைத்துனனென்றழைக்கும் பெருமையையுடையவனென்பதாம்.



இதுவும்-மேற்படி காதல்,

சீராரணசூரபாண்டியசிகாமணியை .. . .*
ஏரார்மருகனெனவியம்புமிங்கிதவான் ... .*

இதின்தாத்பரியம்,

முன்சொல்லப்பட்ட பாண்டியனானவன் சிறப்பையுடைய ரணசூரபாண்டியனை மருமகனென்று சொல்லுங்குறிப்பையுடையவனென்பதாம்,



இதுவும்-மேற்படி-காதல்,

மன்னவனுஞ்செல்வவரகுணராமப்பாண்டிய ... ..*
தென்னனிருக்குஞ்செழுங்காவில்வந்தனுக... ... *

இதின்தாத்பரியம்,

செல்வத்தையுடைய தென்னனென்று சொல்லப்பட்ட வரகுணராமபாண்டியனிருக்கும் பூங்காவில்வந்து (முன்சொல்லப்பட்ட) பெண்ணானவள்) சேர்ந்தாளென்பதாம்,

இக்கவிகளினால்வரகுணராமபாண்டியனையும், அவன்பற்றுவாகியமைத்துனன் மருமகன்-முதலானவரசர்களையும், ஆதிபாண்டிய வம்சமென்று சொல்லும்படியாய்த்தமிழரசனென்றும், தென்னனென்றும், பாண்டியனென்றுங் குறிப்பித்துச்சொன்னார்,

இதுவும்-திக்குவிஜயம்-௭-வது-கவி.

வேந்தன்வரகுணராமபாண்டியவன்னியனுக்கேவிசயஞ்
சொன்னேன், மாந்தரெல்லாமகிழவிசைவளர்த்ததுவும்
விசயமால்வாயாதன்மேற ... ... *

இதின்தாத்பரியம்,

அரசனாகிய வரகுணராமபாண்டியனென்று சொல்லப்பட்ட வன்னியனுக்கே ஜெயத்தைச் சொன்னேன் (மற்ற) மனிதர்களுக்குச் சந்தோஷிக்கும்படியான புகழையுயர்த்தும் வெற்றியின்பெருமை கிடையாதென்பதாம்,

(*)

இதுவும்-ஷை-திக்குவிஜயம்-௯-வது-கவி-

மஹாராஜா வுற்பவணம்,



பரிமயிற்குமாரனிவனெனப்பகர்வர்படைமுனைச்சமரில
றியலா, வெரியனற்பொறியிலவனுதித்ததவனெழுதிசை
க்கடவுமாரபனே ... ... *

இதின்தாத்பரியம்.

சுப்பிரமணியனே இந்தவரகுணராமபாண்டியனென்று சொல்லுவார்கள்- அதையுத்தமூகத்திலேயறிந்துக்கொள்ளலாம்- (அதெப்படியென்றால், சுப்பிரமண்ணியன் சூரனைச் செயிக்கும்படியா

மக்கினிச்சம்பந்தமாகவந்துபிறந்தவன்) இந்தவரகுணராமபாண்டியனும் எரியாநின்ற வக்கினியில்நின்று பிறந்தானென்பதாம்,

இதுவும்-காதல்.

வன்னியகுலதீபவரகுணராமப்பாண்டிய ... ...*
மன்னனெனத்தென்மலையில்வாழ்வேந்தாவெச்சரிக்கை*

இதின்தாத்பரியம்,

(அரசகுலமாகிய) வன்னியகுலத்துக்குத் தீபம் போன்ற வரகுணராமபாண்டிய வரசனே பொதிகைமலையில வாழப்பட்டவேந்தனே - எச்சரிக்கை-என்பதாம்,

—*—

இதுவுங்காதல்,

வன்னியகுலராஜவரகுணராமப்பாண்டிய ... ...*
நன்னயவால்வாராமல்நங்கைமயங்கிச்சோர்ந்தாள் ... *

இதின்தாத்பரியம்,

அரசனாகிய வன்னியகுல வரகுணராமபாண்டியன் வராததால் மேற்படிப்பெண்ணானவள்மயங்கிச்சோர்ந்தாளென்பதாம்,

இந்தக்கவிகளினாற் பாண்டியனை வன்னியகுலமெனவும், எரியாநின்ற வக்கினியி லுதித்தவனென்றுஞ் சொன்னதற்குக்காரணம் வன்னியர்களே மூக்குல வரசர்களானபடியாற் சொன்னதேதவிர வேறல்ல,

---

இதுவும்-ஷை-திக்குவிஜயம-உகை-உது-கவி.

மனுபதியாஞ்சோழனுடன் வரகுணபாண்டியனும் *
வந்ததுபோற்புலிக்கொடியுமகரகேதனமு ... ... *
மினிதுவரக்கண்டுமீனக்குடத்தையடுக்கு ... ... *
மிந்துகலைமானையுங்கொண்டிராக்காலம்வருமே ... ...*

இதின்தாத்பரியம்.

வரகுணராமபாண்டியனுடன் சோழராஜனும் வந்ததுபோற் சோழனுக்குரிய புலிக்கொடியும், பாண்டியனுக்குரிய மீனக்கொ

டியும் பிடித்துவரக்கண்டு ஆகாயத்திலிராநின்ற மீனராசியானது கும்பராசியிற் சேர்ந்தது கலையுடைய சந்திரனானவன் - மானைக் கொண்டு இராக்காலத்தில் வருமென்பதாம்.

மற்றுங்காதல்,

வானப்பரப்பிற்கோடு வயலேரிப்பொழிலிற் சுமீதுறுமுகில் .. *
நாரியைவேருவர்ப்பியிராமிடையான் ... ...*

இதன் தாத்பரியம்,

விருணார மெபாரிய... முகுருகு - முதலானபல வனங்களிலமீடுகள் ... சும்மையான செம்பிநாட்டுக்குடையானென்பதாம்,

---

இதுவுங்காதல்,

சந்திரகலையின்மானைத்தாவிப்பிடிப்பதுபோல் ... *
வந்தபுலிக்கொடியும்வானுலகமீதோங்க ... ... *

இதன் தாத்பரியம்,

சந்திரகலையிலிராநின்ற (களங்கமாகிய) மானை எட்டிப்பிடிப் பதுபோல் புலிக்கொடியானது பானையடியனெதிரி லோங்குமென் பதாம்,

---

இதுவுங்காதல்,

திங்களுநிவினை பாற்செய்மெலதுபேனையுங்கள் ... *
பங்கிலிட்டநெடுமானமேற்பாயமீன்டாலிலங்க ... *

இதின்தாத்பரியம்,

சந்திரன் - நட்சத்திரங்களாகிய மீன்களிடத்திற் சென்று என் பேனையுங்களுக்கிட்டழைப்பது என்னத்துக்கென்றுகேழ்க்கும்பா வனைபோல பாயாநின்றமீனக்கொடியானது ஆகாயத்திற் பிரகாசிக் குமென்பதாம்.

இந்தக்கவிகளினாற் சோழபாண்டியர்களொன்றானதால் மீ னக்கொடியும் - புலிக்கொடியும் - பிடித்துவந்ததாகவும், செம்பிநா ட்டுக்குரியவனென்றுஞ் சொல்லியிருக்கின்றது,

இதற்குமேற்கோள் திருவிளையாடற்புராணம் திருமணப்படலம்
௧௮-வது கவி

மீனவன் கொடியுங்கான வெம்புலிக்கொடியுஞ்செம்பொன் *
மானவிற்கொடியும்வண்ண மயிற்பொறை முகமாநின்றுகாட்டிப் .. *
பானலங்கருங்கட்செவ்வாய்வெண்ணகைப்பசுந்தோணிம்பத *
தேனலம்பலங்கல்வேய்ந்த செலவிதேர்மறுகிற்செல்ல ... *

இதின் தாத்பரியம்.

பாண்டியனுக்குரிய மீனக்கொடியும், சோழனுக்குரிய புலிக்கொடியும், சேரனுக்குரிய விற்கொடியும், மயிற்பீலியாற் செய்தவட்டங்களும், கறுத்தகுவளையைப்போன்ற கண்களும், சிவந்தவாயும், வெளுத்தநகையும், பசுமைபொருந்திய தோளிலணிந்த வேப்பமாலையுந் தரித்த மீனாக்ஷியம்மை தேரின் பக்கமாய்ச் சூழ்ந்துவரவென்பதாம்.

இந்தக்கவிகளினாற்சேர சோழர்க்குரிய கொடிகளும் மேற்படி மலையத்துவசபாண்டியன் புத்திரியாகிய மீனாக்ஷிக்குரிய தென்றும், வரகுணராமபாண்டியவலவேடு முகத்துப் புரியதென்றும், சொல்லியிருப்பதினால் சேர-சோழ தலைமைபாண்டியருக்குரியதென்றும், பாண்டியன் குலமே சேர-சோழகுலமென்றும், யாவருக்கும் பிரசித்தமாகும்,

இந்தத்திக்குவிசயங்களினாலும் இவர்கள் பஞ்சதிராவிடராகிய அனந்தம் பாண்டியர்கள் பேரிற்செய்த கோவை உலா முதலான பல நூல்களையுஞ் செவ்வையாய்ப் பார்ப்பார்களானால் விந்தமுன்ற குலமொன்றென்றும், இதுதவிர- ஆதிபாண்டியன் சந்ததியே இவ்வித விளங்கிநின்ற வரகுணராமபாண்டியனை சந்ததியாரென்பதற்கு அந்தநூல் திருஷ்டாந்தத்தினாலும் ஆதிதொடங்கி நாளதுவரையிலும் பாண்டியனென்று வழங்கிவருகிற பட்டப்பேரினாலும் அனந்தஸ்தல ஸ்தாபனங்களுக்கிவர்களேயுரியவர்களென்பதினாலுந் தெரிந்துகொள்ளலாம்.

ஆனாலாதியிலிவர்களுக்குக் கீழ்ப்பட்டிருந்த சிலஜாதிகளான ஜமீன்தாரிகளிப்போது மேன்மையடைந்திருக்கிறார்கள்- இருந்தபோ

திலும் தங்கள்தங்கள்ஜாதிக்குரிய பட்டப்பேராகிய தேவர்களாய்க் கவொன்றுவழங்கிக்கொண்டுவந்தார்கள்- இப்போது தங்களுக்குப்பெருமையைத்தோன்றும்படியாகத் தங்களுக்குள்ளே பாண்டியனென்றுவழங்கிக்கொள்ளுகிறார்கள்- ஆனாலவாகன்பேடரிற் பாடப்பட்டபிரபந்தங்களிலும் இராஜாங்கத்து ரிகார்டுகளிலும் தங்கள்சாதிக்குரிய பட்டப்பேராகியதேவரென்று குறிக்கப்பட்டுவருகின்றது- இந்தத்திருஷ்டாந்தத்தினாலேயே இவர்களுடைய வன்னியர் சந்ததியாரே ஆதிபாண்டியர்சந்ததியாரென்றும்பிரசித்தமாய்த்தெரியவரலாம், அல்லாமலுமலையனூர் தாழனூர் அரசுசெய்த பாவாடைராயனுடைய சரித்திரத்தினில் மேற்படிப்பாவாடைராயனென்று சொல்லப்பட்டவன்னியனானவன் மதுரைப்பாண்டியபட்டணமாளப் பிரயத்தனஞ்செய்ததால் சோழபுத்திரனாகப்போனசரித்திரத்தினும் மேற்படிப்பாண்டியனும்முன்பிறந்தவன்னியர்குலத்துதைத்தபேர்களுக்கு முரியவனென்றும் அவனுஞ்சோழர்சந்ததியேயென்றுபிரசித்தமாகும், அல்லாமல்(மூன்றாவதுகாரணம்)ஐந்தாவதுபிரிவில் அரசருக்குரியபேர் வன்னியனென்று சொல்லியிருக்கின்றேனல்லவா- அதற்றிருஷ்டாந்தமாகக்காட்டப்பட்டகல்லாடர் (கஅ) வது கவியினாலேயேமேற்படிப்பாண்டியனும் வன்னியனென்றுருசுவாகும், அதுவுமல்லாமல்- கூஅஉ- வருஷம் - ஜூலை-மீ- பதிப்பித்திருக்கிற (ராயல்வெஷியாடிக்ஜெனல்பேபரில் இந்த ஹிஸ்டிரியப்சிலோனென்னும் சரித்திரத்தில் - அயோத்தியரசனாகிய ரகனென்பவனுடைய மருமகனாகிய உக்ரசேனன்சந்ததியில் வந்தமாதுட்டபுரவியென்பவள் உக்ரமாசேனனைக் கலியாணஞ்செய்து இலங்கைத்தீவில் அடங்காப்பத்து என்னுமிடத்தில்வாவொத்திமலையோரத்தில் அரண்மனைகட்டியரசாளுங்காலத்தில் அவர்கள்சிங்கமுகமும் வாலுமுடையபிள்ளையைப்பெற அதற்குவரராஜசிங்கமென்னும்பெயரைக்கொடுக்க அந்தப்பிள்ளையைவிபீஷணனானவர் இலங்கைத்தீவுமுழுமைக்கு மரசனாக்கி இராமராசாதனைக்குக்கொடுத்த முத்திரைமோதிரம் கிரீடம்-வாள்-முதலானதும்வீரமாகாளியென்னுந் தேவதையுங்கொடுத்துத்தானித்திய பதவியடைந்ததாகவும் வரராசசிங்கமெனுமரசன் மதுரையையாண்ட பாண்டியன் குமாரத்தியைத்தான்விவாகஞ்செய்துக்கொள்ளாதனுப்பவும்போ

துப்பாண்டியனானவன் சாமதுதி என்னும்பேரையுடைய தம்மகளை விவாகஞ்செய்துக்கொடுக்க வனுப்பித்தகாலங்களி லனந்தஞ்சேனைகளையும் தன் பந்துவாகிய அறுபது வன்னியராச கூட்டங்களையும் அனுப்பிவைத்ததாயும் மேற்படி வராசசிங்கம் இந்தவறுபதுகூட்டத்தாராகிய வன்னியர்களுக்குத் தன் தகப்பனுண்ட அடங்காப்பத்தை யரசாளும்படியாகக்கொடுக்க அவர்களதை யரசாண்டுவந்து அவர்கள்தெல்லிந்தியாவிலிருக்கும்- மதுரை - மைசூர் - திருச்சினுப்பள்ளி - மலநாடு - மலையாளம் - தொண்டமண்டலம் - இந்தநாடுகளிலிருந்து பிராமணர்முதலான பதினெட்டுசாதிகளையும் வரவழைத்து அந்தத்தீவிலிருந்தபல யிலசாதிகளை புஞ்செயித்தாந்தான்கொண்டுவந்தபதினெட்டுசாதிகளையுங்குடியேற்றினாரென்றுமமேற்படிப்புஸ்தகத்தில்-௬அ வது-பாராவில்- ௫௨- பாண்டியராகியவன்னியகூட்டத்தார்சிலராஜாக்களைக்கொண்டுஇலங்கைத்தீவுநகரையோரங்களிலிருந்தஅசுரர்களையெல்லாஞ்செயித்து- ௫ இடங்களில்இராசதானியைஸ்தாபித்துஅதற்கு வடக்கியநாடென்றுபேர்கொடுத்து இளஞ்சிங்கவாகுவென்பவனையாசருக்கமற்றவர்கள் தங்கள்பட்டணமாகிய மதுரைக்குத்திரும்பிவரும்போது(தமிகசல)மென்னுமீனினலபாயநேரிட்டிறந்ததாகவும் அக்காலத்தில் மதுரையிலிருந்தஇவாகன் ராணிகள் மதுரைமுதலான பிரதேசங்களை வெகுகால மரசுசெய்து தங்கள் புருஷர் கியாபகம்வந்து தங்கள் புருஷரிராநின்ற இலங்கைக்குப்போகும்படி பிரயாணப்பட்டு தங்களோடுகூட சில பிரபுக்களாகிய இராச வம்சத்தாரையும் கில்லெழுவாயிரவரையும் செட்டிகளையும் - கூடலூர் செணங்களையும் - கோமட்டிகளையும் மூன்றுவிதமானவாணியரையும்-கவரைகளையும்-மறவரையும்-கருமாய்தச்சன் கன்னான்-தட்டான்- சங்கமர்-தாதர் பதினெட்டுகுடிமக்கள்-கூலிக்காரர்-அகமடியர் தாசிகள்-படவர்-சக்கிலியர்- பறையர்- ஆரியபிராமணன் ஒட்டன்தொட்டியன்-வெள்ளாழன் - மேளமடிக்கிறவன் இவர்களையழைத்துக்கொண்டு கும்பகோணம்வந்து அவ்விடத்திலிராநின்ற தங்கள் குருக்கள் மாரைக்கண்டு தாங்களிலங்கைக்குப்போகவேண்டுமென்று சொல்ல அவர்களிவர்களை யாசீர்வதித்துஅவர்கள் ஆறுகுருக்கள்மாரையும்-விநாயகர்-சுப்பிரமணியர்- முதலான

சில விக்கிரகங்களையும்,(௯௰)ஜங்கமர்களையும்,(௮)தாதர்களையும்(௭௰) வீரர்களையும், இதல்லாமலிவர்கள் கொண்டுவந்தசாதி யெவ்வளவோ அவ்வளவுமவர்கள்கொடுக்க அவர்களையுமிவர்களழைத்துக்கொண்டு இலங்கைத்தீவிலிராநின்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தபோது இந்த வன்னியராணிகள் மூன்கப்பலில் திமிங்கலமச்சத்தாலிறந்தவர்கள் சமாச்சாரத்தை இவர்களுக்கறிவிக்கும்படியாய் மதுரைக்குவரப்பட்ட தூதனைக் கண்டு சமாச்சாரந் தெரிந்துக்கொண்டு இறந்தவர்களுடைய பெண்சாதிகளெல்லாம் அக்கினிப்பிரவேசமானார்கள்- இறவாதிருந்த ஷவந்து பாண்டிய வன்னிய ராணிகள் தங்களரசை ஐந்திடத்தில் ஸ்தாபித்துத்தங்களோடுகூடவந்தவன்னியராசகுமாரர்கள் மூகமலை-யாழ்ப்பாணமுதலான மூன்றிடங்களில் தங்களரசை ஸ்தாபித்து அரசுசெய்து தாங்கள்கொண்டுவந்த மேற்சொன்ன பலசாதிகளையும் பலவிடங்களிற்குடியேற்றி அரசைநடாத்திவந்தார்களென்றும், அந்தப்பாண்டியசந்ததியார்களே கண்டிதேசமுதலான அனந்தவிடங்களிலரசுநடத்தி வந்ததாகச்சொல்லுகிறசரித்திரத்தைச் செவ்வையாய்ப் பார்ப்பார்களானால் மேற்படிப் பாண்டியர்கள்சேரசோழகுலமாகியவன்னியர்களென்றுயாவருக்குந்தோன்றும்-இதுபோலனந்தநூல்களினாலும்பாண்டியர்கள்வன்னியர்களென்று தெரிந்துக்கொள்ளலாம் -ஆனால் மதுரையிலிருந்த பிரதானமானபாண்டியசந்ததியார்கள் மதுரையைக்கைவிட்டு சிவகிரியென்னுமிடத்திற் சேர்ந்தகாலவஸாகணக்கானது சாலிவாகனம்- ௯௮-ம் வருஷமென்றுசிலசரியானசரித்திரங்களினாலறிகிறோம்,



௪-வது அதிகாரம் நாலாவது பிரிவு.

இந்தப்பிரிவில் மூன்றுகுலச் சந்ததியார்கள் முற்காலத்திற்பேரரசாயிருந்து தற்காலத்திற் சிற்றரசாயிருக்கப்பட்டவர்களைக்குறிப்பிக்கிறேன்.



இந்நாலாவததிகாரம்- முதலாவது- பிரிவிற்-சேரன்சந்ததி

தோன்றும்படி மேற்படிக்கோவில்பணத்திலே னுடையார்பாளையத்
தார் உச்சவமென்று நாளதுவரையிலு மாசன்போரா லுச்சவஞ்செ
ய்து வருகிறார்களதுவுமல்லாமல் மேற்படிக்கோயில்கலிமேலகா
ரியும் பழுதுபார்க்க வேண்டியதாயிருந்தாலும் ஏதாகிலும்பு
துவேலைசெய்ய வேண்டியதாயிருந்தாலும் மேற்படியுடையார்
பாளைய விராசதானிக்குவின்னப்பமூலமாய்த் தெரிவித்தேசெய்
துவந்தார்கள்மேற்படிக் கோயிற்றிறவுகோலுமேலான்றுமேற்படி
ராசதானியிலிருந்துவந்ததாய்ப்பெரியோர்களியாவருக்கும் பிரசித்
தமாய்த்தெரியும்,இப்போதும்விசாரிப்பார்களானறிந்துக்கொ
ள்ளலாம்- இந்தச் சங்கதிகளிலேயேயவர்களாரியிற் காஞ்சிபுரமா
ண்ட சோழன் சந்ததியார்களென்றதவர்களில்பிரதானமானவனொரு
பாமராளுக்குந்தெரியவரலாம்,இவர்கள் நாளதுவரையிற்றுங்கள் சூ
ரியவம்சமென்றும்,பாஸ்கரகோத்திரமென்றும், வழங்கிவருவதுமந்த
விரமேற்படிராசவிந்திரிகள் சூரியனைமூன்றுமுறைமையென்று
வஸ்திரயினமானபிரானகாலங்களில்பிரத்தியட்சத்திற்பலித்ததும்,மேற்ப
டிச்சூரியனைப்பாராமலும் வந்தார்கள் இதுதவிர ஸ்ரீரங்கத்துக்குபூ
ரியவர்களென்பதற்குத்திருவிடாந்தமிடமென்றும், நாயன்மு
ன்னோர்களுக்குமேற்படிஸ்ரீரங்கத்திலனேகம்ஐயர்ந்தான்மரியாதைகளெ
நடந்துவந்தது இப்போது காலதேசத்தால் நின்றிருந்தபோதிலு
ம்தத்காலத்திற் குறிகியிருக்கிற மேற்படி ராசசந்ததியார் ஸ்ரீரங்க
த்துக்குப்போவார்களானால்கோவிலிலிருந்து பரிவட்டமாலைமுதலியமரி
யாதைகள்கோபுரவாயில்வரையில் எதிர்கொண்டுவந்து கட்டியிட்
டுக்கொண்டுபோகிறவழக்கமானது நாளதுவரையிலபாருமறிந்திருக்
றதுந்தவிர ஸ்ரீரங்கத்தில்விசேஷதரிசனமாகியவைகுண்டஏகாதசியி
ல்சுவர்க்கவாயிற்றிறக்கவேண்டுமானால்ந்தஸ்ரீரங்கத்துப்துங்கள் சந்தத்தி
யாகியஒருவன்னியனைக்குடியாயிருத்தி அந்தக்குடியில்வரப்பட்ட
பிரதானமானவனுக்குமேற்படிக்கோவிலர்ச்சகராற் பரிவட்டங்கட்
டுதல்முதலானமரியாதைசெய்து அக்னிதீக்ஷைபண்ணி யந்தக் கோ
விலுக்குடையஸ்ரீமத்ஜீயரிடத்திருக்கும் வாயிற்றிறவுகோல்முதலிய
வைக்கைக்கொண்டுஜீயருந்தானுமெதிர்முகமாகவாயில்கபாடத்தண்
டைவந்துமேற்படிக்கபாடத்தின்மேரிற்சலந்தெளித்துப்பிரம்பாற்
றட்டித்தன்கைத்திறவுகோலால்மேற்படிக்கதவைத்திறப்பதல்லாமல்

ஸ்வர்க்கவாயிற்றரிசனகாலத்திற்றான்முன்னும் சுவாமியின்னுமாய்வந்துயாவருக்குந்தெரிசனங்கொடுக்கிறவழக்கம்நாளதுவரையில்நடந்துவருவதையும்மேற்படியரசர்முன்னோர்களாற் கட்டப்பட்டதென்றுயாவருக்குந்தோன்றும்படியந்தஸ்வர்க்கவாயிற்கோபுரத்துக்குப்பள்ளிகோபுரமென்றேநாளதுவரையில்வழங்கிவருவதும், கார்த்திகைதீபத்திற்போதுஸ்வர்க்கபானைதகிப்பிக்குங்காலையில்மேற்படியாருக்குச்செய்யப்பட்ட மரியாதையாலும் யாவரும்பார்த்துச் செவ்வையாய்விசாரிப்பார்களானாற்பூர்விககாஞ்சி ஸ்ரீரங்கமுதலானதலங்களைக்கட்டிவைத்தசோழன்சந்ததியாரென்று தெரியவரலாம்.

இதல்லாமற் காஞ்சீபுரம்விட்டுஇவர்கள்தென்தேசம்போனசமயங்களில் நேரிட்டயுத்தங்களிற் சத்துருக்களைச் செயித்துஜயமடைந்ததுக்கு நாளதுவரையில்ஜயங்கொண்டசோழபுரமென்னும்பேரிட்டுத் தங்கள்பேரினாற்சிலாசாசனம்ஸ்தாபித்துநாளதுவரையில்மேற்படிகிராமத்தாங்களேயனுபவித்துவருகிற அனுபவமும், தங்கள்முன்னோர்களாற்கட்டப்பட்டதங்கள் நாளதுவரையில்கையாண்டுவரப்பட்டஏரிக்குரங்கசமுத்திரமென்றும் வழங்கிவருகிறதிருஷ்டாந்தத்தினாலும் இவர்களும் பிரதான சோழன் சந்ததியாரென்றும்- ஸ்ரீரங்கத்துக்குரியவர்களென்றும் - யாவருக்கும்பிரசித்தமாகும். இதல்லாமற் பழுவூரிலிருக்குஞ்சிற்றரசருக்கும் கச்சிராயரென்கிறபேர்வழங்கிவருவதால்அவர்களுமிவர்கள்சந்ததியிலொருகிளையாகவேயிருக்குமே தவிர வேறல்ல.

இதல்லாமல் அரியலூர்சமஸ்தானத்துக்குரிய அரசசந்ததியார் திருவானைக்காவலென்னுந்தலத்தைக் கட்டிவைத்த கோச்செங்கச்சோழன் சந்ததியாரென்றுமேற்படித்தலத்திலவர்களுக்குத் தற்காலத்தில்நடக்கிறமரியாதையாற்றெரிந்துக்கொள்ளலாம்.

இந்தச்சந்ததியாருக்கு மானங்காத்தமழுவ ஒப்பில்லாதவிஜயரங்கனென்றுதலைமுறைதலைமுறையாய்ப்பட்டப்பேராய்வழங்கிவந்திருக்கிறபடியால்சோழனுக்குரிய அபயனென்கிறபேரைப்பற்றிமானங்காத்தவனென்றும், இவர்கள்வம்சத்துக்கு மூல மக்கினியானபடியால்- மழுவரையனென்றும், விஷ்ணுவைப்பற்றி விஜயரங்கனென்றும்வந்திருக்கின்றது.

இப்போது குறிக்கப்பட்டசிற்றரசர் மூவர்களும் ஆதிஇராசமச்சோழன்சந்ததியாகியசிதம்பரத்துக்குரியவரசனும் ஆராசசந்ததியொன்று அவர்களுக்குள் நடக்கிற வழக்கத்தாயவருகின்றது- இதுவுமல்லாமல் விருத்தாசலத்துக்குரியவுடைய சந்ததியார் அதற்கடுத்தஊற்றங்காலென்னும் படைவீட்டில் பரமேஸ்வர வன்னியனென்கிறபேரை வகித்திருந்து வருகிறார்கள் - இதுதவிர சீர்காழி கீழூர்-மாயூரம்-கும்பகோணம்-சாமிமலை-மருதநல்லாவவனந்தவிடங்களிற்பூர்வீகவரசசந்ததியார்கள் சிறுசமஸ்ப்பார்க்கினுங் குறுகி தற்காலத்திலு மிருக்கிறார்கள் இதல்லாமல்திருநெல்வேலியைச்சேர்ந்தஏழாயிரம்பண்ணைச்சமஸ்தானத்தாரும் ஆதிசோழனுடையசந்ததியாராய் இப்போது சிற்றரசராயிருந்துவருகிறார்கள் - அப்படிச்சிற்றரசராயிருந்துதிருநெல்வேலியைச்சார்ந்த இருபத்திரண்டுசமீன்தாரிகளும் தங்களுக்குள் சுபகாரியமுதலானதுந்தக்காரியமுடிக்கவேண்டியதாயிருந்தாலும் மேற்படி ஏழாயிரம்பண்ணைச்சோழன்சந்ததியாராகிய அரசருக்குத் தாம்பூலம்வைத்து மரியாதைசெய்து உத்திரவுபெற்று நடத்திவந்தார்கள்.

இதுதவிர இவ்வரசர் மற்றசமஸ்தானங்களுக்குப்போவாராகில் அவர்களெதிர்கொண்டுவந்துமரியாதைசெய்து அழைத்துக்கொள்வதும் மற்றசமீன்தாரிகள்தன்சமூகம்வருவாராகில்வந்தவர்கள் தங்களுக்கு மரியாதைசெய்து நின்றுஉத்திரவுசொல்லும்மரியாதியையும்பெற்று மற்றசமீன்தாரிக்குள் விவாதம் நேரிட்டகாலத்திற்றாஞ்சொன்னபடி அவர்கள்கேட்டு நடந்துக்கொள்ளவுமான அதிகாரத்தையுஞ்செலுத்திவந்தார்கள்- தற்காலத்திற் பூர்வீகமாய்நடந்து வந்ததுபோல்காலவித்தியாசத்தால் அவ்வளவாக நடவாவிட்டாலும் ஏறக்குறைய அந்தமரியாதை இப்பவும் நடந்துவருகின்றது- இதுபோலிந்த - நாலாவததிகார - மூன்றாவது பிரிவிற் சொல்லப்பட்ட பாண்டியன்சந்ததியாராகிய சிவகிரியை யாளப்பட்ட வரசர்கள் மற்றப்பலசாதி ஜமீன்தாரிகளால் மரியாதை செய்யப்பட்டு வருகிறார்கள்-மேற்படிப் பாண்டியன் சந்ததியாரைச் சேர்ந்தசமீன்தாரிகளும்சிலரிருக்கிறார்கள்.

ஈதல்லாமலிந்தத் தமிழ் நாட்டுக்குள்ளும் இலங்கைத்தீவி லும் சேரன்- சோழன்- பாண்டியன் சந்ததியாராகிய வன்னியர்க ளிலனந்தஞ் சிற்றரசர்களுஞ் சமீன்தாரிகளு மிருக்கின்றார்கள் - ஆ ளுகின்றஜாதியில்மாத்திரந்தானுசிற்றரசர்களுஞ் சமீன்தாரிகளுமிரு க்கின்றார்கள் சர்வஜாதியிலுஞ்சிற்றரசர்களுஞ் சமீன்தாரிகளுமிரு க்கின்றார்க ளென்றுசிலர் சொல்லுவார்கள்-அந்த விபரத்தைச் செவ் வையாய்வெளியிடுகிறேன் - அதாவது-சேர-சோழ-பாண்டியராகிய வன்னிய வரசர்களுக்குப்படைத்துணையென்றுசொல்லப்பட்டது பலசாதியாரும் அரசரால் கொடுக்கப்பட்ட சிலபூமிக்கு ... ட்டுமிதுவலாயிற்சிற்றரசராயுஞ் சமீன்தாரியாயு மிருந்துவருகிறார்க ள்-ஈதல்லாமல் துலுக்கர்கள் இந்தப்பூமியைக் கைக்கொண்ட காலத் தி லவருக்குதவியக்காரராகிய வடக்கத்தி வடுகர் முதலான பலசாதி களும் நயாயினால் சிலபூமிகொடுக்கப் பெற்றுஜமீன்தார்களாயிருந் துவருகிறார்கள்-அப்படிமுன்னரசர்களுடையபடைத்துணைகளும்நய பாயினாற்கொடுக்கப்பட்டசிலபூமியையாளு மமற்றவர்களும்சமீன் தாரிகளாயிருந்தபோதிலும்முன்சொல்லப்பட்டசேர-சோழ பாண் டியன்சந்ததியாருக்கு தேவஸ்தானங்களில்நடக்கப்பட்டமரியாதை யும்மற்ற சிற்றரசர்ஜமீன்தாரிகளால்நடத்திவரும்மரியாதைகளு ம் மற்றவர்களுக்கு நடக்கமாட்டாது - இதினாலேயே யவர்கள் ஆதி க்ஷத்திரிய சந்ததியாரென்று யாவருக்குந் தெரியவரலாம்.

இதற்குத்திருஷ்டாந்தம் (நெல்சன்மானியூலில்) இரண் டாவதுபார்ட்டில்-௫௬-வது-சயிட்டில் - வன்னியர்களானவர்கள் ஜா தியில்தெக்ஷிணிந்தியாவிலுள்ள சாதிகளில் உயர்ந்தஅந்தஸ்துந்நல்ல ஸ்திதியிலு முடையவர்க ளென்று சொல்லப்பட்ட சரித்திரத் தால்ஆதி யரச சந்ததியாரென்று தெரிந்துக்கொள்வது மல்லாம ல்நெல்சனால் மேற்சொன்ன மறவர் சரித்திரத்தில் மறவராகிய சேதுபதியரசனைச்சொல்லுமிடத்துசேதுபதியரசனுடைய சபை க்குப் பாஞ்சாலங்குறிச்சிக்குரிய-கட்டபொம்மநாயக்கன் - அவன்

தம்பிஊணமையன்-முதலானவர்களும்,காதல்குடி- சேருமலைநாய்க்க ன்இவர்கள்தொக்காலத்தொட்டியராகியகம்பளத்தார்கள் தாழ்வான சாதியானபடியால் ஷை சேதுசமஸ்தானம்போவார்களானால்சேது பதியாசனுக்குப்பூமியில்விழுந்து தீர்க்கநமஸ்காரஞ்செய்து எழுந் துட்காராமல் கைகட்டிக்கொண்டுநிற்கவேண்டுமென்றார், தொண் டமான் புதுக்கோட்டையானுஞ் சிவகங்கைத் தலைவனுந்தஞ்சாவூரி ராஜாவின்கீழிருக்கப்பட்டபதினெட்டுத்தலைவரும்ஷை ராமநாதபுரத் தலைவனுக்கு நின்றபடி கும்பிட்டுக்கொண்டிருக்க வேண்டுமென்று ம், இதுதவிரவேதகிரி-சொக்கம்பட்டி-ஊத்துமலை-சேத்தூர்-சாரந் தித்தலைவராகியமறவருக்குளுயர்ந்தவர்களும்சிவகிரிஎழாயிரம்பண் ணைமுதலானவன்னியத்தலைவராகிய வரசர்களும்மேற்படிச்சேதுப திக்குயாதொருமரியாதையுஞ்செய்கிறதில்லை இவர்களில்ஷை வன்னிய ருக்குராமநாதபுரம்சேது வரசனும் மற்றவர்களு மரியாதைசெய்ய வேண்டியதென்று சொல்லியிருக்கிறதைப்போல் ஆதிதொட்டிதுவ ரையில் நடந்துவருகிற வழக்கத்தையும் விசாரிப்பார்களானாலிவர்க ளே பூர்வீகக்ஷத்திரியராகியவரசசந்ததியாரென்று யாவருக்குந்தெ ரியவரலாம்.

அதல்லாமலிந்தச்சேர-சோழ-பாண்டியராகிய வன்னியர்க ளே இந்தப்பூமிமுழுமையுமாண்ட வரசர்களென்பதற்கு இன்னுஞ் சிலதிருஷ்டாந்தங்களுமுண்டு-அதாவது,இந்தப் பூமிமுழுமையுமே கசக்கிராதிபதியாபாண்டுதேவேந்திரவுலகம்போய் ஆரூர்த்தியாகரை யுந் தேவேந்திரனிடத்திற்பெற்று இந்தப்பூமியிற் கொண்டுவந்து தி ருவாரூர் முதலான ஆறுதலங்களில் ஸ்தாபித்த முசுகுந்தச்சக்கிரவ ர்த்திச்சோழனென்று சொல்லப்பட்ட வன்னியன்சந்ததியார்நாள துவரையிலும் மேற்படித்தலைமையானதிருவாரூரில் தியாகரிருக்கிற சன்னிதானவாயிற்படிக்குப்பீகமுத்திரைபோட்டுக்கொண்டு வேறுதி ட்டிவாயின்மார்க்கமாய்ப்பூசைமுதலானதுநடத்திவரஷை யுச்சவந் துலக்குநாளில் ஷை சந்ததியாருக்குப் பரிவட்ட முதலான வனந்த

[illegible] கோவிற் [illegible] பட்டயிருப்பதே
[illegible] முகலிநாள் றுறக்கப்
[illegible] பட்டயன்னிதெ
[illegible] லோகர் செற்பது
[illegible] சோழ [illegible] கோயில்
[illegible] மேற்படித்
[illegible] முதலியாவதை [illegible]
[illegible]

[illegible] லந்தமிழ்
[illegible] அப்ப
[illegible]
[illegible]
[illegible] ராயன் - ம
[illegible]
[illegible] - திருவனே [illegible]
[illegible]
[illegible]
[illegible] அரசசந்திரியாரு
[illegible] வனந்த
[illegible] விட்டா
நும் குடித்த [illegible] ராயிருந்து [illegible] முறைகாலத்
தில் ராஜ [illegible] யாரும் [illegible] பட்
இராட [illegible] மின்
னவே [illegible] பாலந்தச் சரித
[illegible] - மிக்கிறஇராமங்க
[illegible]
றுகிற துமல்லாமல் [illegible] ராஜசந்திரியாராகிய [illegible] யர்கள்வாசப் பண்
ணுங் இராமமாகிய மன்னவேப்பட்டணமும், இராமங்களிலந்தாகிய

எல்லைக்கல்லுகளுக்குத் தாங்களரசவம்ஸத்தாரென்று தோன்றும்படி ஆக்ஞாசக்கரத்தைஸ்தாபித்தும், அதுபோல் பிராமணருள்-அல்லது-பார்ப்பாரென்று சொல்லப்பட்டவரிருக்கிற கிராமமாகிய அக்ரகாரத்துக்கத்தாகிய எல்லைக்கல்லுகளுக்குயாசிக்கும்படியான வாமனரூபமாகிய அநுருங்குலடையும், வைசியர்-சூத்திரர் கிராமங்களுக்கு சூலமும், மேழியும், இந்தவித்தியாசந்தோன்றும்படி ஆதிவரசர்களாற் பிரிக்கப்பட்டிருப்பதை ரூல் (பிகாரிட்டு) முதலானநூல்களாற்றெரிந்துக்கொள்ளலாம்- இந்தத் திருஷ்டாந்தங்களாலேயே மேற்படி வன்னியர்கள் அரசசந்ததியாரென்று யாவருக்குந்தெரியவரலாம்- ஆனாலிந்தக்காலத்திற் றங்களுக்குரியதென்று நியமித்தமன்னவேடென்றுங் கிராமங்களாய்ப் பலதேசத்திலிருந்து இத்தேசத்துக்குவந்து குடியேறினபலரும் இத்தேசத்திராகிய பலரும் செய்த மோசதந்திரங்களால்மேற்படிக்கிராமங்களிற் குறைந்துமிகவேழைகளாயிருப்பதைநோக்கிஇந்தப்புத்தகத்தில் நான் எழுதியிருப்பதையும்பார்த்து நடுவில்மேன்மையடைந்தவெல்லும் வெளுவிவேகிகளதங்களைக்கெட்டப்பிதுக்கி பல்லைக்காட்டி. அவர்கள்தானுவரசசந்ததியாரென்றால் புத்திமான்களில்லாத விடத்திற் பரியாசஞ் செய்வார்களப்படிச் செய்வார்களானு லக்கிரஜாதியாரான பிராமணரென்று சொல்லப்பட்ட பார்ப்பார்களிற் பலரேழையாகி பிராமணருண்டிவிற்கப்படாதென்று சாஸ்திரங்களிலிருந்தும் சோற்றுக்கடைவைத்தந்த சோற்றைச்சாப்பிடுகிற பலரிடத்திலும் பலவாறுனஇழிவானவார்த்தைகள் கேட்டும் தங்களுக்குத்தாழ்ந்தவர்களுக் கூழியஞ்செய்தும் செய்யத்தகாத வனந்தவேலையுஞ்செய்து வருகிறதையாவருமறிந்தே யிருக்கிறார்கள்,

ஆனாலவர்கள் பிராமணரல்லவென்று இடந்தருகின்றதல்லவா- ஆதலால் க்ஷத்திரியராகிய வரசருக் காபத்துவருவது அவசியமாதலா லவர்கள் காலவித்தியாசத்தாற் றாழ்ந்த அந்தஸ்துக்கு வருவதும், பழையபடி உயர்ந்த அந்தஸ்துக்குவருவதும், அவர்களுக்குச்சகசம்,அதற்குத்திருஷ்டாந்தம்- புரூரவச்சக்கிரவர்த்தியானவன் தனநாசகுறைந்து தாழ்ந்தஜாதியாருடன் புல்வெட்டி விற்று

ஜீவித்தான். அரிச்சந்திர சக்கிரவர்த்தியானவன் தானுந் தன்மனைவியும் பறையனுக்கும் பார்ப்பானுக்கும் அடிமைப்பட்டு- சண்டாளர்செய்யுந் தொழிலாகிய பிணஞ்சுடுதலைத் தான்செய்தும், இராமனைப் பெற்ற தசரதனுந் தருமன் முதலானவைந்துபேருமிதுபோலினுமப பன்னிரண்டு வருஷங்களரசிழந்துகாட்டிலவேடனைப் போற்சஞ்சரித்தும்பல ய தொழில்களைச்செய்தும், பிற்பாடு தங்கள் சொந்த பதவியாகிய ஆளுகையைப்பெற்றிருந்தார்கள் - ஆதலாற் சாஸ்திர புராணங்களிற் சொல்லியதுபோல் ஜாதியையும் பூர்வீக வழக்கங்களையும்பற்றிப்பேசவேண்டிய அவசியமேதவிர தத்காலஸ்திதியைப்பற்றிப்பேசவேண்டிய அவசியம்புத்திமான்களுக்கிராது- ஆனால்தத்காலஸ்திதியிலேயும் கேவலம் டியரசசந்ததியார்கள் குறைந்திருக்கிறார்களென்றெண்ணவேண்டியதில்லை- அதெப்படியென்றால் முன்- மூன்றாவதிகாரத்தில்-மூன்றாவது பிரிவிற்சொன்னதுபோல பூமியிலிருக்கிறமற்றஜாதிகளெல்லாருக்கும் மேற்படியரசசந்ததியாகவொருபங்குமாகவிருக்கின்றார்கள்.

அதிற்சிலர்சிற்றரசர்களாகவும், சிலரதிலுந் தாழ்ந்த ஜமீன்தாரிகளாகவும், பலர் கிராமமிராசுதாரர்களாகவும், இன்னும்பலர்கிராமங்களுக்கு, கிராமஅதிகாரராகவும், அதுவல்லாமலும் பெரும்பாலும் பயிர்- வர்த்தகம்- உத்தியோகமுதலான உயர்ந்தஸ்திதியிலேயேதத் ங்களிலிருக்கிறார்கள் - முன்சொன்னதுபோல் சிலபேர்மாத்திரம் ஏழைகளாயிருந்து ஜீவித்துவருகிறார்கள் - சிலபேரொன்றுசொன்னது-மற்றஜாதியாருக்குப்பலபேராகத்தோற்றும், அதெப்படியென்றால்(நூறுமரக்கால்தானியத்தைத்தூற்றுவார்களானாற் பத்துமரக்காலபதிர்போகுமல்லவா-பத்துமரக்கால் தானியத்தில் ஒருமரக்கால் பதிரிருப்பதுபோல்) கனமாகப்பெருத்திருக்கிற சாதியாருக்குள்ள ஏழைகளதற்குத் தக்கபடி கனமாயிருப்பார்கள்- அற்பமா யிருப்பவருக்கு ஏழைகளதற்குத்தக்கபடி சுல்பமாயிருப்பார்கள் - அப்படியிருப்பதேதவிர வேறல்ல.

இதுகளையெல்லாஞ் சீர்தூக்கிப் பார்க்குமிடத்தில் மற்றஜாதிகளைவிட பறையர்களேழைகளா யிருப்பார்களென்றும்

றுமென்னவேண்டியதில்லை-இவர்களுக்குக் குறைவுவந்ததற்குக்கார
ணம்மூன்குறித்தபிரதேசத்தாராலும் இத்தேசத்து வஞ்சகராலுமே
ன்றுசொன்னதுபெரியதப்பு-அதேதெனென்றாலிந்தச்சத்திரியாருடை
யமூன்னோர்களிற்சிலர் நீதிநூல்பாராமற்செய்த அக்கிரமமேயிவர்க
ளைத்தாழ்ந்தஸ்திதியிற்கொண்டுவந்ததென்று நானெண்ணுகிறேன்-அ
தெப்படியென்றால் உலகத்தையாளுகிறவரசனானவன் சர்வஜாதிகளு
க்கும் சீவ சீவன்களுக்கும் தாய்தாயுந் தகப்பனைப்போற் ப
ஜாதியென்றும், பிறஜாதியென்று மெண்ணாமல நடுநிலைமையா
யிருந்து குடிகளெல்லா ரூற்றஞ் செய்தாலும் அவர்களுக்குநட்ப
த்திசொல்லிப் பொறுக்கத் தக்கவைகளைப் பொறுத்து அ
டத்தாமல்பட்சப்பிர பட்சமாய் நடந்தமையாலே [illegible]
யும் மேன்மையு மடைந்திருந்த அவர்கள் சந்ததியார் பிற்கு
த்தாழ்ந்த ஸ்திதியில்வந்து [illegible]
னாசர்களிற் சிலரப்பேர்ப்பட்ட அக்கிரமங்களைச் செய்திருப்பா
ர்களென்று சிலர் யோசிப்பார்களா - அதற்கு விபரஞ் சொல்லுகிறேன்
அதாவது நீதியைக்கைவிட்ட சிலர் [illegible]
வைத்திருந்தாலதை யக்கிரமமாகக்கைப்பற்றியும் [illegible]
கள்ளுபவதியாயிருந்தாலதைவலியச்சிறைபிடித்துக்கொண்டும் [illegible]
க்கிரமங்கள்சிலதைநடத்திவந்தார்கள்-இதல்லாமல் [illegible]
ண்டவரசரும்யாவரும்மதியப்பட்சப்பிரபட்சமாய்ச் சில நடத்திவ
ருக்கிறார்கள்-அதென்னவென்றால்மூன்சொல்லப்பட்ட பிராமணருக்
க்குரிய அக்ராரமென்னுங் கிராமத்துக்குக் காணியொன்றுக்கும் ஒருநூ
யெண்பத்தைந்தாகவும், அரசசந்ததியாராகிய-பள்ளியர் அல்லது-வ
ன்னியருக்குரியமன்னவேடென்னுங்கிராமத்துக்குக் காணியொன்று
க்குக்குழிநூறாகவும்,சூத்திராகிய வெள்ளாழருக்குரிய நத்தமாகியகி
ராமத்துக்குக்காணியொன்றுக்குக்குழியெழுபதென்றும்நேமித்து அவ
ர்களுக்குத்தீர்வைமாத்திரஞ்சரியாய்வாங்கிவந்தார்கள்-இதுவல்லாமல
வர்களாண்டதேசங்களிலடங்கியகிராமங்களைமூபாகமாகப் பிரித்து
அதில் நாலுபங்கு தங்கள்பந்துக்குரிய மன்னவேடாகவும்,மற்ற மூ
ன்றுபாகம் அக்கிராரம் - நத்தமாகவும், இன்னம் பலவாகவும் பி
ரித்துவிட்டார்கள்.

ஆறுபிப்படிச் செய்தபடி [illegible]
...த்தாயிவர்கள் [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] திருக்கறபா
[illegible] இவர்களுக்குக [illegible] யுடைய [illegible]
[illegible] டிருக்கும் [illegible] ராணிந்துக்கவென்
கொண்டதும்போற் [illegible] யார்கள் [illegible]
இதிற்சொன்ன கிராமவிந்தியாசம்- [illegible] தோன்றப்ப
டித் தங்கள் சந்ததியாருக்குவிட்டிருப்பதைப் பூர்வீகவழக்கத்தாலும்
(ரிகார்ட்டு) முதலானதுகளினாலுந் தெரிந்துகொள்ளலாம்-இந்தப்
பாத்தியத்தினாலும் தத்காலத்தி லிருக்கப்பட்ட வன்னியர்களே மே
ற்படி யாசசந்ததியாரென்று யாவருக்குந்தோன்றும், இப்போது கு
றித்துப்பேசிய மூன்றுவித கிராமங்கள்போக இன்னுஞ் சிலஜாதி
யார்மேற்படி யாசருக்குச்செய்த நன்மையைப்பற்றியவர்களுக்கு
உதாச்சித்தாய்ச்சிலசிலகிராமம்விட்டிருப்பதுமுண்டு-அதாவது, பூ
ருத்தச்சக்கிரவர்த்தியாகிய வன்னியனுனவன் தனக்குப் படைவீரர்க
வேண்டுமென்று அக்கினிவடிவாகிய சுத்தப்பிரம்மமென்று அர்த்த
லைத்தரப்பட்டசுப்பிரமண்ணியனைநோக்கித்தபசுசெய்தகாலங்களி

அந்தப்படி சுப்பிரமணியர் பிரத்தியட்சமாகி யுனக்கு வேண்டிய தென்னவென்று கேட்க நமக்குப் படைவீரர் வேண்டுமென்று பிரார்த்திக்கச்சுப்பிரமணியரானவர் தன்னிடத்திருந்த நவவீரரையுந்தோ[illegible]ந்திரச் சக்கிரவர்த்தியிடத்துக்குப்போய்ப் படைவீரராயிருக்கும்படி [illegible] அப்போது இவர்கள் தாங்கள் தேவர்களாதலால் நாமொருவ சக்கிரவர்த்திக்குப் பணியோமென்று சொல்லிமறுக்க சுவாமியானவர் கோபங்கொண்டு மறுத்ததற்குத் தீர்க்கப்பேசுகிற குணம் க்ஷத்திரியருக் குரித்தானபடியால் நீங்கள் க்ஷத்திரியராக விருக்கவேண்டுமென்று சபிக்க மேற்படி நவவீரர்சாபத்தினின்று அனுக்கிரகிக்கவேண்டுமென்று பிரார்த்திக்கச்சுவாமியானவர் [illegible] சொல்லப்பட்டயிட்டியைக் கைப்பற்றி முன் நீங்கள் சக்கிரவர்த்தியினிடமே ழுக்குக்கீழ்ப்பட்டாயிரம்வருஷம் [illegible] மெனும டியுமென்னிடம் வருவீர்கள் [illegible] அப்படியேயவர்கள் சாபத்தைப்பெற்றுமேற்ட[illegible]வர்த்திக்குக்கீழ்ப்படிந்து நடக்கிறகாலங்களி[illegible]ர்களிற்[illegible]பிவிராஜிற லெஜாதிப்பெண்களை மணந்து அவர்களாற் புத்திரசந்தானங்களுண்டு பண்ணித்தாங்கள் சாபவிமோசனமாய்ப்போகும்போது மேற்படிப்புத்திரர்களைக்கூப்பிட்டு நாங்களிதுவரையிலும் க்ஷத்திரியத்தொழிலைநடத்திவந்தோம் இப்போதந்தச்செய்கை யெங்களைவிட்டு நீங்கினபடியால் நீங்கள் பூத்தொடுத்தல்- தைத்தல்- நெய்தல் - போதித்தல்- எழுதலாகிய பாவமில்லாத ஐந்துதொழிலிலொன்றாகிய நெய்யுந்தொழிலைக் கொண்டு சீவிக்கக்கடவீர்களென்று சொல்லிப்போய்விட்டார்கள்.

அவர்களுக்கு முன்குறித்த முசுகுந்தச்சக்கிரவர்த்தியின் சந்ததியாராகிய வன்னியவரசர்கள் இவர்கள் முன்னோர்கள் தங்கள் முன்னோர்களின் கீழிருந்தவபிமானத்தைப்பற்றி இவர்களுக்குச் சிலகிராம[illegible]விட்டிருக்கின்றார்கள்- அந்தக்கிராமங்களுக்கு மடவளாகமென் [illegible]வழங்கிவருகிறார்கள்- இதுபோலின்னுமனந்தஞ் சாதியாருக்குந்த

னித்தனி விட்டிருப்பதுமுண்டு இந்தச்சரித்திரங்களைச் செவ்வனே யத்தெரிந்துகொள்ளவேண்டியவர்கள் மார்க்கபுராணத்திலேயும் மேற்படிச் செங்குந்தராகிய கைக்கோளருடைய ஜாதி சரித்திரங்க ளிலுஞ் செவ்வையாய்த் தெரிந்துகொள்ளலாம். இவ்வளவு மேற் படி முசுகுந்தச்சக்கிரவர்த்தி யென்கிறவர் செங்குந்தரென்பதற்கும் மேற் படிச் சக்கிரவர்த்தி சோழராஜன் கைக்கோளரையடைந்ததே னென்பதற்கும் உதாரணமாவது.

மேற்படி செங்குந்தராகிய கைக்கோளருக்குரிய

கட்டளைக் கலிப்பா-கவி,

கலிக்குரும்படக்குதம்பொருபுரிசையாவற்கும் .. *
வலிக்குரும்படக்குநல்வாகைபுரிதற்கும் ... *
பலிக்குநற்புகழெலாம்பாதியர்தமக்காற் ... *
புலிக்கொடிமரபிரண்டிற்குப்போற்றுதால் ... *

இதின் தாற்பரியம்.

சரித்திரத்தின் குறும்பையடக்காநின்ற சூரத்தன்மையையு டைய சோழனுக்கும், சத்துருக்களுடைய குறும்பையடக்கி வெற் றியைத்தாராநின்ற நவவீரராகிய செங்குந்தருக்கும், பரிசிலாளருக் குமுண்டாகும் புகழில் பாதியானபடியால் மேற்படிச்சோழன் மர பாகிய வன்னியர்களுக்குஞ் செங்குந்தருடைய மரபாராகிய கைக் கோளருக்கும் புலிக்கொடியுடையதென்பதாம்,

இந்தக்கவியினாற் சோழனுக்குரியபுலிக்கொடியை முதலா வததிகாரம்- ஆறாவது பிரிவிற்-சோழன்யுத்தத்துக்குப்போகும்பொ துவெள்ளாழர்கள்கூடப்போனதைப்பற்றிமேற்படிவெள்ளாழர்கள்

தக்கீரே [illegible] பெற்றுக்கொண்டு புலிக்கொ டியுடையவர்களா வருவி [illegible] மென்மைப்படும்படி சிலகவி களிருந்தொல்லிக்கொண்டதுமல்லாமலவர்களும் மேற்படிச் சோழனுக் கும் படைவீரராயிருக்குமே கொடுமைப்பட்டதாம் [illegible] போனபடியால க்னிசத்திரியர்கள் ஆதிப் பரம்பரையத்தைப்பற்றித்தங்களுக்கு மந்தப் புலிக்கொடியுடையவர்களென்று அவர்களிப்புகழ் வெளிப்படும்படியாய் பாடிக்கொண்டு [illegible] சிலபாளையபிரதானமா [illegible] வன்னியர்களின் ஜாதிதானத்தை [illegible] அவர்களி [illegible] ருவரைத் தங்களுக்கு [illegible] மேற்படிப் புலிக்கொடி யைப்பிடித்துக்கொண்டு [illegible] களாம். இப்போதும் [illegible] யார்கள் [illegible] பட்டயம் [illegible] பட்டயங்கள் அல்லது வன்னியர்களென்று [illegible] ள்ளலாம்.

இதுவல்லாமல் யேற்பாடு [illegible] சத்திரியராகிய வன்னியர்களுக்குப் பொதுவாகச் சம்பளுப்சொல்லப்பட்ட சிலையெழுபது என்னும் நூலினாலேயே இவர்க ளாசசத்திரியார்களென்று விளங்குகின்றது - அதெப்படியெனில் சூத்திராகிய வெள்ளாளருக்கு ஏரெழுபதென்று சொன்ன நூலிற் கலப்பையே பிரதானமா யிருப்பதைப்பற்றி யதற்குரியவெள்ளாழரைச்சூத்திரரென்றுவிளங்குவதுபோல் இந்தச்சிலையெழுபதென்னும் நூலில் வில்லையேபிரதானமாகவைத்து அதற்குரிய அம்பு அம்புறாத்தூணிராசசின்னங்களாகிய கிரீடம் யுத்தம் செயம் அரசுமுதலானதுஞ்சொல்லி யிருப்பதினுலே மேற்படிச்சிலை யெழுபதுக்குரிய வன்னியர்களே யராசசத்திரியாரென்று யாவருக்கும் வெளியாகிறபடியா லதற்குத்திருஷ்டாந்தம்.

சிலையெழுபது பாயிரம் குலச்சிறப்பு-எ-வது-கவி.

மறைக்குலத்திலுதித்தாலென்மறையுணர்ந்தாலென்வணிகர் *
நிறைக்குலத்திலுதித்தாலென்நிதியடைந்தாலென்நான்காம் *
முறைக்குலத்திலுதித்தாலென்முயர்ச்சிசெய்தாலென்வன்னி *
யிறைகுலத்திலுதித்தவரேயிசைபாரனைத்தியம்புவரே... *

இதின்றாத்பரியம்,

பிராமண குலத்திலுதித்தாலென்ன - வேதங்களை யுணர்ந்தாலென்ன - வைசியராகி நிறங்கப்பட்டசெட்டிகள் குலத்திலுதித்தாலென்ன - அனந்தநிதிபணங்களைப் படைத்தாலென்ன நான்காஞ்சாதியாகிய மேலான சூத்திர குலத்திற்பிறந்தாலென்ன, அனந்தமுயற்சிசெய்தாலென்ன - (வன்னியரென்று சொல்லும்) அரசர்குலத்திற்பிறக்கப்பட்டவரே இந்தப்பூமிக்குக்கடவுளென்றுசொல்லலாமென்பதாம்,

இந்தக்கவியில் பிராமண - வைசிய - சூத்திரர்களைக் குறிப்பித்து இந்த மூன்றுகுலத்தவர்களும் தங்கள் தங்களுக்குரிய தொழிலை எந்தமேன்மையாய்ச்செய்தபோதிலும் வன்னியராகிய அரசர்களே உயர்ந்தவர்களென்று குறிப்பித்தபடியாலும் இவர்களே மேற்படி ராஜ சந்ததியாரென்று ருசுவாகின்றது - இவர்களல்லாமல் வேறே ராஜசந்ததியாரிருப்பார்களானால் பிராமணருக்கும் - வைசியருக்குமத்தியிற் சொல்லியிருக்கவேண்டும் - அப்படிச்சொல்லாததினாலே இவர்கள் மேற்படிச்சந்ததியாரென் றறிந்துகொள்ளலாம்.



அதற்குத் திருஷ்டாந்தம் - ௯ - சிலையெழுபதிற்

செங்கோல்வண்மைச்சிறப்பு-௱௧-வது-கவி,



வீரசம்புமுனிவேள்விவிளங்கவருமுடிவேந்தர் ...*
சீர்மருவுங்கரத்தேந்துஞ்செங்கோலின்றிறத்தானே ...*
நேராறுதிக்கடைகோலுநிறைகோலுநீடுலகில் ... *
ஏரடருமுழுகோலுமிடரின்றியிருப்பதுவே ... *

இதின்தாத்பரியம்.

வீரத்தன்மையையுடைய சம்புமாமுனி வேழ்வியில் இந்த ப்பூமியில் பிரகாசிக்கும்படி யவதரித்த கிரீடத்தையுடைய இந்தவ ரசர்கள்சிறப்பையுடைய தங்கள்கையி லேந்தப்பட்ட செங்கோலி ன்வல்லமையினாலே பிராமணாள் வேள்விசெய்யப்பட்ட திக்கடைக் கோலும், செட்டிகளுக்குரிய நிறைகோலும், சூத்திரர்கள் ஏருழ ப்பட்ட வுழக்கோலும் இம்மூன்றும் துன்பமில்லாதிருக்கு மெ ன்பதாம்.

இந்தக் கவியினாலும் மேற்படி யரசசந்ததியாரிவர்களென்றே விளங்கிற்று.

இதுவும்-மேற்படிச்-சிலையெழுபது-௪௧-வது-கவி.

தாரோந்துபுயவேந்தர்தழலிடைவந்தவதரித்தோர்... *
    தனுவான்மிக்க ... ... *
சீரோந்துமறத்தினெறிதிறம்பாதுநிற்கின்ற ... ... *
    செய்லாலன்றோ ... ... *
காரோந்திச்சொரிமழையுங்கலைமறையும்வாணிபமு ...*
    மடவார்கற்பும் ... ... * *
ஏரோந்துமவர்வாழ்வுமிடரின்றிநிற்பதன்றி ... *
    யென்கொண்டம்மா ... ... *

இதின்தாத்பரியம்,

அக்கினியில்வந்துபிறந்துவில்லாண்மையின்மிகுந்தமாலையைத்தோளிற்றரித்த சிறப்பையுடைய வேந்தர் தருமத்தின்வழியில் நிற்கின்றபடியால் மேகமானது பெய்யுமழையும் பிராமணருக்குரிய வேதமும்- வைசியருக்குரிய வாணிபமும்-ஸ்திரீகளுக்குரிய கற்புங்கலப்பையைத்தாங்கிசீவிக்கப்பட்ட சூத்திருடைய வாழ்வும், பயமில்லாம லிருக்குமென்பதாம்.

இதுவும்-சிலையெழுபது-சஉ-வது-கவி.

ஆக்ஞாசக்கிரச்சிறப்பு.

ஊழிக்கிறைதண்கடல்வீழ்ந்தா ... ... *
னும்பர்க்கிறையந்தரமானான் ... ... *
கோழிக்கிறைதன்றாதைவரை ... ...*
குறுகினனெஞ்சமறநாணி .. .. *
மேழிக்கிறைமூவிரண்டிலொன்று ... ... *
மேவப்பெறுவன்னியர்செலுத்தும் ... ...*
ஆழிக்கிறைநாடொறுமாறா ... ... *
தகிலமுழுதுங்காத்தல்கண்டே ... *

இதின்தாத்பரியம்.

சர்வசம்மாரகாலத்துக்காசனை வடவாக்கினியானவன் கடன்மத்தியிற்சேர்ந்தான், தேவர்க்கரசனாகிய தேவேந்திரனானவன் சுவர்க்கலோகத்திலேயே நின்றான், சுப்பிரமணியரானவர் தன்றகப்பனிரா நின்ற கயிலையைச்சேர்ந்தார், மேழிக்குடைய குடிகளின் இறையானது ஆறிலொன்றுகொள்ளும் வன்னியர் நடத்தப்பட்ட ஆக்கினைச்சக்கரத்தினால்நாடோறு மாறுபடாமல் பூமிமுழுதுங் காத்திரட்சிப்பதைப் பார்த்தென்பதாம்.

❧❦❧

இதுவும்-மேற்படிச்சிலையெழுபது சஙு-வது-கவி.

தொழில்நெறிபிறழாமை.



கற்பத்தொழியாமறைபயிலுங் ... ...
கவின்மேவியவந்தணர்தொழிலும் ... ...
சிற்பத்தொழில்வைசியர்தொழிலுந் ... ...
திணைமுமுயர்முக்குலத்தோரைப் .. ..
பொற்பத்தொழுஞ்சூத்திரர்தொழிலும் ... ...
புகலெத்தொழிலுமுறைபிறழ்ந்தே .. ..
அற்பத்தொழில்சாதரசான் ... ...
வதுபண்ணுட்டார்தர்தொழிலே .. ..

இதின்தாற்பரியம்.

கற்பகாலங்களிலுமழியாதவேதத்தை யத்தியயனம் பண்ணப்பட்ட வழகியபிராமணர்தொழிலும், சிற்பமதலான தொழிலும் வைசியராகிய செட்டிகள் தொழிலும்; நான்கோறு மேலாகிய மூன்றுகுலத்தோரையுந் தொழப்பட்ட சூத்திரர்தொழிலும், சொல்லப்பட்ட எந்தத் தொழிலுமுறைதப்பி யற்பமாகச் செய்யாதபடியாக நடத்துவது நல்ல நாட்டையுடைய வன்னியர் தொழிலென்பதாம்,

இந்த மூன்று கவியிலும் ஆக்ஞாசக்கரத்துக்குரிய சத்தியம்-தருமம்- தொழில்-நெறிதப்பாமை இதுகளைக்கூறினர்.

இந்தக்கவியில்- சேர- சோழ- பாண்டிய சத்ததியாரே வன்னியரானபடியால் வேறொரு வாசகசந்ததியா ரில்லாதபடியா லிவர்களுக்கே இவர்களொப்பாக- மழை- மறை- வாணிபம்- கற்பு- உழவு- இது முதலியமற்றத்தொழிலுக்குந் துன்பம்வாராமல்தருமம் பிசகாமலாக்கினைச் சக்கரத்தா லரசாண்டாரென்று சொன்னாரேதவிர வேறல்ல.

இதுவும்-மேற்படிச் சிலையெழுபதுற்பெறு கவி.

புகழ்ச்சிறப்பு

வளமருவுமங்கையர்கோன் சொலத்தகுபல்லவராயன் *
மகிபருக்கெல்லாந் திக் .. .. *
களமருவுசுவைபுனையகவிராஜராசச்சியிலிவாழே ...*
காப்பமைச்சு .. .. *
குமருவுமதிராசாபொலிபுமை நடமலைப்பொற்றே . *
[illegible] .. . . *
தாமருவுதா[illegible]வள் [illegible]படைத்தபுகழ் *
[illegible] ...*


[illegible]

வள[illegible] [illegible]ரா லாயிரபவிரய
ரிகந்[illegible] [illegible] [illegible]பட[illegible]வராடநார், வி
கற்க [illegible] [illegible] [illegible] மேயை [illegible] காஞ்சியில்
வாழ்[illegible] [illegible] [illegible] [illegible]ரகாளிகப்பட்ட இரத்தி
னகிரி[illegible] [illegible] [illegible] [illegible]ஏகாம்பரசெம்பியனுடை
ய சோ[illegible] [illegible] [illegible] [illegible]வல்லியபொற்றபுகழ்பா
ரிபெற்றுமெ[illegible]ராம்.

இந்தக்கவியிருப்பதுமன்றி அவைதிகாரம் ஐம்பதாவது பிரிவிற் பல்லவனுக்கு சோழனைக்குறித்தாய பிரபந்தத்தில், முதலாயிரத்திற் பாயேஸ்வர விண்ணகரப்பத்தில் சொல்லியபடியை நானெழுதியிருக்கிறேனல்லவா - அந்தச்சோழன் சந்ததியாரொன்றும், மேற்படி அதிகாரம்- மேற்படிப்பிரிவில் பதிரட்டைப்புலவர்பாடின ஏகாம்பரநாதருலாவிற் சொல்லப்பட்ட ஏகாம்பரசெம்பியனென்னுஞ் சோழனைக்குறித்தெழுதி யிருக்கிறேனல்லவா - அவன்மரபாரொன்றுஞ்சொன்னார் - சோழசந்ததியொன்றாயிருந்து மிந்தவிரண்டு பேரைமாத்திரங்குறிப்பித்து அவர்கள் மரபாரொன்று சொல்லவேண்டிய காரணம் யாதென்றாலிந்த விரண்டுபேரும் விஷ்ணுபக்தி

சிவபக்தியிற்சிறந்த பெரியோர்கள் தேவதொண்டர்கள் புத்திமான்களாகிய வித்துவான்க ளிவர்களுக்கு மனஞ்சலிக்கும்படித் அன்னதான முதலானவனந்ததானங் கொடுத்ததுமல்லாமற் சிவாலயம் - விஷ்ணுவாலய முதலானவாலயங்களைத் தாங்கள்திரவியங்களைப் பெரிதாகவெண்ணாமற் றிரணமாகவெண்ணி மேற்படியாலயங்களைக்கட்டி முடித்தவர்க ளானபடியாலிவர்களைக்குறிப்பித்து இவர்கள் சந்ததியாராகிய வன்னியர்கள் கொடுக்குந்தன்மையான பெருமையையுடையவரென்று வெளிப்படும்படிச்சொன்னார்.

ஆறுவிருத்தக்கவியில் துலாதானச்சோழபல்லவராயன் - அல்லது ஏகாம்பரச்செம்பியன் - ஏகாம்பரேசுரருக்குக்கோயிற்றேர் - கிரீடம் - ஆபரணமுதலானதுகளைச்செய்ததை அவர்கள்சந்ததியாராகிய வன்னியர்கள்செய்ததாகவருவித்துக்சொன்னார்.



இதுவும்-மேற்படிச்-சிலையெழுபது ௫௩-வது-கவி.

பெருந்தன்மையின்சிறப்பு.



ஆக்கமுன்னிடி லுயரறத்தையாக்குவர் ... *
போக்கமுன்னிடிற்பொருந்தாரைப்போக்குவர்... *
காக்கமுன்னிடிற்கடனிலத்தைக்காப்பர்நல் ... ...*
ஊக்கமுன்னிடுகுணத்தோர்பண்ணுடரே ... ...*

இதின்தாத்பரியம்.

உண்டாக்க முன்னிடுவார்களானு லுயர்வானதருமத்தை யுண்டாக்குவார்- நாசஞ்செய்ய முன்னிடுவார்களானுற்சத்துருக்களை சங்கரித்துநாசஞ்செய்வார்கள்-இரட்சிக்கமுன்னிடுவார்களானுற் கடலோடுசேர்ந்தபூமியைக்காத்திரட்சிப்பார்கள்- ஊக்கமாகிய வல்லமையு எக்காலமும் முன்னிட்டகுணத்தோராகிய நல்லநாட்டை யுடையவர் வன்னியரென்று சொல்லப்பட்டவரகரென்பதாம்,

இந்தக்கவியிலு லாதியரசருக்குரிய குணங்களைச்சொல்லி யந்தச்சந்ததியாராகிய வன்னியரொன்று சொல்லப்பட்டவர்க்கு ம்மேற்படிக் குணங்களையே வருவித்துக்கூறினார்.



இதுவும் மேற்படிச் சிலையெழுபது ருசு-வது-கவி.



சமையவளமுஞ்சிவனுமைமால்தலத்தின் வளமுங்குலவளமும் *
அமையுநிலத்தின்வளமுமுழவாளர்வளநல்லறவளமும் ... *
தமையொப்பிலர்கற்புறுவளமுஞ்சகலவளமுந்தமிழ்வேந்தர் *
இமையப்பொருப்பர்பன்னா ரிதயவளத்தினதிறத்தானே *

இதின்தாத்பரியம்

தாங்கள்வணங்கப்பட்ட சமயவளமும், சிவன்- பார்வதியாகிய காமாட்சி- விஷ்ணு இவர்கள் வசிக்கப்பட்ட ஸ்தலமாகிய தங்களுக்குரிய காஞ்சீபுரத்தின் வளமும், இவர்கள் குலவளமும், இவர்களுக்குரிய நாட்டினது நிலத்தினுடைய வளமும், அந்தநிலத்தைப்பயிரிடப்பட்ட உழவர்வளமும், அந்தநாட்டில் நல்லதருமவளமும், தங்களுக்கொப்பில்லாதகற்பையுடையஸ்திரீகள்வளமும், இதுகள்முதலான சகலவளப்பத்தையுமுடைய தமிழ்வேந்தராகிய சேர-சோழ பாண்டியர் சந்ததியாராகிய இமயமலையையும் நல்ல நாட்டையுமுடைய வன்னியர்களிருதயத்தின்திறத்தின்வளமையேயென்பதாம்.

இந்தக்கவியில் முதற்சமயவளமென்றுசொல்லிப் பின்னும் சிவன்- உமை- மால் வாழப்பட்ட தலவளமென்று சொன்னபடியால் இவர்கள் சைவம் - வைஷ்ணவம் - சாக்தேயமென்னும் மூன்றுமதத்துக்குரியவரென்று குறிப்பித்தார் - பதிவளமென்று பொதுவாய்ச்சொல்லியிருக்க நான் காஞ்சீபுரமென்று சொன்னதை இந்தக்கவியினுற் பரிஷ்காரமாய் விளங்குவதல்லாமல் இதற்குப்பின்

யிவர்கள் மேன்மையானவர்களாவென்று சில சொல்லுவார்கள்- நியாயமாய்ப்பார்க்குமளவில் அரசனானவன் சகலருக்கு மேற்பட்டவனென்பதற்குச்சந்தேகமில்லை- எப்படியென்றால அரசனானவன் மற்றவர்களைவிட- வஸ்திரம்-பூஷணம் பிருகமாதமுதலான வலங்கிருத மேன்மையும், ஆசனபடுக்கை- கோட்டைமுதலான ஸ்தானமேன்மையும், இரதம்-யானை-குதிரை - பல்லக்கு முதலானவாகன மேன்மையும், பூமி-தனம் தானியாதிமுதலானதிரவியமேன்மையும், சகலவித்துவான்கள் பெரியோர்களால் சகலசாஸ்திர வேதபுராண முதலானவைகளை சொல்லக்கேட்பதால் கல்விகேள்வி மேன்மையும், ஸ்திருஷ்டியாதிகளின் சாஸ்திரவிதியை வகுத்து அத்தியாயத்திற்பிராயச்சித்தவிதி கட்டளைசெய்து தருமமறிந்தபிராமணன் அரசனிடத்தில் சொல்லும்படி கருமபலனையறியவேண்டியதில்லை - அனைகப்பிரயோகம் செய்யவேண்டிய அபிசாரமந்திரத்தின் வீரியத்தினால் சத்துருவையும் நாசம்பண்ணி தனக்கு அநியாயஞ்செய்பவனைத்தானும் சிக்ஷிக்கலாமென்று சுருக்கமே தவிர அரசனிடத்தில் விண்ணப்பஞ்செய்யத் தேவையில்லையென்று) என்றுசொல்லப் பிரகாரம் தம்பாயஷிக்கையாலும் யாதொரு பயமுமில்லாமல் மற்றப்பிராமணர் முதலான சர்வஜாதிகளும் குற்றஞ்செய்தாலவர்களைத்தெண்டித்து தங்கள்செலவாக்குப்போல நடப்பிக்கச்செய்யும் அக்கினிச் சக்கரமென்னப்பட்ட வசமேன்மையும் பசமுடையவரானபடியால் இராசகுலமே மேன்மையான குலமென்பதற்குச் சந்தேகமில்லை.

இதற்குத்திருஷ்டாந்தம் முற்காலத்தரசர்கள்தங்களுக்கிட்டப்பட்ட இடுகுறிப்பேருங் காரணப்பேருமின்றி சிறப்புப்பேராக குலசேகரசேரனென்கிற வொருபேரைப் பிரதானமாயிட்டு வழங்கிவந்தார்கள் - அதெப்படியென்றால் குலசேகரச் சேரனென்றும், குலசேகரச்சோழனென்றும், குலசேகரப் பாண்டியனென்றும் பேரைத்தங்களுக்குரியதாகயிட்டுவழங்கிவந்தார்கள் - குலசேகரனென்றால் குலங்களென்றுசொல்லப்பட்ட சர்வசாதிகளுக்கு மிவர்கள் முடிபோன்றவரென்பதாம்.

இதற்குத்திருஷ்டாந்தம்-குலசேகரப்பெருமாள்

சமஸ்கிருதத்திற்சொன்ன-முகுந்தமாலையின்

தனியனென்னுஞ்சாத்துக்கவி.

ఘుష్యతేయస్యనగరే రఙ్గయాత్రాదినేదినే।
తమహంశిరసావన్దే రాజానంకులశేఖరం॥

இதின்றாத்பரியம்-

எந்தப்பட்டணத்தில் நாள்தோறும் ரங்கயாத்திரை யென்று கோஷிக்கப்படுகின்றதோ அந்தப்பட்டணத்தை யாசாளப்பட்ட குலங்களுக்கெல்லாம் முடிபோன்ற ராசகுலமாகிய குலசேகரப் பெருமாளை நான்சிரத்திஞல் நமஸ்கரிக்கிறேனென்பதாம்.

இதுவுமல்லாமல்-பெரியபுராணம்

திருமுறைகண்ட சரித்திரம் - க-வது - கவி.

உலகமகிழ்தருசையமீதுதோன்றி ... *
யோவாதுவருபொன்னிசூழ்சோணாட்டின் ...*
றிலகமெனவிளங்குமணிமாடவாரூர்த் ... *
தியாகேசர்பதம்பணிந்துசெங்கோலோச்சி ... *
யலகில்புகழ்பெறுராசராசமன்ன ... *
ணபயகுலசேகரன்பாலெய்துமன்பர் ... ...*
இலகுமொருமூவருள்பதிகமொன்றோன்... ... ...*
றேயினிதினுரைசெய்யவன்பாற்கேட்டு... ... ...*

இதின்தாத்பரியம்.

உலகமானது சந்தோஷிக்கும்படியாய் (குடகு) மலையிற்றோன்றி ஒழியாமல் வரப்பட்ட காவேரியாற் சூழப்பெற்ற சோழதேசத்திலழகியமாடகூடம்பொருந்தித்திலதந்தைப்போன்ற திருவாரூர்த்தியாகேசர் பதம்பணிந்து செங்கோலநடத்தப்பட்ட சோழகுலத்தில்வந்து மற்றகுலங்களுக்கெல்லாம் முடிபோன்ற கணக்கில்லாதபுகழையுடையராஜராஜேந்திர சோழனென்பவன் றன்னண்டையில் வரப்பட்ட அடியார்கள் பிரகாசிடாநின்ற-அப்பர்- சுந்தரர் - சம்பந்தராகிய மூவர்களின் பதிகமெல்லாமொன்று இனிப்பாகச் சொல்ல ஆசையுடன்கேட்டென்பதாம்.

இதுவும்-மேற்படி-திருமுறைகண்டபுராணம்

௫௱ - வது கவி.

கொண்டுகுலசேகரனுங்கோன்பால்வந்து ... ... *
குஞ்சரத்தோனருள்செய்தகொள்கையெல்லா ...*
மண்டுபெருங்காதலுடன்சொல்லியந்த ... ... *
வண்டமிழின்பெருமைதனைவகுத்துச்சொல்வார் ...*
கண்டபெருமந்திரமேமூவர்பாடல் ... ... *
கைகாணுமந்திரங்கண்ணுதலோன்கூற ... ... *
லெண்டிசையுஞ்சிவனருளைப்பெறுதற்காக ... ...*
விம்மொழியின்பெருமையையாணியம்பக்கேணீ *

இதின் தாத்பரியம்.

பொல்லாப்பிள்ளையார் சொன்னதெல்லாம் நம்பியானவர் இற்கொண்டு குலங்களுக்கெல்லாம் சிகரமாகிய முடிபோன்ற த்த(ராஜராஜேந்திர)சோழனிடத்தில்வந்து தனக்குமேற்ப யார்சொன்னதெல்லாம் மிகுந்தவாசையுடன் சொல்லி

அந்தத்தமிழின் பெருமையைவிரித்துச்சொல்லுவார் - மூன்குழித்த மூவர்பாடலான தேவாரத்தைக்கண்டமந்திரமென்றும், மற்றமந்திரங்களெல்லாங் கைக்காணுமந்திரங்களென்றும், சிவஞானவர் சொல்லியிருக்கிறபடியா லெண்டிசையிலேயு முள்ளவர்கள் சிவனருள் பெறுவதற்காகஇதினுடையபெருமையை யான்சொல்லக் கேட்பாயாகவென்பதாம்.

இதுவுமல்லாமல் திருவிளையாடற்புராணம்

திருநகரங்கண்டபடலம் ௨ வது-கவி,

இன்னரம்புளரோதிசைபெழூஉமிடற்றளிகள் ... *
கின்னரர்பயில்கடம்பமாவனத்திலிழ்சார்த் ... *
தென்னர்சேகரனெனுங்குலசேகரனுலக ... *
மன்னர்சேகரனாகசெய்திருப்பதுமணவூர் ... .. *

இதின்தாத்பரியம்,

இனிதானநரம்புக்கருவியால் இசையேழையு மிசைப்பதுபோல் தங்கள்கண்டத்தினுலே பாடப்பட்ட வண்டுகளும்[redacted]கின்னரப்பட்சிகளுஞ்சூழ்ந்து மொய்க்கப்பட்ட கடம்பவனத்துக் கீழ்ப்பக்கத்திற் பாண்டியர்களுக்கும்- மற்றகுலங்களுக்கும் மற்றவரசர்களுக்கும் கிரீடம்போன்றவனாகசெய்திருப்பது மணவூரென்பதாம்.

இதுவும்-மேற்படித்-திருவிளையாடற்புராணம்

உக்கிரபாண்டியன்- அவதாரப்படலம்-க-வது-கவி,

மன்னவன்குலசேகரன்திருமகன்மனைவி ... *
தன்னெடுங்கடலாடியதகுதியீதந்தத் ... *

தென்னவன்றனித்திருமகடிருவுளங்களிப்ப ... ...*
உன்னருந்திறலுக்கிறனுதித்தலாருளாப்பாம் ... *

இதின்றாத்பரியம்,

குலங்களுக்கெல்லா முடியாகிய அரசவம்சமாகிய அழகிய மகனுகிய மலையத்துவசபாண்டியன் தன்பெண்சாதிகாஞ்சனமாலை யுடன் கடலாடியபிராய்போக இது மேற்படி மலையத்துவசபாண்டியன்மகளான தடாதகைப்பிராட்டியாரென்னும் மீனாட்சியானவள் சந்தோஷிக்கும்படியாய்த் திறனுடைய உக்கிரவழுதிப்பிறந்ததைச்சொல்வோமென்பதாம்,

இதிற்குறித்த-சுலோகம் கவிகளினலும் - சேர - சோழ பாண்டியர் மூவர்களுக்கும் வெவ்வேறுபேரிருந்தும்- குலங்களுக்கெல்லாமேலானவர்கள் அரசகுலமென்று தோன்றும்படியாய்க குலசேகரனென்றுஞ் சொன்னர்கள் - இதுபோலின்னுமனந்த நூல்களிலுங் குலசேகரனென்கிறபேர் - அரசருக்கே யுரித்தாக வருவதைப்பற்றி முன்சிலையெழுபதிற்குறித்த கவியிற் குடிவள மென்றார்- மேற்படிக்கவியில் நிலவளமும், அந்தநிலத்மைதப்பயிரிடும் உழவராகிய குடிகளின்வளமுமென்று சொன்னபடியாலதற்குத்திருஷ்டாந்தமான மேற்கோள்வருமாறு,

---

வெள்ளாழரைக்குறித்து கம்பனாற்சொல்லப்பட்ட ஏரெழுபது - பாயிரம்-௪-வது-கவி,

---

ஈழமண்டலமுதலெனவுலகத் ... ... *
தெண்ணுமண்டலத்தெறிபடைவேந்தர் ... *
சோழமண்டலஞ்செம்பியன்மாபினேர் ... .. *
நாமெலாம்பிறந்தினியபல்வளத்தின் ... *
சோழமண்டலங்கனகமுமணிகளும் ... *
வரம்பிற்காவிரிகுரம்பினிற்கொழிக்குந் ... ...*

சோழமண்டலமிதற்கிணையாமெனச் ... ... *
சொல்லுமண்டலஞ்சொல்வதற்கில்லையே ... .. *

இதின் தாத்பரியம்,

யாழ்ப்பாணமாகியஇலங்கைத்தேசமுதலான உலகத்திற்சொல்லப்பட்டவனந்ததேசங்களுக்குரியவஸ்திரசஸ்திரப் பிரயோகம்பண்ணப்பட்டவேந்தர்களெல்லாம் வந்துதாழப்பட்ட மண்டலமாகிய சம்புகோத்திரத்தில்வந்த வனந்தஞ்சோழர்கள்பிறந்து இனிதானபலவளப்பத்தினுல்வாழ் பூமியின்கண்ணிற்பொற்சன்னங்களையும்-இரத்தினங்களையுங் கண்க்கில்லாமற்காவேரியானது அலைகளினுலிருபக்கத்திலும் ஒதுக்கப்பட்டசோழமண்டலத்துக்கொப்பாகச் சொல்வதற்கு வேறுதேசமில்லையென்பதாம்.

இந்தக்கவியினுல் முன்சிலையெழுபது-௫௪-வது கவியில்- நிலத்தின் வளப்பமுடையவொன்று சொன்னதுபோல் சம்புகோத்திரத்தாருக்குரிய சோழமண்டலத்தைப்போல் மற்ற எந்தத்தேசமுமில்லையென்று சொன்னுரேதவிர வேறல்ல,

---

இதுவும்-ஷை-ஏரெழுபது-பாயிரம் ௬ வது-கவி,

சோழராஜன்சிறப்பு,

முடியுடையமன்னவரின்மூவுலகும்புடைத்துடைய .. *
கொடியுடையமன்னவரிற்குலவுமுதற்பெயருடையான் *
இடியுடையவொலிசெழுநீரொழுபத்தொன்பதுநாட்டுக் *
குடியுடையான்சென்னிபிறரொன்றுடையார்கூறீரே... *

இதின்தாத்பரியம்.

கிரீடந்தரித்த வரசர்களில் திரிலோகமும் தங்களுக்குரியசவுடைய வில்- புலி- சேல் - என்றுசொல்லப்பட்ட மூன்று[illegible]களையுந், தங்களுக்குரிய விருதாகவுடைய தமிழ்வேந்தரா[illegible]ன்றுவரசர்களிற்சென்னியென்றுசொல்லப்பட்டமு

டவனும், இடியைப்போற் சத்திக்காநின்ற ஜலப்பிரவாகப் பொருந்திய எழுபத்தொன்பது நாட்டுக்குடையநல்ல (வெள்ளாழக்) குடியையுடைய சோழனானவன் பிறர் என்றுடையார்சொல்லினொன்பதாம்.

இந்தக்கவியினால் முன்சிலையெழுபதிற் சொன்னகவியிற் குடிவளமுடையவனென்று சொன்னதுபோல் எழுபத்தொன்பதுநாட்டுக்குடைய குடிகளையுடையவன் சென்னியென்றார் - சோழராஜனுக்குடைய குடிகளை மேற்படிச்சோழராஜன் சந்ததியாருக்குரியதாகவருவித்து முன்கவியிற்சொன்னார் - இதல்லாமல் மேற்படிக் கவியில் அறவளமென்று சொல்லியிருக்கிறபடியாற் சிலையெழுபதில் அறவளமென்று பிரத்தியேகமாய் ஒருகவி சொல்லியிருப்பதாலும் மேற்படி கவியிற்குடிவளமென்று சொல்லி அதைச்சேர்ந்தே யறவளமென்று சொல்லியிருப்பதா லிதுகுடிகளுக்குரிய அறவளமேதவிரவேறல்ல- ஆதலாற் குடிகள்செய்யப்பட்ட தருமத்தைக்குறித்து சிலதிருஷ்டாந்தம் வரையாது.



வேளாளர்சார்பாற்சொல்லப்பட்ட

தொண்டமண்டலசதகம் - ௭௧ - வது - கவி,



கோனூருழவக்குடியானவன்றன்குமிழம்பட்டு *
வேளூர்க்கிழானொருவேளாளன்பஞ்சம்விடியளவு *
நானூரிலுள்ளபுலவோர்க்குந்தேசத்துநாவலர்க்கு *
மானூருமன்னங்கொடுத்தளித்தான்றொண்டமண்டலமே

இதின்தாத்பரியம்,

குமிழம்பட்டிவிராநின்ற உழப்பட்டகுடியானவனான வேளூர்க்கிழானென்கிற ஒருவேளாளனானவன்கருப்புத்தெளியளவும் நானூரிலுள்ள வித்துவான்களுக்கும் மற்றத்தேசத்திலுள்ள நாவலருக்கும் பாலும் அன்னமுங்கொடுத்து ரட்சித்தானென்பதாம்,

இதுவும் மேற்படித் தொண்டமண்டலசதகம் ௫ வது கவி,

துறைபார்மறையும்புந்தபனாறும்போலத்தடையுமின்றி *
புரையாதநீசரொருமிண்டமையாதும்மொருணையின்றித் *
திரைடார்புவியிற்புகழேபடைத்துத்தினந்தினமும் *
வரையாதுவள்ளன்மைகாட்டுவதாற்றொண்டமண்டலமே

இதின்தாத்பரியம்,

பரிதிக் மறையும் சூரியனும் சரீரத்தின் பேரியும் பேதமின்றி சேர்ப்பித்துசாய்வதுபோல் ஒருதடையுஞ்சொல்லாமற் பறையரென்று புலைச்சபடியாற் சண்டாளரென்று நிந்தித்த விந்தைப் பூமியி லொருமிழ்ப்பி நாள்தோறு மிழைப்பென்றுசொல்லாமற் கொடைக்குநல்ல ன்மையையுடைய ரூபகளாகிய இந்தவெள்ளாளரல்லாமல்மற்றுமொ ன்பதாம்,

இவர்கள்பறையரென்றுசொண்டாளென்பதற் மேற்கோள்-இவர்களிரு க்கைகளைத்திருக்கண்டுகொள்ளலாம் - இந்தக்குடிகளுடைய தருமச் செயல்களெல்லாம் மேற்படித்தொண்டமண்டலசதகத்திற் கண்டுகொள்க அதல்லாமல்மேற்படிக்கவியில்இமையப்பொருப்பரியண்ணுடனென் று சொல்லியிருக்கிறபடியால் மேற்படி ராஜசந்ததியாருக்குத் தசாங்கத்தில் மலை மகமேருவானபடியா லதைப்பற்றி இமயப் பொருப்பனொன்று சொன்னாலுஞ்சரி - அல்லது- இந்த சேர-சோழ- பாண்டியர்களுலகமுழுமையுஞ் செயித்துத்தங்கள்விருதாகிய வில்- புலி - சேலிந்த மூன்றுகொடிகளையும் வடக்கே மகம்மேருவிற் றங்களுக் கெல்லைக்கல்லாக நாட்டினாரென்று பலநூலிலுஞ் சொ ல்லியிருப்பதைப்பற்றி இமைப்பொருப்பனென்று சொன்னாலு மொன்றேதவிர வேறல்ல-அப்படிமகமேருவில் தங்கள்கொடியை யெழுதினாரென்பதற்குத் திருஷ்டாந்தம்,

கலிங்கத்துபரணி கடவுள்வாழ்த்து-௰அ வது கவி,

சேழுநமேதிகலையாளியிணைசிலை ... ... *
கெண்டையென்றினையபல்கொடித் .... *

தாழமேருவிலுயர்த்தசெம்பியர் ... *
தனிப்புலிக்கொடிதழைக்கவே ... ... *

இதின்தாத்பரியம்,

பன்றிக்கொடியும், மேழிக்கொடியும், மாலைக்கொடியும் வீணைக்கொடி சிங்கக்கொடியும், விற்கொடியும், மீனக்கொடியும், சொல்லப்பட்ட விதுமுதலான பலகொடிகளும் தாழ மகம் மேருவிலெழுதப்பட்ட சப்பு கோத்திரத்தாராகிய சோழனுடைய ஒப்பற்றபுலிக்கொடிதழைக்கவென்பதாம்,

இதுபோல்மற்றசேரன் - பாண்டியனுடையவிற்கொடி- மீன்கொடி மகம்மேருவி லெழுதப்பட்டதென்று நூல்களிற்சொல்லுமிடந்தோறுங் கண்டுகொள்ளலாம்.



இதுவும்-மேற்படிச் சிலையெழுபது ௬௩-வது-கவி,

வளங்குலவுபண்ணுடுமதக்களிறுண்புலித்துவசம்... *
விளங்குமகமேருமனோவேகரதமும்முரசு... ... *
களங்கறுகங்காநதிவெங்கனற்பரிவாடாமாலை ... *
துளங்கவில்பொற்சிலைபெற்றோர்துதிபெற்றவன்னியரோ

இதின் தாத்பரியம்.

வளப்பம்பொருந்திய பண்ணுடென்று சொல்லப்பட்ட சோழதேசம் மதம்பொருந்திய யானையும், ஆண்புலிக்கொடியும், பிரகாசிக்கப்பட்ட மகம்மேருவும், மனோவேகரதமும், ரணமுரசும், குற்றமற்ற கங்காநதியும், வெவ்வியவக்கினிப் பரியும், வாடாமாலையும், அழகிய வில்லும், இதுகளைப்பெற்றவர்கள்மேற்படிவாரசசந்ததியாராகியவன்னியர்களென்பதாம்,

இந்தச் சோழசந்ததியாராகிய வன்னியருக்குரிய தசாங்கத்தைச்சொல்லவந்தவர் சோழனுக்குரிய- காவேரி- ஆத்திமாலை- மலைமுதலானது சோழதேசத்திலிருக்க- மகாமேருமலையும், வாடாமாலையும், கங்காநதியும், அவர்சந்ததியாருக்குரியதென் றெப்ப

ரச் சொல்லலாமென்று சிலர் சொல்லுவார்கள்- அதின். ... சோழ சந்திரியாருக்கும், மற்றவரசர்களுக்கும், பதிவிஸ்தாரணங் கெங்காதிபமானபடியாற் றங்களுக்குரியவ... டங்கேசறிவிறாத்தில் வெகுகாலத்திலுக்குப் பிற்பாடு இந்தப் பூ... ந்த நாட்டைக்கைப்பற்றியபடியாலதைச்சொல்லாம... ந்தி சொன்னபடி பூர்விகசொந்தமான மலை- ஆறு- மலையை... சந்திரியாருக்குச்சொல்லுகிறதவிர வேறல்ல,

இதுவும் மேற்படிச் சிலைமெழுபது
அரசிற்சிறப்பு ௬௬-வது கவி,



நாடெல்லாவற்றுக்கரசுபல்லைம்பதிற் கரசுநல்லூர்சேர்கச்சி
நீடுமலைகளுக்கரசுமாமேருநதிக்கரசு நிறைநீர்க்கங்கை.
டெப்பெறுசிலைக்கரசவ்வுருத்திரர்மெய்ச்சிலையிலம்பெரிதும்
குழமணிமுடியரசுக்கரசுவன்னியரசன்றிச்சொலவேறுண்டோ

இதின் தாத்பரியம்,

பலநாட்டுக் கரசானது. இசைபொருந்திய நல்ல சோழநாடே - பட்டணங்களுக்கரசு - காஞ்சீபுரியே - கரசு - மகாமேருவே - நதிகளுக்கரசு - கங்கையே வி கரசு - உருத்திரர்கையிலெடுக்கப்பட்ட மகமேருவே ணபூமியைக் காக்கும்படியாயி ரத்தினக்கிரீடந்தரித்த வ... சர் க்ஷத்திரியவம்சத்தாராகிய வன்னியவரசரன்றிச் சொல ண்டோ வென்பதாம்.

இந்தக்கவியினுஞ் சூரியவம்சசாங்கத்திற் சொல்லப்பட்... ண வஸ்துக்களெல்லா மிவர்களுக்குரியதென்று குறிப்பி... லாமல் இவர்களுக் கிந்தநாட்டில் ஆதிகாஞ்சி பதியொ... ன்றும்படியாகவும் அரசருக்கரசனென்று சொன்னபடியா ... ஷிடவசத்தாற் பூமியை யாளப்பட்ட மற்றஜாதி சிற்றரசு... தங்கள் சொந்த வம்சத்தாராகிய சேரபாண்டிய சந்திரியாக... கும் இந்தச்சோழ சந்திரியாரோடேற்பட்டவரென்று தோ...

ன்றது-எப்படியென்றால். நியாயமாக யோசிக்குமளவில் ஆதியிரவனியவன்மச்சோழனை விந்தக்காட்டைத் திருத்திக் குடியேற்றி யரசு செய்தபடியாலும், சோழனுக்குச்சென்னியென்கிறபேர் நேர்ந்திருக்கிறபடியாலும், மற்றவன்னியர்களைவிடச்சோழன்சந்ததியாராகிய வன்னியர்களேமேன்மையுடையவரென்றுதோன்றுகின்றது.

இதுவும்-மேற்படிச்-சிலையெழுபது கூறுவது-கவி,

ஆவிக்காதரங்கூர்புனிதர்மகிழ்ந்தருள்வன்னியனையாம்புகழச்,
செவிக்காரமுதமெனக்கேட்டுச் சிற்றையுவந்துசீர்தூக்கிப், புவிக்காயிரம்பொன்னிறைநீக்கிப் பொற்றண்டிகை பூடணத்தோடு, கவிக்காயிரம்பொன் பரிசளித்தான் கருணாகரத்தொண்டவன்னியனே ...*

இதின்தாத்பரியம்,

அவிர்ப்பாகத்துக் கிச்சிக்கப்பட்ட பரிசுத்தமான தேவர்கள் மகிழ்ந்து கிருபைசெய்யப்பட்ட வன்னியனை நான்புகழ்ந்து பாடச் செவிக்கு அமிர்தத்தைப்போற் கேட்டு மனஞ்சந்தோஷித்துச்செய்யுளினுருட்பின் புகழையாராய்ந்து பூமிக்கிறைவரியாகிய ஆயிரம்பொன்னைநீக்கிப் பொற்சிவிகை யாபரணத்தோடுகவிக்காயிரம்பொன்னும் பரிசாகக்கொடுத்தான் கருணாகரத்தொண்ட வன்னியனென்பதாம்.

இந்தக்கவியாற் சோழன்சந்ததியாராகிய வன்னியர்களைக்குறித்துக் கம்பர்பாடினது சோழதேசத்தி லுறையூரி லரசுசெய்து வந்த கரிகாலச்சோழன் சந்ததியில்வந்த குலோத்துங்கச் சோழன் சொந்தபாத்தியத்துக்குரிய கருணாகரத்தொண்ட சோழனானவன் காஞ்சிபுரியைச்சேர்ந்த தொண்டநாட்டை யரசுசெய்த காலங்களில் இதல்லாமலின்னம் பல வித்வான்களும் மேற்படி கருணாகரத்தொண்ட சோழன்பேரில் மாலை, சதகங்கள் - முதலானசிலபிரபந்தங்களைப் பாடினதுந்தவிர வடதேசத்தைச்சேர்ந்த எழுகலிங்கத்தின்பேரி லுறையூரிலிராநின்ற குலோத்துங்கச்சோழனுந் தானும்

படைபெடுத்தபோது தாமேசர்வத்துக்குங் காரணகர்த்தனாகவும் மந்திரியாகவு, படைச்சேனாபதியாகவுமிருந்து ஜெயித்ததைப்பற்றி ஜெயங்கொண்டாரென்னும் புலவராயித்துவாருனவர், (பரணிஎன்னுங்) கிரந்தஞ் செய்துவைத்திருக்கிறார். (பரணியென்னுங் கிரந்தத்தின் விபரமாவது)

உத்தமனாகிய அரசனுகிய ஓர்வீர னெதிரேறி, யனந்தஞ் சேனைகளையும் ஆயிரம்யானைகளையும் - ஏககாலத்திற் கொல்வானுளு வன்னாயகனாகவைத்து கடவுள்வாழ்த்து - கடைதிறப்பு - பாலைநிலம் தெய்வகாடு - காளிகோயில - தேவியைக்குறித்தும் - பேய்களைக்குறித்தும் - இந்திரஜாலம் - ராஜபாரம்பரியம் - பேய்முறைப்பாடு - ராஜவவதாரம் காளிக்கு கூளி கூறியது - போரைக்குறித்து உத்தமனாகிய அக்குலத்திற் சொல்லப்பட்டது இந்தப்பரணி முழுதுறங்கமுப்பாடும்பேய்களும்காளியும் காளிக்குபேய்களும் முறையிடுவதாய்ப்பாடுகிறதுமல்லாமல் ராஜன் வந்தகுலமும் ராஜன் குலத்தி லவதரித்த முன்னோர்களுடைய பாரம்பரியமும், வெற்றியுங்கீர்த்தியுந் தோன்றும்படி ஈரடிப்பாய் தாழிசையாய்ப்பாடுவது-பரணியாம், இந்தபரணி கருணாகரத்தொண்டைமான் செயித்தது கலிங்கதேசமானபடியால் அந்தப்பேரிற்செய்யப்பட்டது (கலிங்கத்துப்பரணி என்றுபேர) அதில் இந்நூலில் அரசசந்ததியாரைக்குறித்துச்சொல்லப்பட்ட திருஷ்டாந்தத்துக்குள் சிலதிருஷ்டாந்தம் வருமாறு.

பரணி கடவுள்வாழ்த்து-நான்முகன்றுதி.

௧ - வது - தாழிசை.

நிலநான்குந்திசைநான்கும் ... ... *
நெடுங்கடல்களொருநான்குங் ... ... *
குலநான்குங்காத்தளிக்குங் ... ... *
குலதிபன்வாழ்கவென்றே ... ... *

இதின்தாத்பரியம்,

நாலுநிலங்களும் - நாலு திசைகளும் - நீண்ட நாலுகடல்களும் - பிரம்ம - க்ஷத்திரிய - வைசிய- சூத்திரர்களென்னும் - நா

...ங்கு சாதிகளையுங் காத்திரட்சிக்கப்பட்ட குலங்களுக்கெல்லாந் தீபம்போன்ற(சோழன்) வாழ்கவென்பதாம்.

இந்தக்கவியில்க்ஷத்திரியகுலத்துக்குள் இவனரசாள்கைதைப்பற்றி க்ஷத்திரியகுலத்தைச்சேர்ந்து நாலுசாதிகளையுங் காத்தலென்னையும், க்ஷத்திரியகுலத்தாருக்குள்ளும் மற்றகுலத்தாருக்கு மேம்பாடானதைப்பற்றி குலதீபனென்றுஞ் சொல்லுவார்.

இதுவும் மேற்படிப்பரணி கடைதிறப்பு

௪௩ வது தாழிசை.

காஞ்சியிருக்கக்கலிங்கங்குலைந்த ... ... *
கலவிமடவீர்கழற்சென்னி ... ... *
காஞ்சியிருக்கக்கலிங்கங்குலைந்த ... ... *
களபோர்பாடத்திறமினோ ... ... *

இதின்தாத்பரியம்,

எண்மணிக்கோர்வை மாலையிருக்க வல்திரங்குலைய ... செய்யப்பட்ட பெண்களே வீரகண்டாமணியைத்தரித்த பாதத்தையுடைய சோழனானவன் தனக்குரியகச்சிப்பதியிருக்கக்கலிங்கமென்னுந் தேசத்தையழித்த யுத்தகீர்த்தியைப் பாடவீர் கதவைத்திறவுங்கோளென்பதாம்.

இதுவும்-மேற்படிப்பரணி கடைதிறப்பு-

௪௪ வது-தாழிசை.

இலங்கையெறிந்தகருணாகரன்ற... ... ...*
னிகல்வெஞ்சிலையின்வலிகேட்பீர் ... *
கலிங்கமெறிந்தகருணாகரன்றன் ... ... *
களப்போர்பாடத்திறமினோ... ... ...*

இதின்றாத்பரியம்.

இலங்கையென்னும் பட்டணத்தை முற்காலத்தி லழித்த திருமையையுடைய ராமராஜனது யுத்தத்தின் வில்லின் றிறத்தைச் சேர்க்கப்பட்டவர்களை கலிங்கதேசத்தையழித்த கருணாகரத்தொண்டைமான் சோழனதுபோர்க்களத்தைப்பாடக்கபாடற் றிறங்கொள்வன் பதாம்,

இந்தக்கவியினால் மற்றவிடங்களிற் சோழனென்றுபொதுவாகச் சொல்லியிருப்பதால் மேற்படிக் கலிங்கதேசத்தின்மேற் படையெடுத்தவன்- கருணாகரத்தொண்டைமானென்றும் - சோழனென்றுங் குறிப்பித்தார்.



இதுவும்-மேற்படிப்பரணி-காடுபாடியது.

௨௧வது தாழிசை.



முள்ளாறுங்கல்லாறுந்தெள்ளோட ... ...*
முன்னொருநாள்வாளபயன்முனிந்தபோரின் ... *
வெள்ளாறுங்கோட்டாறும்புகையாலூட ... *
வெந்தவனமிந்தவனமொக்கிலொக்கும் ... *

இதின்றாத்பரியம்,

முட்பொருந்தியகாட்டின்வழியாகவும், கற்பொருந்தியமலையின்வழியாகவும், பாண்டியர்களோட முற்காலங்களிலொருதிறம் வாளையுடையசோழனானவன்கோபித்தபோரில் வெள்ளாறு-கோட்டாறு முதலானதும் புகையூடப்பட்டு வெந்தகாட்டைப்போ லிந்தவனமொக்குமென்பதாம்,

இந்தக்கவியினால் மூன்றாவததிகாரம்- ஒன்பதாவது பிரிவிற் றிருமங்கையாழ்வாராற் குறித்துச்சொல்லப்பட்ட விந்தச்சோழன் முன்னோர்களாகிய சோழபல்லவனுக்கும் பாண்டியனுக்குமாதியில்

நடந்தயுத்தத்தின் செயத்தைக்குறித்து ஷ யாழ்வார் சொன்னது போலிருவரும்மேற்படிப்பாண்டியனைச்செயித்ததாகச் சொல்லுறார்

(*)

இதுவும்-மேற்படிப்பரணி இராஜபாரம்பரியம்.

எ-வது-தாழிசை.

அரணிமேவள்வியிலகட்படவகண்டவுருவா ... *
யரவணைத்துயிலுமாதிமுதலாகவபயன் ... *
றரணிகாவலளவுஞ்செலமொழிந்தமுனிவன் ... *
றமெனமூந்தருளமாமுனிமொழிந்தபடியே... *

இதின் தாத்பரியம்.

அகண்டவுருவாயிருந்துசேஷசயனஞ்செய்யும் ஆதிமூலக்கடவுளானவர் கட்டானவேழ்வியாகிய அக்கினிமூலமாய்வந்துராமனாய்ப்பிறந்தநாள்முதல் சோழசந்ததியார்கள் இந்தப்பூமியை யாளுமளவுமிருந்து பழையபால சமுத்திரம்போவாரென்று முனிவர்சொன்னதும்பரற்சொல்லிப்போனாரென்பதாம்.

இந்தக்கவியினால் விஷ்ணுவானவர் கலைக்கோட்டுமகாரிஷியாற் செய்த யாகமூலமாய் வந்ததைப்பற்றி வருவித்ததாயிந்தத்தாத்பரியம்பொருந்துமேதவிர நியாயமாய்ப்புராணநூல்களைப்போல் க்ஷத்திரியர்களக்கினிவளர்க்கப்பட்ட வேழ்விமூலமாக வந்திருக்கிறதைப்பற்றியும், விஷ்ணுவம்சமே யரசராய்வருவதைப்பற்றியும் க்ஷத்திரியருற்பத்தி முதற் சோழன் சந்ததியுள்ளவரையிலும் விஷ்ணுவம்சத்தாலேயே யந்தச்சந்ததி யிருக்குமென்றுஞ் சொல்லவேண்டியது- அதெப்படியென்றால் - வடதேசத்தின்புராண சரித்திரத்திலே க்ஷத்திரியருற்பத்திக்கு விஷ்ணுவே யாகஞ்செய்யச் சொல்லி தனதம்சத்தை தானுபிரிவா யனுப்பியிருப்பதாகச் சொல்வதே சாட்சியாயிருக்கின்றது.

இதுவும்-மேற்படிப்பரணி ராஜராஜப்பிரியம்.

௫௧-வது-தாழிசை.

எவ்வளவுதிரிபுவனமுளவாய்த்தோன்றும் ... *
மெவ்வளவுகாலமறைகளுமுளவாய்நிற்கும் . *
மவ்வளவுதிகிரிவரையளவுஞ்செங்கோ ... ... *
லாழியின்கரையளவுங்காத்தளிக்கமாறும் ... *

இதின்தாற்பரியம்.

எவ்வளவுகாலந்திரிபுவனங்களுமுண்டாய்த்தோன்றுமோ எவ்வளவுகாலங் கட்டாகிய வேதங்களுமுண்டாயிருக்குமோ அந்தகாலவளவும்- இமயமலையளவுஞ்செங்கோலாகிய வாள்ஞாசக்கரத்தைச்செலுத்திச்சோழன்காத்திரட்சிக்கிறகிரமமென்பதாம்.

இந்தக்கவியினால் மும்நாலவதுநிகாரம்- பிரம்மா நாராயணபிரிவி ஹிரணியவர்ம சோழனுக்கு நட்சத்திரானவரிந்தப்பூமியையாளும்படியாய்ச் - செங்கோல்-கிரீடம்- துவசமுதலானதுங்கொடுத்து இந்தப் பூமியுள்ளவரையு முனதுவம்சத்தாரை ரட்சிக்கிறேனென்று சொன்னதைப்புராணபூர்வகமாயெழுதியிருக்கிறனல்லவா-அந்தக் கருத்தையேயிந்தக்கவியிற்பூமிவேதமுள்ளளவும்சோழன்செங்கோல் செலுத்திரட்சிக்கிற கிரமமெப்பதாம்.

இதுவும்-மேற்படிபரணி காளிக்குக் கூளிப் பிரியது.

௫௨-வது தாழிசை.

தண்டாரின்மலர்த்திரடோளபயன் ... *
றேனெவியசேனைதனக்கடையக் ... *
கண்ணாகியசோழன்சக்கரமாங் ... *
கருணாகரன்வாரணமேற்கொளவே ... *

இதின் தாத்பரியம்.

குளிர்ச்சியும் வாசனையுமுடைய புட்பமாலையை யணிந்தகோலையுடைய குலோத்துங்கச் சோழனா லனுப்பப்பட்ட சேனைகளுக்கு கடைக்கலம் புகவோரிடமாகியும் மேற்படிச்சேனைகளுக்குநேத்திரத்தைப்போலவும் சோழவம்சத்திற்பிறந்தகருணாகரச்சோழனானவன் ஆனையின்பேரில் ஏறினானென்பதாம்.

இந்தக்கவியினாற் கலிங்கதேசத்தின்பேரி லுத்தத்துக்குப்போன சேனைகளுக்கெல்லாம் இந்தக்கருணாகரச்சோழனே படைபாட்சியாகப்போனதாகவும்மேற்படிக்குலோத்துங்கச்சோழனுக்குச் சொந்தபாத்தியத்தை யுடையதாகவும் குறிப்பித்தார்,

---

இதுவும் - மேற்படிப்பரணி காளிக்குக்

கூளிகூறியது -௫௪-வது- தாழி.

மறித்தோடியெவ்வரசுஞ்சரியவென்று … *
வருமனுக்கைப்பல்லவர்கோன் வளவைவேந்த *
னெறித்தோடையிலங்குநடைக்களிற்றின்மேற்கொண் *
டிறைவேட்டபெரும்புலிபோலிகன்மேற்செல்ல *

இதின் தாத்பரியம்.

எவ்வரசர்களும் முதுகுகாட்டி யோடும்படி வென்றுவரும்பல்லவர்க்கு ளரசனான சோழராஜனானவன் மாலைபிரகாசிக்கும்படி நடையையுடைய ஆனையின்பேரிலேறி பெரியபுலிபோல யுத்தத்துக்குப்போனா னென்பதாம்,

இந்தக்கவியினால்மூன்றாவதிகாரம் ஒன்பதாவதுபிரிவில் அரசருக்கேபல்லவனென்கிற பேருரியதென்றும் அந்தப் பல்லவனென்கிறபேர் முக்கியம் சோழன்சந்ததியாருக்கே மிகவு முரித்தானதென்று விளங்கும்படிச் சொன்னதுபோ லிந்தக்கவியினாற் பல்லவர்கோன்வளவை வேந்தனென்றுங் குறித்துச்சொன்னார்

இந்தப்பரணியினாலிரணியவர்மச்சோழன்முதலெல்லாச்சோழர்களுடைய சந்ததியார்களாகியவன்னியர்களுக்குப் பொதுவாய்

ச்சொன்னசிலையெழுபதை யிந்தப்பாணியிற்சொல்லப்பட்ட கருணா
கரனவனொப்புக்கொண்டு பரிசளித்ததேதவிர வேறல்ல- ஆனாற்சி
லர் திருவாரூரையரசுசெய்த மநுநீதிச்சக்கிரவர்த்திச் சோழனு
டையசந்ததியில்வந்த கருணாகரச்சோழன் சமூகத்திலிந்தச்சிலையெ
ழுபதென்னுங் கிரந்த மரங்கேற்றல் செய்தாமென்றுசொல்லலாகா
தா அந்தக்கருணாகரச்சோழன் சந்ததியார் நாளதுவரையிலு மிரு
ந்துவருகிறார்களென்று சொல்லுவார்கள்- ஆதலாற்றிருவாரூரிலி
ருந்த சோழன்சமூகத்தி லரங்கேற்றியதென்று சொல்வதற்கு எந்
தநியாயமுமில்லை - அதெப்படியென்றும் தொண்டமண்டலத்துக்
குத்தலைநகரமாகிய காஞ்சிபுரியையாண்ட கருணாகரச்சோழன்சமூ
கத்தி லரங்கேற்றியபடியா லந்தக் காஞ்சிபுரியைப் பிரதானமாக
வைத்து மேற்படிச்சிலையெழுபதிற் புகழ்ந்திருப்பதுந்தவிர முதற்க
டவுளாகிய காஞ்சிபுரியில் வீற்றிருக்கும் விகடசக்ர விநாயகனை
த்துதித்திருப்பதுமல்லாமற் பச்சைநிறத்தையுடைய விஷ்ணுவும்,ப
வழநிறத்தையுடைய ருத்திரனும் வாழப்பட்ட காஞ்சீபுரத்துக்குச்
சமானமான தலமில்லையென்று புகழ்ந்துசொன்னார். இந்தத்திருஷ்
டாந்தத்தினாற் காஞ்சிபுரத்திற் கருணாகரச்சோழன் சமூகத்திலர
ங்கேற்றியதென்று ருசுவாகின்றது- சிலையெழுபதென்னுங் கிரந்த
மானது தெரிந்தவர்கள்பலரும் வன்னியர்களல்லது-பள்ளிகளுக்குரி
யதென்றுஉலகமுழுமையுந்தெரிந்திருக்கிறபடியாலும், இந்தவன்னி
யர்களாகியபள்ளிகள்பேரில்-மங்கலக்கவி-சரமகவி- முதலானதுமே
ந்தவித்வான்கள்பாடிப்புகழ்ந்தானுஞ்சோழன்சந்ததியாமென்றுதோ
ன்றும்படிச் சிலையெழுபதுக் குரியவனென்றும், தொடுத்தவம்புதோ
ருதவ னென்றும், புலிக்கொடிக் குடையவ னென்றும், இதுபோ
லனந்தம் ராஜ சந்ததியாமென்று தோன்றும்படியா யரசுக்குரிய
தசாங்கங்களு மிவர்களுக்குரியதென்று இதுவரையிலும் புகழ்ந்து
அனந்தங்கவிகளிற் பாடியிருக்கிறதல்லாமல் இனிமேலும்புகழ்ந்து
பாட எதிர்பார்த்திருக்க மேற்படிப்பள்ளிகளாகிய வன்னியர்களை

யந்தச்சந்ததியாரல்லவென்று யார்வாய்திறந்துசொல்லுவார்களோ எனக்குத்தெரியவில்லை - இதுவல்லாமல் முன்குறித்த (பரணியானது) கருணாகரச்சோழன்பேரிற்செய்து அதிற்சொல்லப்பட்ட ராஜ பரம்பரையிற் சூரியவம்சத்தனந்த வரசர்களு மந்தச் சந்ததியிலே வந்துசோழதேசத்தையாண்ட வனந்தஞ் சோழர்களுமிவன்மு ன்னோர்களென்று குறிப்பித்துச் சொன்னதுமல்லாமல் மூலலிங் கத்தையும் ஜெயித்தவனுடைய புகழ் பெருமை-இதுகளைப்பலகா லுய்ச்சொல்லியிருக்கிறதையு முணராமலும், பரணியாடப்பெற ப்பட்டவர்க ளிப்பேர்ப்பட்டவர்களென்றுந் தெரிந்துக் கொள்ளா மலரசரல்லாத பலஜாதிகள்பேரிலும் பாடினதாகச் சிறந்தவிவேகி களைப்போற்சிலர்சொல்லிக்கொள்ளுகிறார்கள்-அவர்களப்படிச்சொ ல்வதுபெரியதப்பேதவிரவேறல்ல அந்தப்பரணியினாலேயே கருணாக ரன்பேரிற் சொல்லப்பட்டதென் றறிந்துக்கொள்வதுமல்லாமலின் னமனந்த மேற்கோளானசாஸ்திர திருஷ்டாந்தங்களினு லறிந்து க்கொள்ளலாம் - அதிலொருநூல்திருஷ்டாந்தம்வருமாறு.

தொண்டமண்டலசதகம்-௯௨-வதுகவி.



பண்டையோர்நாளையிலோரேழ்கலிங்கப்பரணிகொண்டு ... ❊
செண்டையுமேருவிற்றீட்டுவித்தோன்கழற்செப்பியன்செய் ... ❊
தொண்டரன்றும்புரக்கின்றங்கானந்தித்தோன்றலெங்கள் ... ... ❊
வண்டையர்கோனங்கருணாகரன்றொண்டமண்டலமே ... .. ❊

இதின்தாத்பரியம்.

முற்காலத்திற்கலிங்கதேசத்தைச்செயித்துப் பரணியாடற்பெ ற்றுமேருவிற் றனதுபுலிக்கொடியை யெழுதிவைத்த வீரவெண் டையத்தரித்த சோழன்மரபில்வந்துதொண்டநாட்டை யாளப்பட் டபலம்பொருந்திய வீரசருக்கரசனாகிய கருணாகரச்(சோழ)னென் பதாம்,

இந்தக்கவியிற் செண்டை மேருவிற்றட்டியெழுதிவைத்தானெ ன்றிருக்க, நாம் பார்த்த பிரதியில் இமையையெழுதிவைத்தானென்றெழுதியிரு க்கிறபடியால் படிப்பவர்கள் சந்தேகிப்பார்களாதலாலதின்விபரம்வருமாறு.



கலிங்கத்துப்பரணி-ராஜபாரம்பரியம்-௧-வது-தாழிசை.


செண்டுகொண்டு கரிகாலனொருகாலிலிமயச் ... *
சிமயமால்வரைதிரித்தருளிமீளவதனைப் ... *
பண்டுநின்றபடிநிற்கவிதுமேருமுதுகிற் ... *
பாய்புலிக்குறிபொறித்ததுமறித்தபொழுதே ... *

இதின்தாத்பரியம்.

செண்டென்னுமாயுதத்தைக்கொண்டு கரிகாலச்சோழனானவன் உயர்ந்தசிகரத்தையுடைய இமயமலையைக்கெடுத்து மறுபடியு ம் இருந்தநிலைதனைப் பழையபடிநிற்கச்செய்து அந்தமேருவி ன்முதுகிற் பாயாநின்ற தனக்குரிய புலிக்கொடியை யெழுதினா னென்பதாம்.

இந்தக்கவியிற் மகாமேருவைச் செண்டினாலடித்து முதுகு காட்டும்படிச்செய்து அதிற்றன்புலிக்கொடியை யெழுதினானென்று சொல்லியிருப்பதை முன்குறித்த தொண்டைமண்டலச்சதக கவியிற் கரிகாற்செண்டடையே யெழுதினானென்று சொன்னதேதவிர வேற ல்ல-பாண்டியன்மேருவைத்தனது செண்டினாலடித்துத்தனதுமீனக் கொடியைமேருவிலெழுதினதாகத்திருவிளையாடற்புராணத்திற்சொ ல்லி யிருக்கிறதுபோற் சோழனுக்குஞ்சொல்லி யிருக்கிறபடியாற் பாண்டியன்செய்ததே சோழன்செய்ததாகச் சொன்னதோ- அல் லது- சோழன்செய்ததற்கு வேறேபிரசித்தமான சரித்திர மிருக்கின் றதோ எதுவுந்தெரியவில்லை - இதுவுமல்லாமல் இப்போதுசொ ல்லிய திருஷ்டாந்தங்கள்போக மேற்படிவன்னியரோ யரசசந்ததி யாரென்று பூர்வீகச்சாசனங்களினாற் சில திருஷ்டாந்தங்கள் வ ருமாறு.

வைத்தீஸ்வரன் கோயில் க்ஷத்திரிய சந்ததியாராகிய பள்ளிகள்- அல்லது-வன்னியர்களுக்குரிய மடத்திலிலாசாசனத்தின் விபரமாவது.



புள்ளிருக்குவேளூர் - தாண்டவராயபண்டாரமவர்களுப்பண்டாரனைவருமெழுதிவையாநிதத்தாய்பிரசண்டைய பட்டயம் - ரெட்டெழுத்து - காற்சீட்டு சட்டங்களுக்கு அயிராபதத்தாட்பிள்ளை.



சுபஸ்ரீமன் - மஹாமண்டலேஸ்வரன் - அரியராயவிபாடன்-பாஷைக்குத்தப்புவராதகண்டன்- மூவராயகண்டன்-தேவராயகண்டன்-கண்டநாடுகொண்டுகொண்டநாடுகொடாதான் - பதினெட்டுகோஷ்டத்தில் வன்னியராயகண்டன்- அய்ம்பத்திரு மன்னருகரயபயங்கரன் - சமரிலயார்த்தாண்டன் - இராஜமகேந்திரன் - நவசக்கிரவர்த்திகளில் - அசுவபதி - கெஜபதி - நரபதி - நவகோடிநாராயணன் - பூர்வ-தெக்ஷிண பச்சிம-உத்தர-சமுத்திராதிபதி - ஈழமும்-குணபள்ளமுங்கொப்பமும் [illegible]ட்டையும் - அஸ்வமேட்டையும் - மயபலவாடலமும் - கலிங்க[illegible]ந்துறைகண்டருளியஇராஜாதிராஜன்-ராசமகேந்திரன்-ராச[illegible]க்குராசமணிவிளக்கு-இராஜபரகேசரி சோழசிம்மாசனாருடைய - மணிமுடிகொண்டுவெதிர்த்தராசாருவன் - ஒட்டியதளவிபாலயடக - ஓட்டியர்மோகந்தவிழ்ந்தான்- சோழமண்டலப் பிரதிஷ்டாபனாசாரியன்-சோழர் மோகந்தவிழ்ந்தான்-பாண்டியமண்டலப்பதிட்டாசனத்தான்-பாண்டியர்மோகந்தவிழ்ந்தான்-கொங்குமண்டலம்குறும்பறுத்தது அழியாவீரணமழித்தவிராடன் - கெடிவன்னியபமிண்டன் - ரணமன்னியப்பிரியன் - கோஷ்டத்துவன்னியராய கோலாகலன் - இளவரசுமணவாளன் - கண்டியப்பிரதாபன் - கட்டாரிவல்லவன் - சங்கீதசாஹித்ய வித்யாவினோதன்-ரணமுககந்தவீரன்- நகைமுகச் சந்திரோதயன்-மத்தகஜ[illegible] சுத்தபரிபாலன்-மகாகாளிகூளிகணங்கள்கைகூப்பும் மணவாளமெகப்பிரான்- எதிர்த்தோரைசினமடக்கும் வேங்கைவ

ரிப்புலியானென்றன் - தேன்பாயும்வளநாடன் - கொங்கர்குலாதிப
ன் - நித்தியகலியாணமேந்தாநிடன் பூலோகதேசாதிபதிகளில ஸ்ரீ
[illegible] - சிவசமயபரிபாலகன் - [illegible]
[illegible] - [illegible] பரிபாலகராண [illegible]
[illegible] குருச்சகாம்தவா - மல்லுகுப்பெமை
[illegible] ந்துகதுக்க [illegible] - குளிர [illegible]
[illegible] - [illegible] - [illegible] கர்ணை-
[illegible] - [illegible] - இப்படிப்
பூலோக [illegible] - அச்சுதம்தவமகா
ராயர் - [illegible] காராயர் - [illegible] விராசபெட்ட
[illegible]
மேற்செல்ல [illegible] - [illegible]
[illegible] - [illegible]
[illegible] - [illegible]
நாளில் [illegible] - [illegible] இராஜாதிராஜன்
ராஜவளநாடு [illegible] - [illegible]
[illegible] - [illegible] இரு
க்கும் [illegible] - [illegible] பெருந்
திருளிய [illegible] சல்லிபியி [illegible] திருச் சியாலய [illegible]
மடாலய [illegible] பட்டார்தங்கள்மரபிற்
பெருப்பிரதாப [illegible] மானமேவை [illegible] நம்பொனடலமண்டப் சோழ
கனூர் காலாக்கரம்தாழவுடையார் மழவராயநாயகர் - பருப்பூரக்கப்பி
ராயநாயனூர் - இராவுத்தபிட்டநாயனூர் ஊதத்தம்பகால்-வன்னியநாய
னூர்-சமுடிப்டியார்- பாஞ்சாலநாயனூர்-வாணடையார்-கொங்குடையா
ர்- பெண்ணைக்கரை சீராயநாயனூர் -செல்லிராயகவுண்டர் - சீரா
மக்கவுண்டர் - செங்கழுநீர்க்கவுண்டர் -வேட்சிக்கவுண்டர்- நமனூண்
டிக்கவுண்டர்-நரசிம்மக்கவுண்டர்- அனைகராயக்கவுண்டர் - இவர்க
ளனைவருங்கூடிச்சல்லிபியிற் மேலைத்தெருவீதியில் தென்சரு
கில் நந்தகோபாலன்மடத்துக்குக் கிழக்கு - மலையமான்மடத்து
க்கு மேற்கு - கிழக்கு- மேற்கு- அடி (௫௰) தெற்கு- வடக்கு-அடி
(உஉ௫) ஆக அடி (௱௭௫) அடி ஒன்றுக்குப்பொன் - ௯-ஆக -
(௲௭) பொன்னு (௫) பணம் ஸ்தலத்துக்கு வேல்பிள்ளைகையிற் சு

த்துகிணாயமாய்க்கொண்டு சல்லுவெட்டி- பேர்வைத்து கிளைகட்டி வைத்துத்தாண்டவராயபண்டாரத்துக்குத் தாம்பிரசாதனமாகப் பட்டயம் பண்ணிக்கொடுத்து நாலுமண்டலம் ஐம்பத்தாறு தேசத்திலும் கொண்டாடச்சொல்லி மகாமடதாம்மபிச்சை- முட்டியும் திருவிளக்கும் - திருநந்தியாணைபணிவிடையும் திருமாலைப்படியும்- மகேசுவரபூசையும் பண்ணிவரச்சொல்லி நம்முடையசந்ததியார் நாலுமண்டலம் - ஐம்பத்தாறுதேசத்திலுள்ள உறவின்முறையாரெல்லோருக்கும் கீர்த்தியும் பலனுமுண்டாகவேண்டுமென்று வரமுடையார் அஞ்சாசிங்கம் - நீலகங்கராயர் முலைப்படையாட்சி காளிங்கராயர் - சருப்புடையார் - இவர்களெல்லோரும் மற்றும் [illegible] பட்டம்கட்டினவர் கட்டளையிட்டருளும்- காலிப்பட்டி [illegible] - [illegible] - ஜெயங்கொண்ட சோழபுரம்- [illegible] - [illegible] பதினெ [illegible] - [illegible] ஆதி [illegible] - [illegible] பூவாணி [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] பெ [illegible] - [illegible] - பத்துப்பண [illegible] - காணியிற் குற்ற [illegible] சேருகிறபடி [illegible] - [illegible] சந்திராதித்திய ருள்ளளவுக்கும் நடத்தி வருவார்களாகவும் - இந்த மடவாலயதருமத்தை விசாரித்துப்பண்டாரமவர்களுக்கு இருந்தநாளளவும் படிச்செலவுங்கொடுத்து உபகாரமாய்வருகிறவர்த்தனை தங்காமற் கொடுத்தபேர்கள் மாதா பிதாக்களை இரட்சித்து சிவாலயம்- பிரம்மாலயம் - பூதானம்- கோதானம் - கன்னியாதானம் செய்தபலனைப் பெறுவார்கள் - மேற்படி தை மீ தலைச் செவ்வாய்க்கிழமை உதயத்துக்குத்திராவிணைதீர்த்த சுவாமியையும் எதலம்மையையும்- முத்துக்குமாரசுவாமியையும் சேவித்தபலனைப்பெறுவார்கள் தருமவர்த்தனையைக்கெடாதவர் பாவப்பலனைப் பெறுவார்கள்.



மேற்படிச்செப்பேட்டிலெழுதியிருக்கும் இராஜக்ஷத்திரியர்களின்விருது முதலியவற்றின் விபரம் வருமாறு.

பத்திரகாளியம்மை கொடுத்த பத்துங்காவிருது - தேவேந்திரன் கொடுத்த வெள்ளையானை - கொன்றைமாலை வாளாயுதம் - அக்கினித்திரள் சாமரப்பிரயோகம் - பகல்தீவட்டி - கருடசங்கு - சகாரி காலட்டைப்பி - பஞ்சவர்ணாகம் - பாசுகளாஞ்சி - புலிக்கொடி - வெருடகக்கொடி - அன்னக்கொடி - மகரக்கொடி மச்சக்கொடி - மயிற்கொடி சிங்கக்கொடி - தவளச்சங்கு பவளாங்குழல் வாளத்தண்டிக்குப் பத்திக்குடை - வெள்ளைக்குடை - பட்டவானைக்கழி - சுவாமகுடி - சாமரை - பிரிமயாட்டி - வெள்ளைப்பாவாடை - கத்தி - படார் சமதாளம் - விருதுடி - லாந்தர் கல் - அம்பு - வில்லு - அம்புறாத்தூணி - பப்பா - வெங்கலக்கொம்பு நகாகளமென்றுசொல்லப்பட்ட பஞ்சவர்ணநாகா (உ) மேளம் - செயபேரி - துடி-முட்டி - வேட்டைநாய் ஆக விருது கூ.

இந்தச்செப்பேட்டுசாசனத்திற்குறித்துச்சொல்லப்பட்ட புஜபலதேவமகாராயர் - அச்சுததேவமகாராயர் கிருஷ்ணதேவமகாராயர் இவர்கள் ராசகுலத்துக்கு மணிவிளக்கென்றும் - சோழசிங்கசித்தாருனென்றும் - பாண்டியமண்டலபதி மாசவாத்தானென்றும் - அஷ்டியவிராணமடூர்த்த கொடிவன்னியவமென்றும் - யோகீந்திரவன்னியராயகோலாகாலனென்றும் - கொங்கர்குலாதிப னென்றும் - பூலோகதேசாதிபதியின் சூரியவம்சகுலதீபகாருண்யனென்றும் - சொல்லிநிற்பதினாலே முன்குறிப்பித்த இராயர்மூவர்களும் சூரியகுலத்தாரென்றும் - சோழனென்றும் - பாண்டியனென்றும் சேரனென்றும் - இவர்களெல்லாம் ஒரேகுலமென்றும் இவர்கள் வன்னியர்களென்றும் - அவர்கள் சத்திரியரான ராஜகுடிகளே யிந்தச் சாதனம் எழுதிக்கொடுத்தவர்களென்றும் ரூபவாகிறது

ந்தவிர மேற்படிச் செட்டிப்பேட்டை யெழுதியிருக்கிற கிராமங்களுக்குரி யவிருதுகளைக்குறித்துக் கவனித்துயோசிப்பார்களேயானால் மேற் படிவன்னியர்களே யரச சந்ததியாரென்று சாவதானமாய் பூர்த்தியாயறிந்துக்கொள்ளலாம்.

இந்தத்தாம்பிரசாதனத்தைக்குறித்துச் சிலஜாதியார் தாங்களுங் குறிக்கிறகற்பனையைப்போலிதுவுங் கற்பனையாயிருக்குமென்று எண்ணுவாருண்டு அப்படியெண்ணப்பட்டவர்கள் மேற்படிமடத்துக்குப்போய்த்தாங்களே நேரிற்பரிசோதித்துக்கொள்ளலாம்.

இதுவுமல்லாமற் காஞ்சிபுரத்திலிருக்கும் சிலசாதனங்களிற் சிலவற்றிலிற் சோழராசனுசாரிடமும் கற்பித்திருந்தியார்க ளெழுதிக்கொடுத்த ஒருசெப்பேட்டுசாதனத்திலிருக்கிறது - அதுமுழுமையு மிதிலெழுதினால் அதிகமாக விரியுமாதலால் அதைக்குறித்ததைச் சுருக்கியிந்தவிடத்திற்குறிப்பிடுகிறோம்.

ஆதாவது - சாலிவாகனவருஷத்திற்கு அசுவமேதம் - சாலிவாகனசகாப்தம் (ளாயிரத்தெழுமேல்நடராபவாத்தின மேற்குமேல்-செல்லாநின்ற விரோதமான செளமிய வருஷத்தில் - பங்குனிமாதம் - 9வ உத்திரநட்சத்திரத்தில் (அனேகராசராசகேசரி மேந்திர அனேகவிரட்பிரதாப - வரசைனிய விநாசகாமாதுர்யவைரிய - காரீரியவீரிய - பராக்கிரமசாலியாயிருக்கிறவிராமேஜந்திரசோழன் அரசாளும்பொழுதில்) ஸ்ரீமத்கைலாசநாயக மகாஸ்தலம் காஞ்சி நகரத்திலிருக்கும் திருவேகம்பமுடைய நாயகனைப்பூசிக்கும் மாதுங்கராக்கள் சிம்மாசனாதிகாரத்தராய்த்திரிவர்ணரூபுருவாயிருக்கிற ஞானசூரியபட்டமுடையவர் கச்சேசுவரகுருசுவாமியாரவர்கள்மடத்துக்குச்சம்புமாமுனிவர் யக்ஞவியிற்பிறந்த ஆதிககாரிவாதாபிக சதுரதிவாரணம்பண்ணி வீரகட்டை கட்டி அக்கினிக்கொடி புலிக்கொடி சிங்கக்கொடி அனுமக்கொடி பஞ்சவர்ணக்கொடியுடைத்த-மதகரிவரூடரியர் - மகுடந்தரித்தவன்னியர்-வீரமார்த்தாண்டவன்னியர் - பிரதாபவன்னியர்விசித்திரவன்னியர் -இந்தவாச

ர்கள் மேற்படிக் காஞ்சிபுரமுதற் - கிழக்கு, அங்கி கோட்டத்துக்கு மேற்கு, பாலக்காட்டுச்சேரிக்குக் - கிழக்கு, தேவப்பிரயாகைக்குத் தெற்கு, ராமநாதபுரத்துக்கு - வடக்கு இதற்குட்பட்ட வன்னிய வரசர்களும்மேற்படி வன்னிய வரசர்களுக்குப் படைத்துணைவர்களாகிய - நத்தமான் - சுருதிமான் - மலையமான் - இந்த மூவர்களும் மறவர் - வேடர் - எருதிகளிந்த மூவர்களும் - மீனவர் - அவிரியர் - கூடைக்கட்டியென்னும் வேடர் - இவர்கள் மூவர்களும் ஆக - ஒன்பது பேரும் மற்ற விராஜாங்கத்துக்குரிய குடிகளும், மேற்படி யாசாரியருக்குக் கலியாணமுதலான சுபகாரியங்களுக்குக் கட்டடங் கொடுக்கவேண்டுமென்று அந்தச்சாதனத்தி லெழுதியிருக்கின்றது - இந்தச்சாதனத்தைப் பார்ப்பார்களானால் மேற்படிவன்னியர்கள் சோமன் சந்ததியாகிய வரசசந்ததியாரென் றறிந்துக் கொள்ளலாம் - இதுபோ லின்னுமனந்தம் ஸ்தலசாதனங்களினாலும் இந்தவன்னியர்கள ராஜசந்ததியாரென்று தெரிந்துக்கொள்ளலாம்.

இப்போதுநானிந்தப் புஸ்தகத்திற் காட்டின சிலபுராணதிருஷ்டாந்த அனுபவத்துடன் அரசசந்ததியார் வன்னியர்களல்லது பள்ளிகளென்றுவிளங்கும்படியெழுதியிருக்கிறேனல்லவா - இதைமூடத்தன்மையைக்கைக்கொண்ட படியாதவாலீபர்களும் ஸ்திரீகளுங்கூட வொப்புக்கொள்ளுவார்கள் - அப்பேர்ப்பட்ட திருஷ்டாந்தத்தை நவோந்தரத்தி லுயர்ந்தவராக நடித்துக்காட்டின சிலர் வசந்தகாலத்துக் குளசலம்போ லவர்கள் மனமான தொப்புக்கொண்டு மேலுக்குக் கொதித்து வீணான குதற்கம் பேசுவார்களானால் நானென்னசெய்யலாம்.

ஆனாலரசசந்ததியாருக்குரிய புராணங்களாலும் திருஷ்டாந்தங்களாலும் நானின்னும் சொல்லப்புகுந்தா லந்தச்சரித்திரமாகிய நூலுக்கு இப்போதெழுதிய இந்தச்சரித்திரம் முகவுரையாகி

ய பாயிரமாக விருக்குமே தவிரவேறல்ல - ஆனால் நானப்படி விரிவாய்ச் சொல்லுகிறதற்கு முன்பாயிரத்திற் குறிக்கப்பட்ட பிரபுக்களி லவரிலொருவராகிய மஹாராஜராஜஸ்ரீ எப்போதும் நீங்காதகுல வுத்தாரண சிந்தையராகிய - ச - ஆண்டியப்ப நாயகரும், மேற்படி யரசசந்ததியில்வந்து சுயாபிமானத்தை யிடைவிடாது கைக்கொண்ட - ம-௱௱ ஸ்ரீ- மைலை இராஜகோபாலநாயகரும், எடுத்துக்கொண்ட முயலகைப் பிரயத்தனத்தைப்போல் மேற்படி யரசசந்ததியார்களி லியாராகிலு மெடுத்துக்கொள்வார்களானால் நானந்தச்சரித்திரத்தை விவரித்தெழுதி வெளிப்படுத்த வெதிர்ப்பார்த்திருக்கிறேன்- அப்படியொருக்கா லின்னமும் விபரமாயெழுதி வெளியிட்டகாலத்திலும் முன்குறிக்கப்பட்டவர்கள் நம்பாமற்போவார்களானால் மேற்படி யரசசந்ததியார் தங்களுக்குரிய பூர்வஸ்திதியை யடைந்தகாலத்தில்மாத்திரந் நம்புவார்களோ வென்னமோ தெரியவில்லை-ஆனாலுண்மையை யிவர்களநம்பிறுலென்ன நம்பாமற்போய் விட்டாலென்ன அதைக்குறித்தெனக்கு நிமித்தியமில்லை.

இதுவுமல்லாம லரசசந்ததியாரைக் குறித்துக்காட்டின திருஷ்டாந்தமுழுமையும் இந்தத் தமிழ்நாட்டிலேயே யிருப்பதால் புராண சரித்திரங்கள்பெரும்பாலும் வடதேசத்தில் நிறைந்திருப்பதாலிந்தச் சந்ததியாரந்த வடதேசங்களி லிருப்பார்களா இந்தச்சந்ததியாருக்குரிய - கோத்திரமும்பேரும் அவர்களுக்குமிருக்குமாவென்று சிலர்யோசிப்பார்கள் ஆனாலந்தத்தேசங்களிற் பலபாஷைகளிலிருக்கிறசகலசாஸ்திரங்களைவாசித்தறிந்துக்கொள்ளநான் கிராணியில்லாதவனா யிருந்தபோதிலும் அரசசந்ததியார்கள் விஸ்தாரமாயிருக்கிறார்களென் றறிந்திருக்கிறேன்.

அதிற்சிலதுவருமாறு - இராசமயேந்திரமென்னுந் தலைநகரமும், அதைச்சேர்ந்தமற்றத்தேசங்களில்வசிக்கிறராசசந்ததியார் (இராசபண்டவாரென்றும், பல்லவரென்றும்) சொல்லுவதல்லாமல் தங்க

ன்கோத்திரம் சம்புமகாரிஷிகோத்திரம்-பாஸ்கரகோத்திரம்- பசுபதி கோத்திரம் சம்புகுல வம்சம் சோலாங்கிஸ்வம்சமென்று சொல்லப்பட்ட மூன்று தலைமுறைகளுக்குரியவம்சமும் கோத்திரங்களையே செவலிசைந்து வருகிறார்கள் மல்லிகார்ச்சுன முதலானவிடங்களில் வசிக்கிறசிலர் செட்டிகளென்று வழங்கிவருகிறார்கள் - அவர்கள் சம்புமகாரிஷிகோத்திரமென்று வழங்கிவருகிறார்கள் பிரதாபருத்திரன் சந்ததியாரும் அந்தக்காலத்திலமல்லிகார்ச்சுன பர்வதத்துக்குச் சமீபத்திலிராநின்ற ருத்திர புரத்திலவசித்துவருகிறார்கள் அவர்களும் செட்டியென்று வைத்துவழங்கிவருகிறார்கள்.

இதல்லாமலந்தவிடங்களிலவசிக்கப்பட்ட ராசாக்களென்று பூர்வீகமாய்ப் பேர்வைத்து வழங்கிவருகிற சிலர் சம்புமகாரிஷிகோத்திரத்தாரென்று வழங்கிவருவதுமல்லாமல கலியாணகாலத்தில்வன்னிமரத்தைநாட்டி அதையும் அக்கினியையும் பூசித்தபிறகுமங்கிலியந்தரித்து வருகிறார்கள் இவர்களிந்த கோத்திரமல்லாமல் வேறு கோத்திரத்தையுடையவர்களுடன் பந்துக்களும் கொண்டுகொடுத்தும் சம்மந்தஞ்செய்து வருகிறார்கள் - இதல்லாமல் இன்னுஞ் சில திருஷ்டாந்தஞ் சொல்லுகிறேன் அதுகளின்மூல லடதேசத்தி லிராநின்ற வரசசந்ததிகளெல்லாம் வல்லியமென்கிற தெரிந்துகொள்ளலாம்- அதுகளின விபரம் (கஅ௱எ)ம் வருஷம் ஜூன்மாதம் (௦கஉ)பிரசுரஞ்செய்யப்பட்ட இலவர்த்தமானி பத்திரிகையிலடங்கள பத்திரிகையில் அடங்கிய பாஷையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டதையிதினடியிலவிவகரிக்கிறேன்.

கல்க்கத்தா-லைஸென்ஸ்வரி.

(*)

மங்கிரில் லைஸெல்ஸ் வரிவசூல் செய்யும் முயற்சிக்கு அபாயம்நேரிட்டது சுதேசவர்த்தகாள் கடைகளை யடைத்துக் கொண்டார்கள்- தானியதவசங்க ளகப்படாததால் ஜனங்கள்மிகுந்த வவ


ஸ்தைப்படுவதால் போலீஸ்கமீஷனர் தாமே கடைக்குப்போய்ச் சேவகரைப் பக்கத்திற்பதிவிருக்கச்செய்து கடைத்தெருவிற்கூடிய ஜனங்களுக்கு மனமுருகும்படிப் பிரசங்கஞ்செய்தார் - வர்த்தகராகிய வன்னியரை மாசவாரி ஐந்நூறுரூபாய் வரும்படியுள்ளோர் வகுப்பிற் சேர்த்ததுபற்றியே யவர்களிவ்வித விடாமுயற்சிசெய்தார்கள் - பஞ்சாபில் சங்கடமின்றி வரிசேர்க்கப்படுகின்றது,

இந்தப்பத்திரிகையின் சரித்திரத்தால் ராஜசந்ததியாராகிய வன்னியர்கள் மேற்படி பங்காளத்தைச்சேர்ந்த தேசங்களில் விஸ்தாரமாயிருக்கிறார்களென்றுதெரியவருகின்றது.

இதுவுமல்லாமல்(௧௮௭௰)ம்-வருஷம்-செப்டம்பர் ௴-௩௰-பிரசுரஞ்செய்யப்பட்ட தினவர்த்தமானி பத்திரிகையில பங்காளபாஷையிலிருந்து தமிழில்மொழி பெயர்க்கப்பட்டதுவருமாறு,



விவாகோச்சவத்தில விச்சுருக்கம்.



சென்றமாதம்(௰௨)காசியில் ஸ்ரீதேவநாராயணசிங் ராஜாபேட்டியில் பாபு பீலாரில் கூடிய கைசர்யான் வம்ஸியர்சபையில் தோல்ம்விவாகோச்சவங்களில் வரம்புகடந்து செல்லும் திரவியத்தைக கூடியவரையில் குறைக்குமுபாயஞ் செய்யப்பட்டது - சபையார் தீர்க்காலோசனைபண்ணி முக்கியமாய் மூன்று நிர்ணயங்கள் சித்தஞ்செய்தார்கள் - முதலாவது, தனமிக்க குடும்பங்களில மணமகள் வீட்டார் (கஉசா) ரூபாய்க்கும் மத்தியமஸ்திதியிலிருக்குங்குடும்பங்களில் (சாரு) ரூபாய்ககும் அதமஸ்திதியுடையோர குடும்பங்களில்(ருகஉ) ரூபாய்க்கும் அதிகஞ் சிலவு செய்யப்படாது - மணமகன் வீட்டார்சிலவு வரையறைமுறையே ரூபாய் (கருசா) எஅ(ருசா) இரண்டாவது பாணவேடிக்கை-கச்சேரி-முதலிய- அதிகபணச்செலவுள்ள விநோதங்கள் அநாவசியமாதலால் அவைகளைக் கட்டாயமாய்த்தவிர்க்கவேண்டும்-மூன்றாவது வறிஞராகிய மாதா பிதா தங்கள் தங்கள் புத்திரிகளுக்குச்சீதனங்கொடுக்க வகையின்றிவருந்தினால்

சூத்திரத்தார்கள் தலைக்கு இவ்வளவென்று பங்குவிகிதம் போட்டுத் தொகைசேர்த்துக் கொடுத்து வுதவவேண்டும் - மேற்சொல்லியவுபாயங்களைப்பிறர்காரியத்திற்சிந்தைவைத்திருக்கும்- பாபு-மீரிலால் என்னும் தர்மதுரைசெய்ததைக்குறித்து யாவரும் அவரை வியக்கத்தகும்.

இந்தச்சரித்திரத்தால் காசி-முதலான வங்காளங்களிலிருக்கிற வைசியர்கள அரசசந்ததியாரென்றும - அவர்கள் ரசபுத்திரரென்றும யாவருக்குந்தெரியவரலாம்,




இருவுர் மேற்படி (௧௮௭௰) வருஷம் செப்டம்பர் மீ ௨௰- பிரசுரஞ்செய்யப்பட்ட தினவர்த்தமானி பத்திரிகையில் வங்காளபாஷையிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.



இவையும் - மூன்பத்திரிகையைக் குறித்த

விவாகச்சிலவின் சுருக்கம்,



வங்காள பாஷையிற் பிரசுரமாகும் பத்திரிகை யொன்றில் விவாகச்சிலவைத்தொட்டு வெளிப்பட்ட சிலவிஷயங்களை நமது ரீடர்க ளறியப்பெயர்த்தச்சிடுகிறோம்.

விவாகசிலவைப்பற்றி யூகிக்கப்பட்ட சீர்திருத்தம் முக்கியமாய்க்காயாத்திரியருக்குள் நிலைப்படுமெனத்தோன்றுகின்றது - விஜயநகரத்தரசர் க்ஷத்திரிய குலத்தாருக் கிவ்விஷயத்தினருமை பெருமையையும்-ஆவசியகத்தையுமுணர்த்திப் புத்திவருவிக்கத்தம்மாலமையும் பிரயத்தினஞ்செய்யக் கருதுவதாகக் குறிப்பித்தார்- திரவிய நிர்வாகமில்லாத குடும்பத்தார்களும் விவாகோச்சவங்களி லவரவர்கைப்பொருளளவிற்றமிஞ்சித் திரவியவிரயஞ்செய்து கடன்ப

பிடித் தரித்திரதிசையிலிருந்து வருகிறார்கள் - இப்படிக்கேட்டைத் தவிர்க்கு முபாயமும் - எத்தனையோ செய்த வாரஞ்சி மகாராஜா விஜயநகரத் தரசர் ஸ்ரீ ராஜதேவநாராயணசிங் முதலிய பேர்களால் இந்நூல்வரையும் யாவரும் பாராட்டிப் புகழ்ந்துகொண்டாடத்தக்கும் - மேற்சொல்லிய நூல்வில முதலியபிரபுக்க ளிருவரும் பெருந்தனமுள்ளகுடும்பங்களில் விவாகமகோச்சவங்களிலே செலவிடக்குறித்தொகை - வரம்பு [illegible] ரூபாய் விவாகச்சடங்குகளிலே நேரிட்ட [illegible] கிய நட்டுவர் தாசிகள் - முதலானவர்களுக்குப் போம்பலாக நாள் கழிக்கும் பிராமணருக்கும் - லச்சகேட்டு யாசகருஞ்செய்மேவாருக்கும் பாழ்பி [illegible] தரவிய [illegible] தேசத்துக்குறிலையான பயம் [illegible] [illegible] இவ்விலவிய [illegible] [illegible] இவ்வலக முயற்சி [illegible] [illegible] செய்வாராக [illegible] [illegible]

ஸ்ரீ [illegible] பொழுதும் பத்தாநதேதி [illegible] [illegible] குறித்தாலோசித்த காசிம [illegible] விஜயநகர [illegible] - ஸ்ரீராஜ தேவநாராயணசிங் இவ [illegible] ஆகிய வலவியர்களென்று [illegible] [illegible] (கேப்டன் - கார்பெகர்) துரை [illegible] செய்த (விஜயநகர [illegible]) சொல்லுகிறபடி தென்னா வென்றும் - விஜயநகர மகாராசருடைய வம்சம் - சூரிய குலத்தாரொ [illegible] ராசபுத்திரபாய [illegible] ஒருகோத்திரமாகிய பசுபதி வம்சமென்றும் ஆதிராசவம்சமென்றும் - சொல்லியிருக்கிறார்.

இந்த விசயநகரத்தரசர்களிலொருவராகிய ராமராசராஜா பேரிற்செய்த (நரபதிவிஜயமென்னுங்) கிரந்தத்திலும் இதுபோலின்னு மனந்தஞ்சரித்திரங்களில - சந்திரவம்சம் - அல்லது சவிக்கிய வம்சமென்றுஞ் சொல்லுகின்றது - இதுவுமல்லாமல் (உல்யம் - டெயிலர் துரையவர்களாற்) செய்யப்பட்ட (மதராஸ் - சர்னல்) என்னுங் கிரந்தத்தில் ([illegible]) வது - சயிட்டில் - மொழிபெயர்க்கப்பட்ட இந்த சிலாசாசனத்தில் சொல்லப்பட்டது - இந்தியாதேசத்தின்

தட்சணபாகமாகிய(டெக்கான்)பாகத்திலும் வடயிந்தியாவிலுமிருக்கும் சாசனத்திற்சொல்லியிருக்கிறபடி கிருத்திரமாய் நாய்கண்டுபிடிக்கப்பட்ட சாதாரணமான நாமம் பொருந்திய ராசபுத்திரகுலத்திற் சேர்ந்தவர்களாக விருந்தார்களென்று காணப்படுகிறது - சலிக்கிய சொல்கிறபட்டத்தையுடைய முப்பத்தாறுராசபரம்பரையில் வந்திருக்கிறபட்டயத்தில்அவர்கள்பேர்வந்திருப்பதைப்பற்றியெ ன்மேற்படியரசர்கள்வம்சத்திற் சேர்ந்தவர்களாயிருக்கவேண்டியா-னால்(கர்னல் டாட்) என்பவர் அவர்களை (சோலாங்கீஸ்) என்பவர்களென்றும் (ஸோலாங்கி) யிருக்கிற (அனல்வாரா) பட்டணத்து நாயாண்டார்களென்று சொல்லுகிறார் மேற்படி சோலங்கிராசவம்சமும் அக்கினிவம்சத்தின் நாலுவிதபிரிவில ஒருபிரிவாமென்று சொன்னார் - ஆனால் சலிக்கியராசவம்சமும் மேற்படி சோலங்கிராசவம்சத்தில் சேர்ந்தவர்களாயிருந்தும் தாங்கள் சந்திரகுலவரசரென்று சொல்லிக்கொள்ளுகிறார்கள் - ஆனால் (கர்னல்-டாட்) என்பவர்கள் அவர்கள் அக்கினிகுலத்தைச்சார்ந்தவர்களென்றே அபிபிராயப்படுகிறார்களென்றே சொல்கிறார்.

இந்தச்சரித்திரங்களைச் சீர்தூக்கிப்பார்க்குமிடத்தில் விசயநகரத்தரசன் சந்திரசூரியகுலமென்றும்-சலிக்கிய வம்சத்தாராகிய சந்திரகுலமென்றும்- சொன்னதுமல்லாமல் நானிந்தப்புத்தகத்தில் ௰-வது அதிகாரம் ௩-வது-பிரிவு(சான்கிளார்க்கு-மார்ஷீமென்) என்பவராற்சொல்லியதைநானுங்குறிப்பித்திருக்கிறேனல்லவா - அதுபோலக்கினிமூலமாயுற்பத்தியானராசபுத்திரரென்று சொல்லப்பட்டநாலுவன்னியரிலொருபிரிவாகச்சொல்லுகிறபடியாலும் இவ்வரசனுக்கெதிரியபோராகிய சம்புகோத்திரத்துக்குப் பதிலாய்ப் பகடகோத்திரமென்றமைங்குலத்திலும் நானிந்தப்புத்தகத்தில ௰-வது-அதிகாரம் ௬-வது பிரிவில மூன்றுகுலத்தாரும் ஒரேவம்சமென்று சொன்னதுபோல அக்கினிகுலத்தில்வந்த ராசபுத்திரர்குள்ளே ஒருபிரிவார்சந்திரவம்சமென்றும், அல்லது சலிக்கியவம்சமென்றும், ஒருபிரிவார்சூரியவம்சமென்றும் வழங்கிவருகிறார்கள்-அதுபோலவே விசயநகரத்தரசனும் அக்கினிவம்சத்திற்சேர்ந்த ராசபுத்திரர்களொருபிரிவாயிருந்து சூரியவம்சமென்று சொல்லிக்கொள்ளுகிறார்கள் - ஆனாலவரும்

வாரணவாசியான காசிராசன்முதலானவனந்தவரசர்களும் க்ஷத்திரியராகிய வந்னியர்களேதவிர வேறல்ல. இதல்லாமலின்னுமனந்தம் பங்கால் பேயர்களால்மேற்படியிடங்களில் ராஜசந்ததியாராகிய வன்னியர்களனந்தமாக விருக்கிறார்களென்று ருசுவாகின்றது- வேண்டியவர்கள் விசாரித்த றறிந்துக்கொள்ளலாம்.

ஆனாலிந்தப் புத்தகத்தில் க்ஷத்திரியர்களென்று சொல்லப்பட்ட வரசசந்ததியாருக்கு அனந்தம் பட்டப் பேர் வந்திருக்கின்றதென்றும் - அதிற்பிரதானமானது - வன்னியர் - பல்லவர் வில்லவர்- அல்லது - சாமந்தர்- படையாட்சிகள் - பள்ளிகளென்றும்- அவர்களே சூரியகுலம் - சந்திரகுலமென்று சொல்லப்பட்ட இரண்டு பிரிவாகவும்- அல்லது - அகினிகுலம் - சூரியகுலம் - சந்திரகுலமென்றுசொல்லப்பட்ட மூன்று பிரிவாகவும் - இந்தியாமுழுமையுமரசுசெய்தவர்களென்றும் - இந்தியாவிற் றமிழ்நாட்டிற் - சேரசோழ- பாண்டியர்களென்று பேர்வகித்து அநேககாலமாய் அரசுசெய்து வந்தவர்களென்றும்- அந்தச் சந்ததியார்கள் தத்காலத்தில் முன்குறிக்கப்பட்ட பேர்களுடையவர்களாயிருந்து வருகிறார்களென்றும்- புராணசாஸ்திர பூர்வீகமாகவும் - சாசனப் பத்திரிகையனுபவ திருஷ்டாந்தமாகவுஞ் சுருக்கியெழுதிவெளியிட்டிருப்பதைப்பற்றியும்- இந்தநாட்டில்மேற்படிச்சந்ததியாருக்குப் பள்ளியென்கிறபேரே பெரும்பாலும் வழங்கிவருவதாலும் பொறாமையையெக்காலமுங்கைக்கொண்டசில அவிவேகிகள் ஆதி க்ஷத்திரிய சந்ததியிவர்களெப்படியாவார்கள் - ஆனாலிவர்கள் சந்ததியிலிருந்த முன்னோர்களாகிய சிலர்கள் இந்தத்தமிழ் நாட்டிலரசுசெய்திருப்பார்களேதவிர ஆதிகாலங்களில் வடதேசமுதலான வனந்தவிடங்களிலரசை ஸ்தாபித்த க்ஷத்திரியராகிய வரசசந்ததியார்களல்லவென்றும்- நான்பள்ளியென்கிறபேர் மூன்றாவததிகாரம் - ஏழாவது பிரிவிற் கடவுளுக்குரியதென்றும் - அந்தப்பேரை யரசர்கள் தங்களுக்குமேலான சிறப்புப் பேராய் வைத்து வழங்கி வந்தார்களென்றும் - அதைப்பற்றியே யவர்கள் சந்ததியார்களு மந்தப் பெயரைப் பிரதானமாய் வைத்து வழங்கி வந்தார்களென்று

நாலாவ ததிகாரத்தில் - மூதலாவது பிரிவி லந்தப்பெயரைத் தத்காலத்திலுமரசர்கள் வைத்து வழங்கிவருகிறார்க ளென்றெழுதின திருஷ்டாந்தங்களெல்லாமவமதித்து இந்தப் பள்ளிகளாபூர்வீக வரச சந்ததியார்களென் றேளிதங்கள் செய்வார்கள்-

அப்படியேளிதஞ்செய்யபபட்டமூமூடசிகாமணிகளுக்கு ஆதிடரகசசந்ததியார்பள்ளிகள்தவிரவேறே யொருஜாதியாரல்லவென்றும் - ராசருக்குரிய வன்ந்தம்பேர்களி லாதியிற் பிரதானமாய் வழங்கிவந்தது- பள்ளியென்கிற பேரேயென்றும், இந்தநாட்டிலும் வடதேசங்களிலும்-நூலாலும்-சாட்சியினாலும்-அநுபவத்தினாலும் ரூபிக்க வனந்தம் நியாயமான திருஷ்டாந்தமிருக்கின்றது-அப்பேர்ப்பட்ட திருஷ்டாந்தமாக நூற்களைக்கொண் டெழுதவந்தா லதுவேயொருபெரிய புத்தகமாகமுடியும்- அல்லவென்றப்படி யெழுதினாலும் அவிவிவேகிக்குச்(சாஸ்திரம்பாரமென்றுசொன்ன பழமொழியைப்போல்)சாஸ்திரங்களைச் செவ்வையாய் விசாரித்துப் பாராமல் குதற்கம்பேசுவார்கள் - ஆதலால் நானின்னமூ மெழுதவேண்டிய நூல் திருஷ்டாந்த வனுபவங்களை நிறுத்தி இந்தக்கண்டம் - இந்தத்தேசம் - இந்தஜாதி- இந்தமதம்- எதிலுஞ் சம்மந்தப்படாத ஐரோப்பியா துரைகளெழுதினவனந்தங் கிரந்தங்களில் ஒருவ ரொருகிரந்தத்திலெழுதின சரித்திரத்தை இதனடியிற் சுருக்கி யெழுதுகிறேன் - அந்தச் சரித்திரத்தினாற் பள்ளிகளே யாதி க்ஷத்திரியராகிய வரசசந்ததியாரென்று தெரிந்துக்கொள்ளலாம் - அதின்விபரம் வருமாறு (ரெவரெண்-டி- மாரிஸ்) துரையவர்கள் (௧௮௩௫)ம்-வருஷத்திற்பிரசித்தப்படுத்தின இந்தியாதேசசரித்திரத்தில் மூதலாது வாலத்தில்-எழுபத்திரண்டாவது பக்கத்திற் சொல்லுகிறதாவது (௬௭௫) ம்-வருஷத்தில் இந்துக்களுக்கு நியாயமானபேற்பாடுசெய்வதற்காகவும்நியாயமாயிவர்களைப் பரிபாலிக்கிறதா

வு மாலோசனை செய்வதற்குப் பங்காளத்து(கவர்னர் ஜெனரல் அவர்கள்) பண்டிதர்களையழைப்பித்து ஆலோசனை செய்கிறபோது அவர்கள் மனிதப்பிறவிக ளாரம்பத்திற் பஞ்சபூதங்களுற்பத்தியானபிற்பாடு - பிரம்மாவென்றொரு சொரூபி சகலத்தையுஞ் சிருஷ்டிப்பதற் குண்டானபடியால் தனது வாயிலிருந்து பிராமணர்களையுந் தனது புயத்திலிருந்து க்ஷத்திரியர்களையும் துடையிலிருந்து வைசியர்களையும் - பாதத்திலிருந்து சூத்திரர்களையு முண்டெண்ணினார்களென்று சொல்லுகிறார்களென்றும்-(எசுர்) வேத பாகத்திற்சொல்லுகிறதென்னவென்றால்- பிராமணருள் வாசிப்பத[illegible] பதயங்களைச்செய்வதற்கும்- இதராளுக்குப்போதிப்பதற்[illegible] க்ஷத்திரியர்கள் பிரம்மா புயத்திலிருந்து பிறந்தபடியால் பிராமணருக்கு விவேகத்தைக்கொடுத்ததுபோலிவர்களுக்குப்பலத்தைக்கொடுத்து வில்தொடுக்கவும் யுத்தஞ்செய்யவும் உலகத்தை யாளுகிறதற்கும் வைசியர்கள் துடையிலிருந்து வுற்பத்திசெய்து பிராணத்தைக்காப்பாற்றவேண்டிய வஸ்துக்களைச் சித்தஞ் செய்வதற்காக விவசாயம் வர்த்தகஞ்செய்வதற்கும்- சூத்திரர்களைச் சர்வவூழியங்களையுஞ் செய்வதற்காகப்பாதத்திலிருந்து வுண்டாகின தாகவுஞ் சொல்லுகின்றதென்று மெழுதியிருக்கிறபடியால் (இதிற்) பங்காளசாஸ்திரிகள் அந்தத்தேசத்திலிருக்கிறவேதபுராணங்களைப்போல் க்ஷத்திரியர்களுக்கு விற்றொடுக்கவும்- யுத்தஞ்செய்யவும்- உலகத்தையாளவும் பலத்தைக்கொடுத்தாரென்றுசொல்வதற்குத்திருஷ்டாந்தம்- இந்தத்தமிழ்நாட்டிலரசருக்குள் முதன்மையான சேரனுக்கு வில்லவனென்றும் - இந்நாட்டிலிருக்கு மரச சந்ததியாருக்கு வில்லைப்பற்றிப் பாடப்பட்ட எழுபதுபாட்டுடன் ஏர்த்தலைத் தரப்பட்ட சிலையெழுபதென்னுங் கிரந்தத்தில் வில்லைத்தொடுத்து செயம்பெறப்பட்டதையும் உலகத்தைப் பரிபாலனஞ் செய்வதையுஞ் சொல் [illegible] ப் பிவர்கள் பூர்வ வரச சந்ததியாரென்று ருசுவா

(௯௩) வது பக்கத்திற் சொல்லியிருக்கின்றதாவது (ஏஷியாடிக் றீசர்ச்செஸ்) என்னுங்கிரந்தம் இரண்டாவது வாலத்தில்- சூரிய-சந்திர- வம்சத்தாரைக்குறித்துச் சொல்லியிருக்குதென்றும் - (௬௭) வது-பக்கத்தில் (கல்டியா) தேசத்துப்பிரதம வரசனுடைய பேர் (ஆலோரஸ்) என்பதாயிருக்கிறதென்றும் - அந்தநாமத்தைப் பதச்சேதஞ்செய்தால் (எல) தெய்வமென்றும்-(ஆர்) நெருப்பென்றுமாகும் இவ்விரண்டு சப்தத்தைப் பார்க்கிறபோது அக்கினியினுடைய தெய்வமாயிருந்தானென்று காணப்படுகின்றது - இதையோசிக்குமளவில் (எருபதியா) தேசத்தில் (ஆர்றயிட்) என்பவனைத்தெய்வமாகவணங்கிவந்தார்களா யவன் (சூரிய) வம்சத்துக்கு மூலபுருஷனாயிருந்தான் (எருபதியா) தேசத்து (மினிஸ்) என்பவன் ஏமாவது மநு இவனுக்கே (வைவஸ்வத) வென்றும் பேருண்டாச்சுது- ஆனால் பிரதமமநுவானவர் பிரமஷ்டமாயிருந்தபடியால் சுயம்புவென்று சொல்லப்பட்டவராயிருந்தாரென்று சொல்லியிருக்கின்றது இப்படிச் சொன்ன திருஷ்டாந்த அபிப்பிராயத்தினால் க்ஷத்திரிய வம்சத்துக்கு மூலம் அக்கினியென்பதும்- அதுவே சூரியவம்சமென்றும் - க்ஷத்திரியவம்சத்தாருநாமங்களுக்குச்சுயம்புவென்று பேர்வந்திருப்பதைப் பற்றி யந்தமசந்தியோருக்கு நாவலரையிற் பிரதானமாகச் சம்புவோதிரந்தாரென்று மெய்யவருகிறபடியாகத் தெரியவருகின்றது,

(௬௮) வது பக்கத்தில இதற்குமுன்பாக (கால்டியன்- அல்லோரஸ்) என்பவனுக்கும் (எருபதியா) தேசத்தின் (ஆர்றயிட்) என்னும் பிரதமதெய்வத்துக்கும்- சூரியனுக்கும்- சமப்படுத்திப் பார்த்திருக்கிறோம்- அதின்பிரகாரமேதான் (ஈஜிப்ஷியன்-வல்கன்) என்னும் இந்துதேசத்திற் சொல்லப்படுகிற (அக்நி) என்பவன் இடியையுண்டுபண்ணினவன் இதேப்பிரகாரம் இந்துக்களுடைய புராணங்களிலக்கினியென்பவன் அக்கினியாஸ்திரங்களை யுற்பத்தி செய்தவனென்று சொல்லப்படுகிற அவன்ரூபத்தைச்சித்திரித்திருக்கப்பட்ட படத்தில் நாலுகைகளையுடையவனாயும் - ஆட்டுக்கிடாவை வாகனமாகவுமுடை

யவனும்- அவன் சிரசைச்சுற்றிச் சுவாலைபிரகாசித்துக் கொண்டிருக்குதென்றுசொல்லப்பட்டிருக்கின்றதென்றும்-(௪௨௧)வது-பக்கத்தில்(போகார்ட்) என்பவர் செய்தகிரந்தத்திற் சொல்லுகிறபிரகாரம் (கிறைசார்) என்னும்வார்த்தை யக்கினியையுற்பத்திச்செய்தகாக அர்த்தமாகுமென்றும்-(௪௨௫) வது- பக்கத்தில் (லீரூஸ்) என்பவருடைய சந்ததியிற் சொல்லியிருக்கின்றதினால் அவன்றுதித்ததெய்வம் மூன்று குணமுள்ளதாயிருந்ததென்று தெரிந்துக்கொள்ளலாம்.

அதாவது (பாஸ்)பிரகாசம்(ஆர்)நெருப்பு(பிளாஸ்)சுவாலைஇதுகளாகிய சூரியனைத் துதித்துவந்தாரென்றுசொல்லப்படுகின்றதென்று யெழுதியிருக்கின்ற சரித்திரங்களினு லிந்தப் புத்தகத்தில்- மூன், மூன்றாவததிகாரம்-நாலாவது- பிரிவிற் சோமசூரிய வக்கினியென்று சொல்லப்பட்ட மூன்றுகுலமுமொன்றென்றும் - மூன்றுகுலத்துக்கும் மூலமான மூன்றுசுடர்களுமொன்றென்றும் மூன்று சுடருக்கு மூலமக்கினியென்றும்- நானெழுதினதற்குத் திருஷ்டாந்தமாகவக்கினியே க்ஷத்திரியருக்கு ஆதிமூலபுருஷனாகவும் - அவனே மூன்று குணமுள்ள சூரியனாகவுஞ் சொல்லுகிறபடியா லந்த வக்கினியினுடைய குணங்களைப்பற்றி யக்கினிகுலமென்றும் - சூரியகுலமென்றும்- சந்திரகுலமென்றும்- அவர்களுக்கே வன்னியாகளென்றும் வழங்குவது சரியானநியாயமாயிருக்கின்றது,

அதல்லாமல் மேற்படிப்புத்தகம் இரண்டாவது வாலத்தில்- (௪௭)பக்கத்தில் இந்தியா தேசத்திலிருந்தோ பாரசீகத்திலிருந்தோ நானாவிதமான ஜாதியார் (சர்மா) அல்லது (எருபதியா) தேசத்திற் குடியேறினார்கள்- இவர்களிற் பிரதானமானவர்கள் மிகவும்பலவந்தர்களா யிருந்த பள்ளிக ளென்பவர்கள் இவர்களே (எருடதியா) தேசத்துவாசர்களாயிருந்தார்கள் (௫௫)வது-பக்கத்திற் சூரியவம்சத்தில் முதலாவது மூன்றரசர்கள்பேதமில்லாம லந்தநாமத்தையுடையவர்களாயிருந்தார்களென்றும் - (௭௯) வது-பக்கத்தில் இந்தியாதேசத்திற் கடவுள் பரசுராமனென்னும்ஆறுவ தவதாரஞ்செய்து க்ஷத்திரியர்களை சங்கரித்தபோது (எருபதியா) தேசத்தைப்

பள்ளிகளென்று சொல்லப்பட்ட வாசர்க ளாண்டார்களென்றும் (௧௨௮) வது பக்கத்தில் ஜமதக்கினியுடைய குமாரனுன பரசுராம னாறவ் தகப்பனைக் கொலைசெய்த அரசனுக்குச் சகாயமாக (எருபதியா) தேசத்து வாசர்களாகிய பள்ளிகள் வந்தார்களென்றும் சொல்லுகிற சரித்திரத்தின் வித்தப்பள்ளிகள் அதிகாலமுதல் வாசாண்டார்களென்றும் - இவர்கள் சூரியசலந்தாரென்றும் - தங்கள் குலத்தானுகிய கார்த்தவீரியார்ச்சுனனுக்குச் சகாயஞ்செய்தாரென்றும் - திருஷ்டாந்தப்படுகின்றது.

இரண்டாவது வாலம்-மூன்றாவதுபிரிவு இரண்டாவதத்தியாயம்-௧௪௨ வது பக்கத்தில்- (கர்னெல்-போலீய)ருடைய வைராக்கியத்தினாலும் - பாக்கியத்தினாலும் - இந்துக்களுக்குரிய நாலுவேதங்களையும் - நாற்பத்திரண்டு பெரிய புத்தகங்களாக வெழுதி [லண்டன் பிரிடிஷ் மியூஜியமாகிய] இங்கிலாண்ட் தேசத்திலிருக்கிற புத்தகசாலையில் வைத்தார் - இந்தநாலு வேதமும் நாற்பத்திரண்டு கிரந்தங்களாயெப்படியாச்சுதென்றால் ஒவ்வொருவிஷயத்தைப்பற்றியொவ்வொருகிரந்தமிருக்கலாம்- அதெப்படியென்றால்- முதலாவது தெய்வத்தைத் துதிக்கிற பாட்டுகளைக் குறித்தும்- இரண்டாவது அரச - ரல்லது சக்கிரவர்த்திகள் பரிபாலனஞ்செய்ய வேண்டியதைக்குறித்தும்- மூன்றாவது சோதிடத்தைக்குறித்தும் - நாலாவது கோணங்களைக்குறித்தும்- ஐந்தாவது- வயித்தியத்தைக்குறித்தும்-ஆறாவது வாத்தியங்களைக்குறித்தும்- மேற்கண்ட பிரிவுகளாயிருக்கிற யித்தவேதங்களை நாமிவ்வளவு வெளிப்படத் தெரிந்துகொண் டிருப்பதாலந்தவேதங்கள் காஷ்மீரிலும் - காசியிலுமிருக்கிற பிராமணுளிடத்திற் சுகமாய் நித்திரைப்போகுதென்றும் [எகுபத்] தேசத்திற் கோப்பியமான கிரந்தங்களைக்[கிரீக்]பாஷையிற் [சங்கநாத] னென்பவனுலொருவேதம் மொழிபெயர்க்கப்பட்டது-அதற்குத்திருஷ்டாந்தம் [பிபிலி-ஆதிகாகிரிகா]கிரந்தத்தில்-முதலாவது - வாலம்[௭௫]வது-பக்கத்தில்- மேற்படி மொழிபெயர்க்கப்பட்டது ருசுவாகின்றது ஆனலது வேதமோ புராணமோ- அல்லது-வேதத்தினுடைய பொருளோ-அல்லது - இந்தியாதேசத்திற்பிரபல்யமாயிருக்கிறதேவகிரந்தங்களிற் சொல்லியிருக்கிற மதத்தையும் சாஸ்திரத்தையுங் குறித்து

ம்- ஆசிரமங்களும் கிரந்த கர்த்தாக்களா லெழுதப்பட்ட கிரந்தங்கள் சாசனத்திலெழுதியதென்று தெரிந்துகொண்டேன்.

புராணத்திலிந்தக் கிரந்தங்களை இந்தியா தேசத்திலிருந்து (எருபத்) தேசத்துக்குத் துரத்தப்பட்ட பூர்வீகக்ஷத்திரியாசக்கிரவர்த்திகளாகிய குற்றமற்ற நிஷ்கபடிகளாகிய பள்ளிகளாற் கொண்டு போகப்பட்டது இவர்க ளிவ்வளவு விஸ்தாரமான தாங்கள் வசித்தகண்டத்தை விட்டுவிட்டுப் புறதேசத்துக்குப் போனதைக் குறித்து இந்தியா சரித்திரத்தில் முக்கியமான ஓர் பெரிய பாகமா யிருக்கின்றதென்றும் - (௧௬௯) வது - பக்கத்தில் (வராகத்வீபம்) அல்லது ஐரோப்பா கண்டத்தைக் குறித்த சரித்திரங்க ளந்தியத்தில் ஒத்துவரப்போகிறபடியா லிந்த விடத்தில் விஸ்தாரமாய்ச் சொல்லவேண்டிய அவசியமா யிருக்கின்றதென்றும்- அப்படிச் சொல்லும்போது (உல்பர்ட்டு) துரையவர்களாற் சொல்லப்பட்ட கிரந்தத்தின் வார்த்தைகளை யிவ்விடத்திற் சொல்லுகிறேன் - ஏனென்றால் அதைச்சுருக்கமாய்ச்சொல்லுகிறதற்கு அசாத்தியமாயிருக்கின்றது-

அதைவாசிக்கிறபோது எஷியா கண்டத்திலும் ஐரோப்பா கண்டத்திலுமிருந்த பள்ளிகள் செய்த ஜெயா ஜெயகாரியங்களி னின்றறியப்படும்- [உல்பர்ட்டு] துரையவர்கள் சொல்லுகிறதென்னவென்றால் விந்தியபர்வதத்தின்மேல் சிம்மாதனத்தையுடைய ஆதிஇருத்தியமும் அவபக்தியுமுள்ளதாகியல்லது சமஸ்கிருதபாஷையில் தாரிஷியாவென்று பிராட்சசருடைய கபடமான அக்ரமங்களாலே நல்லநடத்தையுடைய சத்குணமான வம்சத்தார்களாகிய பள்ளிக ளிந்தியா தேசத்தை விட்டுவிட்டு முன்குறித்த-எருபத்தேசத்தில் நயில் என்கிற நதியோரத்திற்போய்ச் சேர்ந்தார்களென்றும்- உக்ரகுமாரனென இருசு - அல்லது பிங்காக்ஷன் பயன் விந்தியபர்வதத்திலிருந்து உற்பத்தியான நாவிர்தியாவென்னு நதியின் சமீபத்தில் காசிக்குத் தென்மேற்குத் தலத்தில் வாசஞ்செய்து வந்தான் - அவனந்த விந்தியபர்வதங்களுக்குத் தெற்கே வாசஞ்செய்து வந்த தலத்துக்குப் பள்ளியென்கிறபேருண்டாச்சுது - இப்போ பள்ளியென்கிற வார்த்தைக்குத்தாத்பரிய மென்னவென்றால்- ஒரு பரிபட்டணமும் அதைச்சேர்ந்த மாகாணங்களாம்.

பாலாவென்பது ஆட்டைக்காப்பாற்றுகிறவனென்றெண்ணப்படும் (ஆனாலிந்தக்கிரந்தகர்த்தா பாலாவென்பதற்கு அர்த்தம்-ஆட்டைக்காப்பாற்றுகிறவனென்றெழுதியிருப்பதை யோசிக்குமளவில் அவ்வளவும்பொருந்தவில்லை ஏனென்றால்-பாலாவென்பதற்கு அர்த்தம்-காப்பாற்றுகிறவன் அல்லது- இரட்சிக்கிறவனென்றுதாத்பரியப்படுமேதவிர வேறல்ல) ஆதலால்சர்வத்தையுங்காப்பாற்றுகிற அரசனென்றேயர்த்தமாகுமேதவிர ஆட்டைமாத்திரங் காப்பாற்றுகிறவனென்றர்த்தமாகமாட்டாது - இதுதவிர மேற்படி இருசுவென்பவன் பலவந்தனும் புத்திசாலியான வாசனுமாயிருந்தாலும் மிகவும் தேவபக்தியுள்ளவனுமாயிருந்தான் - இவன் சகோதரனான முன் சொல்லப்பட்ட தாரிகூதியாவென்பவன விந்திய பர்வதத்தின்மேலிருந்து இராசரீகஞ்செய்தவன் - இவன் அவபக்தியையுடையவனும்-துர்க்குணமுள்ளவனுமாயிருந்து தன் குடிஜனங்கள்செய்யு மக்கிரமங்களை யங்கீகரித்திருந்தான்- ஆனாலிவன் சகோதரனாகிய மேற்சொல்லிய நல்லவாசனக்காலத்திலந்த விந்தியபர்வதத்தின் மேலேறி அப்புறமிறங்கிக்காசிக்கு யாத்திரைச் செய்பவர்களுக்கு வேண்டியதைக்கொடுத்துச்சகாயஞ்செய்து அவர்களைக்காப்பாற்றினான் - இப்படிநன்மைசெய்தபடியாலந்தத் துஷ்டசகோதரனுக்குக் கோபம்வந்து இருசுஎன்பவன் மேற்படையெடுத்து மேற்படிஇருசுஎன்பவன் தன்னுடைய விராச்சியத்தைவிட்டுவிட்டுப்போய்விடும்படியுத்தரஞ்செய்தான்.

ஆனால் மஹாதேவர் ஓடிப்போகிற வாசனுக்கும் அவனோடே போன விசுவாசம்நிறைந்த பள்ளிகளுக்கும் சகாயமாய்ச்செய்து அவர்களைச் சங்கதீபத்தில் காளி அல்லது நயில் என்னும் நதியோரத்தைக் கிட்டுக்கொண்டு போனாரென்றும் - அந்தக்கிரந்தத்திற் சொல்லியிருக்கின்றது- அந்தத்தலத்தி லவர்கள் - சார்மிகா- அல்லது - சிமையாஸ் என்பவர்களைக்கண்டு அவர்களோடேகுடித்தனஞ் செய்துவந்தார்கள் இவர்களந்தத்தேசத்திற் புண்யபதி- அல்லது- புண்ணியபதியென்றுஒருதேவஸ்தானமு மொருபட்டணமுங்கட்டினார்கள்.

இவ்விரண்டுவார்த்தையின் தாத்பரியம்- பரிசுத்தமானதலமென்றும்(௩௪௪)வது -பக்கத்தில் - முன்சொன்னதலத்துக்குயாத்திரைப்போனவர்கள்பரிசுத்தமாவார்களென்றும் நாளதுவரையி லந்தக்காளியென்கிற தலம் மந்திரபர்வதத்தின் கீழிருக்கிறதா யிந்துக்கள்நம்புகிறார்கள்- புராணத்தி லந்தத்தலத்தைச் சிவந்த பூமியென்றுசொல்லப்படுகின்றது.

அதுவுமல்லாமல்(அந்த)மலைகளின்மேலந்தப்பள்ளிகளும் அவருடையபக்தியையுடைய வரசனும் பிரியமான சந்தோஷத்தையனுபவித்துக்கொண்டுஇமையபர்வதச் சிகரத்தில்காந்தர்வனைப்போலிப்போதும் வாசஞ்செய்துக்கொண்டிருக்கிறார்களென்று மெண்ணப்படுகின்றது-அவர்கள் பாக்கியவந்தர்களாயும்- பரிசுத்தமுடையவர்களாயும்-சந்தோஷத்தையுடையவர்களாயுமிருக்கிறார்கள்.

ஆனாலவர்கள் கடினமானபாஷைபேசுகின்றமிலேச்சரோடும்-வெள்ளைநிறமானவர்களோடும் சாவகாசஞ்செய்துக்கொண்டிருக்கிறார்களென்றும் இதற்குமேற்கோளாகச்சொல்லுமிடத்தில்(கிரீக)சரித்திரகர்த்தர்கள்மந்தரபர்வதத்தில் கீழ்(மீரோ)அல்லது (மெருஹா)வென்னும் தலமிருக்குதென்றும் [ஜஸ்யூட்] துரையவர்கள் செய்தபடத்திலும் [புரூஸ்]துரையவர்கள்செய்தபடத்திலும் அதின்மத்தியிற்பூர்வத்திலனேககாலத்துக்குமுன்பாகப்(பள்ளி) யரசர்களிருந்தார்களென்றுசொல்லியிருக்கின்றதென்றும் பள்ளிகளுக்கரசனாகியபள்ளியென்பவன்பிறவியில் உதிரத்தைச்சிந்தப்பட்ட வுயிர்வதைச்செய்கிறமனதையுடைய பிசாசியாயிருந்தாலும் அவனுடையநல்லதன்மையைப்பற்றி மஹாதேவரானவர் (நிருதி)என்கிற ஒருபட்டப்பெயரைக்கொடுத்து (ஜம்பு)தீபத்திலிந்தியாவில் நாளதுவரையிலும்பூசித்துவரப்பட்ட காசிமுதல் எல்லாப்பரிசுத்த தலங்களைக்காத்துவரும் அஷ்டதிக்குப்பாலகர்களில் ஒருவனாக தென்மேற்கு மூலையிலேற்படுத்தினாரென்றும்- அவனுடையசக்தியார்(காளி)அல்லது-[நைலா]வென்னும் நதியோரத்தில் நாளதுவரைக்கும்வசித்துவருகிறதாகப்புராணங்களிற்சொல்லியிருக்கின்றது.

இந்தக்கிரந்தகர்த்தாவாகிய(லெவரண்-டி-மாரிஸ்)செய்த இந்துஸ்தான்சரித்திரத்தில் ௨வது-வாலம்-௨-வது-புத்தகம்- மூன்றாவதத்தி

யாயம்(கசஉ) வது பக்கமுதல் (கசச) வதுபக்கம்வரையிற் சொல்ல ப்பட்ட பள்ளிகளுடைய சரித்திரத்தை யாலோசிக்குமிடத்திற் பள்ளிகளைப்பூர்விக (இந்தியசக்கிரவர்த்திக)ளென்று சொல்லியிருக்கிறபடியால் இவர்களையாதிகாலத்து க்ஷத்திரியர்களென்றும், சற்குணமானவம்சஸ்தர்களென்றும்,இவர்களிருந்தஸ்தானத்துக்குப்பள்ளி எங்கிறதலமென்றும், அவர்கள்கட்டப்பட்ட ஸ்தலம் பட்டணங்களுக்குப் புண்யநகரி- புண்யபதி-என்று சொல்லியிருக்கிறபடியால் இந்தப்பள்ளிகள் பரிசுத்தமான வம்சஸ்தர்களென்று சொல்வதற்கெவ்வளவுஞ்சந்தேகமில்லை ஷை-பள்ளிகளும்மேற்படிப் பள்ளிகளுக்கரசனும்பாக்கியவந்தர்களாகவும்பரிசுத்தமுடையவர்களாயும்நித்யசந்தோஷத்தை யுடையவர்களா யிப்போதும் மந்திரபர்வதத்தின்மேரி லிருக்கிறதாய் இந்துக்கள் நம்புகிறார்களென்று சொல்லுகிறபடியாலும் அதுபோல் (கிரீக்) கிரந்த கர்த்தர்களும் சொல்லுகிறார்களென்றுஞ் சொல்லுகிறபடியாலும் ஆதியிலிந்துக்கள் மேற்படிப் பள்ளிகளையே தேவர்கள் வம்சமென்றும் பள்ளி என்கிற பேர் தேவர்களுக்குரியதாகவும்மதித்து வந்ததாகத்தெரியவருகின்றது.

இந்த வம்சத்தார் (எகுபத்) தேசத்துக்குப் போய் இந்துவேதத்தையும் சிவமதத்தையும் ஸ்தாபித்துப் பரவச்செய்ததால் அந்தவேதம்நாளதுவரையிலு மவடத்திருக்கிறபடியா லந்த நாடுமுழுமையுமிவர்களே யரசுசெய்தவர்களென்றுந் தெரியவருகின்றது- ஆனுலிவர்களை இந்தத்தேசத்தைவிட் டிந்த (எகுபத்)தேசத்துக்குத்துரத்தப்பட்டதற்குக்காரணம்-(இருசு)அரசனுக்குச்சகோதரனுகியவிந்தியபர்வதத்தின்மேரி லரசுசெய்த (தர்ஷீயா)வென்னும்ராக்ஷசனென்றுசொல்லியிருப்பதினுலேயும்பள்ளிகளுக்கரசனை யஷ்டதிக்குப்பாலகரிலொருவனுகமகாதேவர்நிருதியென்றுபேர் கொடுத்துநேமித்ததாகச்சொல்லியிருக்கிறதையுங்குறித்துயோசிக்குமளவில்எனக்குத்திருப்திகரமாகத் தோன்றுகின்றதாவது-இந்துக்களுக்குரிய புராணங்களில்தேவர்களுமசுரர்களும் ஒருதகப்பனுடைய பிள்ளைகளாகி

யதாயாதிகளென்றும், தேவர்கள்முதல் பசாசுவரைக்குந்தேவர்களுடையவுட்பிரிவுபதினெட்டென்றும், துஷ்டகிருத்தியங்களாலேமுந்தினபிள்ளைகள்ராக்ஷசரானார்களென்றும், நற்செய்கைநற்குணங்களாலிளையவர்கள் தேவர்களானார்களென்றுஞ்சொல்லுகிறதுபோல்(இந்தத்தார்ஷியா)வென்னுமரசனானவன்தெய்வபக்தியில்லாதவனாய்த்துஷ்டகிருத்தியங்களைநடத்திவந்தவனென்று சொல்லியிருக்கிறபடியாலிவனையும் இவனைச்சேர்ந்தவர்களையும் இராக்ஷசர்களாகப்புராணங்களிற் சொல்லியிருக்கவேண்டியது.

இவன்சகோதரனாகிய(இருசு)என்பவனும்அவனைச்சேர்ந்த பள்ளிகளுந் தெய்வபக்தியுடையவர்களும், சற்குணமான பரிசுத்தவான்களென்று சொல்லியிருக்கிறபடியா லிவர்களே தேவர்களாகச் சொல்லியிருக்கவேண்டியது- உதாரணமா யோசிக்குமிடத்தில (துரியோதனன்-கஞ்சன்-பகதத்தன்-சராசந்தன்)முதலானவனந்தமரசர்கள் துஷ்டகிருத்தியங்களைக்கைக்கொண்டபடியால் ராக்ஷசசம்பந்தர்களென்றும்(இராமன்-கிருஷ்ணன்-தருமன்)முதலானவனந்தவரசர்களும் நற்காரியங்களைச்செய்யும் நற்குணத்தையுடையவர்களாக யிருந்தபடியால் நாளதுவரையிலுந்தேவர்களாகத்துதித்துவருகிறார்கள்-இதுவுமல்லாமல் முற்காலத்திலிந்துக்களுக்குள் மத சம்பந்தங்களைப்பற்றி யுத்தநடந்தகாலங்களிற் பவுத்தமதத்தைச்சேர்ந்தவர்களை இராட்சசரென்றும், சிவ வைஷ்ணவ முதலான மதங்களைச் சேர்ந்தவர்களைத் தேவர்களென்றும் மதித்து நூற்களிற் சொல்லியிருக்கிறபடியால் (இருசு) அல்லது (பிங்காக்ஷ)என்றுசொல்லப்பட்டவரசனும் அவனைச்சேர்ந்த பள்ளிகளும் சிவமதத்தில் பிரபலப்பட்டவராயும் நற்குணம்- நற்செய்கை யுடையவராயிருந்ததைப்பற்றியே மேற்படி (தார்ஷியா) வென்னும் ராக்ஷசன் யுத்தஞ்செய்து இவர்களைத் துரத்திவிட்டானென்று சொல்லியிருக்கிறபடியால் மேற்படி(தார்ஷியா) வென்னும் அரசனானவன்மேற்படி(பவுத்த)மதத்தைக்கைக்கொண்டுவந்தானென்பதற்குச்சந்தேகமில்லை- அதைப்பற்றியேயவனைராக்ஷசனென்று புராணங்களிற் சொல்லியிருக்கவேண்டியது - ஆனாலந்த

(இருசு) என்னுமரசனும் ஆதியிற்பவுத்தமதத்திலிருந்து(சைவ)மதத்தைஸ்தாபித்தாரோ அல்லது ஆதிமுதல் சைவமதத்தையுடையவராகவேயிருந்தாரோ அந்தச்சரித்திர மெனக்குச்செவ்வையாகத்தெரியவில்லை.

மூன்(கஉ௪) வது-பக்கத்தின் நடுபாவரு-இந்தப்பள்ளிகளுடையசரித்திரம் பதினெட்டுப்புராணத்திலிரண்டாகிய தேவர்கள் சண்டையைக்குறித்துச்சொல்லுகிற (வாயுபுராணத்திலும்) அண்டகோளங்களைக்குறித்துச்சொல்லப்பட்ட (பிரம்மாண்ட) புராணத்திலும் சொல்லியிருக்கிறது - (இரசு) என்கிற வரசனும் அவனைச்சேர்ந்தமற்றப் பள்ளிகளும் தாங்கள் (எருடத்)தேசத்துக்குப்போனகாலங்களில் தாங்கள்பிராமணர்களாயிராமலிருந்தாலும் தங்களுக்குமுக்கிய பாத்தியமாகிய தங்களிடமிருந்த (அதர்வண) வேதத்தோடு மற்றமூன்றுவேதத்தையும் மோசவிதமாய்ச்சம்பாதித்து இந்தியாதேசத்திலிருந்து கொண்டுபோனார்கள் - அதினாலிந்தியாதேசத்தின்பூர்வீகமான வேதங்கள் நான்கும் (எருபத்) தேசத்தில் ஒருகாலமிருந்து அது (எருபதி)யில் (ஆர்மோனியா) அல்லது-ஆர்மிஸ்) என்கிற பேரைக்கொடுத்து நாளும் குறையாமலும் அதிகமில்லாமலுமிருந்ததாச்சரியம், அறுதியாலத்துச் சங்கதிகளைக் குறித்து அதிற்சொல்லியிருக்கிறதென்றும்.

(கஉ௫) வது பக்கத்தில் (ரோனஸ்) என்னுங் கிரந்த கர்த்தர் இந்நாலில் (அதர்வண)வேதம் இந்தப்பூலோகம் சிருஷ்டியாவதற்கு முன் சிருஷ்டியானதென்று சொல்லுகிறார்பிராமணர்கள் மூன்று வேதங்களும் உலக சிருஷ்டிப்புக்கு முன்பாகவேயிருந்ததாகச் சொல்லுகிறார்களென்றும் சொல்லியிருக்கின்றது இந்தப் புத்திமான்கள் ஆலோசிப்பார்களானாலிந்தப்பள்ளிகளே யாரிய வம்சத்தார்களென்றறிகுவார்களது-அதெப்படியென்றால் இருசு) என்கிற வரசனும் அவன்வம்சத்தாராகிய பள்ளிகளும் (எருடத்) தேசத்துக்குப் போகும்போது தங்கள் சொந்த பாத்தியத்துக்குரிய (அதர்வண)வேதத்தோடு பிராமணரு



க்குரிய மூன்றுவேதத்தையுங்கொண்டுபோனார்களென்று சொல்லியி ருக்கிறபடியால் க்ஷத்திரியருக்குரிய அஸ்திரசஸ்திர பிரயோகங்க ளுக்கு முக்கியகாரணமானது அதர்வண வேதமானதையால் அவர்களு க்குச்சொந்த பாத்தியத்துக்குரியது அதர்வணவேதமென்று குறிப் பித்தார் - இவர்கள் பிராமணர்களல்லாத போனபோதிலுமென்று சொல்லியிருக்கிறபடியால் பிராமணருக்கு இரண்டாவதாகிய க்ஷத்தி ரியர்களென்று ருசுவாகின்றது - இவர்களைக்குறித்து (காந்த பிரம்மா ண்ட) புராணங்களிற் சொல்லி யிருக்கிறபடியாலும் இவர்களுக்குரி ய முதலான அதர்வணவேதம் பூமியுண்டானபோதே யுண்டானதெ ன்று சொல்லுகிறபடியாலும் இவர்கள் பூர்வீகவாசர்களென்று ருசு வாகின்றது.

ஈதல்லாமல் விந்தியாதேசத்திலிருக்கிறபள்ளிகளுக்கு நானாவி தமான நாமங்களுண்டு தெலுங்கதேசத்திலும் (கரிகருத்) தென்மேற்கி லுமிருக்கிறவர்கள் பள்ளிகளென்றும் - வில்லவரென்றும் - சாதார ணமா யிந்நாமங்களைப் பெற்றவர்களாகிறார்கள் - ஆனாலிவர்களை இப் போது தாழ்ந்தகுலத்தவராக வெண்ணப்பட்டிருந்தாலும் பூர்வகா லத்திலிவர்கள் (பெங்கால்) கீழ்ப்பக்கமாகிய (சயாம்) வரைக்கும் சிந் துநதிமுதற்கொண்டு பங்காளத்தின்கிழக்கு யெல்லைவரைக்கும் ராஜ ரீகஞ் செய்தார்களென்று யாவரும் வொப்புக் கொள்ளுகிறார்கள்- அவர்களுடைய மூதாதைகள் யுக்தியுள்ளவர்களென்றும் வீரிய முடையவர்களென்றும் நீதியுள்ளவர்களென்றும்- பக்தியுள்ளவர்க ளென்றும் - விசேஷமாய் (இலிங்க) ஸ்வரூபமாகியமகாதேவனைத் துதித்துவந்தார்கள் - அவர்கள்வியாபாரத்திலும் - மந்திரதந்திரங்க ளிலும் மிகுந்த ஆசையுள்ளவர்களா யிருந்தார்கள் - அவர்களால் நூதனமா யோசித்துக்கண்டு பிடிக்கப்பட்ட பஞ்சாக்ஷரத்தை அ வர்கள் உபயோகப்படுத்திவந்தார்கள் இவர்களிருந்த ஸ்தானம்ஆதி யித் பள்ளிஸ்தானமென் றும்பேர் வழங்கிவந்ததென்றும் - இப்போது ராசபட்டணமென்று வழங்கிவருகிறார்களென்றும் ஆனாலிந்தப்பள் ளிகளுடையசரித்திரம் மிகவுமினிப்பா யிருக்கிறபடியாலும் ஐம்பா ப்பாகண்ட சரித்திரத்தோடு சேர்ந்திருக்கிற படியாலும்விசேஷமா யவர்கள் சங்கதியை யெடுத்துக் காட்டவேண்டியதா யிருக்கின்றது

இப்பவும் இந்தியாதேசத்தில் வசித்திருக்கிற பள்ளிகளுடைய கஷ்ட ஸ்திதியைகுறித் தாலோசிக்கப்போனால் அயலாருடைய மூடத்தன்மையான வயிராக்கியத்தினாலுண்டான பொறாமையால் அவர்கள் தாழ்வானஸ்திதியிலிருந்த நிலைமையை பற்றியும் - முன் னொருகாலத்தில் அவர்களடைந்திருந்த மேன்மையைப்பற்றியும் நாம் யோசிக்குமிடத்தில் நமக்கு மிகுந்த ஆச்சரியமா யிருக்கின்றது-அவ ர்களுடைய ஞடம் விசேஷமானதும் அவர்களுடைய பாஷைபிரத்தி யேகமானதும் இதர விருக்ஷங்களுடைய பாஷைக்கும் இவர்கள் பா ஷைக்கும் சொற்பவித்தியாசமாயிருக்கிறதும் அவர்களுடையகிராமங்க ள் நாளதுவரையில் பள்ளிகிராமங்களென்றும் - அல்லது-(பாலிதா) வென்றும்-அல்லது (பிலிடா) வென்று சொல்லப்பட்டவில்லவர்கிரா மமென்றும் சொல்லப்படுகின்றது - முக்கியமாய் (விந்தியபர்வத) த்துக்குத்தெற்காக (இருசு) வரசனிருந்த பட்டணம் பள்ளியென்ற ழைக்கப்பட்டது- அரசனிருந்தபடியால் ஸ்ரீ பள்ளியென்றழைக் கப்பட்டது இப்போது (போபா) வென்கிறமாகாணத்தில்தான் அந் தப் பட்டணமிருந்ததாய்ப்போற்காணுகின்றது (டால்மி) என்பவரால் சொ ல்லப்பட்ட கிரந்தத்தில்(சாரியாலா) வென்றுசொல்லி யிருப்பதைக் கிரீக) கிரந்தகர்த்தர்களால் பள்ளிபுத்திரமென்று சொல்லப்பட்டிரு க்கின்றது ஏனென்றால் பிற்காலங்களுக்குரிய பரிசுத்த புத்தகங்களெல லாம் இந்தசாதிமுழுதும்பள்ளிபுத்திரமென்றுசொல்லி யிருக்கிறதற் குயாதொருசந்தேகமில்லையென்றும் (பிலினி) என்பவர்சொன்னபிர காரம் இந்தப்பள்ளிபுத்திரர்கள்இந்துநதிமுதற்கொண்டுகங்காநதிமு கத்துவாரம்வரைக்கும்ராசரீகஞ்செய்தார்களென்றும் இதிற்சொ ல்லப்பட்ட சரித்திரத்தால் நான்முன் மூன்றாவ ததிகாரம் - ஐந்தாவ துபிரிவிலரசசந்ததியாருக்கு அனந்தப்பேர்களுண்டென்று சொல் லி அதிற்சிலதுபேரையெடுத்துக்குறிப்பித்திருக்கிறேனல்லவா - அது போலிந்தியா தேசத்திராநின்ற பள்ளிகளுக்குநாநாவிதமான நாமங் களுண்டென்றும்-தத்காலத்தில் மேற்படிச்சந்ததியாரை ஆதி க்ஷத் திரியசந்ததியார்களிவர்களென்று மற்றவர்கள் தெரிந்துக்கொள்ளா ததைப்பற்றித் தாழ்ந்தவராகயெண்ணப்பட்டிருக்கிறார்களென்றும்- இவர் பூர்வக்ஷத்திரியர்களானதைப்பற்றிப் பூர்வத்தி லரசுசெய்த ராகயாவரும் வொப்புக் கொள்ளுகிறார்களென்றும் இவர்கள் ஆதிவம்

சம்புராசவம்சமானபடியாலிவர்கள் மூதாதைகள்யுக்தி-வீரியம்-நீதி தேவபக்தியுள்ளவர்களென்றும்- இவர்களே சைவமதத்தை ஸ்தாபித்து உலகங்களிற் பிரகாசிக்கச்செய்தவர்களானபடியா லிலிங்கஸ்வரூபமாகியமஹாதேவனைத் துதிக்கிறவர்களென்றும், அவர்களுண்டாக்கியது பஞ்சாக்ஷரமென்றும்-மந்திரதந்திரங்களில் மிகுந்த அவனுடையவர்களென்றும் - இவர்களுக்குரிய சைவமதத்தைப் பற்றி யிவர்களுக்கும் பவுத்தமதத்... ...யுடைய மற்றவர்களுக்கும் - நடந்தயுத்தத்திலேயே இ... ...ய... ...மேன்மையான ஸ்திதிகுலைந்து ... ...தைப் பற்றி அந்நியருடைய - மூடத்... ...லுண்டானபொழுது... ...யால்இவர்... ...ர்களென்றும் இவர்களுக்குரிய பூர்வ... ...ந்த ஸ்திதியிலிருப்பதை... ...யென்றும்- நாலா-வது-அதிகாரம்-ஏ-வது- ... ...யக்குரிய பள்ளியென்கிற... ...வைத்து வழங்கிவந்தார்களென்று சொல்... ...ளியென்கிறபேர்முக்காலத்தி லரசர்களும் அவர்கள்... ...ரி உயர்வான பட்டப்பேராய் வழங்கி... ...பட்டணம் ஸ்ரீ பள்ளியென்றழைக்கப்பட்ட... ...றும் - அவர்கள் கிராமத்துக்குப் பள்ளிகிராமங்களென்றும் - ...க்குரிய பரிசுத்த தீர்த்தங்களெல்லாம் ... ...பள்ளி... ...ரென்று சந்தேகமில்லாமற் சொல்லு... ...சர்க்கரையார்களெல்லாம் பள்ளிபத்திரென்று வழங்கி வந்தார்களென்றும் அநேகமாற்றிந்தகாலத்தில்ராசபுத்திரரென்று வழங்கிவருகிறதென்றும்சொல்லியிருக்கிற இருப்பிடார்த்தங்களிலேயே ... பள்ளிகளே பூர்வவராசசந்ததியென்று ருசுவாகின்றது.

(கசக) வ. ஏ-பக்கத்திற்பூர்வீக (ஐருட்டியா) கிரந்தத்திற்சொல்லியிருக்கிற (ஓரஸ்) எனும்பவன் (இருசு) என்கிற பள்ளியே தவிர வேறல்ல-அவனுடைய வம்சத்தார்(நயில்) நதியோரத்தில் துனைத்தனத்தைஸ்தாபித்தவர்களென்றும் (யூப்ரேட்டிஸ்) நதிக்கும் (டைகிரீஸ்) நதிக்குங் கிழக்கில் (பாலெஸ்டையின்) என்று சொல்லப்பட்ட

விஸ்தாரமானதேசமிருக்கின்றது - அந்தப்(பாலெஸ்டையின்) என்ற [illegible]ாத்லதபல் விசேஷிருந்தவிடமென்றராத்தநத்தைக் கொடுத்துப் பா லிப[illegible]னமாகி[illegible]றது - அந்தத்தேசத்துக்கு முன்பு வாசஞ்செய்துக் கொண்டிருந்த (சமாரிடன்) என்னுஞ்சாதியார் பள்ளிகளில்ஒரு பாகமாக[illegible] - ஆகையாலவர்கள் மற்ற [illegible] யாயல பாரத்[illegible]மா[illegible]ந்தார்களென [illegible]மல் [illegible] பிரிவாக நினைக்கப்ப ட்டார்களென்றும் (க[illegible]) [illegible]-பக்கத்தில் (மீக) சரித்ரப்பிரசா ரம் (சமாரியா) [illegible] இந்தப்பள்ளிகள் வாச ஞ்செய்தார்களென்[illegible] (எகுபத்) தேசத் திலும் (இரா[illegible]) [illegible] (எகுபதியர்) [illegible] அவர்கள்தேச த்[illegible] தேசத்தைச்செயஞ்செய்து [illegible] கோபுரங்களைக்கட் டுவித்தார்களென்றும் (கூஅ) வது-பக்கத்தில் (டாவிஸ்) என்றங்கி. ரந்தகர்த்தா (பிலிப்டா) (காபிட[illegible]) [illegible] க்ரந்தகர்த்தா-வில் லாள[illegible] இந்நாமம்- இந்தி யாதேசத்தில் பள்ளிகளல்லது விவ்வாவசிக்கிற தலத்துக்குப்பேரா யிருக்கிறது.

ஈல்லாமல் முதலாவது சக்கிரவர்த்தியாகிய (அலெக்ஸாண்டர்) வங்காளதேசமுதல் (கெங்கா) முகத்துவாரம்வரைக்கும்(பஞ்சாப்) வரைக்குஞ் செயஞ்செய்கிறபொழுது இந்தப்பள்ளி புத்திரருடைய சந்ததியார்களை பூர்வகிரந்தகர்த்தாக்கள் சொல்லியிருக்கிற பிரகாரம் இந்துக்களில் விஸ்தாரமாயிருந்தார்களென்றும் அவர்கள்மிகுந்தவல்லமையை யுடையவர்களாயிருந்தார்களென்றும் இரண்டாவது-இவர்கள் மதம் சிவமதமென்றும்-இவர்கள் சிவபக்தர்களாயிருந்தபடியினாலே துறத்தப்பட்டுப் போனார்கள் - ஆனாலிவர்கள் இலிங்கசுருபத்தை ஆசாரத்தை (எகுபத்) தேசத்துக்கும் (சீரியா) தேசத்துக்கு மெடுத்துக்கொண்டுபோய் ஸ்தாபித்து அக்கினியைப் பூசிக்கும்படிச் செய்தார்களென்றும் (பினினி) என்கிற கிரந்தகர்த்தா (ஐரோப்பா) கண்ட முழுமையும் இந்தப் பள்ளிகள் சிவமதத்தைப்பரவச்செய்தார்கள் - ஆனலாதியிலிருந்த குலம் எதுவாகக் காட்டுகிறதென்றும் (௱சக) வது-பக்கத்தில் (ஆரோஸ்) என்பவனுகிய கு

ரியனைத்துதிக்கும்படி அந்த (எகுபத்) தேசத்திலிருக்கிற அந்தப்பி ரம்மாண்டமான கோபுரங்களைக் கட்டப்பட்டதென்று எல்லா ரு மொப்புக்கொள்ளுகிறார்களென்றும் [கடுய] வது - பக்கத்தில் அந்தவிஸ்தாரமான கோபுரங்களைக் கட்டினவர்களைக்குறித்து நாரு விதமான கிரந்தகர்த்தாக்கள் வேறுவிதமாகச் சொல்லுகிறார்கள்- (ஹி ராடிடஸ்) என்கிறவர்சொல்லுகிற சரித்திரத்தில்(எகுபத்)தேசத்தார் கள் பள்ளிகளல்லது-வில்லவருக்கு சேனாதிபதியாயிருந்தவில் லுள் வனாற் கட்டினதாகச் சொல்லுகின்றது அந்தக்கோபுங்கள் யொஸ்ப ர்வதமென்றும்-வெள்ளிபர்வதமென்றும்- கீர்த்தியுள்ள (நவரத்) தினபர்வதமென்றுஞ்சொல்லப்பட்டிருக்கின்றதென்றும்

(கருக) வது-பக்கத்தில் (எகுபத்) தேசத்துத்தெய்வமென்றும்- இந்தியாதேசத்தரசனென்றும்- (பைபிலில்) சொல்லுகிற நோவாவு ம்-சத்தியவிரதனுமாகியவரசனும்(ஒசிரஸ அல்லது டயான்ஷியஸ்) ராயிருக்கிறானென்றும்-இவரே (ஆஸ்மாஸ்) என்பவரென்றும் (இந்தியா தேசத்துக்கு ஒரேயரசனுஞ்சக்கிரவர்த்தியாய் முதல்ஸ்தாபித்தவரெ ன்றும்) இவர் [எகுபத்] தேசத்துக்குப்போகும்போது தேவடத்தில் விட்டுவிட்டுப்போனதன் சந்ததியார்களில் தன்னிடத்திலிருந்த விசு வாசத்தைவைத்திருந்த [ஸ்பார்த்திப்பாஸ்] என்னுந்தன்னவனை தன் துசிம்மாசனாதிபத்திபத்துக்கு உரியவனுக்கிப்போனதாகவும்அந்தப் [பார்த்திபா][ருஉ]வருஷம்-ராச்சியபாரஞ்செய்தான் ஆரியன்சொ ல்லுகிறபடி இவனுடையகுமாரனை [புட்டியாஸ்] என்பவன்(உய) வருஷம்ராச்சியமாண்டான்-அதின்பின்[கிருதேவாஸ்] ஆண்டான் அ தின்பின் அந்தவம்ஸத்தார் தலைமுறை தலைமுறையாய் ஆண்டுவந்தா ர்களென்றுஞ் சொல்லியிருக்கிற சரித்திரங்களைச் செவ்வையாடா. லோசிக்குமிடத்தில் இதிற்குறிப்பித்த [கசகூ] வது-பக்கத்திற்சொன் னபிரகாரம் [பாலிஸ்டன்] என்கிற தேசமானது பள்ளிகளிருந்த தைப்பற்றிப் பள்ளிஸ்தானென்றாகுதென்று சொல்லுகிறபடியாலு ம் இவர்கள்மற்றவர்களோடு சம்பந்தஞ்செய்யாமல் பிரத்தியேகமா யிருந்தார்களென்கிறபடியினாலும் இவர்களாதிகாலந்துடங்கியே யு யர்ந்தவராகவும்-விஸ்தாரமானவர்களாயும் பலவந்தர்களாக யிருந்த வர்களாகவுந்தெரியவருகின்றது-இவர்களுடைய- சீர்திருத்த-நாகரீக ங்களையே நாளதுவரையில்-யூதர்கள்கைக்கொண்டு வருகிறதாகத்தெ ரியவருகின்றது.

முன்குறிப்பித்த (௧௪௭) வது-பக்கத்தில் (எகுபத்) தேசத்துக் குருக்கள் (பள்ளிகள்) தங்கள் தேசத்தின்பேரிற் படையெடுத்துக்கோபுரங்களைக் கட்டினார்களென்று சொல்வதினாலேயே இவர்களிந்தியாதேசம் விட்டுப்போகும்போதுசொற்பமனிதர்களைப்போல்போகாமல் தங்கள் ராஜசின்னத்துடன் ஏராளமானதன்னுடைய படையுடன்போயெதிர்ப்பட்டராச்சியங்களைச்செயித்துத் தங்கள்பற்றுக்களைக்குடியேற்றி அந்தந்தவிடங்களில்தங்களுக்குரிய (சிவ) மதத்தைஸ்தாபித்துக்கடைசியில் (எகுபத்) தேசத்தைச்செயித்து அந்தவிடத்தில் தங்களரசைஸ்தாபித்துத்தங்கள்மதத்துக்குரிய கடவுளாகிய ஈஸ்வரனென மஹாதேவருக்குக்கோபுரஆலய முதலானதுங் கட்டிவைத்ததாகத்தெரியவருகின்றது- முன்குறிப்பித்த (௧௪௮) வது - பக்கத்தில் (எகுபத்தி) லிருக்கிற வரசசந்ததியாருக்கு (வில்லாளர்) என்றுசொல்லியிருக்கிறார்களென்றும்- இந்தநாமம் இந்தியாதேசத்தில்- பள்ளிகளல்லது- வில்லவர்களுக்குரியதென்றுஞ்சொல்லியிருக்கிறபடியால் நான்அரசசந்ததியாருக்கேஇந்தநாமங்களுரியதென்று-மூன்-௫-வது-அதிகாரம்-௯-வது - பிரிவில்- நாலாயிரப்பிரபந்தத்திற் றிருமங்கையாழ்வார்சொன்னதும், பெரியபுராணத்தில் அப்பருடைய சரித்திரத்திற்சொன்னதும், சுந்தரமூர்த்தி தேவாரத்திற்சொன்னதும்-இரட்டைப்புலவர்-ஏகாம்பரநாதர் உலாவிற் சொன்னதும்-குறிப்பித்திருக்கிறேன்- ஆனால் அதிற்றிருமங்கை யாழ்வார்மாத்திரம்- வில்லவன்-பல்லவனென்றுசொன்னார்- மற்றவர்கள் பள்ளிகளென்று தோன்றும்படிப்பல்லவனென்றே சொன்னார்கள்- நான்-௫-வது-அதிகாரம்-௬-வது-பிரிவில்- சமஸ்கிருதநிகண்டில் சாமந்தனென்று சொல்லியிருப்பதற்குப் பதம், சாபமாகிய வில்லையரசர்கள் கையிலுடையவர்களாதலால்வில்லவனென்று தோன்றும்படியெழுதியிருக்கின்றேனல்லவா - அதையும் இந்தத் தமிழ் நாட்டிற் (சேர - சோழ - பாண்டியர்களில்) மூதற்சேரனுக்குவந்த முதற்பேராகிய வில்லவனென்கிற பேரையும், முன்குறித்த மேற்படிகிரந்தம்-முதல்வாலம்- (௭௧)வது-பக்கத்தில்- க்ஷத்திரியர்கள் விற்றொடுக்கவும்-யுத்தஞ்செய்யவும்-உலகத்தைதயாளவும்- பிரம்மாபலங்கொடுத்தானென்றுவேதத்திற் சொன்ன

தாய்ச் சொல்லியிருப்பதையும் இந்த க்ஷத்திரிய சந்ததியாராகிய வன்னியர்களல்லது-பள்ளிகளுக்கு இந்தத்தமிழ்நாட்டிலிலையேபிரதானமாகவைத்துச் (சிலையெழுப)தென்றுங்கிரந்தஞ் செய்திருப்பதையும் புத்திமான்கள் ஆலோசிப்பார்களானால் இந்தப் பள்ளிகளல்லது-வன்னியர்களேயாதியரசசந்ததியாரென்று கொஞ்சமேனுஞ்சந்தேகமில்லாமற் றோன்றும்.

மேற்படி(௧௪௮)வது- பக்கத்திலேயே இந்தப் பள்ளியுத்திரருடைய சந்ததியார்கள் இந்துக்களில் விஸ்தாரமாயிருந்தார்களென்றும்- அவர்கள்மிகுந்த வல்லமையையுடையவர்களென்றும் இவர்கள்சிவமதத்திற்சிறந்தவர்களானதைப்பற்றித் துறத்தப்பட்டிருப்போரென்று சொல்லியிருக்கிறபடியால் நான்மூன்றிரதப் பிரிவில் பவுத்தமதஸ்தர்களே ராக்ஷசாளென்றும்- சிவவைஷ்ணவ மதஸ்தர்களைத் தேவர்களாகமதித்துப் புராணசரித்திரங்களிற் சொல்லியிருக்கின்றதென்றுசொன்னதற்குத் திருஷ்டாந்தமாக மூன்றுறிக்கு (௧௪௩)வது-பக்கத்திற்சொல்லப்பட்ட (தார்ஷியா)வென்று மரசனை ராக்ஷசனென்று சொன்னதுபவுத்தமதஸ்தனாகவேயிருக்கவேண்டும்

(இருசு) என்கிற வரசன் (சிவ) மதத்திற் சிறந்ததைப்பற்றி மேற்படி (தார்ஷியா) வுக்கும் (இருசு)க்கும் யுத்தம் நடந்ததினால் (இருசு) என்கிற வரசனும் அவனோடு (சிவ) மதத்தின் விசுவாசர்களான அவன் சந்ததியார்களாகிய பள்ளிகளும் (எருபதியா) முதலானதேசங்களுக்குப் போயிருக்கவேண்டியது இதுவல்லாமல் மேற்படி(௧௪௮) வது-பக்கத்தில் இந்தப்பள்ளிகள்(இலிங்க) சுரூபத்தினுகாரத்தை யெடுத்துக்கொண்டு போய் (எருபத்) தேசத்திலும் (சீரியா)தேசத்திலும் ஸ்தாபித்து அக்கினியைப்பூசிக்கும்படிச்செய்தார்களென்று சொல்லியிருக்கிறபடியால் இந்துக்களுடையபுராணங்களில்அக்கினியேசிவமென்றும்-சிவமேஅக்கினியென்றும்- பேதமில்லாமற் சொல்லுகிறது தவிரதேவர்களைப்பூசித்துத்திருப்திசெய்யவேண்டுமானால் அக்கினியைமுன்னிட்டே பூசித்து அக்கினியிற்கொடுக்கப்பட்ட சர்வபதார்த்தத்தின் ஆவிபாகத்தைத் தேவர்கள்பெற்றுக் கொள்ளுகிறார்களென்றும் சொல்லுகிறபிரகாரம் இலிங்கபூசை

யுடன் அக்கினியைப்பூசித்துவந்ததைப்பற்றி இந்தத்தமிழ் நாட்டிலிருக்கிற வாச சந்ததியாருக்கு முக்கியமாய் ஈஸ்வரனுக்குரிய சம்புவைக் கிறபேரையே தங்களுக்குப்பிரதானமாகச்சம்புமகாரிஷி கோத்திரமென்றுமாரும லக்கினியைப் பூசித்து வந்தபடியாலும் இவர்களக்கினியிற் பிறந்தவர்களென்றுபுராணங்களிற்சொல்லுவதாலுமிவர்களேவன்னியர்களென்று வழங்கிவந்திருக்கின்றதற்குயெவ்வளவுஞ் சந்தேகமில்லை.

முன்குறிக்கப்பட்ட (௧௭௮)வது-பக்கத்தில் வராகதீபமென்றுசொல்லப்பட்ட (ஐரோப்பா)கண்டமுழுமையும் மேற்படிப் பள்ளிகள் தங்களுக்குரிய சிவமதத்தைப் பரவச்செய்தார்களென்றும்- அதின் லாதியிலிருந்த மூலம் எதுவாகக் காட்டுகிறதென்று சொல்லியிருக்கிறபடியா லிவர்கள் ஆதியில் (ஐரோப்பா) கண்டத்தையும் படையெடுத்து ஜெயித்தவர்களாகவும்- அந்தவிடத்திலும் தங்கள்மதத்தைஸ்தாபித்தபலவான்களாகவு மிருப்பதுமல்லாம லிந்தவம்சஸ்தர்களே ஆதியிற் பிரபலமாயிருந்தார்களென்று தெரியவருகின்றது இதுவல்லாமல் (ஐரோப்பா)கண்டத்தில்வசிக்கிற ஜெனங்கள் ஆதியிற் சிவமதத்தைக்கைக்கொண்டுவந்தார்களென்பதற்கு அனந்தம் திருஷ்டாந்தங்களுண்டு- (ஐரோப்பா) கண்டத்தில் நாளதுவரையிலும் முக்கியமாய்க்கைக்கொண்டுவரப்பட்ட (மேபோல்)என்னும்பண்டிகையும் ஆதியிலிருந்த சிவமதத்தின் ஞாபகக்குறியா யிருக்கின்றதென்று (ஐரோப்பா) கண்டத்து வேதசாஸ்திரிக ளொப்புக்கொண்டிருக்கிறார்கள்- மேற்படி(௧௭௧)வது பக்கத்தில் (எகுப்த்)தேசத்தில் சட்டப்பட்டகோபுரங்கள் [அசிரஸ்] என்னும் சூரியனைத் துதிக்கும்படி பாகக்கட்டினதென்றும் முன்குறித்த (௧௫௰)வது-பக்கத்தில் பள்ளிகளல்லது-வில்லவருக்குச்சேனதிபதியாகிய 'வில்லுள்ளவனால் மேற்படிக்கோபுரங்கள் கட்டப்பட்டதென்றுஞ் சொல்லியிருக்கிறபடியால் இவர்கள்-சூரியன்-அல்லது-அக்கினி வம்சத்தார்களென்றும்-சூரியன்-அக்கினியைப்பூசித்துவந்தவர்களென்றும் இந்துதேசத்திலா

சத்ரியாருக்கு வில்லவர்-அல்லது-பல்லவரென்றுசொல்வதுபோ ல் வில்லவர்-அல்லது-பள்ளிகளாகிய க்ஷத்திரியர்களென்றுசொல்லப் பட்டதேதவிர வேறல்ல. (௧௩௪௬)வது பக்கத்தில்,- வராகதீபமாகிய [ஐ ரோப்பா]தேசத்தைச்சேர்ந்த(காகாட்சா) என்னுந் தேசத்துக்கதிப தியாகிய (காகாக்ஷேஸ்வர) னென்னும் பள்ளியரசனானவன் (சுவர்ண)மென்னும்பர்வதத்தின்பேரி லரசு செய்தானென்றும் அவன்மா ன்வேட்டையாடி யதிலொருபாகம் தேவர்களுக்கும் ஒருபாகம்-பி துர்க்களுக்கும்-ஒருபாகம்-பிராமணுளுக்குங்கொடுத்து மிகுந்தமற் றோர் பாகத்தைத் தான் புசித்து அங்க பத்தி விஸ்வாசத்துடனே விஷ்ணுவைப் பூசித்து அவரா லந்தியத்தில் நக்ஷத்திரபதவி யடைந்து (௨௭) நக்ஷத்திரத்தி லொன்றாகிய மூலநக்ஷத்திரமாய் நாளதுவ ரையிலு மிருக்கிறானென்று சொல்லுகிற சரித்திரத்தினால் இந்தப் பள் ளிவம்சஸ்தர் பூர்வீகவரசர்களென்றும் தேவ அம்சத்தையுடையவர்களென்றுந்தெரியவருகின்றது.

ஆனால் (காகேஸ்பர) னென்னும்பள்ளியாசன் பிரபலமாய் விஷ்ணுமதத்தைக் கைக்கொண்டுவந்தானென்பதற்குத்- திருஷ்டாந் தமாக ஆதியிலந்தவரசன்வசித்த (அயிர்லாந்து)தேசத்தார்-விஷ்ணு-சிவன்முதலானவர்களைப்பூசித்துவந்தார்களென்பதற்குச் சந்தேகமில்லை, அதெப்படியென்றால் மேற்படிப்புத்தகத்தில் (௩௭௰) வதுபக கத்தில் (கிருஷ்ணனைக்)குறித்து - அவர்கள் துதித்திருக்கிற பாட்டி னாலே தெரியவருகிறதுந் தவிர இன்னுமனேகதிருஷ்டாந்தங்களினாலேயுந் தெரியவருகின்றது.

(௧௬௮) வதுபக்கத்தில்ஜோபலீபஸ்) சொல்லியிருக்கிறபிரகாரம் இந்தியாதேசத்திலிருந்து பிரக்யாதியுள்ள பள்ளி வம்சத்தார் (எருபத்) தேசத்தை சமஸ்கிருதகிரந்தங்களை யனுசரித்து ஜெயஞ் செய்துஆண்டார்க ளென்று ருசுவாகின்றதென்று சொல்லுகிறபடியால் ஆதியிலிந்தியாவில் பள்ளியென்கிறபேர் மிகுந்த பெருமையுடையதாகவும் அந்தவம்சத்தார் பிரபலமான ஸ்திதியிலிருந்ததாக

யும் இவர்களுக்குரியபாஷை சம்ஸ்கிருத பாஷையாகவுந் தெரியவ ருகின்றது.

(௧௲௧) வது-பக்கத்தில்(ஜோஸீபஸ்) சொல்லுகிறபடி யூத ர்கள் பள்ளிகளுடையகுடும்பஸ்தர்களா யிருந்து ஒருகாலத்தி லந் தத்தேசத்தை யாண்டார்களென்று காணப்படுகின்றதென்று சொல் லுகிறதை யோசிக்குமளவில் யூதர்கள் இந்தியாவிலிருக்கும் பள்ளிக ளின்மேலோர் பிரிவானவர்களானபடியால்தான் இந்துதேசத் தவர்களுக் குரிய ஆசாரசடங்குகளும் பிரபல்யமாய் நாளதுவரைக்கும் கைக் கொண்டு வருகிறார்களென்று தெரியவருகின்றது.

ஆனால் இந்தப்பள்ளியரசனைக்குறித்து இந்த(ரெவரெண்-டி-மாரிஷ்) துரையவர்கள் சொன்ன இந்தப் புத்தகத்தில் சில விடத்தில் இடை யராகிய பள்ளி யரசனென்று சொல்லி யிருக்கின்றார் - அதுபோல் (என்ஸி-குலோபீடியா)வென்னுங்கிரந்தத்தில் - (அ)வது-வாலத்தில் (௪௱௨)வது-(௪௱௩)வது-பக்கத்திற்சொல்லப்படுகிற (எகுபத்)தேச சரித்திரத்திற்பள்ளிகளென்றுசொல்லப்பட்டஇடையவரசர்கள்(எகு பத்)தேசத்தை யாண்டுவந்தார்களென்றும் இவர்கள் சந்ததியார்கள் தாம் இந்தியாதேசத்தில்(எது)வம்சமென்றும், பள்ளிவம்சமென்றும் இரண்டுபிரிவாகப்பிரிந்த க்ஷத்திரியராகிய அரசர்களென்றும் சொல் லியிருக்கின்றது இதுகளைக்குறித்துச்சிலர் இந்தப்பள்ளிவம்சஸ்தர்க ள் ஆதியிலாடுமாடுகள் விஸ்தாரமாய்வைத்துக் காப்பாற்றிய படியா ல் இவர்களை யிடையர்களென்று யூகிக்கிறார்கள், - சிலர் - (௱௪௩) வது-பக்கத்திற் சொல்வதுபோல் - பாலா வென்பது - ஆட்டைக் காப்பாற்றுகிறவனென்கிற அர்த்தத்தைக் கொண்டு இடையர்களென் று சொல்வார்கள்-பாலாவென்கிறபொதுமொழி நானுமுன் சொ ன்னதுபோல் இடையருக்குமாத்திரஞ் சொந்தமானதல்ல - அது அரசனுக்கே சொந்தமா யிருக்கிறபடியால் அதைக் குறித்திவர்களை யிடையரென்று சொல்வது சரியல்ல - ஆனாலிதுகள் காரணமாகத் தோன்றவில்லை-இந்தப்புத்தகத்தில்(௨௱௧)வது பக்கத்திற்சொல்வதே யிதற்குச்சரியானநியாயமாகவிருக்கின்றது, அதாவது-தாத்பரியமா காத (இக்ஸாஸ்) என்ற (ஜோஸீபஸ்) சொல்லுகிற வார்த்தையை ப்பற்றி(பிரயிண்டு) என்கிறகிரந்தகர்த்தா கீழ்ச்சொல்லப்படுகிறபடி


ரகாரம் சொல்லுகிறார் அதாவது - ஜோஸீபஸ்) ஆரம்பத்திலெழுதியது (இக்கௌஸ) அல்லது கிரிக்பாஷையி லெழுதினபிரகாரம் (இக்கௌசாஸ்) அதின்தாத்பரியம், பெரிய(குஷ்கி) தேசத்துக்குஆண்டவனாகிய கடவுளென்றுதாத்பரியமாகின்றது - (இக்கௌஸ்) அல்லது (இக்கௌசாஸ்) என்றவார்த்தை இடையர்களுக்குச்சேர்ந்தநாமமாயிருந்தாலும் ஆனாலந்த நாமமுடையவர்களெல்லாரும் இடையர்களாயிருந்தார்களென்று ஆரம்பத்திற்காணவில்லை (ஜோஸீபஸ் இக்கௌஸ்) இடையனென்று யெழுதி யிருக்கிறபடியால் (யூஸீபஸ்) என்கிறகிரந்தகர்த்தா (இக்கௌசாஸ்) என்றெழுதுகிறத்துக்குச்சகாரனமாயிருந்தது அந்தத்தட்டைச்சொற்பமாகத் திருத்திக் கொள்ளலாம், அதெப்படியென்றால் (இக்கௌசாஸ என்றெழுதினது (இக்கௌஸாஸ்) அல்லது (அக்கௌஸாஸ்) என்றவார்த்தைப், பிரபுவான (குஷ்கா)னென்றருத்தமாகின்றது இந்தத்தப்பினாற்றான் மேற்படியரசனை இடையனென்று சொல்லப்பட்டதென்றும், ஏனென்றால் (எருபத்) தேசத்தார் - (குஸ்) என்பவருடைய குமாரர்களுடைய வியாபகத்தை விசாரித்திருந்தபடியால் அவர்களாயிமாயிகளை மேய்த்துக் காட்டு இடையர்களாய்ப் போய்விட்டபடியால் அவர்களைப்பற்றி எல்லாவிடையர்களும் (குஸ்) சந்ததியாராக வெண்ணப்பட்டார்கள் - ஆனபடியாற்றான் (குஷ்க) என்றநாமமும் இடையரென்றநாமமும் ஒருதாத்பரியமாயெண்ணப்படுகின்றது - ஆனால் நிசமானதாத்பரியம், மேற்கண்டபிரகாரம் முன்குறித்தபள்ளி யரசர்களையிடையரென்று சொல்லப்படாதென்று சொல்லியிருக்கிறது - ஆனாலிப்பேர்ப்பட்ட சம்சயம் இந்துதேசங்களுக்குள் தமிழ் நாட்டிலும சிலர்செவ்வையாய்த்தெரிந்துக்கொள்ளாததினால் எதுகுல வரசர்களையிடையர்களென்று சொல்லிக்கொள்ளுகிறார்கள் - அதைப்பற்றி நான் (௪-வது) அதிகாரம் முதலாவது பிரிவில் சந்திர வம்சஸ்தாராகிய எதுகுலம் வேறென்றும், இடையர்குலம் வேறென்றுஞ் சொல்லியிருக்கிறேனல்லவா அதுபோலனந்ததிருஷ்டாந்தங்களினால் இடையர்குலம்வேறென்றும் அரசர்குலம் வேறென்றுந் தெரிய வருகின்றது

அசோகராஜனுடைய புத்திரர்கள் தகப்பனுக்கு விரோதமாய் நடந்த படியால் தகப்பனானவன் அந்தப்பிள்ளைகளுக்குக் கொடாமற்காட்டி ற்குத் துரத்திவிட அவர்கள் காட்டில் விடையருடனே சேர்ந்து ஆடுமாடுக ளை மேய்த்துச் சீவித்தபடியால் அந்தராஜகுமாரர்களைப்பற்றி மற்ற விடையர்களையெல்லாம் அரசசந்ததியாரென்று கிரந்தகர்த்தர்க ளெழுதிவைத்தபடியெழுதலாம், கிரந்தகர்த்தர்கள் மேய்ச்சகாமலெழுதிய நாட்டிலே தாசி (சித்திரைக்குறப்) (கிரீசா) குறும்பு (பள்ளர்) கோத்திர முன்னோர் (பெரியவர்கள்) [illegible] வைத்ததேதவிர வேறில்லை.

(௧௬௬)வது-பக்கத்தில (சமுத்தகனி விசுவாமித்திர) னொருபட் சமாகவும் -கௌதமனும் குசநதிக்கு விராதிபமான வாசாகளும் ஒரு பட்சமாகவுமிருந்து யுத்தஞ்செய்தகாலங்களிலே (ருக்வேத நதீயோரத்தி லிருந்த திராவிடக்கூட்டங்களான ஆரியர் வம்சத்தார்களாயிருந்தவிரண்டு பள்ளிக ள் சிட்ராலே) அலைஞ்சு சிவதாஸ அரிடாஸ அல்லது அரிதாஸ் என்கிற பேர்களையுடையவர்களான இருவர்களும் யுத்தத்திற் பிரவேசித்து விஸ்வாமித் திரனோடு சேர்ந்தார்களென்று சொல்லியிருக்கிறபடியால முதல்க த்தியடவிகளிலிருந்த பள்ளிகளென்றும் - அந்தப்பேரரசருக்கு மக்க ளா [illegible] -இந்தச்சரித்தி ரங்களை யோசிக்கும்பொழுது (௩)வது - அத்தியாயம் - (௪)வது - பிரி வில் பள்ளியென்ற பேரானது கடவுளுக்கு [illegible] காட்டிலே திருஷ்டாந்தமாக [illegible] தேவர்களுக்குப் பள்ளிகளென் ற பேருரியதாய் வழங்கிவ [illegible] மேல் உதாரணஞ் சொல்லுமிடத்தில் இந்தியா அரபி துருக்கி பார்சி கிரீக தேசமுதலா ன தேசங்களில் கடவுள் வாசஸ்தலங்களுக்கும் பள்ளியென்றே வழங்கிவ ருகிறார்கள் இதைக்குறித்துமேலும் [illegible] தேவர்களுக்குரிய ப ள்ளியென்கிற பேரையே மனிதருக்குள் அரசர்கள் மேன்மைப்பட் டவர்களானபடியால தங்களுக்குரியதாக வழங்கிவந்தார்களென்பத ற்குச் சந்தேகமில்லை ஆகையாலாதியிலரசர்களுக்குப் பெரும்பாலு ம்பள்ளியென்று வழங்கிவந்ததாகவும், தற்காலத்திலரசசந்ததியார்க ள் வன்னியரென்று வழங்கியிருக்கிறதாகத் தெரியவருகின்றது - ஆனா ல் தற்காலத்திலரசசந்ததியாருக்கு இருபேர் இல்லாமல் பலபேர் வழங்கி

வந்தாலும் பூர்விகமாய் ஆதிவழக்கத்தைக் குறித்தாலோசிக்குமிடத்
தில் க்ஷத்திரியராகியவரசசந்ததியார்களுக்குப் பள்ளியென்கிறபே
ரே பிரதானமானதேதவிரவேறல்ல- சாஸ்திரங்களையும் பூர்விக வழ
க்கங்களையும் செவ்வையாய்விசாரிக்காத அவிவேகிகளும் மேற்படி
யரசசந்ததியிலேயேவந்த நூதன விவேகிகளும் பள்ளி என்கிறவார்
த்தை யிழிவானதென்று பலவாறாகப்பிதற்றுகிறது மெவ்வளவுஞ்சரி
யல்ல - நானந்தவொருவார்த்தையைப்பற்றி யெழுதுவனேயானால்
அநுபிரத்தியேகமா யொருபுத்தகமா யெழுதவேண்டுமே தவிர இ
தோடுசேர்த்து யெழுதுகிறது சரியல்லவென்று யிவ்வளவாகநிறுத்தி
விட்டேன்- ஆனால்பிரத்யேகமாய்ப் பள்ளிஎன்கிறவார்த்தையைக்கு
றித்தும் அந்தஅரசசந்ததியாரைக்குறித்தும் வொருபுஸ்தகஞ் செய்
யவேண்டுமானா லொருதடையிருக்கின்றது அதென்னவென்றால் வட
தேசத்திலிருக்கப்பட்ட புராணங்களுக்கு இத்தேசத்தி லிருக்கிற பு
ராணங்கள் ஒன்றுக்கொன்றொவ்வாம லிருக்கிறபடியால் நியாயமாய
வடதேசத்திலிருக்கிற புராணமே ஆதியாயிருக்க அதைப்பார்த்துப்
பலபாஷைகளிலுந் திருப்பப்பட்டசரித்திரங்கள் ஆதிநாகரபாஷை
யினாற் சொல்லப்பட்ட- சரித்திரங்களுக் கொவ்வாமற்செய்திருக்கிற
தைக்குறித்து யோசிக்குமிடத்திற்பலவாறாய் நினைக்கவிடந்தருகின்ற
து, ஆனால்முன்பாயி த்திற் குறிக்கப்பட்ட ஐந்து பிரபுக்களிலியாரா
வது அல்லது அரசசந்ததியார்களி லெவர்களாவது பிரயாசையெடு
த்துக்கொள்ளுவதுமல்லாமற் றிரவிய வுதவியுஞ் செய்வார்களானால்
அந்தப்புராணங்களை யிவ்விடத்திலழைப்பித்து அதிலிருக்கப்பட்ட
தற் கெவ்வளவும் பிசகில்லாமல் இத்தேசத்துப்பாஷையினாற் றிரு
ப்பிப்பிரசுரஞ்செய்யும்படி அவலோ டெதிர்பார்த்திருக்கிறேன்





நாலாவது அதிகாரம்

[illegible]

ஐந்தாவது-பிரிவு

[illegible] வைசிய[illegible]ளும், சமஸ்கிருதநூலி [illegible] ஜாதிவரிசையும், குடிம திப்புசபையார் [illegible] கருப்படி யச்சிட்ட கணக்கின் வி [illegible]தைக்குறித்து [illegible] சொல்லப்படுகின்றது.

முன்னால் அதிகாரம் [illegible] மூவதுபிரிவில் ஆயிரத்தெண்ணூற் [illegible]பத்தொன்பதாம்வருஷ[illegible]ப்பட்ட இந்துதேச சரித்திரத் தில் [illegible]ரியர் [illegible] யெழுதியிருப்ப தைக்குறித்து [illegible] தாலத்தி லுண்டென்றும், அவர்களின் [illegible]ன்றும், இந்த அதிகாரத்தின் முன்பிரிவுகளாற் சிலநூல்களைக் [illegible] போல் வைசியருந் தக்காலத்தி லும் உண்டென்றும் அவர்களின் [illegible] வெளியிடுகிறேன்.

அதாவது [illegible] நாலாவததிகாரம் மூன்றாவதுபிரிவிற்சொன்ன [illegible]திவாகர[illegible] வைசியர்களுக்குச்சொல்லியிருக்கிற(இள ங்கோக்க [illegible] யுத்தத்துக்குப்போய் இறக்கவு [illegible]லை-வர்த்தக[illegible] [illegible]திரவியநஷ்டப்பட்டு முதலில்லாம வி ளைத்திறந்துபோ கவுமில்லை மேற்படித் திவாகரதிகண்டில் வைசியரு க்குப்போ பன்னிரண்டி லொன்றாகிய செட்டிகளென்கிற பேரை யோ தங்களுக்குச்சாதியாகவும், பட்டப்பேராகவுங்கொண்டு அந்தநூ லிற்சொன்னபடியே வர்த்தகத்தொழிலை முழுமையுங்கைக்கொண்டு இந்தப்பூமியிலேறக்குறைய நிறைந்திருக்கிறார்கள் - ஆனலிவர்கள் மாத்திரந்தான செட்டிகளென்கிறபேரை வகித்திருக்கிறார்கள் - மற் றவர்களுக்கில்லையாவென்றுசிலர்சொல்லுவார்கள்-ஆகையால்மற்றவ

ரிகள் செட்டியென்கிறபேரை வகித்திருந்தபோதிலு மிவர்களைப் போல் ஜாதியேசெட்டிசாதியென்று வகித்துக் கொள்ளாமல் மற்றவ ரிகள் ஓட்டசெட்டி-கவறைசெட்டி-குரச்செட்டி - ஜணப்பசெட்டி-தேவாங்குலச்செட்டி-வெள்ளாஞ்செட்டி-கோமுட்டிச்செட்டி - செக்கான்செட்டி - சாணுரச்செட்டி - பட்டினவச்செட்டி- மல்ஜெட்டி-உப்பாரவச்செட்டி-முதலான வனந்தம்பேர்களிருந்தாலும் தங்கள் ஜாதிப்பேர்மூன்றும் அவர்கள்சேர்க்கையிலுல்வந்த தொழிற்பேரபி ன்னும்வைத்து வழங்கிவருகிறார்களேதவிர மேற்படி வைசியசெட் டிகளைப்போல்ஜாதிப்பேரேசெட்டியாகவைத்துவழங்கிவரவில்லை

ஈதல்லாமல் மற்றச்சாதிகளுக்குற்பத்தியும்,சரித்திரமும் அவர் களுக்குரிய சாதிபுராணமும் வேறாயிருக்கின்றது - இந்தச்செட்டிக ளென்றுசொல்லப்பட்ட வைசியர்கள் வேதத்திற்சொன்னபடிவைசி யபுராணத்திலும்பிரம்மாவினுடைய தொடையில் வக்குருமகாரிஷியான வர்பிறந்துதபசுசெய்யுங்காலங்களிற் சுயம்புமனுவானவர் பொல் வ ஸ்திரங்கள்முதலான வஸ்துக்களின்வியாபாரங்கள்செய்ய வைசியர் களில்லாதபடியால் மற்றமனிதர்கள் வஸ்திராபரண மில்லாமல்மிருக ங்களைப்போலிச்சைய ற்றிருப்பதால்மேற்படிவக்குருமகாரிஷிமூலமா ய்வைசியர்களைத்தரு ம்படியா யனுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று தேவேந்திரனைக்கேட்கதேவேந்திரன் பிரம்மாமுதலானவர்கள்ஈஸ்வ ரரிடத்துக்குவந்து மேற்படிவக்குருமகாரிஷியையழைப்பித்துஈஸ்வர னுத்திரவுபிரகாரம்மேற்படியாதி வக்குருமகாரிஷிசெய்தயாகத்திற்றற் பையோடு ஆயிரமாகுதிகொடுக்க ஆயிரமிதழையுடைய தாமரைப்பு ஷ்பத்தின்வழியாக அக்கினியானவன்கொடுத்த ஆயிரம்பிள்ளைகளும் ஆயிரங்கோத்திரவொன்று அவர்கள்சந்ததியானதுபெருகி முன்சொ ன்னதுபோலெங்கு நிறைந்திருக்கிறதுமல்லாமல் மேற்படிவைசிய புராணத்தி லிவர்கள்சந்ததியா ரனேகர் வர்த்தகமுதலானதுஞ்செய் து பெருமையடைந்து சுப்பிரமணியருடைய கிருபையைப்பெற் று நகரத்தாரொன்றும் சிறப்புப்பேரே இவர்களுக் குரியதென்றும், கமலகண்டிகை-தேர்-கெருடக்கொடி- தோன்றிமாலை - வைகுண்டவ ளநாடு-ஜெயவாரணம்-பைஞ்ஞாங்கமூரசு-பம்பைநதி - கிஷ்கிந்தம லை-ஆகிய இந்தத்தசாங்கத்துக்குரியவொன்று மேற்படிப்புராணங்க ளிற்சொன்னதுபோல் ஆயிரவர்களென்று யாவருமறியும்படியாகப்

பரிஷ்காரமாய்ப் பேர்பெற்றுவழங்கிவருவதுமல்லாமல் திவாகரநிகண்டுகளில வைசியர்கள்பேர் சொல்லுமிடத்திற் செட்டிகள் பேரென்றே சொல்லியிருக்கின்றது - இவர்கள்பேரில் வித்துவான்களாற் பாடப்பட்ட மங்கலகவி சரமகவி முதலானதுகளில் மேற்படித் தசாங்கத்துக்குரியவரொன்று பாடப்பெற்று வழங்கிவருவதாலும் இவர்களேவைசியரென்று யாவருந்தெரிந்துக்கொள்ளலாம், இதைப்பற்றிமேற்படிப்புராணத்திருந்து சிலதிருஷ்டாந்தம்வருமாறு.

வைசியபுராணம்-உற்பவச்சருக்கம் (௬-வது-கவி)

ஆங்கமாறுந்திகழவம்புயத்தோனுன்முகத்தே... *
துங்கமேவும்மறையோர்தோன்றினர்தோன்றியபின் *
வங்கமேவுங்கடல்சூழ்மாநிலமேலேமுவகை .. *
தங்கிவாழ்சாதிச்சராசரங்களுந்தொகுத்தே *

இதின்தாத்பரியம்.

இந்தக்கவியினாற்பிராமணுள் பிரம்மாவின்முகத்திலுதித்தாரென்பதாம்.

மேற்படிப்புராணம்-உற்பவச்சருக்கம்-எ-வது-கவி,

துட்டரையும்நீக்கிச்சுருதிநெறிநீங்காத ... ...*
சிட்டரையும்வாழ்வுசிறக்கும்படிதெரிந்திட் ... *
டிட்டமுடன்மண்ணாண்டினிதிருக்குமாறிசைத்து *
மட்டவிழ்தார்வேந்தைமருமத்தாலேவகுத்தான் *

இதின்தாத்பரியம்

துஷ்டர்களைச் சம்மரித்து வேதநெறி பிசகாமலும் சிஷ்டர்களைவாழ்விக்கும்படியாகவும் இந்தப்பூமியையாளும்படியாகவுமரசர்களைத் தோளின்வழியாய்ப் பிரம்மாவுண்டாக்கினரென்பதாம்

மேற்படிப்புராணம்-உற்பவச்சருக்கம்-அ வது கவி.

சீரார்புரிநூலுந்தெண்டிகமண்டலமு ... ...*
மோரார்சிகையுமிலங்கவெழில்வக்குவனும் ... *
பேராணையுருவினிற்பெற்றான்பிரமனுயர் ... *
காராளனானோன்கமலபதத்துதித்தான் .. *

இதின்றாற்பரியம்

சிறப்புப்பொருந்திய முப்புரிநூலும் தண்டு கமண்டலமும் பின்குடுமியும் பிரகாசிக்கும்படியாய் அழகுபொருந்திய வக்ஷமகாரிஷியைப்பிரம்மாவானவன் றலையினமூலமாகப்பெற்றான் தன்னுடைய வுயர்ந்தகமலம்போன்ற பாதத்திற் காராளராகிய வெள்ளாளர்பிறந்தாரென்பதாம்,

மேற்படிப்புராணம்-மேற்படிச்சருக்கம்-௰ வது-கவி,

அந்தணரரசர்வேளாளரெனுமுள்ளார் ... ...*
வந்துலகெங்கணுமருவவக்குலவல் .. ... *
வந்ததிசெதுபயன்மற்றிலென்னவே ... *
தந்தையையிறைஞ்சிநீடவத்திலேகினன் .. *

இதின்றாற்பரியம்

அப்படித்தலையிற்பிறந்த வசகுலமுனிவர் பிராமணன்-அரசர் வெள்ளாழரென்றுசொல்லப்பட்ட மூன்றுஜாதிகள் உலகமெங்கும்பரவத் தானிந்தவுலகவாழ்க்கையிலுமெல்லையயென்று பிரம்மாவை நோக்கித் தவசுக்குப்போனானென்பதாம்,

மேற்படிப்புராணச்சருக்கம்-௰௨-வது கவி,

அன்னவன்றவத்தினின்றங்கனந்தநாளகன்றபின்பு ... *
மன்னவன்சயம்புவென்னுமனுமகவானையெய்தி ... *
வன்னியாய்த்தவத்துணின்றான்வக்குவனதனுல்லையந் *
துன்னியவனைமநீங்கியிருந்ததுசுரற்குவேந்தே ... *

[illegible] தாத்பரியம்

மேற்படி வச்ரதசியானவர் சுவர்க்கத்திலக்க வனேககால ஸ்ரீசெ[illegible] [illegible] டாஞனுவல் தேவேந்திரனி டத்து [illegible] மையமாய்த் தவத்தினி ருக்கிறபடியால் உலகத்தில் வியாபாரமி[illegible]மல் வளப்பமற்றிருக்கி ன்றது [illegible]

மேற்படி [illegible] ருக்கம் [illegible]-கவி.

போனகமின்மை[illegible] [illegible] மையாலு ... *
ஞானவர்தெதிரி [illegible] ... ... *
பானலங்களின்றிச்சைப் [illegible] ... *
தானமாயிரு[illegible] [illegible]மாறாமல் ... ... *

[illegible]

போசனம் பொரு[illegible] [illegible] கருடைய நெறிநிலையிற்காமல் வரு[illegible] [illegible] பதவிகள் போரி லிச்சையானதற்று மிருகங்களோ பொருந்து வேதம்தலைமேற்ப்பட்டதெ ன்று சொன்னபடியாம்

இந்த ஆகாச[illegible] [illegible] வாயிரம்மாவின்துடை யிலுற்பத்தியுட் [illegible] அ[illegible]ருலகதநல்வர்த்தகரு தலானது [illegible] மஹாஜாவர் தேவேந்திர னிடத்தில முறையிட்டதைக் [illegible] தார்.

இதுவும்- மேற்படி புராலாசசருக்கம் (சுரு-கவி.)

ஆழிமாலருளப்புய னங்கியங்கலைமத்நாள்... ... ...*
வாழியாயென வன்னியையவணங்கிவக்குவனு ... .. *
மூழிநாளினுமொழிவிலாமகவுதவெனவே .. .. *
யேழுநாவுமேழ் கோடிநாவென்னுமா றெழுந்தான்...*

இதின்றாத்பரியம்.

விஷ்ணுவின்பிள்ளையாகியபிர்மாவானவர்யாகாக்கினியைத்திட்டஞ்செய்தார்-வக்குவமகாரிஷியும் அக்கினி தேவனை வாழ்மியென்றுவணங்கியூழிகாலங்களிலும் நீங்காதபிள்ளைகளைக்கொடுக்க வேண்டுமென்றுகேட்டவுடன் ஏழுநாவும் ஏழுகோடிநாவென்றுசொல்லும்படியாய் ஆவித்துவக்கினியானவனெழுந்தானென்பதாம்.

---*---

இதுயும் மேற்படிச்சருக்கம் (சசவஞு-கவி.)

இருக்குநான்மொழிந் தாயிரமாகுதியியற்றித் ... *
தருப்பையைம்முடிந் தாயிரந்தனையர்தந்திடென ... *
வரிக்கண்ணேயிடவங்கியங்கடவுளுமழகார், ...*
மருக்குலாவிய வனசமாமலர்மிசைமருவும் ... ... *

இதின்றாத்பரியம்

இருக்குவேதமந்திரத்தை யுச்சரித்துத் தருப்பையை முடிந்து ஆயிரவாகுதியியற்றி . யிரம்பிள்ளையைக் கொடுக்கக்கடவதென்று அக்கினிமத்தியிற்போட அந்தவக்கினிதேவனுனவன் வாசனையுடையதாமரைப்புஷ்பத்திற் பொருந்துமென்பதாம்.

இதுவும்-மேற்படி (சரு கவி)

இதழ்களாயிரம் தன்னினுள்ளிட்டபுல்வழியே ... *
புதல்வராயிரம் பெயர்ஜெனித்திடத்திறம்பொலிவு ... *
முதலியேமகிழ்ந்தனலிதன்னுருவுகொண்டோங்கிச் ...*
சதரீதோவென வாங்கினன்றெழுதுவக்குவனும் ... *

இதின்றாத்பரியம்,

ஆயிரமிதழ்களுள்ளிடப்பட்ட தருப்பைப்புல்வழியேயாயிரம் பிள்ளைகள்பிறந்திடமேற்படி யக்கினியானவ னந்தப்பிள்ளைகளுக்கு வல்லமையழகையுங் கொடுத்துத் தன்னுடையவுருவங் கொண்டெழு

ந்த பிள்ளைகளிதோவென்று கொடுக்கவக்குவரிஷியானவன் ரெழுநு வாங்கினனென்பதாம்.

இதுவும்மேற்படிச்சருக்கம் (சரு-வது- கவி)

வாங்கிமைந்தராயிரவரைமார்புறத்தழுவி ... ... *
யோங்குவப்பெறு மூவரியின்மூழ்கிவக்குவனும் ... *
பாங்குறச்சிவன் மாலயன்பதம்பணிவித்தா ... .. *
ளுங்குநின்றனர் குழுமியாயிரவருமன்பால்... ... *

இதின்தாத்பரியம்

அக்கினியினாற் கொடுக்கப்பட்ட பிள்ளைகளாயிரவரையும் வக்குவரிஷியானவர் வாங்கி மார்புபொருந்தும்படியாய்த்தழுவிப்பொங்கப்பட்ட சந்தோஷமென்னுங்கடலில் மூழ்கிப் பக்கத்திலிராநின்ற-சிவன்-மால்-பிரம்மா-பாதங்களிற்பணிவித்தான்- அப்படி-யாலவையாற்பணிந்த ஆயிரவரும்கும்பலாகநின்று ரொன்பதாம்,

---

இதுவும்மேற்படிச்சருக்கம் (சள கவி)

புவனநாயகன் போதனூருவில்வரும்புனிதன் ... ...*
சிவைகராங்குலாமலர்வருதெரிவையைமணஞ்செய் ... *
தவர்கண்மைந்தரிவ் வாயிரம்பெயருமாதலினு ... *
லிவர்கள்பூதலத்திருமாபுத்துய்யரொன்றுன் ... ...*

இதின்தாத்பரியம்

பிரம்மாவின்றுடையில்வரப்பட்ட வக்குவரிஷியானவர் ஈஸ்வரர்கையிலிராநின்ற புஷ்பத்தின் வழியாய்வந்த பெண்ணை விவாகஞ்செய்த இந்தவிருவர்களின்வழியாய்வந்த இந்தஆயிரவர்களும் பரிசுத்தமானவர்களென்பதாம்.

இதுவும்-மேற்படிச்சருக்கம் ௬௰௫-வது கவி,

என்னவேவக்குவன்றனிறையதர்பணிந்துபோற்றிச் *
சென்மஜென்மங்களெல்லாந் தேவரீர் துணையாமென்று
நன்மையாயிச்சூரிவாட்லார [illegible] யாக *
நம்மபோதிறைற்று [illegible]

[illegible]

மேற்படிவக்குரி [illegible]
என்மாபோருடை [illegible] தேவரீர் து
ணையாகவேண்டுமெ [illegible] இதனைக் [illegible]
றுகேட்கபார்வந்நகதே [illegible]
ளண்டையிலிருப்பே [illegible]
இந்தக்குறகை [illegible] யிற்பிறந்த
வக்குவாகாரிளையா [illegible]
டாகமுமபாய் ஆயிரம் [illegible]
ண்வாரணிடத்தில் வாட் [illegible]

இதுவும் மேற்படிப் [illegible] யான்
பவனி [illegible])

என் [illegible] *
செ [illegible] *
குன்றமா [illegible] *
வென்றிவேவெற்றியலேனருகுளேபவ [illegible] ... *

[illegible]

சேர-சோழ பாண்டியருக்குரிய இராசசிங்கள்-தேவேந்திர சூரியன்-சந்திரனிந்த மூவருமே [illegible] யிருக்கவென்று (மற்றசெட்டிகள்)சொல்லக்குலத்துடையாயென்று வணிகனவன் போய்த்தங்கள் குலத்துக்குடைய சுப்பிரமணியக் கடவுளைத்தொழுது மலையும் மாமரமுமாய் நின்றசூரர்மடியும்படியாக வேலாயுதத்தைப் பிரயோகம்பண்ணப்பட்ட பரிசுத்தமானவனே-முருகனே-வேளே யென்று துதித்தாரென்பதாம்.

இதுவும்-மேற்படி-௭-வது-கவி.

மன்னர்மூவருமகிழ்விநூன்மணிமுடிபுனைவா ... ... *
னென்னைநீமணிக்கொணர்கெனவிசைத்தனரொற்தா ... *
யன்னமாமணியவற்குநானளித்திடேனமலா ....*
வின்னமானிலத்திருப்பிலேனிறப்பனென்றிசைத்தான் *

இதின்தாத்பரியம்.

சேர-சோழபாண்டியனென்றுசொல்லப்பட்டமூன்றரசர்களு ம்இரத்தினமுடிசூட்டப்போகிறபடியாலென்னைத்தேவரத்தினங்கொ ண்டுவரும்படியாக்ஞாபித்தார்களென் கடவுளே அந்த ரத்தினங்களை யவர்களுக்கு நான்கொடுக்காமற்போனால் நானிந்தப் பூமியி லிரேன் இறந்துவிடுவேனென்று (சுப்பிரமணியரிடத்தில்முறையிட்டா) னென்பதாம்,



இதுவும்-மேற்படி-௰௪-வது-கவி-

வண்ணமாமணியவரவர்வழங்கிடவாங்கி ... *
யண்ணன்மஞ்ஞைதன்னடிபணிந்தனனருளாலே .. *
மண்ணிவாரணக்கொடியுடைவள்ளலைவழுத்தி .... *
நண்ணிவாணியர்க்கிடையிவையாவையுநவின்றான் ... *

இதின்தாத்பரியம்.

வளப்பம்பொருந்திய விரத்தினங்களைவாங்கிச் சுப்பிரமண்ணி யாரற் கொடுக்கப்பட்ட மயிலினுடைய அடிபணிந்து சுப்பிரமண் ணியரைத்துதித்து மற்ற வைசியர்களாகிய செட்டிக ளியாவருக்கும் நடந்தசமாச்சாரமியாவையுஞ் சொன்னானென்பதாம்.

இந்தமூன்றுகவியாலும்குலத்துடையானென்னும் வைசியனுக் குச்சுப்பிரமணியரானவர் தன்மயிலைக்கொடுத்து ரக்ஷித்ததாகச்சொ ல்லியிருப்பதைப்பற்றி நாளதுவரையிலுந் தங்களுக்குக் குலதெய் வமாகிய சுப்பிரமணியரைப்பூசித்து வணங்கிவருவதும் மேற்படிச் சுப்பிரமண்ணியருக்கே செட்டியென்கிறபேர் வந்திருப்பதையுமா

லோசிப்பார்களானால் மேற்படி யாயிரவர்களே வைசி கனென்று யாவருக்கும்வெளியாகும்,

மேற்படிப்புராணம்-வளையாபதிச்சருக்கம்-ரு வது-கவி

தன்னிருமரபுந்துய்யான்றன்குலப்பெண்ணைக்கொண்டு . *
பின்னையுமனுவிலோர்பெண்கொண்டனன்பெருமையுள்ளோன்,
றன்னிருபெண்களோடேயுறவுநாள்புரிந்தகாலை ... *
யென்னெனநகரவேந்தரொருமேலெருடசிகொண்டார்... *

இதின் தாத்பரியம்,

தன் தாய் தகப்பன் இருமரபிலும் பரிசுத்தமான யிந்த வைசியனானவன் தன்குலத்திலொருபெண்ணை முன்னேகொண்டு தனக்குத்தாழ்ந்த சூத்திரஜாதியிலொருபெண்ணைக் கலியாணஞ்செய்து இந்தவிரண்டுபெண்களுடன் சிலநாள் வாழ்ந்திருக்குங்காலையில் நகரத்தாரொன்றும் மற்றசெட்டிகளியாவரு மொன்றாகக்கூடிக் (.) ரமித்தாரென்பதாம்.

இந்தக்கவியில் நகரத்தாரொன்று சொன்னதுபோல்மேற்படிப் புராணத்தி லனந்தவிடத்திற் சொல்வதுந்தவிரதொண்ணூற்றெட்டு நகரத்துக்குடையவரென்றொருசருக்கமும் ஷேபுராணத்திலிருக்கின்றது அதுபோல் தத்காலத்திலிருக்கப்பட்ட செட்டிஜாதியென்று சொல்லப்பட்ட வைசியர்கள் தங்கள்நகரத்தாரொன்றுகூட்டககட்டுப்பாட்டின் புஸ்தகங்களி லெழுதிவருவதுந்தவிரமற்றஜாதியார் மேற்படிச்செட்டிகளுக்கு நகரத்தார் தாம்பூலமென்று கொடுக்கத் தாங்கள் பெற்றுவருகிறார்கள்.



இதுவும்-மேற்படிச்சருக்கம்-உ௰-வது-கவி.

மன்றுமூன்றுங்குடிக்குவகைபெறத்தகைமையாருன் .. ...*
றுன்னும்வக்குவன்குலத்திற்றுலங்கவேவந்தவேந்கன் ... ... *
றன்னிருமரபுந்துய்யோன்றன் மணிமுடக்குக்கோர்த்தமான்,
மன்னர்மூவனாயுமொப்பான்வயிரவாணிபனென்றென்போன்

[illegible] மூன்றுஞ்சாதியாகிய வைசியருக்குள் தலைமையா [illegible] குலத்திற் [illegible] படியாக வந்தவன் இ [illegible] மூன்றுசாதிகளுக்குஞ் சமானமானவன் [illegible] ஹிம்ஸையுள [illegible] புராணம்,

[illegible] யின்றேற் பிரதானமான நான்குவர்ணத்தாருக்குள் வை [illegible] மூன்றாம் [illegible] மையாமுமென்றார் [illegible] மேற்படிப்புராணத் [illegible] செவ்வையாய்ப்பார்ப்பா [illegible] பிரிவாரென்று சொல்லப்பட்டசெட்டிகளே யித் [illegible] ரி வைசியரென்று [illegible] ருஷ்டாந்தமாகத் தெரியவ [illegible] வைசியபுராணம் மற்றைப்புராணங்களிலுமுபய [illegible] லிருந் [illegible] படியா [illegible] சிலர்சம்மதித்து ஆக்ஷேபிப்பார் [illegible] விருத்தமிழ்நாட்டில் ஆதிபுராணசரி [illegible] குறித்துச்சொல்லாத சிலஜாதிகள் தங்கள் தங்க [illegible] மப்படிக்கு உபாக [illegible] ரிலு மில்லாததும் எதற்கு [illegible] மான பொய்க்கதை [illegible] ஒருகட்டாகக்கட்டிதங்கள் [illegible] மென்று அலைத்து [illegible] ர்வீட்டில்தங்கள் தங்கள்வம்ச [illegible] பொருமித்து வாசி [illegible] த்து புளுந்து முன்னோர்கள் [illegible] புராணசரித்திரங்களோ [illegible] ந்து தங்களுக்குத் தாங்களே யதை [illegible] ன்று நம்பியிருக்கும் புராணங்களிலிதுவு மொன்றென்று [illegible] லாகாதா வென்பார்கள் அப்படிச்சொல்வதையு மொப்புக்கொள்ள வேண்டிய நியாயமா யிருந்தபோதிலும் நானிந்தப்புராணத்தை [illegible] கொண்டே இவர்களை வைசியர்களென்று ஸ்தாபிக்கவந்தவனல்ல [illegible] னெப்படியென்றால் நான் முன்சொன்னதுபோல் தமிழ்நாட்டில் வழங்கிவரப்பட்ட பிரதானமான ஜாதிகளைக்குறித்துக்காட்டப்பட்ட திவாகரம்-பிங்கலம்-இரேவணசூத்திரம்-நிகண்டு முதலா [illegible] நூல்களில் வைசியர்களுக்குரிய பேரைக்குறித்துச்சொல்லுமிடத்தில [illegible] செட்டிகளென்றும், மன்னர்பின்னரென்றும், சிரேட்டிகளென்றும், [illegible] ரிகரென்றுஞ்சொல்லியிருப்பதுபோல் மேற்படிவைசியபுராணத்தில [illegible] ப் பேரைக்குறித்துச் சொல்லியிருப்பதாலும் அது போலவே அந்த [illegible] மேற்கோளாகச்செட்டிகளல்லது- வைசியர்களு

க்குரிய ஆயிரங்கோத்திரத்தி லொன்றாகிய நாகநந்தையென்னுங்கோத்திரத்தில்வந்த பந்தனென்பவன்பேரிற் றெய்வத்தன்மைபொருந்திய(ஔவையென்பவளாற்)செய்யப்பட்டஅந்தாதியிலுமதேப்பிரகாரமாய்க்குறித்துச்சொல்லியிருக்கிறபடியாலும்முன் சொன்னதுபோல் மற்றப் பலபேர்கொண்ட செட்டிகளைப்போலல்லியரல்லாமல்ஆயிரங்கோத்திரத்தார்-அல்லது-வம்சத்தாராகிய ஜாதியிலுள்ளயேசெட்டிகளென்று சொல்லப்பட்டவர்கள் வைசியரென்பதற்குயெவ்வளவுஞ்சந்தேகமில்லை- ஆனாற்பந்தனந்தாதியிலிவர்களை வைசிடரென்று சொல்லியிருக்கின்றதோ யில்லையோவென்று சந்தேகிப்பார்கள் ஆகையாலதிலிருந்து சிலதிருஷ்டாந்தம்வருமாறு.

அதாவது-பந்தனந்தாதி(௰க)வது-கவி,

கோமன்னர்தங்கள்குடிப்பின்புவந்துதித்தோன்... ...*
மாமண்டலம்புகழுமாறநாகன்-பூமன்னும்... ... ...*
புண்டரிகமங்கைபொருந்தும்புகார்வணிக... .. ...*
னெண்டிசைக்குந்தன்புகழேயேந்து...... ....*

இதின்தாத்பரியம்.

அரசர்குலத்துக்குப் பின்னானகுலத்தில்வந்துபிறந்தவனும்,பூலோகத்தார் புகழப்பட்ட நாகநந்தையென்னுங் கோத்திரத்தானும் இலட்சுமி வாசம்பண்ணப்பட்ட காவிரிப்பூம்பட்டணத்து வணிகனாகிய (பந்தனென்னும்) பேரையுடையவன் கீர்த்தியினாலெட்டுத்திசையிலுஞ் சிறந்தவனென்பதாம்.

இதுவும்-மேற்படியந்தாதி(உகூ)வது-கவி,

முன்னீருலகமுழுதாண்டமன்னவர்தம்... ....*
பின்னனென்றுமந்தப்பெயர்விளங்க-நன்னிதியஞ் ...*
சூழும்புகார்ப்பந்தனுகந்தைதோன்றுதலால்... ..... *
வாழுங்கவிமண்டலம்...... ....'

இதின்தாத்பரியம்,

பூமியையாளப்பட்ட க்ஷத்திரியராகிய அரசர்குப் பின்னவனென்றுசொல்லும் பேரான்து பிரகாசிக்கத் தி[illegible]யங்கள் பொருந்

திய காவிரிப்பூம்பட்டணத்திற் பந்தனெனுமவன் (ஆயிரங்கோத்திரத்தான்) நாகந்தையென்னுங் கோத்திரத்திற் பிறந்தபடியால் தரித்திரமானது பூமியின்கணிராதென்பதாம்,



இதுவும் மேற்படியந்தாதி (௬௭) வது கவி.

என்னகுறையெனக்கிங்கியாரிடஞ்சென்மேலன் ... *
மன்னவர்பின்னொருமாநாகன்-பின்னவரு ... *
மாகங்கொண்மாடம்திற்புகாரிப்பந்தனென... ... ... *
நாகந்தையைக்கண்டநாள் ... ... *

இதின்தாத்பரியம்,

அரசர்குலத்துக்குப் பின்குலத்தாரகவந்த யாட கூடமதிலாற் சூழப்பட்ட காவிரிப்பூம் பட்டணத்தில் நாகந்தையென்னுங் கோத்திரத்தாராகிய பந்தனென்பவனைக் கண்டநாளில் என்னகுறை இனிக்கில்லாதவரிடத்திற் போகேனென்று (ஔவையார்) சொன்னதென்பதாம்,



இதுவும்-மேற்படியந்தாதி (௬0) வது-கவி,

வழங்குமுகிற்போலவான்மருவலர்களஞ்ச... ..., *
முழங்குமுகிற் முரிப்பஞ்ஞாகந்-தழங்குமுறந் ... *
தென்னற்குஞ்செம்பியற்குஞ்சேரற்கும்பின்னனென்று,
முன்னிற்கும்பந்தன்முரசு... ... ...*

இதின்தாத்பரியம்

யாசகருக்கு மேகத்தைப்போற் கொடுக்கப்பட்டவனாகியநாகந்தை கோத்திரத்தில்வந்த பந்தனது பஞ்ஞாங்க மூரசானது சேர சோழபாண்டியராகிய மூவரரசருக்குப் பின்னவனென்று சத்துருக்களஞ்சும்படியாக முன்னின்று முழங்குமென்பதாம்,

இந்த கவிகளினாற்றியாகாரமுதலான நூல்களில்வைசியர்களுக்குரிய பெயர்களை மன்னர் பின்னனென்றும், வணிகனென்றுஞ் சொன்னது போல்நாகந்தப்பந்தனென்னுஞ் செட்டியை மன்னவர்பின்னவனென்றும், வணிகனென்றும், சேர-சோழ பாண்டியராகிய க்ஷத்திரி

யரென்னு மரசருக்குப் பின்னவரென் .. வைசியர்களுக்குரியபைஞ் ஞாங்குரசானது சம்பந்திக்குமெ .. சொல்லியிருக்கின்றது,

இதுவும் மேற்படியந்தா .. வது- கவி,

புரிமன்னனென்னுரும்போதுவணிகேசன் ... ... *

செவிமன்னுஞ்செஞ்சொற்றிறந்தோன் கவிமன்னர் *

தன்னுங்கடைப்பந்தனுகந்தைதன்னுடனே ... ... *

யென்றுங்குடிப்பத்தூராறு ... . *

இதின்தாத்பரியம்

புவிக்குரிய வரசனைப்போல் வந்த வணிகராகிய செட்டிகளுக்குக் கடவுளைப்போன்றவன், செவ்வையான சாஸ்திர கேழ்வியிற்சிறந்தவன், கவிகளுக்கரசராகிய வித்துவான்கள்நீங்காத நிலைபெற்றகடைவாயிலையுடைய பந்தனுனவன் வந்த நாகந்தையென்னுங் கோத்திரத்துட னெண்ணப்பட்ட கோத்திர மாயிர மென்பதாம்.

இதுவும்-மேற்படியந்தாதி (எசு) வது-கவி.

கனியாருஞ்சோலைக்கடற்புகார்வந்தன் ... ... *

முனியானைவற்குமுதலோ னிமிதாக ... ... *

நற்குடிப்பேராயிரத்தில்நாகந்தைப்பந்தனெனு ... *

முற்குடியேமூன்றுங்குடி ... ... *

இதின்தாத்பரியம்,

சோலைகளாற் சூழப்பட்ட காவிரிப்பூம் பட்டணத்துக்குத் தலைவனுனவனும், மற்ற வைசியர்களுக்கு முதல்வனுனவனானதுநல்ல கோத்திரமான ஆயிரத்தில் நாகந்தையென்னுங்கோத்திரத்தில்வந்த பந்தனுனவன் வம்ஸமானது மூன்றுங்குடியென்று சொல்லப்பட்ட வைசியனென்பதாம்.

---

* பஞ்ஞாங்குரசென்பது வைசியருக்குரிய .. சாங்கத்திலக்ஷ்மிதேவனும் கொடுக்கப்பட்டதென்று சொல்லியிரு .. கின்றது.

இவ்விரண்டுகவியினாலும் முன்னூல்களில் வணிகரென்கிறபேர் வைசியருக்கென்றுசொன்னதுபோல்நாகநகரைப்பந்தனென்பவனை வணிகசனென்றும், மேற்படிப்புராணத்திலும் தற்கால வழக்கத்தி லும் ஆயிரவைசியகுல-கோத்திரத்தாரென்று சொல்லியும் வழங்கி வருவதுபோல் (வைசியருக்குரிய நூலென்றும்) மேற்படிப்புராயிரமென்றும் சொல்லுகிற திருஷ்டாந்தத்தினால் ஆயிரவர்களாகியசெட்டிகளை வைசியரென்பதற்குயெவ்வளவுஞ் சந்தேகமில்லை.

இதுவும் மேற்படியந்தாதி(௭௨)வது கவி,

போதுசெறிஞ்சோலைப்புகார்வணிகன்பொற்கமலப் ...*
போதுசெறிபூசுரத்தால்பொற்குறங்கினீதியுடன் . *
வந்துபுகன்மான்றாய்வணிகர்கோன்பந்தனென்றே ...*
யிந்தமயில்கண்டுயிலாளென்று .. .. *

இதன்சாத்பரியம்,

தாமரையில் வீற்றிராநின்ற பிரமதேவனுடைய அழகியதுடையிற் பிறந்தவனும், காவிரிப்பூம்பட்டணத்து வர்த்தகனும், பரிசுத்தமாகிய வணிகரென்னும் செட்டிகளுக்குத் தலைவனாகியவன் * பந்தனென்று இந்தப்பெண் ளவள தூங்காளென்பதாம், * பந்தனென்னும்மொழி இந்தவிடத்தி லழகனென்றுகொள்க.

ஸ்மிருதியிலும் மேற்படியாருக்குரிய வைசியபுராணத்திலும் வைசியருக்குள் மூலபுருஷனானவன் பிரம்மாவின்றுடையிற் பிறந்தானென்று சொல்லும் திருஷ்டாந்தத்தைப்போ லிந்தக் கவியிற் சொல்வதும்மேற்படி யந்தாதியில் வைசியருக் குரியதசாங்கத்தில் விஷ்ணுவினாற்கொடுக்கப்பட்ட கருடக்கொடிமுதலானதும்மேற்படி ஆயிரவர்களான செட்டிகளுக்கே யுரியதென்றுசொல்லும் திருஷ்டாந்தத்தினாலும் வழக்கத்தினாலும் செட்டிகளென்கிற ஜாதியேகுலத்தினால் வைசியரென்றும் மற்றவர்கள் தொழில்களைப் பற்றியேசெட்டிகளென்றும்-நிருப்திகரமாயாவருக்குந்தெரியவரலாம்-இன்னமுமிவர்கள்பேரில் ஔவையால்பந்தனந்தாதிக்குமேற்கோளாகச்சொல்லுமிடத்தில் மேற்படி வைசியர்களுக்குரிய (கைவள) மென்னும் நூலில் (பாவாணிஔவையார்பாமாலைப் பாடுங்கை) என்றும், மேற்படி வைசியர்களுக்குரிய(அம்மானை) யென்னும்நூலில்,

போற்குமொளிர்பொற்கலசப்பொன்னின்படாமளித்தான் *
வாக்கருளாலௌவையார்வஞ்சிக்கவிக்குருகிப்... ... ...*
பாக்கியஞ்சேர்நாகர்தைப்பந்தனீயென்றுரைத்தான் ... *

என்றுஞ்சொல்லி யிருக்கின்றது மல்லாமல்
(மேற்படி கைவளத்தில்)

மன்னுபஞ்சகாவியங்கள்வாழ்த்துங்கை மின்னுமெழி *
லேலச்சிலப்பதிகாரம்பிபல்பாய்நல்வளமை *
ஞாலமதிலேபடைத்தநாயகக்கை *

(என்றும் மேற்படியாருக்குரிய அம்மானையில்)

தேசுபெறுஞ்சீர் சிலப்பதிகாரந்தனக்கே *
யோசையுடன்பிழைதீர்த் தோகையுடன்பாடுவித்தான் *

